மத குரு

# என் மணாளன்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

எழுதியவர்

ஸ்ரீமதி காதரைன் மார்ஷல்

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

தமிழில்

சாலிவாஹனன்

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

ஜோதி நிலையம்
திருவல்லிக்கேணி, சென்னை 5.

Univ. Grants Commission.

ஜோதி மலர் 85
முதற் பதிப்பு 1955

விலை ரூ. 1-8-0

12265
O311;3
55

**A man called Peter**
By Catherine Marshall
Translated by Salivahan
Copy Right 1951 by
Catherine Marshall.

# ஒரு வார்த்தை

சாம்ராஜ்யங்கள் போர்வெறி கொண்டிருந்த காலத்தில் மக்கள் உள்ளத்திலும், ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தவர்களிடமும் தெய்வ நம்பிக்கையை வளர்த்த மகான் பீடர் மார்ஷல் என்பவரின் வாழ்க்கைச் சம்பவம் தான் இந்நூல். அவருடைய மனைவியான ஸ்ரீமதி காதரைன் மார்ஷல் உள்ளத்தை தொடும் வண்ணம் இந்த நூலில் அவரது வாழ்க்கையை வர்ணித்துள்ளார். சமீபத்தில் இந்தக் கதையை டிவண்டியத் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனியார் படமாகவும் தயாரித்துள்ளனர். இந்த அரிய நூலைத் தமிழ் மக்கள் முன் பணிவுடன் சமர்ப்பிக்கிறோம்.

பதிப்பாசிரியர்

# மத குரு
# என்மணுளன்

UNIVERSITY LIBRARY MADURAI

உலகம் அன்று கண் விழிக்கும்போதே வாடையும் மப்புமாக இருந்தது. வாஷிங்டன் நகரின் ஒவ்வொரு பகுதியும் திருவிழாப் பொலிவுடன் விளங்கிற்று. இன்னும் சில மணி நேரத்தில் நாற்பதாயிரம் வீரர் படையும் நாற்பதுக்கு மேற்பட்ட படகுகளும் அமெரிக்க குடியரசின் தலைவருக்கு மரியாதை செலுத்த ஏழு மைல் நீளம் அணி வகுப்பாக மாறி நிற்கப் போகின்றன. 1949 ஆம் வருஷம் ஜனவரி மாதம் 20௳ அன்று ஆரம்ப விழா தினம்.

ராஜாங்க கட்டிடத்தின் முன்னர் தற்காலிகமாக அமைக்கப்பட்ட ஆசனங்களில் லக்ஷத்தி இருபதாயிரம் பேர்களில் ஒருத்தியாக உட்கார்ந்து கொண்டு எங்களுக்கு எதிரே அமைக்கப்பட்டிருந்த பிரத்தியேக மேடையில் ஒவ்வொரு பிரமுகரும் அவரவருக் குரிய இடங்களில் அமருவதைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

பழைய மேல் சபை மண்டபத்தில் இந்த சமயத்தில் மேல் சபையின் குருக்களான, பீடர், மார்ஷல் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாரென்பது எனக்குத் தெரியும். பத்திரிகை நிருபர்கள் பலர் பீடர் மார்ஷலை "மேல் சபையின் மனச்சாட்சி" என்று கூறுவதைக் கேட்டிருக்கிறேன். மேல் சபை அங்கத்தினரிடையே அவருடைய எளிய, மனப்பூர்வமான, மண மணக்கும் பிரார்த்தனைகள் மகத்தான மனக்கிளர்ச்சியை உண்டாக்கிவிட்டிருந்தன.

மேல் சபை அங்கத்தினர்களுடன் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஸ்தானங்களுக்குப் போவதைப்போல் பீடரும் தொப்பியும் கையுமாய் நடந்து செல்வதை நான் பார்த்து விட்டேன். ஸெனட்டர் லூகாஸுக்கும் ஸெனட்டர் வான்டன்பர்க்குக்கு மிடையே தான் அவர் இருந்தார். அவர் முகபாவத்தில் ஏதோ ஒன்றைக் குறித்து பரமானந்தப்பட்டுக் கொண்டிருப்பது போன்ற திருப்தி தென்பட்டது.

இரண்டுவருஷமாக பீடர் இந்த சபையின் குருவாக இருக்கிறார். இந்தப்பதவியை அவர் தேடிப் பெறவு

மில்லை; ஆரம்ப காலத்தில் இதை விரும்பவும் இல்லை. இருந்த போதிலும் சபையின் இருகட்சி அங்கத்தினரின் மரியாதையையும் அன்பையும் சம்பாதித்துக் கொண்டு விட்டார். 1947-ல் குடியரசுக் கட்சியின் பெரும்பான்மை யோரால் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1948-ம் டிசம்பர்மீ 31வ ஜனநாயகக் கட்சியினர். இவரை ஏக மனதாக மீண்டும் தேர்ந்தெடுத்தார்கள்.

அன்று ஆரம்ப விழா நாள். அவர்களுக்கிடையே நாளுக்கு நாள் விரிவடைவதும் பலப்படுவதுமான ஒரு குரு பதவியின் தூரக் காட்சி பீட்டரின் மனக் கண்ணில் புலனாயிற்று. முன்பே பரம்பொருளின் அருள் அவருக்குக் கிடைத்து விட்டது. பத்தொன்பது வருஷத்திற்கு முன்பு தான் எல்லீஸ் தீவில் குடியேற இவர் வந்து சேர்ந்தார். இறைவன் தன் போதத்தைப் பரப்புவதற்காகவே இவரைப் புதுப் புது இடங்களுக்கு அனுப்பியிருந்தார்.

பீடருக்கு இந்தப் பழைய கலாமண்டபந்தான் கடவுளின் புதுமைகளிலெல்லாம் புதுமையாகத் தென்பட்டது. ஆனாலும் தேசத்தின் முதல் சட்டசபையான, இங்கே தான். உயிர்த்தெழுந்த யேசுகிருஸ்துவுக்கும் சர்வ வல்லமையுள்ள கடவுளின் ஞானோபதேசத்துக்கும் அதிகத் தேவை ஏற்பட்டிருந்தது. அந்த இடத்தில், தான் பிரதிநிதியாக இருப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் பீடருக்கு புளகாங்கித முண்டாக்குவதாயிருந்தது.

ஹாரி. எஸ். ட்ரூமன் ஐக்ய அமெரிக்க நாடுகளின் தலைவராக பதவிப் ப்ரமாணம் செய்துகொண்டிருக்கையிலேயே வாஷிங்டன் நகரத்தின் மேல் எதிர்பாராத விதத்தில் எல்லாம் சஞ்சரிக்கும் சூரியன் மேக மூட்டத்திற்குள்ளிருந்து கிழித்துக் கொண்டு பிரகாசிக்கத் தொடங்கினான். ஒயிட்ஹௌஸ் என்று பிரசித்திப்பெற்ற வெள்ளை மாளிகையின் பதிப்பான பைபிளும் கடன் பர்க்பைபிளும், பிரமாணம் செய்யும் ட்ரூமனின் இடது கையின் கீழே இருந்தன.

நீண்டிருந்த அவர் கைவிரல்கள் பைபிளின் பத்து ஆக்ஞைகளையும் குன்றின் மேலிருந்து செய்யப்பட்ட உபதேசப் பகுதியையும் தொட்டுக் கொண்டிருந்தன. அவர்

வாய் "ஐக்கிய நாடுகளின் தலைவனாக என் பொறுப்புகளை என் அந்தரங்க சுத்தியுடன் நிறைவேற்றுவதோடு, என் சக்தி முழுவதையும் உபயோகித்து அரசியல் சட்டத்தைக் காப்பாற்றுவேன் என்று உறுதியாக ஆணையிட்டுக் கூறுகிறேன்" என்ற வார்த்தைகளைத் தெளிவாக உச்சரித்தன.

ஜன நெரிச்சலுக்கிடையே புகுந்து வெளியே நிறுத்தப்பட்டிருக்கும் எங்கள் மோட்டாரை நோக்கி நான் போகும்போதே ஆரம்ப விழாவுக்காக அணிவகுப்பு நடத்தும் விமானங்கள், வானத்தில் குடை பிடிப்பதுபோல் வட்டமிடத் தொடங்கிவிட்டன. முகத்தில் உற்சாகம் கொப்பளிக்க என் கணவர் என்னோடு வந்து சேர்ந்தார்.

கார் கதவைத் திறந்து கொண்டே "கண்டுபிடி பார்க்கலாம் காதரைன்? என்ன நடந்ததென்று?" என என்னிடம் பீடர் கேட்டார் பள்ளிச் சிறுவன் குதூகலத்துடன் கேட்பதுபோல, என்ன நடந்தது? சொல்லுங்களேன்?" "என்னை ஸெனட்டர் வான்டன்பர்க் 'பீடர்' என்று பேர் சொல்லி அழைத்தார்!" அது ரொம்ப சின்ன விஷயந்தான். ஆனால் ஒரு மனிதனின் ஹிருதயத்தில் அமருவதற்கான நட்பு என்னும் வாசற்படி திறந்து விட்டதை அது குறிப்பிட்டது.

இந்த மங்களகரமான குதூகலத்தைக் கொண்டாடும் வாய்ப்பு பீடருக்கு நீண்ட நாள் நடந்த ஒரு ருசிகர நாடகத்தின் நிகழ்ச்சிகள் பலவற்றால் கிடைத்தது. இந்தக் கதை ஒரு புராண முக்கியத்துவம் வாய்ந்தது போலத் தோன்றினாலும், கதை நம்மைப்போல் ஒரு நவநாகரீகமான ஒருவரைப் பற்றிய கதைதான். எல்லா விதத்திலும் மனிதத்தனம் நிறைந்த ஒருவருடைய கதையேதான் அது.

இதை யெழுதும்போதே என் மனதில் ஒன்றன்பின் ஒன்றாய் பல நினைவுச் சித்திரங்கள் நிழலாடுகின்றன. இருபுறமும் மரங்கள் வரிசை வரிசையாக நின்ற ஒரு ஸ்காட்லாந்து தேசச் சந்தில் கடவுளின் குரலை ஆசையுடன் கேட்க நடந்து செல்லும் ஒரு பையன்; வட அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கிழித்துக்கொண்டு செல்லும் ஒரு கப்பல்;

நியுஜர்ஸியில் ஒரு வெடி உலை (Blast Furnish) வடக்கே யிருந்து தெற்கே பர்மிங்ஹாம் நகருக்குப் போகும் ரயிலில் செல்லும் ஒரு சிறுவன்; இந்த காட்சிகளெல்லாம் மனத் திரையில் பவனி வருகின்றன. இந்தக் கதையில் கடுமை யின் சாயைகளும், ஆண் பெண் பாலர்களின் மன நெகிழ்ச் சிகளும்; களிப்பும் சிரிப்பும், கொஞ்சம் கண்ணீரும்கூட கலந்துள்ளது.

கைத்தொழில்கள் நிறைந்த ஸ்காட்லாந்து நகரமொன் றில் முப்பது வருஷங்களுக்குமுன் இந்தக் கதை ஆரம்பிக் கின்றது.

## ★ விளங்காத புதிர்

தான் ஒரு மதகுருவாக வேண்டுமென்ற விருப்பமே பீடர் மார்ஷலுக்கு ஏற்படவில்லை. மதகுருவாக ஆக்கி யது பரம்பொருளின் அருளேயன்றி. அவருடைய சங்கல் பத்தாலன்று. இந்தமாதிரி ஒரு திட்டத்திற்கு பீடரை சம்மதிக்கச் செய்வதற்கே இறைவனின் சக்தி ரொம்பவும் தேவைப்பட்டது.

பிரிட்டிஷ் வியாபாரக் கப்பலொன்றில் பயிற்சிப் பையனுகச் சேர்ந்து படிப்படியாய் கப்பற் தலைவனுக உயர வேண்டுமென்ற ஆசையே பீடர் மார்ஷலின் இளம் பருவக் கனவாக இருந்தது.

கிளாஸ்கோவுக்குக் கிழக்கே ஒன்பது மைல் தூரத் தில் நாற்பதினுயிரம் ஜனத்தொகையுள்ள கோட்ஸ்பிரிட்ஜ் என்ற நகரத்தில் பீட்டர் பிறந்தார். கிளாஸ்கோ கப்பல் தளத்தில் புகுந்து வெளியேறி கனவுலக துறைமுகங் களுக்கு யாத்திரை செய்யும் கப்பல்களையெல்லாம் குழந்தை பீடர் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருப் பான்.

அந்தப் பருவத்திலிருந்தே சமுத்திரம் பற்றிய கதைகளையும், கடல் நீர்க்கட்டுரைகளையும் பீடர் ஆர்வத்துடன் படிக்கத் தொடங்கினான்.

பேனா, பென்ஸில், சித்திரம் போடும் பிரஷ் இவற்றை வைத்துக்கொண்டு பொழுது கிடைக்கும்போதெல்லாம் கப்பல் படங்களாக வரைந்து கப்பல் கனாக்களாகவே கண்டு கொண்டிருந்தான்.

ஆயினும் தன்னுடைய அந்த சோம்பேறி வாழ்க்கையை உதறிவிட்டு கடலில் போகும் பாக்கியத்திற்காக அவன் மனது துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது.

அவருடைய தந்தை புரூடென்ஸியல் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியில் பெல்ஷில்-கோட்பிரிட்ஜ் பகுதிக்கு சூப்ரண்டாக உத்தியோகம் பார்த்தார். மேஸ்திரியாகவும் சங்கீத வாத்யாராகவும்கூட அவர் இருந்திருக்கிறார். குழந்தை பீடருக்குத் தன் தந்தையிடத்தில் அபார அன்பு உண்டு. பீட்டர் தன்னுடைய நாலாவது வயதிலே தன் தந்தையை இழந்துவிட்டார். அப்போது பீட்டருக்கு ஒரு சின்னத் தங்கை பிறந்து சில மாதங்களாகியிருந்தது.

இந்தப் பையன் வளரவளர அவனுக்குத் தன் அப்பாவிடம் இருந்த அன்பும், பக்தியும் அதிகரிக்கத் தொடங்கின. அவன் இப்படி வளர்ந்து வரும்போது தன் தந்தையான முதல் பீடர் மார்ஷலை அறிந்தவர்கள் யாராவது தென்பட்டால் அவர்களிடம் அவரைப் பற்றி கிடைக்கக் கூடிய தகவல்கள் அவ்வளவையும் கேட்டுத் தெரிந்து கொள்ளத் தவற மாட்டான்.

இந்த நிலையில் தந்தை இறந்த சில வருஷங்களுக்குப் பிறகு அவனுடைய தாயார், ஸ்ரீ பீடர் பிண்ட்லேயை மணந்து கொண்டபோது சிறு பையனாயிருந்த பீடரின் மனதில் உணர்ச்சி கொந்தளிப் பேற்பட்டதில் ஆச்சரியமில்லை. ஆகவேசிறுவன் பீடர் மனத்தில் ஏற்பட்ட ஏமாற்றம் கடலில் செல்லும் வாழ்க்கைக்காக ஏங்குவதில் ஒரு சாந்தி தேட முனைந்தது.

அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் கடற்படையினர் பதினைந்து வருஷம் ஒன்பது மாதங்களும் பூர்த்தியான சிறு பையன்களை பயிற்சிக்காக சேர்த்துக் கொண்டிருந்தனர்.

பீடர் தன்னுடைய பதினைலாவது பிறந்ததினம் வந்து போன சில நாட்களுக்கெல்லாம் ஒரு நாள் பீடர் தன் வயதில் இன்னும் ஒரு வருஷம் ஒன்பது மாதங்களை மந்திர ஜாலவித்தைப்போல் கூட்டிவிடத் தீர்மானித்தான். ஆகையால் தன் பள்ளித் தோழர்களிடம் தான் கப்பற்படையில் சேரப்போவதாகச் சொல்லி விடையும் பெற்றுக் கொண்டான். மறுநாள் அதிகாலையில் வீட்டிலிருந்து மெதுவாக கடற்படைக்கு ஆள்சேர்க்கும் காரியாலயத்துக்குப்போய் தனக்கு யுக்த வயதாய்விட்டதென்று சொல்லி கப்பற்படைப் பையனாக சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுச் சேர்ந்தும் விட்டான்.

ஆனால் இந்தப் பயிற்சிக்காலம் இரண்டே இரண்டு நாட்களில் முடிந்துவிட்டது. உண்மையில் பதினாலுவயதே ஆகியிருந்த பீடரை பயிற்சிக்கு அனுப்ப அவனது பெற்றோர் சம்மதம் கொடுக்க மறுத்து விட்டதால் பிரிட்டிஷ் கடற்படை ஆர்வம்மிக்க ஓர் அட்மிரலை இழந்துவிட்டது.

பீடருக்கு இதன் அர்த்தம் அப்போது விளங்காவிட்டாலும் அவனுடைய வாழ்க்கை காட்டிய வழிகளில் முதல் வழியாக அது இருந்தது.

பரம் பொருளின் சித்தத்தில் எந்த வழியில் நாம் போகவேண்டுமோ அந்த வழியை அவர் திறந்து விடுமுன், நாமாகத் தீர்மானித்து நுழைய விரும்பும் வழியின் கதவை அடைத்து விடுகிறார்.

மதகுருவாகும் வழியில் கொண்டுபோய் விடுவதற்காக, ராயல் கப்பற் படையில் பிரவேசிக்கும், வழியைப் பலமாக அடைத்துவிட்டது, நிச்சயமாகப் பரம் பொருளாகிய இறைவனின் திருக்கரமேயல்லாது—மனிதனுடையது அல்லவே அல்ல.

பள்ளித் தோழர்களிடம் கப்பற்படையில் சேரப்போவதாகச் சொல்லிவிட்டு சேராமல் திரும்பிப்போனால் அவர்கள் கேலி செய்வார்கள். அந்தக் கேலியைத் தாங்கிக்கொள்ள சிறு பிள்ளைத்தனமும் பெருமிதமும் உள்ள பீடருக்கு சம்மதமில்லை. ஆகையால் வேலைக்குப் போவதுதான் அடுத்தபடி தான் செய்யக்கூடிய காரியம் என்று எண்ணினான்.

பகலில் ஸிவில் இஞ்ஜினியர் (வீடு கட்டும்) ஸ்தாபனம் ஒன்றில் ஆபீஸ் பையனாக வேலை செய்துகொண்டே இயந்திர நுட்பத் தேர்ச்சி அடைவதற்காக வாரத்தில் நாலு இரவுகள் கோட்பிரிஜ் டெக்னிக்கல் (இயந்திர நுட்பப்) பள்ளியில் படித்தும் வந்தான். வீட்டில் கிடைக்கும் சிறு அவகாசத்திலும்கூட கப்பல் உத்தியோகத்திற்கு பயன்படக்கூடிய பல சிக்கல்கள் நிறைந்த வித்தைகளை கற்பதில் கவனம் செலுத்தத் தொடங்கினான்.

இம்மாதிரி ஒரு இரவு வகுப்பில்தான் கோட்ஸ்பிரிட்ஜைச் சேர்ந்த டேவிட் உட் என்பவரையும், அயர்ரீயைச் சேர்ந்த ராபர்ட் ஹண்டரையும் சந்தித்தான். இம்மூன்று பையன்களும் இணைபிரியாத தோழர்களாயினர். இம்மூவருடைய வாழ்க்கைப்பாதை எதிர்காலத்தில் ஒன்றை ஒன்று அடிக்கடி உலகின் பல்வேறு கண்டங்களில் சந்தித்தது. மீண்டும். பிரிந்தது, மீண்டும் சந்தித்தனர்.

ஹண்டரும், டேவிடும் 1923-ல் அமெரிக்காவில் குடியேறிய ஒரு குடும்பத்தில் பிறந்த இரு சகோதரிகளைக் காதலித்தனர். மூன்று வருஷங்களுக்குப் பிறகு அந்த இருவரும் தத்த மது காதலிகளைப் பின் தொடர்ந்து பர்மிங்ஹாமுக்கும், அலபாமாவுக்கும் புறப்பட்டனர்.

கோட்ஸ்பிரிட்ஜில் தனியாக விடப்பட்ட பீடருக்குத் தன் நண்பர்களை மீண்டும் சந்திக்க நேரும் என்ற நம்பிக்கையே இல்லை.

அதன் பிறகு மீண்டும் கப்பற்படையில் சேருவதற்காக பயிற்சி பெறும் மாலுமி உத்தியோகத்திற்கு,

மனுச்செய்துகொண்டார், ஆனல் அந்தக்காலம் திறமை மிக்க மாலுமிகளுக்கே வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்தகாலம். கப்பல்களுக்குப் பஞ்சம் அதிகம். ஆகையால் மீண்டும் கடவுள் பீடர் செல்லும் வழியை தடுத்து நின்ருர், என்றே கூறவேண்டும்.

1923-க்குள் ஸ்டிவர்ட்ஸ் அண்ட் லாயிட்ஸ் என்ற பெயருள்ள குழாய் செய்யும் கம்பெனியில் பீடர் ஒரு மெக்கானிக்காக ஆகிவிட்டார். (மொகனிக்காக) இயந்திர நிபுணராக வேலைக்கமர்ந்து விட்டார். முழுநேரம் வேலை செய்யும் அதிருஷ்டம் அவருக்கு வாய்த்ததால் வாரத்திற்கு முப்பதெட்டுஷில்லிங் சம்பாத்தியம் நிச்சயமாயிருந்தது.

பீடருக்கு இருபதுவயது நிறைந்து இருபத்தி ஒன்ருவது வயதை எட்டிக் கொண்டிருந்த போதிலும், அவர் வீட்டில் அதிருப்தியுற்றவராகவும், தத்தளிப்புள்ள வராகவுமே காணப்பட்டார்.

ஆகையால் தான் வீட்டை விட்டு வெளியேறி சொந்தமாகக் குடித்தனம் செய்வது நல்லது என்ற முடிவுக்கு அந்தச் சமயம் அவர் வரவேண்டி இருந்தது.

பீடரின் தாயார் பரிவுடனும் பாசத்துடனும் இருந்து வந்தார். பீடரின் பிள்ளைப் பருவத்தை எவ்வளவு சங்கடமற்றதாகச் செய்யமுடியுமோ அவ்வளவும் செய்தார். பீடருக் கிருந்த கொஞ்சநஞ்சம் தட்டுமுட்டு சாமான்களை பெட்டியிலடைத்துக் கட்ட உதவி செய்துகொண்டே, தாயும் மகனும் மகனின் பொருளாதார நிலைமையைப் பற்றிப் பேசினர்கள். அது ரொம்ப நெருக்கடியாகத் தோன்றியது. ஒவ்வொரு சம்பள நாளன்றைக்கும் தனக்குக் கிடைக்கும் சம்பளத்தை கவரோடு அம்மாவிடம் பீடர் கொடுத்து விடுவார். ஆகையால் அவராக ஒன்றும் சேர்த்து வைக்கமுடியவில்லை. குழாய் செய்யும் கம்பெனியார் கொடுக்கும் வாரச்சம்பளம் நல்ல உணவுக்கும் குடிக்குமே சரியாயிருந்தது. இராப் பள்ளிக்கூடச் சம்பளத்திற்கு சரிகட்ட ஒரு வழியும் இல்லாமலிருந்தது.

இந்த நெருக்கடியைதவிர்க்க பீடரின் தாயார் தன் பரம்பரையினர்களுக்கே, சுபாவமான திடநம்பிக்கையை பரிஹாரமாக் கொணர்ந்தாள். அவருடைய இளம் பருவத்திலிருந்தே பீடரின் தாயார் நெசவு செய்யத் தொடங்கிவிட்டிருந்தார். இளமையில் வறுமைவாய்ப் பட்டதால் அவருக்கு கடவுளிடத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையும் உண்மையான பக்தியும் தளரா உறுதியும் ஏற்பட்டிருந்தது.

தன் தாயாரே தன் கையால் பழுதுபார்த்து தைத்து வைத்து மடித்த ஆடைகளை அவளே தனக்காக மூட்டை கட்டுவதை பீடர் பார்த்துக்கொண்டேயிருந்தார். இயற்கையிலேயே சுருண்டிருந்த தன் தாயின் கூந்தல் நரைக்க ஆரம்பித்திருந்தாலும், அவருடைய முற்றிலும் சிவந்த கன்னங்களும், எல்லா முணரும நீலக்கண்களும், அவருக்கு என்றும மாருத ஒரு இளமைத் தோற்றத்தை யளித்துக்கொண்டிருந்தது.

பெட்டிமுழுதும் அடுக்கி மூடிய பின்னர் வாசல் கேட் வரை பீடருடன் அவர் நடந்துவந்தார்.

"பிராத்தனைப் பாட்டை மறந்துவிடாதே! மகனே!" என்று சொல்லிவிட்டு கடவுளின் ராஜ்யத்தையும் அவருடைய தர்மமார்க்கத்தை நீ முதலில் தேடிக்கொள் இதெல்லாம் உன்னிடம் சேரட்டும், அவருடைய நீலவிழிகள், அவரைப் பார்த்து பரம நம்பிக்கையுடன் மலர்ந்தன. "ரொம்ப நாட்களுக்கு முன்பே ஆண்டவனிடம் உன்னை ஒப்புவித்து விட்டேன். அவனிடமிருந்து இப்போது உன்னைப் பிடுங்கிக் கொள்ளமாட்டேன். ஆண்டவன் காப்பாற்றுவான் கவலைப்படாதே" இது நடந்தது வெள்ளிக் கிழமை அன்று. அதை அடுத்த திங்கட்கிழமை பீடர் தன் இயந்திரத்தில் இரண்டு மணிநேரங் கூட வேலை செய்தாக வில்லை. ஒரு காய்த்துப்போனகுரல் அவர் தோழர்களைத்தட்டி அழைத்தது. "மார்ஷல், மானேஜர் ஆபிஸில் உன்னைக் கூப்பிட்டார்கள்".

ஒரு வேளை தன்னைக் கண்டிப்பதற்கோ, அல்லது தனக்குச் சீட்டு கிழித்தனுப்புவதற்கோதான் கூப்பிடுகி

ருர் என்று கூட பீடர் நினைத்தார். ஒவ்வொரு நாளும் பலர் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டார்கள் அப்போது.

மானேஜர் ஆபிஸிலிருந்து சில நிமிஷங் கழித்து பீடர் வெளியேறினர்.

அவருடைய தோழர்களிடம் ஒரு புது மிடுக்குத்தென் பட்டது. எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று காலை தொளை போடும் பிரிவிலிருந்து தந்தி மரப் பிரிவுக்கு மாற்றலாகிவிட்டது. சம்பளம் முன்பு வாங்கியதைப் போல் இரண்டு மடங்காகிவிட்டது. இதை வைத்து அவருடைய எல்லாத் தேவைகளையும் சமாளிக்க முடியும். அம்மாவிடம் கடவுள் எவ்வளவு சீக்கிரத்தில் தங்களுடைய பிரார்த்தனைகளுக்கு செவி சாய்த்து பலனளித்துவிட்டார் என்பதை சொல்லாமலிருக்க முடியவில்லை. )

புசனன் தெருவு. எவாஞ்சலிகல் (இவாங்கலிகன் சங்கப் பிரார்த்தனைக்கூடத்திற்கு என் தாயார் ஒவ்வொரு ஞாயிறன்றும் வருவார் அப்போது பீடர் தவருமல் தன் தாயாரைப் பார்த்துப் பேசுவார். தன் தந்தை எந்த இடத்தில் வாத்ய சங்கீத வாத்தியாராக இருந்தாரோ அந்த இடத்திலேயே பீடரும் வெகு உற்சாகத்துடன் சேவை செய்ய முனைந்தார்.

ஸ்காட்லாந்தில் அவர் வசித்த கடைசி நான்கு வருஷங்களில் ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூட வாத்தியாராக வும், சிறுவர் வாத்ய கோஷ்டி வாத்யாராகவும், இருந் திருக்கிருர். பல தடவைகளில் கோட்ஸ்பிரிட்ஜ் நகரின் கைத்தொழில் சூழ் நிலையைவிட்டு வெகு இடங்களுக்கு சாரணர்களின் முகாம்களுக்கும் போயிருக்கிருர், பீடர்.

டன்பெத் ஒய். எம். சி. ஏ. கோஷ்டியில் இவர் ஸோஸர் விளையாடிருக்கிருர். அந்தக்கோஷ்டியிலிருந்து இருபது பையன்களும்,ஒன்ருக எங்கெங்கெல்லாமோ சுற்றிவந் தனர்.கிரிக்கெட் ஆட்டக்காரர்களாகவும், இவர்கள் மாறி யிருக்கிருர்கள். நடன கோஷ்டியாகும்போது, பீடர் பரிகை கொட்டுபவராகிவிட்டார்.

கோடைக்காலம் ஸ்காட்லாந்து எல்லையிலிருந்து பதினாறு மைல் தூரத்திலிருந்த பாம்பர் என்ற ஆங்கில கிராமத்தில் பீடர் வேலை நிமித்தம் சில நாளிருந்தார். பக்கத்து ஊர்களில் சுற்றிவிட்டு ஒருநாள் பீடர் பாம்பர்க்குத் திரும்பி வந்துகொண்டிருக்கையில் குறுக்கு வழிகண்டு பிடிக்கிறேன் என்று நினைத்துக்கொண்டு ஒரு காரிருளிரும் கும்மிருட்டுமான இரவில் ஒரு படுகையில் மாட்டிக்கொண்டார். க்ளோரம் ரோடுக்கருகையில் கிடு கிடு பள்ளங்களுடன் கூடிய ஒரு சுண்ணும்புக்கல் எடுத்து விட்டுவிடப்பட்ட பொட்டல் ஒன்றிருக்கிறதென்பது அவருக்குத் தெரிந்த விஷயந்தான். ஆனாலும் அந்த அபாயத்தை தவிர்த்துக் கொள்ளலாம் என்ற நினைப்பு பீடருக்கு, ஊதற் காற்று இருளில் சீறிக்கொண்டிருந்தது. எட்டாக்கையிலிருந்து ஒரு ஆட்டின் ஓலம் கேட்டுக்கொண்டிருந்தது.

திடீரென்று யாரோ "பீடர்!" எனறு கூப்பிட்டது காதில் பட்டது. அவர் "நான்தான், யார் கூப்பிட்டது? என்ன வேணும் உங்களுக்கு என்ருர்?" ஒருகணம் உற்றுக் கேட்டார். காற்றின் ஒலியை தவிர வேறு சத்தமே இல்லை, இடம் வெறும் பாழான இடமாகத் தோன்றிற்று.

பிரமையாக இருக்கும் என்று தீர்மானித்துக்கொண்டு பீடர் இன்னும் சில அடி எடுத்து வைத்தார். இன்னும் வேகமாக அந்தக் குரல் கேட்டது.

"பீடர்!!!

அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார், பீடர். மையிருட்டில் ஊடுருவிப்பார்க்க முயன்ருர். கால் தள்ளாடியது அப்படியே முண்டியிட்டு விழுந்தார். எதையாவது பிடித்துக்கொள்ள கையை நீட்டினுர், பிடிக்கு எதுவும் அகப்படவில்லை, கொஞ்சம் கொஞ்சமாய் கவனிக்கும்போது சுற்றிலும், ஒரு அரை வட்டமாகத் தடவிப்பார்க்கும்போது சுக்கான் கல் எடுத்துவிட்டு பாழாகவிடப்பட்ட ஒரு பள்ளத்தில் தான் கிடப்பதை அறிந்துகொண்டார் பீடர். இன்னும் ஒரு அடி தள்ளி வைத்திருந்தால் இதைவிடப் பெரிய ஒரு கிடு கிடு பாதாளத்தில் போய் விழுந்து கபால மோக்ஷம் ஆகியிருக்கும்.

இந்த சம்பவம் பீடர் மனதில் மறக்க முடியாத ஒரு முத்திரையாகப் பதிந்துவிட்டது. இந்தக் குரலைப்பற்றி அவர் மனதில், எங்கிருந்து வந்தது என்ற சந்தேகமே இல்லை. இந்த விதத்தில் தடுத்தாட்கொண்ட கடவுள் வேறு ஏதாவது ஒரு பெரிய திருப்பணிக்காகத்தான் தன்னை இப்படிக் காப்பாற்றினர், என்று பீடர் நம்பினர். தொடர்ந்து வந்த வருஷங்களில் பலதடவை மரணத்தின் சமீபத்தில் போய்விட்டு, இவருடன் வந்த மற்றவர்கள், காயமபட்டோ, இறந்தோவிட, இவர்மாத்திரம் தப்பிப் பிழைத்திருக்கிருர். அவர் பக்கத்தில் நடந்து வந்து கொண்டிருந்த ஒரு நண்பரை, ஒரு மோட்டார், மோதிக் கொன்றுவிட்டது. கரையிலிருந்து பத்து மைல் கடலுக்குள், போய்விட்ட ஒரு சிறு படகில் தீப்பற்றிக்கொண்டது; இவர் ஏற நினைத்து ஏற முடியாமற் போன விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி நொறுங்கிவிட்டது. கடவுளின் தடுத்தாட்கொள்ளும் கரம், பீடரின் வாழ்வு முழுதும் தென்பட்டது. 'இவையெல்லாம் விதியைப்பற்றிய ஒரு ஊர்ஜிதமான எண்ணத்தையும், ஏதோ ஒன்றிற்காகத் தான் இறைவன் தன்னை ஆட்கொள்ளுகின்றுன் என்ற நம்பிக்கையையும் உண்டாக்கிவிட்டது.

புகானன் தெரு சங்கித கோஷ்டியின்போது, ஒருநாள் சீனுவிலிருந்து வந்த ஒரு பாதிரி அங்கிருந்த இளைஞர் களுக்கு ஒரு பிரசங்கம் செய்தார். வாழ்நாள் முழுதும் அருட்பணி செய்யக்கூடிய சேவித்தவர் (வாண்டியர்) களைத்தான் தேடிக்கொண்டிருந்தார் அவர். அவருடைய வேண்டுகோள் பீடரின் மனதை உருக்கிவிட்டது. தன்னுடைய சொந்த அப்பாவே ஒரு தடவை தன் வாழ்நாள் முழுவதும் அருட்பணி செய்யத் தயாராயிருந்தாரென்பது அவருக்குத் தெரியும், ஏதோ ஒரு காரணத்திற்காக அவரை, ஏற்றுக்கொள்ளவில்லை.

அன்று மாலை கூட்டம் முடிந்த பிறகு, பீடர் எழுந்து நின்றுர். "எங்கே என்னை எப்படி ஆண்டவன் சேவைக்கு உபயோகித்துக் கொண்டாலும் சரி, என் வாழ்நாள் முழுவதும், அருட்பணிக்குத்தான் தயாராயிருக்கத் தீர்மானித்துவிட்டேன்" என்று தெரிவித்தார்.

எவ்வளவு தீவிரமாக இவர் தன் உயிரைத் திருப்பணிக்காக அர்ப்பணித்துக் கொண்டாரோ. அவ்வளவுக் கவ்வளவு சாவகாசமாக நடந்த ஏற்பாடுகளில் சகஜமாக இப்படிப்பட்ட சமயங்களில் ஏற்படக்கூடிய ஏமாற்றங்கள் ஏற்பட்டன. லண்டன் மிஷினரி சங்கத்துடன் கடிதம் எழுதிப் பார்த்ததில் சீனுவுக்கு போவதற்கு முன் ஆக்ஸ்போர்டிலுள்ள "மேன்ஸ்பீல்ட்" காலேஜில் பயிற்சிப் பெற்றுத் தீர வேண்டுமென்ற உண்மை புலப்பட்டது.

உபகாரச் சம்பளம் இதற்குக் கிடையாது. வீட்டிலிருந்து அந்தவிதம் பண உதவியும் சாத்தியமில்லை. சந்தர்ப்பங்களின் மூலம் கடவுளின் ஆக்ஞை "நீ உன் வாழ்க்கையை அர்ப்பணித்தது சரி ஆனல் சீன அதற்கேற்ற இடமல்ல" என்று குறிப்பிடுவது போலிருந்தது. பீடருக்கு உள்நாட்டு மிஷனரிச் சங்கம் எழுதிற்று "வெளி நாட்டுக்குத்தான் வழி அடைக்கிறது ஏன் உள் நாட்டில் சொந்த நாட்டில் அருட்பணியாற்றலாமே?" என்று.

ஆகையால் வாரத்தில் மூன்று இரவுகள் கிளாஸ்கோ நகரிலுள்ள 'ஸ்கொர்ரீஸ்' கல்லூரியில் இந்தப் பயிற்சிக்குப் படிக்கத் தொடங்கினர். இதற்கான ஆரம்ப வகுப்புக்களில் தேவைப்பட்ட ஆங்கில பிரஞ்சு பாஷாஞானம் ரொம்பக் கடினமானதாயிருந்தது. ட்யூப் ஆலையில் பகல் முழுதும் ஒன்பது மணி நேரம் உழைத்துவிட்டு இரவிலும் படிப்பில் கவனம் செலுத்துவது கடினமாயிருந்தது. வகுப்புள்ள நாட்களில் வீடு திரும்பும்போது நள்ளிரவுக்குப் பின் நெடு நேரமாகிவிடும். அதோடு மேல் படிப்புக்கு பணம் மிஞ்சவில்லை. அன்றடச் செலவுகள் புத்தகங்கள் வகுப்புக்கட்டணம், பரீக்ஷைக்கட்டணம், கிளாஸ்கோவுக்கு போய்வரும் செலவு, எல்லாமாகச் சேர்ந்து பணத்தைச் சாப்பிட்டன. முழு நேர அருட்பணி சாத்யமில்லை, நடக்கவும் நடக்காது என்று தோன்றி விட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பீடரின் ஒன்றுவிட்ட சகோதரர் அமெரிக்காவில் குடியேறியிருந்த ஜேம்ஸ் பிராட்பெண்ட், ஸ்காட்லாந்துக்கு வந்து சேர்ந்தார் ஊரைப் பார்த்துவிட்டு அமெரிக்கா திரும்பும் உத்தேசத்துடன்.

அவர் அமெரிக்காவில் செழிப்பாக இருந்தார், நியூயார்க்கிலுள்ள M.W. கெல்லோக்கம்பெனியில் இஞ்ஜினியர் வேலை அவருக்கு. பீடர் எங்கே வேலைப் பார்க்கிறார் என்று விசாரிக்கும்போது ட்யூப் மில்லில் வேலை செய்யும் விவரத்தை அறிந்தார் அவர்.

ஜேம்ஸ் இப்படி விசாரிக்கும்போது ஒரு போர்மேன் (Foreman) ஐச்சந்திக்க நேர்ந்தது. சாதாரண தொப்பி ஒன்றை ஸ்காட்லாந்தில் எல்லா போர்மென்களையும்போல அவனும் அணிந்திருந்தான்.

"பீடர் மார்ஷலுடன் நான் கொஞ்சம் பேசவேண்டும். அழைத்துப் போவீர்களா? என்று ஜேம்ஸ் கேட்டார்.

"தாராளமாய் அழைத்துப் போகிறேன்" என்று சொன்னான் அவன்.

லெய்ட் தெருவிலுள்ள பீடரின் ரூமுக்குஇருவருமாய்ப் போனார்கள். குளித்துவிட்டு வீட்டு ஆடைகளுடன் இளைப்பாறிக் கொண்டிருக்கையில், ஜேம்ஸ்ப்ராட்பெண்ட் அறையில் ஆச்சரியத்துடன் எட்டிப்பார்த்தார். அறை ஒரு சின்னமரத்தாலான அறை. மூடு கதவு உள்ள ஜன்னல்கள் இருந்தன ஒரு சுவரோரம் இரும்புக்கட்டிலொன்று மட்டும் இருந்தது. பற்பல நாற்காலிகளும் புஸ்தகங்களும் ஏராளமாக அங்கே இருந்தன. ஒரு சுவரில் பழைய கடிகாரம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. அதற்குக் கீழே அடிக்கப்பட்டிருந்த ஒரு முளையில் பீடரின் துணிமணிப்பை தொங்கவிடப்பட்டிருந்தது. பீடர் தன் அறைக்குள் நுழையும்போது ஜேம்ஸ் அவருடைய புஸ்தகங்களை பார்த்துக்கொண்டிருந்தார்.

"பீடர்: இன்ஜினீரான நீ இந்தப் புத்தகங்களைப் படிப்பதின் நோக்கம் என்ன? கிரேக்க, ஹீப்ரு அரிச்சுவடிகள், வேதாந்தம் இதெல்லாம் என்னவென்றே புரியவில்லையே? என்று பீடரைக் கேட்டார் ஜேம்ஸ்!

கொஞ்சம் வெட்கப் பட்டாற்போல் "ஜேம்ஸ்! எனக்கு ஒரு மதகுருவாக ஆகிவிடவேண்டுமென்று ஆசை

அது கொஞ்சம் கஷ்டந்தான்... ஆனாலும்..." என்று இழுத்தார்.

ஜேம்ஸ் கொஞ்சம் தட்டிக்கொடுத்து விசாரித்ததில் கதை முழுவதையும்பீடர் கொட்டிவிட்டார். இத்தனை வருஷங்கள் அவர் அடைந்த கஷ்டங்கள், நடந்த நடப்புகள், பெற்ற ஏமாற்றங்கள், எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகச் சொன்னார். "பீடர்! என்னுடைய அப்பாவும் சித்தப்பாவும் அதாவது உன்னுடைய அப்பா. நீ சின்னப் பையனாகயிருக்கும்போதேதான் செத்துப் போய்விட்டார். எனக்கும்தான் ஒரு மாற்றாந்தந்தையும் ஏற்பட்டார். எனக்கு வேண்டிய அத்தனையும் நானேதான் சம்பாதித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. எனக்கு சித்தப்பா பீடரிடம் ரொம்பப்பிரியம். அவருக்காக அவர் மகனுக்கு நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் நான். பீடர் நான் சொல்வதைக் கேட்கிறாயா? அமெரிக்காவுக்கு வந்து மத குருவாக ஆய்விடேன்?"

"ஜேம்ஸ்! அமெரிக்காவுக்குப் போக எனக்குப் பிடிக்கவில்லை. ஏன் நான் அங்கே போக வேண்டும்? அதோடு அமெரிக்காவுக்கு கப்பலேற வேண்டிய கப்பல் கட்டணம் கூட என்னிடம் இல்லை."

"அதைப் பற்றி நீ கவலைப்படாதே பீடர்! அங்கே காலக்ஷேபம் செய்வது சுலபம். நீ வருவதானால் நான் சந்தோஷத்தோடு அழைத்து சென்று விடுகிறேன்."

அதன் பிறகு ஜேம்ஸ் அமெரிக்காவில்படிப்பும் பயிற்சியும் வெகுசுலபமாக கிடைக்கக்கூடுமென்றும் தாராளமான உபகாரச் சம்பளங்களும் கிடைக்கலா மென்றும், விவரித்தார். அமெரிக்க மதஸ்தாபனங்களில் நிலவும் நல்ல சந்தர்ப்பங்களைப் பற்றி விஸ்தாரமாக ஜேம்ஸ் சொன்னபோதிலும் பீடருக்கு அங்கே போகும் ஆசை வந்துவிடவில்லை.

ஆண்டவனுடைய சித்தம் இதுதானா வென்று பிரார்த்தனை மூலம் அறிந்துதன் முடிவை தெரிவிப்பதாகவும் பீடர் ஜேம்ஸிடம் தெரிவித்தார்.

பீடர் இதற்காக ஆண்டவனிடம் மூன்று வாரம் பிரார்த்தித்தார். ஆண்டவன் பதிலொன்றும் சொல்ல வில்லை. பிறகு ஒரு ஞாயிற்றுக்கிழமை ஷேர்ல்டோ டௌகிளாஸ் எஸ்டேட்டில் ஒரு சந்தின் வழியாகப்போய்க்கொண்டிருந்த பீடருக்கு திடிரென்று தலைவனின் (பீடர் ஆண்டவனைத் தன், "தலைவன்" என்று குறிப்பிடுவது வழக்கம்) ஆக்ஞை 'புறப்படு' என்று பிறந்தது.

"சில சமயங்களில் ஆண்டவன் தன் ஆக்ஞைகளை எப்படி ஒரு மனிதனிடம் தெரிவிக்கிறார் என்று தெளிவாக்குவது முடியாத ஒரு காரியமாகும்." என்று பீடர் பின்னால் விளக்கினார்.

"இந்தப் பிரச்னையை நினைத்துக்கொண்டே நான் அந்த சந்தின் வழியாகப் போய்க்கொண்டிருந்தேன், போக வேண்டாமென்ற எண்ணந்தான் மனதில் நிறைந்திருந்தது. ஆனால் நான் தெரிந்துகொண்டு விட்டேன். பதில் வந்தது மனதில் ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையாக ஒட்டிக்கொண்டு விட்டது. ஆண்டவன் என்னை அமெரிக்காவில் சேவைக்காக அழைக்கிறார் என்றநிச்சயம் எனக்கு ஏற்பட்டுவிட்டது.

இதற்குப்பிறகு அடுத்தாற்போல் செய்யவேண்டியது ரொம்பத் தெளிவான ஒரு காரியம். கஷ்டங்களும் இடையூறுகளும் தானாகவே கரைந்துவிடுமென்று நினைக்கலாம். விஷயம் அப்படியல்ல. அமெரிக்காவில் குடிபுகுவதற்கு ரொம்பக் கெடுபிடியான குடியேற்றச் சட்டங்கள் உண்டு. குடியேற்ற அனுமதிச் சீட்டை வாங்குவதற்குள் ஒன்றரை வருஷம் ஆகிவிட்டது.

கடைசியாக பீடர் கப்பலேறும்போது அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் ஜேம்ஸ் வியாபார நிமித்தம் போலந்திற்கு வந்திருந்தார். தன்னந்தனியாக பீடர் **காமிரோனியா** என்ற கப்பலில் ஏறினார்.

தன்னந்தனியாக ஸ்காட்லாந்தின் குன்றுகளும் நிலமும், வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் மறைந்து கண்ணில் படாமல் ஒதுங்கும் காட்சியை பீடர் கப்பலிலிருந்து

கொண்டு கண்டார். பீடருக்கு ஒண்டியாக இருந்தது. பயம் அவரை ஆட்கொண்டது.

1938-ம் வருஷம் "உத்தரவுப்படியே" என்ற மர்மதலைப் புடன் பீடர் எழுதிய பிரார்த்தனைகளி லிருந்து பீடரே இந்தக் காட்சியைத் தன் சொந்த வார்த்தைகளில் விவ ரிப்பதைப் பாருங்கள்.

"மர்ம உத்திரவுப்படியே!" என்ற சொற்றொடர் என்ன விஷயங்களை உங்கள் மனதில் சித்தரிக்கும் என்பது எனக் குத் தெரியாது, எனக்கு அது முதல் உலகயுத்தத்தி லிருந்து ஒரு காட்சியை வெகு விவரமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. அவசரமான உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து ஒரு சாம்பல் வர்ண நாசகாரி ஒன்று துறைமுகத்தைவிட்டு வெகு வேகமாக நழுவி நகரும். ஒரு காட்சியை அந்தச் சொற்றொடர் காட்டுகிறது. அந்த நாசகாரி ஒரு மர்மக் கப்பல் அது ஒரு மர்ம உத்தரவுக்குக் கீழ்படிந்து நகரு கிறது. அதிலுள்ளவர்களுக்கே எங்கே போகிறோம். என்றோ எங்கே தங்குவோ மென்பதோ தெரியாது.

இந்த மாதிரி கப்பல் யாத்திரை செய்வது எப்படிப் பட்ட அனுபவம் என்பது நானே என் வாழ்வில் அனு பவித்து அறிந்து கொண்டிருக்கிறேன். 1927-ஆம் ஆண்டு மார்ச் 29-ந் தேதி காமரோனியாவின் மேல்தளத் தில் நின்றுகொண்டிருந்தது எனக்கு நன்றாக நினைவிருக் கிறது. விசித்திரமாகக் கண்ணீர் மல்கிய கண்களுடன் காவிவர்ணக் குன்றுகள் சூழ்ந்த கின்டைரின்முல்மலைகள் கப்பல் ஆணிகள் கிழித்துக்கொண்டுசெல்லும் அட்லாண் டிக் சமுத்திரத்திலிருந்து மறையும் காட்சி, ஒவ்வொரு தடவையும் கப்பலின் காற்றுடி யந்திரம் சுற்றும்போதும் எனக்குத் தெரிந்தவர்கள், தெரிந்தவைகள், விரும்பியவர் கள் எல்லோரிடமிருந்தும் என்னைப் பெற்றெடுத்த பொன் னாட்டிலிருந்தும் வெகு தொலைவில் துரத்திக்கொண்டிருப் பதும் எனக்கு நன்றாய்த் தெரியவந்தது.

அதன் பிறகு கப்பலின் ஓரத்திற்கு மெதுவாகவும் ஆச் சரியத்துடனும் முன்னேறி நடந்து சென்று அதன் மேல்

சாய்ந்துகொண்டேன். மேற்கே பார்வை லயித்தது. கொந்தளிக்கும் அடிவானத்திற்குப் பின்னே என்னதான் இருக்கிறதோ என்ற ஆச்சரியம்!

புரிந்துகொள்ள முடியாத அந்த அடுத்த நாள் என்னென்ன விளைவுகளை கொடுக்கக் காத்திருக்கிறதோ என்ற ஆவல் எல்லாம் ஏற்பட்டது.

எனக்குக்கூட நம்பிக்கை மறைந்துகொண்டிருந்தது. நான் எங்கே போகிறேன் என்பதே புரியாமல்.''

குழாய்த் தொழிற்சாலையில் நான் வேலை செய்துகொண்டிருந்த இயந்திரப் பட்டரையை விட்டுச் செல்கிறேன்.

நான் என் மனப்பூர்வமாய் என் தலைவனின் ஆக்ஞை என்று நம்பியதால் சபையில் சேருவதற்காக அமெரிக்காவுக்கு வந்துகொண்டிருக்கிறேன்.

ஆனாலும் இதெல்லாம், எப்படி, எப்பொழுது எங்கே நடக்கின்றன என்பது எனக்கே தெரியவில்லை! அற்புதமும் ஆச்சரியம் கலந்த முறையில் ஆண்டவன் என் வாழ்க்கையை வகுத்துவருவதை என்னால் கற்பனை செய்யவே முடியவில்லை. என் வழிகளைக் காட்டி, பாதைகளில் புகுத்தி, என் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்து, எனக்கு அற்புத நண்பர்களையும் ஏராளமாக உதவி செய்பவர்களையும், கொடுத்து. ஆண்டவன் தன்னுடைய அருட்பணிக்கு என்னை ஆளாக்கி என்னைக் கடைத் தேற்றுகிறார்.

## "மழையில் பாட்டு"

நைந்து பழசாகி விட்ட தன் சிறு தோல் பையில் இரண்டு வாரச் செலவுக்கு போதுமான பணத்துடன் 1927-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 5-ந் தேதி பீடர் எல்லிஸ் தீவின் கரையோரத்திலிருந்து பீரங்கிக் கிடங்குக்கு வந்து சேர்ந்தார். ஆண்டவனுக்கு பீடர் மார்ஷலை ஒரு சக்தி வாய்ந்த மதபோதகராக ஆக்கி விட வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது; ஆகையால் பழைய தோல்பையுடன் வந்திறங்கியிருக்கும் ஆசாமிக்கு ஏற்படும் இக்கட்டுகளையெல்லாம் தீர்த்து தனக்குள்ள சக்தியை நிரூபிக்க கிடைக்கும் எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் நழுவவிடுவதில்லை. அமெரிக்காவில் குடியேறும் ஒவ்வொரு ஆசாமிக்கும் இன்ன இடத்திற்குப் போய் சேரவேண்டியவர் என்ற முத்திரை அவசியமாதலால் பீடர் ஒரு பஞ்சுப் பொதிக்கு விலாசச் சீட்டு கட்டப்படுவதைப் போல் நியூ ஜெர்ஸி மாகாணத்திலுள்ள எலிஸபெத் நகரத்தில் வசித்து வந்த அவருடைய அத்தை ஒருத்தியின் விலாசமிடப்பட்டு அங்கே தங்கப்போவதாகக் குறிப்பிட்டு அனுப்பப்பட்டார்.

ஸ்காட் லாந்திலிருந்து புறப்படு முன்பே ஜேம்ஸ் ப்ராட் பென்ட் அமெரிக்காவில் வேலைதேடுவது பற்றி திட்டவட்டமான புத்திமதிகளைச் சொல்லி வைத்திருந்தார்.

"பீடர், நியூயார்க்கிலுள்ள **M. W.** கெல்லோக் கம்பெனியின் பிரதம இன்ஜீனீருக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் தருகிறேன், அவர் எனது ஆப்த சிநேகிதர்களில் ஒருவர் நல்லவர், பாப்ஸ்டின் மத நம்பிக்கையுள்ளவர்களில் மூத்தவர். உனக்கு நல்லதைச் செய்வார்' ஆனால், தம்பி, குமாஸ்தாவாக உட்கார்ந்த இடத்தில் இருந்து செய்யக்கூடிய எந்த வேலைக்கும் முயற்சிகூட செய்யாதே! உன் விருப்பமோ மதபோதகராக ஆகவேண்டுமென்பது.

உடலுழைப்பு கையால் செய்யக்கூடிய வேலை இவையே குருவாவதற்குத் தக்க பயிற்சி அளிக்கக் கூடியதாகும். மதபோதனை செய்பவர்களிடம் உள்ள சங்கடம் என்ன வென்றால் மற்றவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளாததே. இதோ கடிதம் இருக்கிறது ஆனால் கடிதத்தைப் பத்திரமாக வைத்திரு. அதை உபயோகித்துத் தான் தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் வந்தால் ஒழிய இதை உபயோகிக்காதே."

ஜேம்ஸ் கூறிய இந்த புத்திமதியில் நிறைய அனுபவம் இருப்பதை பீடர் உணர்ந்தார். எந்த விதத்தில் அந்தப் புத்திமதி தனக்கு நன்மைச் செய்யும் என்பது மாத்திரம் புரியவில்லை பல வருஷங்களுக்குப் பிறகு அமெரிக்க காங்கிரஸ் சபாமண்டபங்களில் கூட தொழிலாளர்களுடன் மெய்வருந்த உழைத்த உழைப்புக்குள்ள தன் மதிப்பை உணரமுடிந்தது.

இந்த விதத்தில் தான் நியூஜெர்ஸியில் பப்ளிக் ஸர்விஸ் எஸக்ஸ்காஸ் & எலக்ட்ரிக் கம்பெனிக்காக மண்வெட்டும் வேலையில் பீடர் ஈடுபட நேர்ந்தது. பொது மராமத்து வேலை என்பது நாலு அங்குலக் குழாய்களை மேல் ந்யூயார்க்கிர்னி முழுதும் மண்ணைத்தோண்டி பதியவைக்கும் வேலையாகும். ஏழுமணிக்கு வேலை செய்யுமிடத்தில் ஆஜராக இருப்பதற்காக பீடர் காலை நாலு மணிக்கே எழுந்துவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தூரத்தாலும் போக்குவரத்து அதிகமாயிருந்ததாலும் எலிஸபெத் நகரிலுள்ளத் தன் வீட்டிற்கு பீடர் திரும்பும்போது இரவு மணி எட்டாகிவிடும்.

கோல்ப் விளையாட்டுத்திடலை நிர்மாணிக்கும் வேலை அவர் அடுத்தபடியாக பார்த்த வேலையாகும். இந்த வேலையின்போது கோடை அதிகரித்து உஷ்ணம் தாக்கி, காலமெல்லாம் பின்னால் அமெரிக்காவின் உஷ்ணத்தால் பட்ட கஷ்டம் அப்போதே ஆரம்பமாய்விட்டது.

114-வது தேசிய காவற் படையில் பீடர் சேர்ந்து கொஞ்ச நாளைக்கெல்லாம் பயிற்சிக்காக கர்ட் கடலில்முகா

மிடும்படி படை அனுப்பப்பட்டது. பயிற்சிமுடிந்து 114வது காவற் படை திரும்பியதும் பீடரின் வேலை போய்விட்டது

ஆகையால் அவர் தன் இஷ்டத்திற்கு மாருக கோல்ப் திடல் நிர்மாணிக்கும் வேலையிலிருந்து பாட்டர் ஸன்பெஃ டைரியின் கண்ணாடிக் கூறையின் கீழ் வார்படம் செய்பவருக்கு உதவியாளராகத் தன்னை, ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் உயர்த்திக் கொண்டார். இதைப்பற்றி அவர் பின்னால் குறிப்பிடுகையில் "நாங்தேயின் நகரத்தை எப்படியோ கஷ்டப்பட்டுக் கடைசியில் கண்டுபிடித்துவிட்டதைப் போலத்தான் நான் இந்த வேலைக்குப் போனதைப் பற்றி எண்ணினேன்" என்று அடிக்கடி சொல்லுவார். சொல்லுவார். இந்த வேலையிலிருந்து இரவு நெடுநேரம் கழித்து ஸம்மர் தெருவிலுள்ள தன் அத்தையின் வீட்டுக்குத் திரும்பும்போது கையெல்லாம் வீங்கி 300 டிகிரி உஷ்ணங்கக்கும் உலைகளிலிருந்து தெரித்த கனல்பொறிகளால் தாக்கப்பட்ட காயங்களுடன் காணப்படுவார். இந்த நிலையில் தன் சட்டைப் பொத்தான்களை கழற்றக் கூட பிறர் உதவியை நாட வேண்டியதாக இருக்கும்.

இது இந்த லக்ஷணத்தில் இருந்தபோதிலும் பீடருக்கு ந்யூஜெர்ஸியைக் குடைந்து அதன் துர்க்கந்தத்தை அனுபவிப்பதும், வெடி உலையில் நெருப்புப் பொரிகளிடையே நித்யகண்டம் பூர்ணாயிசாய் இருப்பதும் எப்படி தன் மத குருவாக ஆகும் லக்ஷியத்தை நிறைவேற்றி வைக்கும் என்பது புரியவில்லை.

நெடு நாட்களாகவே கஷ்டமான வேலை அகால உணவு, தூக்கம், முதுகுவலி, இரும்புத் தெரிச்சல்களால் கைவிரல்களில் ஏற்படும் மயிர்க்கால்களிலெல்லாம் எண்ணெ, கிரீஸ் ஆகியவை ஒட்டிக் கொண்டிருத்தல் எல்லாம் பழகிப் போய்விட்டன

இதை யெல்லாம் அவர் லக்ஷியம் செய்வில்லை என்ருலும் இந்த ஐந்து மாத காலத்தில் மதத்திற்கோ, மாதா கோவிலுக்கோ கொண்டு சேர்க்கும் எட்டாக்கை சம்பந்தம் ஒன்றுகூட அவருக்கு ஏற்படவில்லை. முன்பிருந்ததை விட மதகுருவாகும் லட்சியமே இன்னும் அதிக தூரத்

துக்கு ஓடிக்கொண்டுபோய் அவரை வேடிக்கை பார்த்தது.

ஒருக்கால் ஆண்டவனின் சமிக்ஞைகளை சரியாகப் புரிந்து கொள்ளாமல் தான் பொழுதை வியர்த்தமாக்கி கொண்டிருக்கிறேமோ என்ற சந்தேகம் பீடருக்கு ஏற்பட்டது. ஸ்காட்லாந்தைவிட்டு இங்கு வந்ததே ஒருக்கால் ஆண்டவனின் சித்தத்திற்கு மாறுபட்டதோ என்றுகூட பீடர் எண்ணத்தொடங்கினர். கடவுளே பொய்யாகவும் எட்டாத ஒரு கனவாகவும்கூட தோன்ற ஆரம்பித்தது. திரும்பவும் ஸ்காட்லாந்துக்கே போய் தன் நண்பர்களிடமும் குடும்பத்தினரிடமும் இந்த விஷயத்தில்தான் தவறு செய்து விட்டதாக ஒப்புக்கொண்டு விடலாம் என்றுகூடத் தீர்மானிக்க இருந்தார். ஆனல் இந்த நெருக்கடியான கூட்டத்தில் ஒரு பிரத்யேக டெலிவரிக் கடிதம் அவருக்கு வந்து சேர்ந்தது. அலபாமாவிலுள்ள பர்மிங்ஹாம் நகருக்கு போன வருஷம் ஸ்காட்லாந்திலிருந்து வந்திருக்கும் பீடரின் பால்ய நண்பனை, டேவ்உட்டிடமிருந்து வந்தது. அந்தக்கடிதம், "ரகசியஉத்தரவின்" இரண்டாவது சமிக்ஞையாக அமைந்திருந்தது.

டேவ் அக்கடிதத்தில் பீடரை ஏன் நீபர்மிங்ஹாமுக்கு வந்துவிடக்கூடாது என்று கேட்டு எழுதியிருந்தார். "உனக்கும் தெற்கு பிராந்தியம் பிடித்திருக்கும். இங்கே பல நன்மைகள்கூட உனக்குக் கிடைக்கலாம். நீ வந்தால் 'பர்மிங்ஹாம் செய்தி' என்ற பத்திரிகாலயத்தில் உனக்கும் ஒரு வேலைத் தேடிக் கொடுத்துவிடலாமென்று திடமாக நம்புகிறேன். நன்ருக யோசித்து எவ்வளவு சீக்கிரம் பதில் எழுத முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகப் பதில் எழுது" என்று எழுதப்பட்டிருந்தது கடிதத்தில்.

கடிதம் முக்கியமான ஒரு கடிதமாகப் பீடருக்குத் தோன்றியது, தனக்காக ஆண்டவன் வகுத்துள்ள திட்டத்தின் இரண்டாவது கட்டமாகக் கடிதக் கருத்துக்கள் பீடருக்கு தோன்றியது வெகு ஆவலுடன் ஆண்டவனைப் பிரார்த்தித்துத் தனக்கு வழிகாட்டும்படி வேண்டினர். சமயப்பணிக்கு தென் பிராந்தியத்தில் திறக்கப்படும்.

ஏதோ ஒரு கதவுதான், வழியாக இருக்குமோ? கடவுள் வெவ்வேறு ஆட்களை அவர்களுக்கே தெரியாமல் மற்றவர்களுக்கு வழிகாட்ட உபயோகித்துக்கொண்டிருக்கிறார். இப்போது டேவ்உட்டை கடவுள் அம்மாதிரி உபயோகித்திக்கொள்ளுகின்றாரா? ஐயமும் திகைப்புமாக, ஒருவாரம் ஆயிற்று, திடீரென்று பதில் கிடைத்தது,

நிசப்தமான அமைதியில் அடிபடும், மணியோசை போலிருந்தது. அந்தப் பதில் "ஆமாம் இதுதான் அது நீ காத்திருந்தது இதற்காகத்தான். நீ உடனே இப்போதே தென் பிராந்தியத்திற்குப் புறப்பட்டுவிடவேண்டும்" என்று காதால் கேட்கக்கூடிய விதத்தில் யாரோ பேசுவதைப்போல் பீடருக்கு கேட்டது.

உடனே புறப்படுவதற்காக பீடர் நாற்பது டாலர் கடன் வாங்க வேண்டியிருந்தது.

எலிஸபெத், பாட்டர்ஸன், ஜெர்ஸி நகரம், எல்லாவற்றையும் நன்றியுடன் விட்டுப்பிரிந்து சென்றார். அங்கே அவர் நடத்திய ஐந்து மாத வாழ்வு வாழ்க்கையிலேயே மிகக் கஷ்டம் நிறைந்த வாழ்க்கையாகும்.

தெற்கு நோக்கி ரயில் மேரிலாந்தில் மலைகளை உருட்டிக்கொண்டு செல்லச் செல்ல, கரோவினாக்களின் புகையிலைப் பயிர்களுக்கு மத்தியில் ரயில் போகப் போக தெற்குக்கோடியின் பருத்தி நிலங்களுக்கூடே ரயில் புசப்புக, பீடரின் உற்சாகம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தலைதூக்க ஆரம்பித்தது. அது நிச்சயமாய் ஒரு நல்ல பிராந்தியம். ஒருக்கால் கடைசியில் அந்தப் பிரதேசம் சந்தர்ப்பங்கள் நிறையக் கிடைக்கக்கூடிய நிலமாகவே இருந்தாலும் இருக்கலாம்.

அவருடைய ஜன்ம பூமித் தோழர்களான டேவ்உட்டும், பாப் ஹண்டரும் அவரை ஸ்டேஷனில் சந்தித்து தாங்கள் வசித்து வந்த அறைக்கு அழைத்துச் சென்றனர். இந்த மூன்று துப்பாக்கி வீரர்களும் ஒரு வருஷம் பிரிந்திருந்து இரண்டு கண்டங்களில் தீரமான பல அனுபவங்களுக்கு ஆளான பின்னர் மறுபடியும் ஒன்று சேர்ந்தனர்.

'பர்மிங்ஹாம் செய்தி' என்று பத்திரிகாலயத்தில் 'விநியோக இலாக்காக்களில்' காலி ப்ரூஃப் திருத்தும் கூலியாக பீடருக்கு ஒரு வேலை உடனடியாகப் பெற முடிந்தது. வாரத்திற்கு பதினேழு டாலர் சம்பளம் அவருக்கு.

பிறகு வெகு சீக்கிரத்தில் அவர் சம்பளம் வாரத்திற்கு இருபது டாலராக உயர்த்தப்பட்டது. ஆனாலும் அதிலிருந்தும் மத போதனை செய்யும் கல்லூரியில் சேருவதற்கான சேம நிதிக்கு ஒன்றும் மிஞ்சவில்லை.

அந்த சமயத்தில் பர்மிங்ஹாம் நகரச் சரிவின் 4-வது 20-வது தெருக்களில் உள்ள மாதாக் கோவிலில் சாமியாராக இருந்த வேல்ஸைச் சேர்ந்த டாக்டர் **ட்ரவோர் மார்டிகையின்** மதபோதனைப் பிரசங்கங்கள் நகரத்தில் பிரமாதமான அபிப்பிராயங்களை உண்டாக்கி வந்தன.

பீடர் பர்மிங்ஹாமுக்கு வருவதற்கு முன்பே டேவ் உட் இவரிடம் (டாக்டர் மார்டிகாயிடம்) பீடரைப் பற்றியும் மதபோதகராக ஆக இவருக்குள்ள ஆர்வத்தைப்பற்றியும் நிறையச் சொல்லியிருந்தார். பீடரே டாக்டர் மார்டிகாயை நேரில் சந்தித்துத் தன் கதையைத் தெரிவித்தபோது இந்த ஸ்காட்லாந்து இளைஞனின் அந்தரங்க சுத்தத்தையும் கடவுளின் குரலைக் கேட்டு நம்பிக்கையுடனும் பக்தியுடனும், உறுதியுடனும் இவ்வளவு தூரம் வந்து விட்டதைக் கண்டு பரவசமானார்.

பல வருஷங்கள் கழித்து இதைப் பற்றி பீடர் பேசும் போதுகூட இதைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது "இதைத் தொடர்ந்து சில வாரங்களில் நடந்த சம்பவங்களை நினைத்தால் அவை அவ்வளவும் சுத்தக் கட்டுக்கதைகளைப்போல் நம்புவதற்குக்கூட முடியாத அவ்வளவு ஆச்சரியமாக இருக்கின்றன" என்று கூறுவார்.

அலபாமாவுக்கு வந்த பல மாதங்களுக்குப் பிறகு நான் பழைய முதல் பிரிஸ்பிடீரியன் திருச்சபையில் சேர்ந்து விட்டேன். இளைஞர் சங்கத்தின் தலைவனாக ஆனதோடு அவர்களுடைய சாரண ஆசிரியராகவும் ஒப்புக்கொண்டு விட்டேன். வயதுவந்த ஆண்களின்

வேதாகம வகுப்புக்கு என்னை நிரந்தர வாத்தியாராக ஆகும் படி அவர்கள் கேட்டு நானும் ஒப்புக்கொண்டு விட்டேன். ஒரு தடவைக்குமேல் டாக்டர் மார்டிகைக்கு ஞாயிறுப் பிரார்த்தனையில் உதவியாளனாய், இருந்ததோடுப்ரார்த் தனைக் கூட்டங்களிலும் பேசியிருக்கிறேன். கூட்டத்தின ரால் நானும் திருச்சபைக்கு அங்கத்தினராகக் கூடிய ஒரு வனாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறேன். பர்மிங்ஹாமி லுள்ள ப்ரிஸ்பிடேரிய திருச்சபையினர் அதற்கான பிரத் யேகக் கூட்டமொன்றில் என்னைப் பரிட்சை செய்து அவர் களுடைய பார்வையில் என்னை ஏற்றுக்கொண்டு நான் எந்த திருச்சபை பயிற்சிக்கு குருகுலத்தில் சேரவேண்டு மென்பதையும் தீர்மானித்தார்கள். இவ்வளவும் எவ்வளவு குறுகிய காலத்தில் தெரியுமா? ஒரு சில மாதங்களுக்குள் சில சமயங்களில் ஆண்டவன் மந்த கதியில் நடப்பதாகத் தோன்றுகிறார். ஆனால் அவர் புறப்பட்டு விட்டால் நிஜ மாகவே இயங்கத்தான் இயங்குகிறார்.'' அந்த வருஷம் அக்டோபருக்குள் அவரும் அவருடைய புது நண்பர்களும் தேர்ந்தெடுத்திருந்த கொலம்பியா திருச்சபை குருகுலம் பல வாரங்களாக வகுப்புகளை நடத்திக் கொண்டிருந்தது. ஆகையால் பீடர் அடுத்த பள்ளித் தொடக்கக் காலத்தில் அங்கு தன் பயிற்சிக்காகச் சேருவதென்றும் அந்த வரு ஷத்தை பர்மிங்ஹாம் நகரில் போக்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

'செய்தி'யின் நிருபர்கள் அவருடைய திட்டங்களைப் பற்றிக் கேள்விகள் கேட்டுத் திணற அடிப்பதை ஒரு ஆனந்தமாகக் கொண்டார்கள். ''பீடர், உம்முடைய குரு குலப் பயிற்சிக்கு வேண்டிய பொருளை எப்படிச் சேகரிக்கப் போகிறீர்? சாப்பிடுவது என்ற துர்வாடிக்கையை வேறு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறீர். வாரத்திற்கு இருபது டாலரில் ஒன்றுமேமிஞ்சாதே!'' என்றெல்லாம் நையாண்டி செய்வார்கள்.

''அதெல்லாம் ஆண்டவன் செயல். திருச்சபையில் சேர்ப்பதற்காக இந்த நாட்டுக்கு என்னை அனுப்பினார். எப்படி என்னை அதில் சேர்க்கிறார் என்பது அவருடைய கவலையே தவிர என்னுடையதல்ல. என்னுடைய கடமை

கட்டளைக்குக்கீழ்ப்படிவதுதான். பாக்கியைஅவர்பார்த்துக் கொள்வார்" என்பார். பையன்கள் அவரை ஆச்சரியத்துடன் நோக்கிவிட்டு ஒருவரைப் பார்த்து மற்றொருவர் தலையை ஆட்டிக் கொள்வார்கள். இது வெறும் பக்தியா அல்லது ஸ்காட்லாந்துக் காரருக்கே உரிய அசைக்க முடியாத நம்பிக்கையா என்று நிதானிக்க அவர்களால் முடியவில்லை.

1928-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஒருநாளிரவு வயது வந்தோரின் வேதாகம வகுப்பினர் ஒரு விருந்துபசாரம் நடத்தினர். விருந்தின் முடிவில் ஜான் போர்ட்டர் தான் ஒரு அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்றும் எல்லோரும் அமைதியாகச் சிறிது நேரம் இருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். பீடரை முன்வரிசைக்கு அழைத்துவந்தார். நாணமும் வெட்கமும் அடையும்படியாக அந்த இளைஞரை ஆக்கிவிட்ட ஒரு புகழ்மாலை பிரசங்கம் ஒன்றைச் செய்துவிட்டுப் பீடரிடம் ஒரு அரக்கு முத்திரை வைக்கப்பட்ட கவர் ஒன்றைக் கொடுத்தார். சிரித்துக்கொண்டே "பீடர் இந்தக் கவரை வீட்டுக்குப் போனவுடன் படியுங்கள் நானே எழுதிய கடிதம் ஒன்றுதான் அதற்குள் இருக்கிறதென்றாலும் படிக்கப் படிக்க அது உமக்கு சுவாரஸ்யமாக இருக்கும்' என்றார். "ஸ்ரீமான் போர்ட்டர்? என்னால் அதுவரை காத்திருக்க முடியாது என் றுஅதைப் பிரித்து அதற்குள்ளிருக்கும் கடிதத்தைப் படிக்கும்போதே அங்கே கூடியிருந்த அத்தனை பேரும் அவருடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள் அந்த முகத்தில் ஆச்சரியமும் ஆனந்தமும் எழுதப்பட்டிருந்தன. ஆனந்தக் கண்ணீர் கண்களில் ததும்பிக் கொண்டிருந்தது.

கடித வாசகம்: 16உ ஏப்ரல் 1928.

அன்புள்ள மார்ஷலுக்கு,

நீர் உம்முடைய வாழ்க்கையை ஆண்டவனுக்கு அர்ப்பணித்துவிட்டீர் என்பதை அறிந்துகொண்டும் இந்த நல்ல லட்சியத்தின் நிறைவுக்கு தேவையை நன்கு உணர்ந்தும் இத்தனை நாளாக இவ்வளவு விரும்பத்தக்க வகை

யில் உம்முடைய போதனைக்குட்பட்ட வயது வந்த ஆண்களின் வேதாகம வகுப்பினர்களாகிய நாங்கள் தங்களுடைய திருச்சபைக் குருகுலவாசத்தின் முதல் வருஷ காலமாகிய ஏழுபள்ளி மாதங்களின் போதும் மாதாமாதம் உயர்ந்தபட்சம் ஐம்பது டாலர் வரை உமக்கு எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ள உரிமையளிக்கிறோம் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இதில் பல கஷ்டங்களும் மனவேதனையும் தங்களுக்கு ஏற்படுமென்பதையும், சிலசமயங்களில் மனத்தளர்ச்சி ஏற்படுமென்பதைவும் நாங்கள் அறிவோம். ஆனாலும் தாங்கள் யாருடனெல்லாம் பழகியிருக்கின்றீர்களோ அவர்களெல்லாம் உமது லட்சியங்களுக்கு சித்தி ஏற்பட வேண்டுமென்று தங்களுடைய பொருளால் மட்டுமல்ல மனப்பூர்வமான பிரார்த்தனைகளாலும், நல்லாசிகளாலும் ஆவலுடன் விரும்புகிறார்கள்.

நீங்கள் புறப்படுவதற்கு இன்னும் பல மாதங்களிருப்பது எங்களுக்கு தெரியும். ஆகையால் இது விஷயமாகத் தங்களுக்குத் திட்டங்களை வகுப்பில் தெரிவிக்கப் போதுமான அவகாசம் தங்களுக்குக் கிடைக்கும் என்று தெரிவித்துவிட்டு, எங்களுடன் ஒரு நிகழ்ச்சி முறை தயாரித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

எங்கள்பெருமதிப்பு தங்களிடம் என்றென்றும் உண்டு என்ற உறுதியுடையவர்களாகிய.

உங்கள் உண்மையான

பிரிஸ்பிடிரிய திருச்சபையைச் சேர்ந்த
வயது வந்த ஆண்கள் பிரிஸ்பிடீரிய வேதாகம
வகுப்பின்

J. W. போர்ட்டர்.
A. L. ஃபெயர்வீ,
சாம் C. ஸ்மித் (Smith)
கமிட்டி.

கடைசியாக திருச்சபையின் கதவு திறந்துகொண்டிருந்தது. பின்னால் இந்த முன்னணி வகுப்பின் பிரத்தியேகப் பிரதிநிதியாகவேதான் நான் திருச்சபையில் அங்கம் வகிப்பதாகத் தன்னைக் கருதினார்.

இடையில் வந்த வாரங்களில் ஆண்டவனுக்குச் சில்லரைப் பிரச்சினைகளைச் சமாளிப்பதில் உள்ள திறமையின் ஓரிரு உதாரணங்கள் காணக்கிடைத்தன.

குடும்பத்திற்குள் சுமுக உறவுக்காக ஆண்டவனிடம் செய்யப்பட்ட பிரார்த்தனைகளுக்கு ஆண்டவன் செவி சாய்த்தார். அவருக்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட பல் சிகிச்சைக்கான தொகையை பீடரின் மாற்றுந் தந்தையாரான ஃப்ண்டேலியே கொடுத்து உதவினார்.

இன்னொரு நாள் 'செய்தி' ஆபீஸில் ஒரு டெலிபோன் செய்தி பீடருக்கு வந்தது. டெலிபோனில் மறுபக்கத்திலிருந்து பேசிய குரல் "மார்ஷல்! நான் ஓடம் அவர்களின் துணிக் கம்பெனியில் வேலை செய்யும் ஒரு குமாஸ்தா தன்னுடைய பெயரைத் தெரிவிக்க விரும்பாத ஒருவரால் தங்களுக்கு ஒரு புது உடுப்புத் தயாராக உள்ளது. தாங்கள் வந்து அதை எடுத்துக் கொண்டு சென்றால் மிக்க மகிழ்ச்சியாக இருக்கும்" என்று தெரிவித்தது.

பீடர் காலம் தாழ்த்தவில்லை அன்று மத்தியானமே பீடருக்கு அவர் எப்பொழுதும் அணியும் பிரத்யேகமாகத் தைக்கப்பட்ட ஆடைகளை பெற்றுக் கொண்டு விட்டார். அவற்றை யார் தனக்கு அளித்தார் என்பதே அவருக்குத் தெரியாது.

உனக்குத் தேவைப்பட்ட போது ஒரு ஆடையை ஆண்டவனால் அளிக்க முடியுமா? ஆம்! அவரால் முடியும்! இதைப் பீடர் ஒருபோதும் மறக்கவில்லை.

முதல் வருஷம் முடியும் தருணத்தில் பர்மிங்ஹாமிலிருந்து பீடருக்கு உதவிய நண்பர்கள் அடுத்த வருஷம் மாதா மாதம் ஐம்பது டாலர்கள் உதவத் தீர்மானித்த

னர். அந்த வருஷம் முடிவதற்குள்ளாகவே வருவாய்க்கான வேறு வழிகளும் தோன்ற ஆரம்பித்தன. அவருடைய தாயாருக்கு அந்த சமயத்தில் அவர் எழுதிய ஒரு கடிதம் இதை வெகு நன்ருகப் புலப்படுத்துகிறது.

கொலம்பியா வேதாந்த குருகுலம்,

டிக்காடுர். கா.

13உ மே, 1929.

அன்புள்ள அம்மா,

தங்களுடைய கடிதம் கிடைத்தது. ஸ்காட்லாந்தின் சீதோஷ்ண நிலை மிகக் கடுமையாக இருக்கிறது. இது ஒன்றுதான் என் அபிப்ராயத்தில் ஸ்காட்லாந்துக்கு உள்ள சங்கடம். உதாரணமாகத் தாங்கள் இங்கே இருக்கும் பட்சத்தில் எவ்வளவு சந்தோஷமாக பருவ நிலைகளை ரசிப்பீர்கள்!

குருகுலத்தின் அறிக்கையைத் தாங்கள் விரும்பினீர்களென்பதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி. போன வெள்ளிக்கிழமையன்று நாங்கள் நடத்திய ஒரு நிகழ்ச்சியின் விபரத்தின் ஒரு பிரதியை அனுப்புகிறேன். அது பிரமாதமாக வெற்றியடைந்த ஒரு நிகழ்ச்சி. நாங்களும் மிகக் குதூகலமடைந்தோம். என் பாடல்களைப் பாடும்போது ஆக்ஸ்போர்டிலிருந்து வந்த ஒரு ப்ளேஸர் கோட்டுடன் கூடிய ஆடை அணிந்திருந்தேன்.

இந்த நாலங்கக் கோஷ்டியில் நானும் ஹாரீப்ரியூனும் மேரியட்டாவில் ரொம்பப் பேருடைய சிநேகிதத்திற்குப் பாத்திரமாக உள்ளோம். சிறப்பாக எனக்கு, என்னிடம் சிரத்தைக் காட்டும் சிலநல்லவர்கள் சிநேகிதம் வாய்த்திருக்கிறது. அவர்களெல்லாம் என்னுடைய குடும்பம் ஸ்காட்லாந்தில் இருக்க, தெற்கே ஒரு விதத்தில் தனித்திருந்துகொண்டு திருச்சபையில் சேருவதை அற்புதமாகக் கருதுகிருர்கள். நான் ஒருபோதும் தனியாக இருப்பதில்லை என்பது அவர்களுக்குத் தெரியாது. தன்னுடைய அடியார்களின் தேவைகளைக் கவனித்து அவர்களுக்காக

ஒவ்வொன்றையும் வகைப்படுத்தித் தரும் ஆண்டவனால் என்னுடைய ஒவ்வொரு செயலும் சரியான வழியில் கொண்டு செலுத்தப்படுகிற தென்பதை நான் உணருகிறேன்.

என்மேல் பெய்யும் அருள் மழைக்கும், அன்புக்கும் எல்லையே இல்லைபோல் தோன்றுகிறது. அட்லாண்டாவிலுள்ளபிரிஸ்பிடிரிய திருச்சபைகளின் சூபரின்டென்டண்டான டாக்டர் ஹுக்கை நான ஒருபேட்டி கண்டேன். அவர் தான் எனக்கு மேலதிகாரி. அவர் என்னை பார்னெட் கோயிலோடு, ஒரு மாதாகோயிலையும் என் திருப்பணிக்குரியதாக கோடை காலத்தில் ஒப்புக் கொள்ளச் சொன்னதோடு மாதத்தில் இரண்டுநாள் காலை வேளையில் மதபோதனைப் பிரசங்கம் செய்யும்படியும் கேட்டுக்கொண்டார். நான் மிக மகிழ்ச்சியுடன், அதை ஒப்புக்கொண்டேன். அதற்காக மாதத்திற்கு இருபத்தைந்து டாலர் சொல்லி என்னுடைய மாதச் சம்பளத்தை 125 டாலருக்கு மேற்பட்டதாக ஆக்கிவிட்டார். பிறகு அவர் என்னை சங்கீத கோஷ்டி ஏதாவது நடத்தியதுண்டா என்று விசாரித்தார். இது, நம்முடைய ஊரில் உள்ள மாதாகோயிலில் நடந்த சின்னஞ்சிறு சங்கீத கோஷ்டியின் நினைவை என் மனதில் உண்டாக்கிவிட்டது, இதை நான் அவரிடம் சொன்னவுடன் கோடைகால முகாம் ஒன்று ஸ்மிர்னுவில் நடக்கப்போகிறதென்றும், அந்த இளைஞர் முகாத்தின் சங்கீத டைரக்டர் பொறுப்பை எனக்கு அளிப்பதாகவும், சொன்னார். அதையும் நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன், இப்படியாக ஜார்ஜியா மாகாண முழுதும், அங்கம் வகிக்கும் இந்த இளைஞர் கூட்டத்தில் சேவை புரியும் பேராசிரியர்களில் ஒருவனாக சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

இம்மாதிரி நடப்பது ஆச்சரியமாக இல்லை? என். திருச்சபைப் பணிகள் நாளுக்கு நாள். முன்னேறுகிறது. என் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கும் நாளுக்கு நாள் அதிகக் கூட்டமும் உண்டாகி வருகிறது. அவர்களுடைய உற்சாகத்தால் ஜனங்கள் என்னை நன்றாகப் போதிக்கச் செய்கிறார்கள். இவ்வளவு உற்சாகமும், பக்தியும் விசுவாச

மும் காண்பிப்பவர்களுக்கு மகோன்னதமான நன்மைகளைத் தவிர வேறு என்ன என்னால் செய்ய முடியும்?

நல்ல பொழுது போகிறது இப்போது, முன்பு சொல்ல முடிந்ததைவிட மேலான விஷயங்களை இன்னும் கொஞ்சம் அதிகமான தன்னம்பிக்கையுடன் போதித்து வருகிறேன். நான் நமது ஊருக்கு வரும்போது புசன்ன தெருவில் மத போதனைப் பிரசங்கம் செய்யும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் "அன்னையின் திருநாள். இந்தத் திருநாளன்று எல்லாத் தாய்மார்களுக்கும் நாடெங்கும் புகழ்பாடி காணிக்கைகள் செலுத்தி மானிட உறவில் அன்னையர்க்கு உள்ள மகோன்னதமான ஸ்தானத்தைப் பற்றிய புனித எண்ணங்களை வலியுறுத்தி கொண்டாட்டங்கள் நடைபெறுகிறது. இந்த வழக்கம் ஒரு கவர்ச்சிகரமான சம்பிரதாயமே. ஆனாலும் புனிதமான திருநாட்களைக்கூட வியாபாரமாக்கி விடுவதில் நிபுணர்களான அமெரிக்கர்கள் இதையும் ஒரு வியாபாரமாக ஆக்கிவிடுவார்களோ என அஞ்ச வேண்டியதாக இருக்கிறது.

அந்த நாளன்று எண்ணங்கள் கிளர்ந்து எழுகின்றன. வழவழப்பே ஸ்பவாவமான ஸ்காட்லாந்து வாசிகள், அமெரிக்கர்களுக்கே உரிய தாராளத்துடன் வாழ்த்துச் செய்திகள் அனுப்பி அமர்க்களப்படுத்தாவிட்டாலும், அவ்வளவு ஆழ்ந்த பக்தியுடன் இதில் ஈடுபடத்தான் செய்கிறார்கள். ஒருக்கால் நாம் இந்த விஷயத்தில் இன்னும் கொஞ்சம் ஆரவாரத்திற்கு இடம் கொடுக்கத்தான் வேண்டும் போலிருக்கிறது. ஆனால் ஒன்று, ஸ்காட்லாந்து மக்களின் மிக லலிதமான உணர்ச்சிகள் சுலபமாக எழுத்தாகவோ, பேச்சாகவோ வெளிப்பட்டுவிடுவதில்லை. அது யூகித்து அறியப்பட வேண்டும் வாழ்க்கையில் அதாவது நடைமுறையில் தொக்கி நிற்குமே தவிர பேச்சில் தென்படாது.

அனால் அந்தத் திருநாளன்று என்னுடைய அன்னைக்கு நான் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறேன் என்

பதை உணர்ந்தேன் உங்களிடமிருந்து ஐயாயிரம் மைல்களுக்கு அப்பால் நான் விலகியிருந்த போதிலும், உங்களுடைய அபிமானம் என்னிடத்தில் உங்களுக்கிருந்த, இருக்கிற நம்பிக்கை எனக்கு உண்மையாகவே அனுபவிக்க முடிந்தது. நல்ல விதை யூன்றி நல்ல செடியை வளர்த்த உங்களுக்கு இந்தச் செடி நற்பயிரைக் கொடுக்கும் காலம் வந்து விட்டது.

இங்கே நான் வந்தது முதல் எனக்குக் கிடைத்து வரும் கீர்த்திகளையும், கௌரவங்களையும்விட என்னைப் பற்றித் தாங்கள் வைத்திருக்கும் பெருமிதத்தையும் அபிமானத்தையுந்தான் நான் மேலான கௌரவமாக மதிக்கிறேன். நான் நம்முடைய ஊருக்கு வந்து நான் போதனைப் பிரசங்கம் செய்ததைத் தாங்கள் கேட்கும் உயர்வு நவிற்சியான புகழ்ச்சிகளையெல்லாம் விட இனிமை சங்கீதமாக இருக்கும்.

"காணிக்கையாக எதையும் தங்களுக்கு அனுப்பக் கூடிய நிலையில் நான் இல்லை. என்னிடம் பணம் கிடையாது. சாதாரண ஆடம்பரப் பொருள்களுக்கு வேண்டிய பணம் கூட என்றும் எனக்கு கிடைக்கவே கிடைக்காது போலிருக்கிறது. இருந்தபோதிலும் வாழ்வதற்கு வேண்டியது எனக்குப் போதுமான அளவு கிடைக்கிறது. எதற்காகவும் ஏங்காமலிருப்பதற்கு போதுமானது கிடைக்கிறது. ஆனால் உதாரணமாக அதிகப்படியான ஆடை வாங்குவதற்கோ எனக்கு அத்யாவசியமாகத்தேவைபடும் ஒரு புது செருப்பு ஜதையைப் பெறுவதற்கோ வேண்டிய பண வசதி இல்லை. பணத்தால் வாங்க முடியாத ஒன்று என்னிடம் இருக்கிறது. ஆண்டவனின் மோன சாம்ராஜ்யத்தைக் காணும் பேற்றை பெற்று விட்டால், இந்தப் பொருள்கள் யாவும் தானுகவந்து நிறைந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது.

ஆகையால் நான் தங்களுக்குக் காணிக்கை ஏதும் அனுப்பவில்லை. தாங்களே உணரக் கூடிய, யூகித்தறியக் கூடிய என் நம்பிக்கைகளை என்னுடைய வாழ்க்கையில் நடந்துகாட்டி, நான் சொல்லுவதையே நம்புகிறேன் என்று

நிரூபிப்பேன். விலை மதிக்க முடியாத ஞாபகங்களை தாங்கள் எனக்கு அளித்திருக்கிறீர்கள்.

தாங்கள் கனவில் கண்ட சித்திரங்களைத் தீட்டுவதற்கு முயல்கிறேன் அதற்கு வேண்டிய திரையைத் தாங்கள் தனக்கு ஆக்கிக் கொடுத்திருக்கிறீர்கள். என்னால் நிறைவேற்றப்பட்ட எதுவும் என் முயற்சிகளின் பலன் அல்ல. என்னுடைய வெற்றிக்காகத் தாங்கள் காணும் கனவுகள் செய்யும் பிரார்த்தனைகள் இவற்றின் பயனாகவே நான் கருதுகிறேன். ஸ்தூலமான வெற்றிகள் அல்ல—சாஸ்வதமான வெற்றிகளுக்காக என் பொருட்டுத் தாங்கள் செய்யும் பிரார்த்தனைகளின் பயனே இவையெல்லாம் யென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இகத்திலும் பரத்திலும் எனக்குள்ள பற்றுதல்களுக்கும் மதிப்பிற்கும் என்னுடைய இளம்பருவ வாழ்க்கையில் தாங்கள் பெய்துள்ள ஒரு மாயமான செல்வாக்கே காரணம் என்று நான் கருதுகிறேன். உங்கள் மனதில் வைத்துப் போற்றிடும் லட்சியங்களை நான் விளக்குவதோடு அந்த லட்சியங்களுக்கு மரியாதையளிக்க வேண்டியவனாகவும் இருக்கிறேன். இந்த நம்பிக்கை பலனளிக்கும்போது தாங்கள் திருப்தியடையும் நாளை எதிர்பார்க்கிறேன். தங்களுடைய நரை திரைகள் எல்லாம் தாங்கள் செய்துள்ள தியாகங்களின் மௌனமான அடையாளங்களே ஆனாலும் தாங்கள் அபிமானத்தையும் தன்னலமற்ற தியாகத்தையும் எனக்கு அவை நன்றாகப் விளக்குகின்றன.

நான் படிக்க வேண்டிய திருப்பதால். நான் கடிதத்தை முடிக்க வேண்டியதாகிறது. என் அன்பையும் வணக்கங்களையும் தெரிவிக்கிறேன். அம்மா! உங்களை ஆண்டவன் சௌக்யமாய் காப்பாற்றுவாராக, அப்பா அவர்களுக்கும் கிர்ஸமக்கும் என் வணக்கங்களையும் அன்பையும் தயவு செய்து சொல்லுங்கள் எல்லோரும் சௌக்கியமென்றுநம்புகிறேன்.

தங்கள் அன்புள்ள மகன்

பீடர்

இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் குரு குல சங்கீத கோஷ்டியில் பீடர் பின்பாட்டுப் பாடினுர். ஒரே ஞாயிற்றுக்கிழமை காலையில், ஐந்து வெவ்வேறு மாதா கோயில்களில் போய் வேலை செய்வது அந்தப் பையன்களுக்குத் தோன்றவில்லை. ஒரு மாதா கோவிலில் போய்ப் பாடுவது அங்கிருந்து நழுவி மற்றென்றுக்குப் போய்ப் பாடிவிட்டு அடுத்த கோயிலுக்கு ஓடி விடுவது என்பது வெகு சுலபமாக இருந்தது அவர்களுக்கு. அடிக்கடி மத போதனை செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்படும் நான்கு பேர்களில் பீடரும் ஒருவர். இதற்குள்ளேயே ஒரு பெரிய கூட்டத்தின் கவனத்தைக் கவர்ந்து வைத்துக் கொள்வதில் பீடருக்கிருந்த ஆற்றல் நன்கு தெரிந்திருந்தது.

கொலம்பியாவில் அவர் பயிற்சியின் கடைசி வருஷத்தில், பார்னெட் மாதா கோவில் வேலையோடு காவிங்டன் மாத கோவிலிலும் பணியாற்றவும் ஆரம்பித்தார்.

குருகுலத்திற்கு எந்தவிதக் கடனும் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலையில் தன்னை வைத்துக்கொள்ளாமலிருப்பதற்கு பீடர் எவ்வளவு கொடுக்க விரும்பினுரோ அவ்வளவும் இந்த வேலையின் மூலம் கொடுக்க முடிந்தது.

1931-ம் வருஷம் வஸந்த காலம். அவருடைய பயிற்சி முடிவடைவதற்கு சில நாள் முன்பு அட்லாண்டாவிலுள்ள காவிங்டன் கோயிலையும் வெஸ்ட்மினிஸ்டர் பிரிஸ்பிடீரிய கோயிலையும் இவர் குருவாக இருந்து பரிபாலிக்கும்படி கோரப்பட்டார். முதன் முதலில் ஒரு சிறிய நகரத்தின் பொறுப்பை வகுத்து அனுபவப்பட வேண்டுமென்று தன் "தலைவன்" விரும்புகிருர் என்று பீடர் நம்பினுர். ஆகையால் மூவாயிரம் பேர் ஜனத்தொகை உள்ள இந்தச் சின்னஞ்சிறு பஞ்சாலைத்தொழில் நிறைந்த ந்யூடன் நகரத்தின் மதப்பரிபாலனப் பொறுப்பைப் பீடர் ஏற்றுக் கொண்டார்.

பீடருக்கு இருபத்தேழாவது ஆண்டு நிறைவதற்குக் கொஞ்ச நாள் முன்பு, 1931-ம் வருஷம் மே மாதம் பதினெந்தாம் தேதியன்று வேதாகம குருவாக பெருமையுடனும் உயர்ந்தபட்ச திறமையுடனும் பட்டம் பெற்றுர்.

1931 ஆம் ஆண்டு நாடு தன் சரித்திரத்திலேயே கண்டிராத ஒரு பொருளாதார மந்தத்திற்கு ஆளாயிற்று. மத போதனைத் தொழிலைப் பீடர் இந்த சந்தர்ப்பத்தில் ஆரம்பித்ததால் அவருடைய போதனை பிரசங்கங்களைக் கேட்கவரும் மக்களுக்கு யதார்த்தவாதத்துடன் கூடிய ஒரு கிருஸ்தவ மார்க்கம் தேவைப்பட்டது. ஜார்ஜியா மாகாணம் முழுதும் பீடர் தன்னுடைய பிரசித்திப் பெற்ற பொருளாதார மந்தத்தைப் பற்றிய கருத்துக்கள் நிறைந்த "மழையின் போதுபாடுதல்" என்ற பிரசங்கத்தைச் செய்தார் மத்தம் தீர்ந்த பல நாட்களுக்குப் பிறகும் இந்தக் கருத்துக்களை வேறு பல மக்களுக்குத்தன் பிரசங்கங்களில் சொல்லிக் கொண்டிருந்தார். அக்கருத்துக்கள் ஆண்டவன் தனக்கு அளித்த செய்திகள் என்பது அவருடைய நம்பிக்கை.

"சராசரி மனிதனுடைய அன்றாடப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பரிஹாரங்களை கிருஸ்து தர்மத்துடன் பிணைத்துக் காட்டாததால் திருச்சபையைச் சேர்ந்த நாங்கள் தவறி விட்டோம்.

இந்த வழியில் இயேசுநாதரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றத் தவறிவிட்டோம். ஏனென்றால் இயேசு மகான் போதித்துக் காட்டிய மார்க்கம் அவரே வாழ்ந்து காட்டிய மார்க்கமாகும். திருச்சபையும், நிதர்சனமான, மண்ணுலகத் தொடர்புள்ள ஸ்தாபனமாகும்.

நமக்குத் தெரிந்தவரை, இயேசு மஹான் போதனைப் பிரசங்கங்கள் அதிகம் செய்யவில்லை. புத்தகங்கள் ஏதும் அவர் எழுதவில்லை.

தன்னுடைய திருச்சபையின் மூன்றில் இரண்டு பங்கு வேலையாக மனிதர்களின் தேகங்களின் நோய் நொடிகளைத் தீர்ப்பதிலும், அவர்களுடைய செல்வ, ஆத்மிக நலன்களை விருத்தி செய்வதிலும் ஈடுபடுத்தினார்.

அவரோ ஒரு உழைப்பாளி, பொதுமக்கள் என்று அழைக்கப்படும் மக்களை வெகு ஆசையோடு அவர்நேசித்து மக்களுடைய பிரத்தியக்ஷமான தேவைகளை அவர் மிக நன்றாக உணர்ந்திருந்தார் என்றே சொல்லவேண்டும்.

நாம் மட்டும் ஆண்டவனைத் தேடி, அவருடைய தர்ம வழியை நமது பிரதான லட்சியமாக வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டுவிட்டால்..... நமக்கு வேண்டிய ஸ்தூலமான தேவைகளுக்கும் ஆண்டவனை நம்பத் தொடங்கினல் அவர் ஒரு போதும் நம்மைக்கைவிடமாட்டார். அதற்குப் பதிலாக நல்ல அளவில் (ஏராளமாக) நமக்கு வேண்டியவற்றை அருள் செய்வார்.'' (லூக் 6 : 38)

அவருடைய நிபந்தனைகளை நாம் பூர்த்தி செய்தால் கடவுளும் தமது வாக்கை காப்பாற்றுகிருர் என்பதும், இந்த வழி அனுபவசாத்யமானது என்பதும்.

நான் சர்வ நிச்சயமாய் சொல்லமுடியும். ஏனென்ருல் இந்த வழியில் தான் நான் எனது வாழ்க்கைத் தேவைகளை நானே சம்பாதித்துக் கொள்ள வேண்டியவனுக ஆனதிலிருந்து வாழ்ந்து பார்த்து அடைந்து வருகிறேன்.

ஆண்டவன் பேரில் நம்பிக்கை வைப்பதன் மூலம்,

பழமையான அந்த கிரந்தத்தில் அளிக்கப்பட்டிருக்கும் வாக்குறுதிகளில் நம்பிக்கையுடன் பிரார்த்தனை செயவதன் மூலம்.

என்னுடைய ஒவ்வொரு தேவையும் பூர்த்தி செய்யப்படுகிறது.

ஆரம்பத்திலிருந்து இது உண்மை...ஸ்காட்லாந்தில் வாரத்திற்கு முப்பதெட்டு ஷில்லிங்குகள் வாங்கின நாட்களிலிருந்து 'அலபாமா'வில் வாரத்திற்கு பதினேழுடாலர் சம்பாதித்தவரையில்.

பைபிளில் கடவுள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாவற்றையும் விட இதுதான் கொஞ்சம் கூட யாரும் நம்பாத ஒரு வாக்குறுதி;

முதலில் ஆண்டவனின் ராஜ்யத்தை மட்டும் தேடிக் கொள்ளுங்கள் : மற்றவையெல்லாம். (உனது உடை பணம் போகப் பொருள்களையும்) தானுக உங்களுக்கு வந்து சேரும்'' (மேத் 6 : 33)

1931-ம் வருஷத்திலிருந்து அவருடைய சிறு பணப்பை முழுதும் காலியாக இருந்ததே இல்லை.

பீடருக்கு உண்மையில் ஆண்டவனின் அனுக்ரஹத்திற்கு மேல் அனுக்ரமாகக் குவிந்து கொண்டிருந்தது.

காவிங்டனில் மூன்று வருஷங்கள். சந்தோஷமும், சந்துஷ்டியும் நிறைந்த வருஷங்களாகத் தொடர்ந்து வந்தன. திருச்சபைவேலை, கன்கிரிக், பைன்கிரோவ், ஹேஷ்டன் (இவை மூன்றும் ஊர், பெயர்கள்) ஆகிய இடங்களில் தொடங்கிற்று.

ந்யூடன் ப்ராந்தியத்தில் உள்ள சில மனிதர்களின் வாழ்க்கை இயேசுவின் மந்திர சக்தியால் மாறிப் போயிருப்பதை பீடர் கண்ணாரக் கண்டார். தன்னுடைய திருச்சபைச் சேவையால் ஏற்பட்ட முதல் மாறுதல்களைப் பார்த்தபோது ஏற்பட்ட புளகாங்கிதத்தை அவர் ஒரு போதும் மறந்ததே இல்லை.

படிப்படியாக தன்னுடைய வருவாயை அவர் அதிகரித்துக் கொண்டே வர ஆண்டவன் அளித்ததாக பீடர் சொல்லிக்கொண்டிருந்த வாக்குறுதிகளை இறைவன் நிறைவேற்றத் தொடங்கினர். அதிலிருந்து, அவருடைய திருச்சபை வேலைகாலம் முழுதும் கொஞ்சம் கொஞ்சமாய் வருமானம் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது.

ஸ்தூலமான லோகாயதத் தேவைகளைக் கூட ஆண்டவன் அருள் தேடிக்கொடுக்கும் என்பது அவருடைய அசைக்கமுடியாத நம்பிக்கை. கடுமையான உழைப்பும், ஒழுங்கும் நிறைந்த இந்த வருஷங்களில் அந்த நம்பிக்கை சீரடைந்து அவருடைய திருச்சபை வாழ்க்கையின் அஸ்திவாரமாக ஆகிவிட்டது.

## "வாலிபரான மதகுருவின் சங்கடங்கள்"

"மனிதர் எவரிடத்திலாவது மஹாபுருஷர்களுக்கு வேண்டிய அருங்குணங்கள் காணமுடியுமானல் இவரிடம் அவை நிச்சயமாய் காணப்படுகின்றன. ஆனாலும், ஒரு வாலிபருக்குரிய வெட்கமும் சங்கோஜமும் அவரிடத்தில் தென்படுகிறது......" என்று பீடரைப் பற்றி ஜார்ஜியாவிலுள்ள 'மில்லெட்ஜ் வில்லி' பத்திரிகை ஒன்று பீடர் மார்ஷல் காவிங்டனை விட்டு அட்லாண்டாவுக்கு புறப்பட்டவுடன் எழுதியிற்று.

1933-ம் ஆண்டு மே மாதம் 7-ந் தேதி இரண்டாவது தடவையாக பீடர் மார்ஷல் பிரிஸ்பிடீரிய திருச்சபை மகாநாட்டில் போதனை ப்ரசங்கம் செய்வதற்காக அட்லாண்டாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார். இந்தத் திருச்சபைக்கு ஏற்பட்டிருந்த தளர்ச்சியால் வேறொரு திருச்சபையுடன் இதை இணைத்து விடும் அளவுக்கு நிலைமை மோசமாகியிருந்தது. இந்தத் திருச்சபையில் மேலெழுந்தவாரியாகத் தென்பட்ட பலஹீனங்கள் பீடரை வஞ்சினம் கூறி அழைப்பது போலிருந்தது. ஸ்காட்லாந்திலிருந்து இங்கே வந்துள்ள இந்த இளம் போதகரைப் பற்றி ஜார்ஜியப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் வெகுவாகப் பாராட்டி எழுதியிருந்தார்கள்.

"கலகலக்கும் மணியோசையைப் போன்றக் குரலில் முத்துத் தெரித்தாற்போல் பேசும் வசீகரமான இளம் ஸ்காட்லாந்தியர் என்று பீடர் மார்ஷலைக் குறிப்பிட்டிருந்தார்கள்.

பீடர் மார்ஷலுக்கு அவருடைய நாட்டு மக்களுக்கே சுபாவமான கூர்மையான புத்தி, தேர்ந்த சாமர்த்தியம், ஒரு முரட்டுத்தனம் எல்லாம் உள்ளன. அட்லாண்டா ஜர்னல் என்ற பத்திரிகையில் மார்க்கன் ப்ளேக் என்பவர் "அவரை பேட்டிகாணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது; அவர் குதுஹலமாயும், சாதுர்யம் வாய்ந்தவராக

வும், ஹாஸ்யம் நிறைந்தவராயும் இருந்தார். அதோடு அவரைப் பார்த்தபிறகு நெடுநாள் வரை என் நெஞ்சில் ஒரு சங்கீதம் போல் அவருடைய நினைப்பு ஒலித்துக் கொண்டே இருந்தது.''

அட்லாண்ட்டா ஜார்ஜியா என்ற பத்திரிகையில் ஓக்லெத்ராப் சர்வகலாசாலையின் தலைவரான டாக்டர் தார்ண்வெல் ஜேக்கப்ஸ் என்பவர் தான் இடைவிடாது எழுதும் ஒரு விசேஷப் பகுதியில் "பீடர் மார்ஷலிடம் சகலமும் இருக்கிறது......போன்ஸ் டி லியான் அவன் யூவிலிருந்த ஒரு வெறுமையாயிருந்த ப்ரிஸ்பிடீரிய மாதா கோவிலுக்கு அழைக்கப்பட்டார். அதற்குப் பிறகு கொஞ்ச நாளைக்குக் கூட்டம் அங்கே தாங்கமுடியாமற் கூடத் தொடங்கிவிட்டது......மகிழ்ச்சியும் பிரமிப்பும் உண்டாகக் கூடிய ஒரு காட்சியைக் காண ஆசையாக இருந்தால்...போங்கள்...இந்தப் பையன் செய்யும் மத போதனைப் பிரசங்கத்தைக் கேளுங்கள்...ஆனால் சீக்கிரமாகப் போகவேண்டும்...''

டாக்டர் ஜேக்கப்ஸ் இப்படிச் சொன்னது ரொம்பச் சரியான வார்த்தை. சீக்கிரமாகத்தான் அவர் பிரசங்கத்திற்குப் போகவேண்டும், தத்தமக்கு ஒரு உட்காரும் இடம் வேண்டுமென்று ஆசைப்பட்டால், அவர் போதனை பிரசங்கம் செய்த மாதா கோயிலை பற்றி நினைக்கும்போது, ஒரு இளம் மதகுரு சொன்னதுபோல் கோயிலின் "சுவர்கள் உப்பி, பால்கனிகள் (மாடங்கள்) கூட்டத்தின் பாரத்தால் அமுங்கி''யிருப்பதாகத்தான் நினைக்கத் தோன்றுகிறது.

பீடர் மார்ஷலுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பிராபல்யத்தைச் சிலர் அவர் ஸ்காத்லாந்திய தோரணையில் பேசுவதால் ஏற்பட்ட ஒரு கவர்ச்சி என்று சிலர் அரைகுறைகள் காரணம் காட்டினர். ராஜரீக பாஷையான ஆங்கிலத்திற்கு அந்த தோரணை அழகை ஊட்டுகிறது உண்மை ஆனாலும், அவர் தன் பிரசங்கங்களில் வழங்கிவந்த ஆத்மீக உணவுக்கு அதை வயஞ்சனமாகத் தவிர வேறு எந்த விதத்திலும் சம்பந்தப்படுத்த முடியாது.

அசாதாரணமான ஒரு பின்னணியிலிருந்து இவருடைய வாழ்க்கை அமெரிக்கர்களிடையே நிகழும்போது ஓரளவு கவர்ச்சியும் பிரமையும் கூட்டத்தினரிடையே காணப்படுவது உண்மையே!

பிரசங்க மேடையின்மீது அவர் வந்துநின்றவுடனேயே ஜனங்கள், பின்னணியில் ஸ்காத்லாந்துத் தலைநகரான எடின்பரோ மாளிகையையும், புதுக் குரலில் மதப் புரட்சி செய்த ஜான் நாக்ஸையும், சங்கீத கோஷ்டி, பாண்ட் முதலிய விருதுகளையும் தத்தமது மனதில் கனாக் காட்சிகளாக அமைத்துப் பார்த்துவிடுகிறார்கள்.

ஜெனீவா ஜிப்பாவால் போர்த்துக்கொண்டிருந்த போதிலும், பீடர் மார்ஷலின் தோள் பட்டைகள் அகன்று கால் பந்தாட்டக்காரருடைய தோள் போலிருக்கும். நல்ல உயரம், உடல் கட்டுள்ள வாலிபர். கருமை நிறமுள்ள அவர் முடி, கன்னங் கரேலென்று ஆகிக்கொண்டிருந்தது. சுருட்டை மயிர், தலையிலிருந்து தொங்காமல், கொஞ்சம் அடங்காப் பிடாரியாய்ப் பரந்துகொண்டிருக்கும்.

ஒரு முரட்டுத்தனமான தோரணையில் அவர் முகம் அழகாக அமைந்திருந்தது. மிருதுவான தன்மையும், ஹாஸ்ய பாவமும், அழுத்தமும் வலுவும் கலந்த ஒரு அலாதி முகம்.

பிரசங்க மேடையிலிருக்கும்போதும் எந்தவிதமான கோரணிகளுமில்லாமல் சகஜமாக இருக்க அவரால் முடியும். பிரசங்கத்தின்போது அடிக்கடி அவர் சமிக்ஞைகளை உபயோகிப்பார். ஆனால் அவை வலிந்து செய்யப்படுகிறதென்றோ செயற்கையானதென்றோ தோன்றாது. அழுத்தங்கள் எல்லாம் குரலால்தான் காட்டுவார். அந்தக் குரலில், ஒரு அசாதாரணமான ஸ்ருதியுடன் பேச்சுத் தொனிக்கும்; குழைவும், தெளிவும், அட்சர சுத்தமும், உண்மையும் தென்படும்.

இந்த மேற்போக்கான தன்மைகளைவிட இவருடைய பேச்சில், இவர் போதனைகளைக் கேட்பவர்களுக்கும் பிரார்த்தனைகளில் கலந்துகொள்பவர்களுக்கும் ஆண்ட

வன் இருக்கிறான் என்ற உறுதி நிச்சயமாகப் பிறக்கும். பூஜை நடத்தும் இவருடைய சாந்நித்யத்தில், ஆண்டவன் ஒருபோதும் ஒரு சூக்ஷ்மமான வெறும் கற்பனையாகத் தோன்றுவதில்லை; ஒவ்வொரு நபரிடமும் சிரத்தையுடன் மனிதனுடைய அற்பத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்யும் அருள் நிறைந்த ஒரு அன்புத் தந்தையாகவே காட்சியளிப்பார். அதனால்தான் ஆண்டவனின் அருளுக்காக ஏங்கிக்கொண்டிருந்த அத்தனை ஆணும் பெண்ணும் பீடரை நோக்கிமொய்த்துக்கொண்டிருந்தார்கள்.

வாலிபரும், முற்றிப் பழுக்காத மத குருவுமான இவருடைய வாழ்க்கையில் இம்மாதிரி கூட்டங்கள் எவ்வித விளைவுகளை உண்டாக்கிவிடுமா என்று சிலர் ஆச்சரியப்படலாம்.

எதிர்காலத்தில் இவரால் கிடைக்கக்கூடிய பயன்களை இம்மாதிரி பிராபல்யம் பாழாக்கி யிருக்குமா? பீடர் இம்மாதிரி அபாயங்களை நன்குணர்ந்து கடவுளின் துணையை நாடாமலிருந்திருந்தால் எதிர்காலத்தை இந்தப் ப்ராபல்யம் நிச்சயம் நாசமாக்கித்தானிருக்கும்.

ஒரு சமயத்தில் அட்லாண்டாவுக்கு வெளியேயிருந்து வந்த ஒரு கவர்ச்சிகரமான அழைப்பை ஏற்றுக்கொள்வதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கையில்,ஒரு நண்பருக்கு எழுதினார்“அந்த மாதிரி ஒரு நிலைக்கு வருதற்கு வேண்டிய பரிபக்குவம் எனக்கு ஏற்பட்டிருப்பதாக நான் கருதவில்லை. அந்த நிலைக்கு வேண்டிய கல்வியறிவு, அனுபவம், எல்லாம் எனக்குப் போதாது.” —கல்லூரிப் பட்டம் தனக்குப் பெற முடியாமற் போய்விட்டதே என்ற எண்ணத்தால், பீடருக்குத் தன் கல்வியறிவைப்பற்றி ஒரு தாழ்வுணர்ச்சி வெகுவாக இருந்து வந்தது. கொலம்பியா மதபோதனைக் கல்லூரி, சம்பிரதாயத்திற் கெல்லாம் விரோதமாக ஏ. பி. பட்டம் (பி. டி. என்ற பட்டம் பெறுவதற்கு அடிப்படையான ஒரு பட்டம்) பெறாத பீடருக்கு பி. டி. என்ற பட்டத்தை அளித்தது பிரமாதமான ஒரு திருப்தியை அவருக்கு அளித்தது என்றாலும், கல்வியில் தான் குறையுடையவன் என்ற ஒரு எண்ணம் அவரை விடாமல் பிடித்திருந்தது.

மத சம்பந்தமான புத்தகங்களைப் பிரசுரித்துப் பிரசித்தமடைந்திருந்த புத்தகக் கம்பெனி ஒன்று தங்கள் பிரசுரமாகப் பிரசுரிப்பதற்கு அவருடைய பிரார்த்தனைகளில் குழந்தைகளுக்காகச் செய்யப்பட்ட பிரார்த்தனைகளையெல்லாம் திரட்டித்தரும்படி கேட்டுக் கொண்டது. இன்னும் ஒரு பிரசுரகர்த்தர் அவருடைய மதபோதனைப் பிரசங்கங்கள் சிலவற்றைப் பிரசுரிக்க அனுமதிக்கும்படி பல முறை கேட்டார். ரீடர்ஸ் டைஜஸ்ட்'டில் வெளியான ஒரு பிரசங்கச் சுருக்கம் அதன் ஆசிரியர்களை அவரிடம் ஒரு கட்டுரையைத் தரவேண்டுமென்று கேட்கும்படி செய்தது. இம்மாதிரி வேண்டுகோளுக் கெல்லாம் இவருடைய பதில் ஒரேவிதமாகத்தான் இருக்கும்.

"என்னுடைய பிரசங்கங்கள் பிரசுரத்திற்கு வேண்டிய அளவு நன்ருயிராது" என்று அவர் மறுப்பார், இன்னும் இருபது வருஷம் கழித்து என்னைக் கேளுங்கள். அதற்குள் அச்சிடும்படியான தகுதிவாய்ந்த ஏதாவது எழுதியிருப்பேன்" என்று பதில் சொல்லுவது அவர் வழக்கம்.

வெற்றிகளின் பலனுக ஏற்படும் சின்னச் சபலங்களுக்கெல்லாம் மாற்ருகக் கடவுள் ஏற்படுத்தி யிருக்கும் ஒரு ஏற்பாடு உள்ளது. சாதாரணமாக நண்பர்கள் செய்யும் நட்புரிமையுடன் கூடிய விமர்சனமும், கேலியும் உற்சாகத்தில் ஏற்படும் சபலங்களைத் தடுப்பதற்கு வெகுவாக உதவுகிறது.

இம்மாதிரி நண்பர்களுக்குப் பஞ்சமில்லாதவரை பீடர் தடம் மாறிப் போவதற்கு சந்தர்ப்பமே யில்லை.

அவருடைய போதனைப் பிரசங்கங்களில் செழிப்பாகக் காணப்பட்ட கவிதைக் கனவு பின்னுல் அவருக்கு அவருடைய குருமார்களான நண்பர்களிடையே "விண்ணேறிச் சிறகடிக்கும் பறவை மார்ஷல்" என்ற பேரைச் சம்பாதித்துக் கொடுத்தது. பின்பு அது மறைந்தும் விட்டது. எப்போதாவது இந்த உத்தியை வரம்பு மீறி உபயோகித்து விட்டால் அதைப்பற்றி அவர் நிச்சயம் கேள்விப்படுவார்.

கிருஸ்மஸ் (ஏசு பிறந்த) தினத்தன்று குழந்தை ஏசுவின் மிருதுவான, செக்கச்செவந்த குழிவிழுந்த கைகளைப்பற்றி

பேசுவது அவருக்கு ரொம்பப் பிடிக்கும். அப்போதெல்லாம் தன்னுடைய பெரிய, சதுரமான மெகானிக்கினுடைய கரங்களை உயரத்தூக்கிக் காண்பிப்பார். அவருடைய நண்பர்கள், இதைப்பற்றி ரொம்பக்கேலிச் செய்து நகைப்பார்கள். இதனுல் பாதிக்கப்பட்ட பீடர் வெட்கத்தால் குன்றிப் போய் குழந்தை ஏசுவுக்கு கைகள் இருந்தன என்பதைச் சொல்லக்கூட வெட்கப்படுவார்.

மற்ற வழக்கச் சொற்களை யெல்லாம் உடனுக்குடன் அவர் நண்பர்கள் அவர் முகத்திற்கு முன்பே சொல்லிப் பரிஹாஸம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். "உதய சூரியன் எப்போதும் நீலக் குன்றுக்குப் பின்னுலிருந்து கொண்டு செக்கச் செவக்கப் புன்னகைக்கும்" ஸ்காட்லாந்துக் குன்றுகளிலுள்ள புகைப்பனி எப்போதும் "மாதொருத்தியின் தோள்மீது ஓடும் முந்தாணை" போல இருக்கும்.

இந்த ஆண்டுகள் இம்மாதிரிக் கற்பனைப் பாய்ச்சல்களுக்குப் பயிற்சிக் காலமாக அமைந்தது. நைந்துபோன மத போதனைச் சொற்றொடர்களை, உபயோகிப்பதை அவர் விஷம்போல் வெறுத்தார். சப்பிட்டுப் போகாமலிருப்பதற்காக அவர் கற்பனை செய்யும்போது சில சமயங்களில் அபூர்வமான சில உருவங்கள் அமைந்துவிடும். ஆரம்ப காலத்தில், அவர் செய்த உருவக முயற்சிகளில் பின்னுல் வயதும் அனுபவமும் ஏற ஏற அவர் உபயோகித்த உருவகங்களில் காணப்பட்டது போன்ற ஒழுங்கோ, அனுபவமோ காணப்பட்டதில்லை.

ஒரு தடவை மதபோதகர்கள் கூட்டம் ஒன்று நடந்து முடிந்தவுடன் விருந்து ஒன்று வைத்தார்கள். ஒரு மாதா கோயிலில் இந்த விருந்து நடந்தது. அந்த விருந்த நடந்த அறையில் கண்ணுடி ஜன்னல்கள் இருந்தன. பீடரை விருந்துமுடிவில் வந்தனோபசாரப்பிரார்த்தனை செய்யும்படி எல்லோரும் கேட்டுக் கொள்ள அவர் ஆரம்பித்தார்.

"ஆண்டவனே! எங்கள் ஆத்மாவின் கண்ணுடி ஜன்னல்களைத் திறந்துவிடும் அதன் மூலமாக கலீலியாவின் புது வஸந்தம் எங்கள் மேல் வீசி எங்கள் ஆத்மாவான

மின்சார பாட்டரியில் புது சக்தி (சார்ஜ்) ஏறட்டும். ஆமன்''

இதெல்லாம் முடிந்து சாவசாகசமாகப் பேச சந்தர்ப்பம் கிடைத்தவுடன் நண்பர் ஒருவர் பரிஹாஸத்தை ஆரம்பித்தார் "பீடர்! ஆத்மாவின் ஜன்னல், 'பாட்டரியில் சார்ஜ்' ஆதல், இது இரண்டும் வெவ்வேறு விஷயங்கள் ஒன்ருகப் போட்டுக் குழப்பி விட்டீரே!'' என்று கேட்டார்.

பீடர் முதலில் சற்றுத்திகைத்து விட்டு "அப்படியா சொன்னேன்?" என்று கேட்டார். அவர் சொன்னதை மறுபடியும் எல்லோரும் திருப்பிச் சொன்னவுடன் அவ்வளவு மோசமாக நான் சொல்லியிருக்க முடியாது! சுத்த மட்டமாக வல்லவா இருக்கிறது. அவ்வளவு மட்டமல்ல நான்.'' என்ருர்.

மத போதகர்களுக்காகச் செய்யும் ஒரு பிரசங்கத்திற்கானகுறிப்பு ஒன்று; "போதகர்களின் ஆபத்துகள்''என்ற தலைப்புள்ளது. மதகுருக்களுக்கு பிராபல்யத்தாலும், புகழாலும், முகஸ்துதியாலும் வரும் கேடுகளையும் விவரித்து விட்டு சூழ்ச்சி செய்யும் பெண்களாலும் மதகுருக்களுக்கு ஆபத்து விளையும் என்றுள்ளார்.

மதகுருக்களின் குருகுலத்தில் மற்றெல்லாவற்றையும் விட உண்மையான ஆபத்தொன்று உள்ளது. ஒரு குறிப்பிட்டவகைப் பெண்களிடத்தில் மதகுருவுக்கு ஒரு கவர்ச்சியிருப்பதாகத் தோன்றுகிறது. அவர்கள் தங்களுக்கு உள்ளதும் இல்லாததுமான பிரச்னைகளைச் சொல்லிச் சொல்லி அலுப்படையச் செய்து விடுவதோடு உங்கள் பொருமையையும் கிருஸ்துவ இரக்கத்தையும் சோதித்து விடுவார்கள்.

அவர்களை அதிகம் நெருங்கவிடாமல், சுருக்கமாகவும் உடனுக்குடன் கச்சிதமாகவும் கத்தரித்து பைசல் செய்து விட்டால், ஈவிரக்க மற்றவன் என்ற பேர் வரும். கொஞ்சம் மரியாதையாக இருக்க ஆரம்பித்தால் அதைப் பயன் படுத்திக் கொண்டு பற்பல ஸ்திரீ சாகஸங்களால் வாழ்க்கையைத் துயரம் நிறைந்ததாய்ச் செய்து விடுவார்கள்.

அதோடு வாலிபர்களான மதகுருக்கள் கல்யாணமாகாத வர்களாயும் இருந்துவிட்டால் போதும். சமூக உறவுகள் ரொம்ப சங்கடமான ஒரு காரியமாய்விடும். எத்தனேயோ மடாலயங்கள் சமுதாயத்திலுள்ள பெண்மணிகளின் பொருமைகளால் அழிந்து போயிருக்கின்றன.

வாழ்க்கை தமக்குக் கொடுக்க மறுத்துவிட்ட இன் பங்கள் ஏதேதற்காவது ஏங்கிக்கொண்டிருக்கும் பெண்மணி கள் ஒவ்வொரு கூட்டத்திலும் இருக்கிருர்கள். மத போதனே செய்பவரை அவர்கள் பார்க்கும் பார்வை காவியக் கண்ணேட்டங் கலந்த பார்வையாக இருப்பதைத் தவிர்க்க முடியாது. அவருக்கு அந்தரங்க சேவை செய்ய அவர்கள் ஏங்குகின்ருர்கள். அவருடைய ஆடைகள் சீராக்கப்பட வேண்டும். பொத்தான் காஜாக்களிலும் அவருடைய மேஜையின் மேலும் புஷ்பங்கள் வைக்கவேண் டும். கைக்கெட்டும்படியாக சுத்த ஜலம் வைக்க வேண் டும். இப்படியெல்லாம் சேவை செய்யத் தோன்றும். கடி தங்கள், குறிப்புகள், பரிசுகள்—சில சமயங்கள் ரொம்ப விஸ்தாரமான பரிசுகள் சில சமயங்களில் மாதாகோயிலின் காரியாலயத்தில் மாயமாய் வந்து காட்சியளிக்கும். அவ ருடைய மேஜை மேல் புது நாடாக்கள் போடப்பட்டிருக் கும் ஒவ்வொரு வாரமும் அந்தப் பெண்மணிக்கு ஒரு பிரச்னே. எப்போதும் பிரச்னேகளெல்லாம் வேதாந்தப் பிரச்னேயாகவே இருக்கும் தோன்றிவிடும். மாதா கோயில் காரியாலத்திற்கு டெலிபோன் செய்வதற்கு ஏதாவது ஒரு சாக்குக் கண்டிபிடித்துக் கொண்டே இருப்பாள். இதெல் லாம் பிரமாதமான விஷயங்களல்ல என்ருலும் இவை அந்த மட்டோடு பல சமயங்களில் நின்று விடுவதில்லே.

பெண்மணிகளின் நோக்கம் தெளிவாகவும், கௌரவ மாகவும் இருந்தால், பீடர் அவர்களுக்கு மரியாதையான பதிலளித்து அவர்களுடைய நட்பில் மகிழ்வார். "ஆமாம்! சாத்தான் என்ற ஏன் சாத்தானுக்கு ஆண்பாலில் பெயர் இட்டு அழைக்கிருர்கள்" சாத்தான் முட்டா ளல்ல, பெண்மையை நாமெல்லோரும் பரிசுத்தம் அழகு இனிமை, மென்மை, முதலிய பரிபூர்ண

குணங்களுடன் சம்பந்தப்படுத்துகிறோம். ஆனால் சாத்தான் தன் காரியங்களுக்குப் பெண்களை உபயோகித்துக் கொள்ளாமல் விடுவதில்லை...' என்பார். பல வருந்தத் தக்க அனுபவங்களுக்குப் பிறகே பீடர் இம்மாதிரி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்.

பிரபல உத்தியோகஸ்தர் ஒருவரின் மனைவி ஒருத்தி. நல்ல அழகி. இந்தப் போதகருடைய நினைவில் அழுந்தி விட்டாள். எல்லாவிதத் தந்திரங்களையும், உபாயங்களையும், கையாண்டும் எவ்வித பயனும் அவளுக்குக் கிடைக்கவில்லை. ஆனாலும் எப்படியோ ஒருநாள் பீடருடைய படிப்பறையில் அவரைப் பேட்டிகாணும் அனுமதியைப் பெற்று விட்டாள். அந்தப் பேட்டியாலும் ஒரு பயனும் கிடைக்கவில்லை. அவளை அவர் புறக்கணிக்க, அவளுடைய கர்வம் பங்கப்பட்டுக் கொண்டே வந்து கடைசியாக அவள் அவரிடம் கோபங்கொண்டு அவரிடம் "நான் உம்மை வெறுக்கிறேன், வெறுக்கிறேன்" என்று கூறும்படி ஆய்விட்டது அவளை வெளியே அனுப்புவதற்குக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டே "ரொம்ப சரி! ஆண்டவன் அருள் புரியட்டும். கடவுளுக்கு என் நன்றி உரியது' என்று பதிலளித்தார். மதபோதகருக்கும் - அவருக்கு மனைவியிருந்தால் அந்த மனைவிக்கும் இம்மாதிரி விஷயங்களை ஹாஸ்ய உணர்ச்சியுடன் அனுபவிக்கத் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் பெரிய சங்கடம் உண்மையிலேயே வந்து சம்பவிக்கும்.

சூழ்ச்சி செய்யும் பெண்களைப் பற்றி பீடர் இவ்வளவு ஜாக்கிரதையாக இருந்ததினால்தான் அவருடைய காரியதரிசிகளுக்கும் நண்பர்களுக்கும் இவ்வளவு இளம் பருவத்திலிருந்தே பீடர் மாசு மருவில்லாமல் தப்பிவிட்டதில் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் அடைந்தார்கள் வெஸ்ட்மின்ஸ்டரிலுள்ள நண்பர் ஒருவர் "ஆண்டவன் பிரத்யேகமாகப் பீடரைப் பாதுகாப்பதற்காகப் பலபல தேவதூதர்களை நியமித்து வைத்திருந்திருக்க வேண்டும். ஏனென்றால் எந்த ஒரு மனிதனையும் இவ்வளவு அதிகப்படியான சபலங்கள் சூழ்ந்துகொண்டதில்லை" என்பார்.

"சபலப்படுத்துவது பாபமல்ல" என்று பீடர் சொல்வதுண்டு. அடிக்கடி "நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கும் சபலங்களுக்கு நாம் எப்படி ஜவாப் சொல்லி சபலப்படாமல் தப்புகிறோம் என்பதுதான் முக்கியமான விஷயம் சபலங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் வெற்றியடைவதற்கு ஆண்டவன் அருளும் சந்தர்ப்பங்கள். கடைசியில் இறைவனிடம் போகும்போது நமது யோக்கியதாபத்திரங்களை அவர் கவனிப்பதில்லை, நம் மேல் காணப்படும் காயங்களின் வடுக்களைத்தான் ஆராய்ந்து பார்க்கிறார்.

# மானிடப் பேரின்பத்தின் சபாமண்டபங்கள்

எனக்கு வயது இருபது. வடிவங்களில் சிரத்தை யுடையவனு யிருந்தேன். துரதிருஷ்டவசமாகக் கட்டாய மாகக் கல்லூரியில் கற்றுக்கொண்டாக வேண்டிய பாடங் களில் ஒன்றுன அல்ஜீப்ரா (பீஜகணிதத்தில்) வில் ஏராள மான வடிவங்கள் சம்பந்தப் பட்டிருந்தன. தன் துறையில் மகோன்னதத் தேர்ச்சி பெற்றவரான டாக்டர் ஹென்றி ராபின்சன் என்பவர் கணக்குத் துறைத் தலைவராக இருந்தார். அவர் என்னை இந்த அந்தகாரத்திலிருந்து மீட்டு வழிகாட்டி அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற் றுக்கொண்டார். ஆனுல் டாக்டர் ராபின்ஸன் கணக்கில் மட்டுந்தான் நிபுணர் என்பதில்லை. அவருக்கு அப்போது மிகவும் பேச்சுக்கு இடமான மதுவிலக்கிலும், சம்பந்தம் பேசுவதிலும் (கல்யாணம் செய்து வைப்பதிலும்) அபார சிரத்தை. எனக்கு இந்த இரண்டு விஷயங்களிலும் உதவி யவர் இவரேதான். ஏனென்றுல் டாக்டர் ராபின்ஸன் உதவியால்தான் நான் பீடர் மார்ஷலைச் சந்திக்க முடிந் தது. அட்லாண்டாவுக் கருகில்லுள்ள ஒரு சிற்றூரில் எமரிசர்வகலாசாலையிலிருந்து ஒருவரும், பூஜ்யர் பீடர் மார்ஷலும், நானும், மதுவிலக்குக் கூட்டம் ஒன்றில் பேசுவதென்ற ஏற்பாட்டை டாக்டர் ராபின்ஸன் செய் திருந்தார்.

இரண்டு வருஷ காலமாக இந்த ஸ்காட்லாந்திய வாலிபரின் மதபோதனைகளைக் கேட்டுக்கேட்டு, அவரோடு பழக வேண்டு மென்ற தாகத்தால் தவித்துக் கொண் டிருந்தேன்.

ஆகையால் மதுவிலக்குக் கூட்டம் நடக்க இருந்த இரவு எனக்கு மிகவும் முக்கியமான ஒரு நாள். என்னு டைய ஆவலும் ஆசையும் நிறைந்த மனதில் அதற்கேற்ற சூழ்நிலையை தாங்கி நின்றது. அலும்னே தோட்டத்திற்கு வந்து என்னை அழைத்துக் கொண்டுபோக வேண்டு

மென்று டாக்டர் ராபின்ஸனைக் கேட்டுக் கொண்டிருந்தேன். என்னுடைய ஒருகையில் 'போர்ச்சுகீசியப் பாடல்கள்' என்ற புத்தகத்தை வைத்துக் கொண்டு இன்னொரு கையால் அல்லிக்குளத்தின் திசையைக் காட்டிக்கொண்டு நான் அவர்களுக்காக வாசலில் காத்திருக்க, என்னை அழைத்துச் செல்வதற்காக ஸ்ரீமான் பீடர் மார்ஷல் இருமருங்கிலும் ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்கும் நடைபாதை வழியாக நடந்து வருவார் என்ற மனக் கோட்டையை நான் கட்டி வைத்திருந்தேன்.

டாக்டர் ராபின்ஸன் தோட்டத்திற்கு வந்து என்னை அழைத்துப் போனார். ஆனாலும் மோட்டார் ஹார்ண் ஐ அடித்து அவர் கூப்பிட நான் போய்க் காரின் பின் ஸீட்டில் ஏறி எமரி சர்வகலாசாலையிலிருந்து வந்திருந்த பையன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன். முன் ஸீட்டில் டாக்டர் பக்கத்தில் ஸ்ரீ பீடர் மார்ஷல் உட்கார்ந்திருந்தார். தான் பேசவேண்டிய பேச்சைப் பற்றிய யோசனையில் ஆழ்ந்திருக்கிறார் என்று நான் நினைத்தேன். அதற்கு பதிலாக பின்பக்கம் திரும்பி "நான் கல்யாணம் செய்துகொள்ள நிச்சயதார்த்தம் செய்துகொண்டு விட்டேன் என்று நீ டாக்டரிடம் சொன்னாயாமே! இது யார் சொன்னது உனக்கு?" என்று என்னை விசாரித்தார்.

எனக்கு வெட்கத்தால் நாக்குழறிற்று. அந்தமாதிரி "சில வதந்திகள் என் காதில் விழுந்தன" என்றேன். "நீ காதில் விழுவதையெல்லாம் உண்மை என்று நம்பாதே அம்மா! கல்யாணம் செய்துகொள்ளும் நினைப்பே எனக்கு இன்னும் ஏற்படவில்லை."

நாங்கள் போய்க்கொண்டிருந்த சிற்றூர் இரு மைல் தூரத்தில் இருந்த ஒரு ஊர். அவ்வூரைச் சுற்றியிருந்த பட்டிதொட்டிகளிலிருந்தெல்லாம் ஏராளமான குடியானவர்களும், குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு குடியானவர்களின் மனைவிமார்களும், குழந்தைகளும் வந்திருந்தார்கள் கூட்டத்திற்கு. நாங்களெல்லோரும் நாடெங்கும் மதுவிலக்குச் செய்யவேண்டுமென்று ஏன் விரும்புகிறோம்

என்பதை அறிந்துகொள்ள ஆவலுற்றிருப்பவர்கள்போல் தென்பட்டார்கள். 'பீர்' என்ற போதைப் பொருளின்மேல் விதிக்கப்பட்டிருந்த வரி வருமானத்திலிருந்து இலவசமாகப் பள்ளிக் குழந்தைகளுக்குப் புத்தகங்கள் வினியோகிக்க முயற்சி செய்வதாக அவ்வப் பிராந்திய அரசியல்வாதிகள் உறுதி கூறியிருந்தார்கள்.

எங்களில் ஒவ்வொருவரும் ஒருவர்பின் ஒருவராக, விஸ்தாரமாக அறிமுகம் செய்விக்கப்பட்ட பின்னர், நாங்கள் பேசினோம்; பொறுமையாய்க் கேட்டார்கள். நாங்கள் பேசிய பேச்சுக்கு உரியதைக்காட்டிலும் அதிகப்படியாகவே கைதட்டி உற்சாகமூட்டினார்கள். உண்மையாகச் சொல்லுகிறேன். நாங்கள் பேசிய பேச்சில் ஒரு எழுத்துக்கூட எனக்கு நினைப்பில்லை நாடெங்கும் மதுவிலக்கு உடனே அமுலுக்கு வந்துவிட்டது.

வீட்டுக்குத் திரும்பிவரும் வழியில் பீடர் "உன்னைத் தெரிந்து கொள்ளவேண்டும்மென்ற ஆவல் நெடுநாளாக எனக்கு இந்த வாரத்தில் என்றாவது, உன்னை பார்க்கலாமா?" என்று கேட்டார். எனக்கேற்பட்ட வியப்பையும் ஆனந்தத்தையும் நான் வெளியிட்டபோது பீடர் மேலும் தொடர்ந்து "மதபோதகர்களும் குருடர்களாக இருக்க முடியாதல்லவா?" என்றார்.

ஆறு தடவை நாங்கள் தனியாக சந்தித்தோம் நான்கு தடவை மூத்தவர்கள் கண்முன்னால் சந்தித்தோம். அதன் பிறகு ஒரு டஜன் மாதத்தில் எங்களுக்கு நிச்சயதார்த்தமாகிவிட்டது.

இது எப்படி நடந்தேறியது என்பதைத்தான் கடவுளின் நுட்பமான அற்புதங்களில் ஒன்றாகவும், என் வாழ்க்கையும் ஆண்டவன் அருளால் ஆட்டுவிக்கப்படுகிறதென்பதற்கான பெரிய அடையாளமாக இன்னும் நான் நம்புகிறேன்.

பொது மேடைகளில் பேசுபவர்களெல்லோருமே சில குறிப்பிட்ட சொற்றொடர்களையும், இணை பிரியாச் சொற்களையும் தங்களை அறியாமல் வழக்கப்படுத்திக்கொண்டு

விடுகிறார்கள். பீடரிடத்திலும் இவை இருந்தன. இதற்காகஅவர் பரிஹாஸத்திற்கு அடிக்கடி ஆளாவதும் உண்டு இந்தக்காலத்தில் பெரும்பாலும் அவை எதுகை நிறைந்தவையாக இருக்கும். உதாரணமாக வெஸ்ட்மின்ஸ்டர் மாதாகோவில் அறிக்கையில் சமீபத்தில் நடந்த ஒரு விவாகத்தைக் குறிப்பிடும் சந்தர்ப்பங்களில் எல்லாம் சொல்லி வைத்தாற்போல் இந்த மார்ஷல் முத்திரையுடன் முடியும். இந்த இளந் தம்பதிகளை மனித வாழ்க்கையின் மகோன்னத இன்ப மாளிகைக்குள் எவனுடை அருள் அனுமதித்ததோ அவனுடைய அருளே இப்புது வாழ்வில் இணையிலாச் செல்வங்களையடைவிக்கட்டும்" என்று, அட்லாண்டா நகரத்திலும், தென் பிராந்தியம் முழுதிலும் நாளுக்குநாள் அதிகரித்து வரும் ஒரு பிரபல்யத்தை அனுபவித்து வந்த ஒரு பிரசிங்கியாக ஆய்விட்டார் பீடர். அபிவிருத்தியடைந்து வரும் ஒரு பிராந்தியத்தில் கிடைக்கக் கூடிய எல்லா நன்மைகளும் வேறு அவருக்குக் கிடைத்து வந்தது. உண்மையில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் செய்விப்பது, மதபோதனைப் பிரசங்கங்களைத் தயாரிப்பது, மாதாகோயில் குருக்களைக் கூட்டங்களுக்கு அழைப்பது விளையாட வைப்பது, பௌடிலியான் வகுப்புகளில் பாடம் சொல்லிக் கொடுப்பது, கல்யாணம் செய்விப்பது இப்படியாக ஒவ்வொரு நிமிஷமும் பீடருக்கு வேலை யிருந்து கொண்டே இருக்கும் இந்த அவசர வாழ்க்கையில் சொந்த வாழ்க்கைக்கு என்ன சந்தர்ப்பம் இருக்குமென்று எதிர் பார்க்க முடியும்? இம்மாதிரி மாதாகோயில் வேலைகளை முடித்த பிறகு என்னைக் கல்லூரியில் கொண்டு போய்விட அவர் காரில் வரும் போது மட்டுமே பெரும் பாலும் நாங்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கமுடியும்.

அன்னையர் தினத்தன்று பீடர் "ஊற்றுகளைப் பாதுகாப்பவர்கள்" என்ற போதனைப் பிரசங்கம் செய்ததைக் கேட்டேன். அந்தப் பிரசங்கம் என்னைக் கிளர்ச்சியுறச் செய்துவிட்டது. "கண்ணீரில் நடனம்," "இளமையும், புதியவரும்" முதலிய மற்ற போதனைப் பிரசங்கங்களையும் கேட்ட பிறகு ஆணானாலும் சரி பெண்ணானாலும் சரி, கல்யாணத்திற்கு முன்பும் கற்புடையவர்களாக இருக்கவேண்டு

மென்ற தூய வெள்ளைக் கொடியை உயரப் பறக்கவிட்டுக் கொண்டிருந்ததையும். பெண்கள் சம்பந்தப்பட்டவரை அவர் ஒரு லட்சியவாதி, காவ்யகந்தர்வன் என்பதையும் அறிந்துகொண்டேன்.

"என்னுடைய அப்பாவின் தலைமுறையினர் எப்படிக் கல்யாணம் குடும்பம ஆகிய விஷயங்களில் கட்டுப்பெட்டி மனப்பான்மையுடன் இருந்தனரோ அதைப் போலவே பீடரும் உள்ளார். அவரும் பெண்களை அவ்வளவு உன்னதமான ஒரு ஸ்தானத்திலேயே வைத்துப் பார்க்கிறார்!!" என்று என் பத்திரிக்கையில் குறிப்பிட்டிருந்தேன்.

மற்ற இளம் அமெரிக்கர்களைப்போலவே நானும் பீடர் ஆதரித்துப் பேசிவந்த விவாக வாழ்க்கைத் தத்துவங்களை பீடர் தவிர வேறுயார் கூறியிருந்தாலும் ஒப்புக்கொண்டிருக்கமாட்டேன்...பீடர் கூறுவதை நாங்கள் ஒப்புக் கொண்டதோடு விரும்பினோம் மீண்டும் மீண்டும் கேட்க வந்தோம்.

இதற்கிடையில் பீடர்மார்ஷலால் கல்யாணச் சடங்கு நடத்தப்படுவது ஒரு கௌரவமாகக் கருதப்படும் அளவுக்கு நிலைமை உயர்ந்துவிட்டது முடியுமானால், கல்யாணம் செய்துகொள்ள இருக்கும் தம்பதிகளுடன் மூன்று பேட்டிகள் காணவேண்டுமென்று வற்புறுத்தினர். ஒன்று மணமகனுடன், மற்றொன்று மணப்பெண்ணுடன் மூன்றாவது இருவரும் சேர்ந்து இருந்து பேட்டியளிப்பது. விவாக சம்பந்தமான புத்தகங்கள்கூட அவர்களுக்கு இரவல் கொடுக்கப்பட்டன. பரஸ்பரம் தேகநலக் குறிப்புகளைப் பரிவர்த்தனை செய்து கொள்ளுவதையும், தத்தமது வைத்யர்களைப் பார்த்து விஷயங்களறிவதும்கூட நலமென்ற யோசனைகளை பீடர் கூறிவந்தார். ஜார்ஜியா அரசாங்கம் தேகநல ஸர்ட்டிபிகேட்டுகளைக் கட்டாயமாக அப்போது வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுவதில்லை.

மூன்று பேட்டிகளின் போதும் கல்யாணத்திற்கு முன்பே இருவருக்குள்ளேயும் பரஸ்பர அன்பும் விவாகத்திற்கான ஆத்மீக அடிப்படையும் நிலவுகிறதா என்று ஆராயப்படும்.

"பரிபூர்ணமான விவாகம் என்பது ஆத்மா, ரத்த, தேகத்துவ, சமூக, மனோபாவக் கலப்பினால் பரிபக்குவ மாக்கப்பட்ட ஒரு நிலையே" என்று அவர் கூறுவார்.

"உடம்புகளில் வாழும் ஆத்மாக்களே நரமெல்லாம். ஆகையால் நாம் உண்மையில் ஒருவரை ஒருவர் காதலிக் கும்போது அது வெறும் உடலின்பக் கவர்ச்சியால் ஏற் பட்ட ஒரு கவர்ச்சி அல்ல. அப்படியானால் அது நிலைத் திருக்காது. ஆத்மார்த்தமான கவர்ச்சியும் அதில் இருக் கத்தான் இருக்கிறது. ஆண்டவன் நம் கண்களைத் திறந்து விட்டிருக்கிறார். ஆகையால் நாம் அக்கண்களால் வேறொருவருடைய ஆத்மாவைப் பார்ப்போமாக. நமக் கேற்பட்டுள்ள காதல் உடம்புக்குள்ளே இருக்கும் உயிரின் மீது. நித்யமாக வாழப்போகும் அந்த அந்தராத்மாவின் மீதுதான். அதனால்தான் காதலுக்கு ஆண்டவன்தான் பெரிய புகல் என்பது. ஆண்டவனே அதை முதலில் யோசிக்கிறார். உங்களுடைய விவாகத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆண்டவனை உட்படுத்துங்கள். ஆண்ட வன் விவாகத்தை வெறும் லௌகிகச் சடங்கு என்ற நிலை யிலிருந்து; அபூர்வமான, அழகான சாஸ்வதமான ஒரு நிலைக்கு உயர்த்திவிடுவார்."

வாலிபர்களுக்கு அவர் சொல்வது "நம்மைச் சுற்றிப் பல அற்புதங்கள் உள்ளன உதாரணமாக இந்தக் காத லிப்பதை எடுத்துக் கொள்ளுங்கள். எப்போதாவது நீங்கள் உங்களை "காதலிக்கும்போது நாம் காதலிக்கிறோம் என்பதை எப்படி நாம் தெரிந்து கொள்வோம்" என்று கேட்டுக் கொண்டதுண்டா?" நான் கேட்டுக் கொண் டிருக்கிறேன். பல தடவை கேட்டுக்கொண் டிருக்கிறேன். பலவிதமான பெண்மணிகளைப் பற்றியும், பல இடங்களி லுள்ளவர்களைப் பற்றியும் கேட்டிருக்கிறேன். இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால் ஒவ்வொரு தடவை கேட்கும் போதும் ஒரே மாதிரியான பதில்தான் எனக்குக் கிடைத்து வந்தது: அது என்ன தெரியுமா?" "தம்பி, கவலைப் படாதே! உனக்கே தெரியும்" என்பதுதான். அதுதான் விஷயம். நாமாக அனுபவிப்பதற்கு முன்பு எதையும் நாம்

அறிய முடியாது. காதலிப்பதில் இது எவ்வளவு உண்மையோ அவ்வளவுக்கு ஆண்டவனை அறிவதிலும் உண்மையாக இருக்கிறது.''

1936-ஆம் வருஷம் மேமாதம் ஒரு ஞாயிற்றுக் கிழமை இரவு பீடர் முதன் முதலாக இதை அறிந்து கொண்டார். வெஸ்ட்மின்ஸ்டரின் உயர்தரப்பட்டப் படிப்புக்கான பிரார்த்தனைப்பாட புத்தகமொன்றை விமர்சனம் செய்யும்படி அன்னைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பேச்சுக்குப் பிறகு பீடர் என்னுடன் பேசினார். அந்தப் பேச்சின் போது அவருடைய கருநீலக் கண்களில் அதீதமான ஒரு மதிப்புத் தென்பட்டது. அதோடு இன்னும் ஏதோ ஒன்று கூட இருந்தது. இதுவரை அவர் கண்களில் நான் கண்டிராத ஒரு ஒளி, எப்படி விளக்குவது என்று எனக்குத் தெரியாத ஒன்று அதில் இருந்தது. அடுத்த சனிக்கிழமையன்று என்னைத் தன்னுடன் விருந்துக்கு வரும்படி அழைப்பதில் கொஞ்சம்கூடக் காலதாமதம் செய்யாமல், உடனே அழைத்து விட்டார்.

அவர் கண்களில் தோன்றிய அசாதாரண ஒளி சனிக்கிழமை இரவிலும் காணப்பட்டது. அது என்ன என்பது விரைவில் புரிந்து போய்விட்டது. ஒரு ஸ்காட்லாந்துக்காரரின் வெட்டொன்று துண்டு இரண்டு என்பது போன்ற முடிவையும், ஸ்காட்லாந்துக்காரரின் அசைக்க முடியாத உறுதியையும் பிரதிபலித்தது அது.

இருந்தபோதிலும் கைதேர்ந்த ஒருவன் மாதிரி காட்டுவது போல், தன்னுடைய விவாக ஆசையை வெகு லலிதமான வார்த்தைகளில், உறுதியும், அலங்காரமும் தோன்ற வெளியிட்டார். உடனடியாகப் பதில் சொல்லிவிட முடியும் என்று நான் உணர முடியவில்லை. தனித்தனியாக இதைப் பற்றி பிரார்த்தனை செய்து ஆண்டவன் சித்தத்தை அறிவது என்ற முடிவுக்கு வந்தோம். பல வருஷங்களாகவே, பீடரின் வாழ்க்கை ஆண்டவனின் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. எங்களிருவருக்கும் ஆண்டவன் இப்போது எங்களை என்ன செய்யச் சொல்லுகிறார் என்று அறிய வேண்டுமென்ற விருப்பம். எங்கள்

பாதைகள் இந்த கட்டத்தில் பிரிந்துவிட வேண்டுமா அல்லது பிரிந்திருப்பதைவிடச் சேர்ந்திருப்பது ஆண்டவனின் சாம்ராஜ்யத்திற்கு அதிகப்படியான நன்மையளிக்குமா? என் ஹ்ருதயம் பதிலைச் சொல்லிற்று, ஆனால் இந்த விஷயத்தில் கடவுளின் மனதை என் ஹ்ருதயம் மறைத்து விடுமோ என்று நான் பயப்பட்டேன்.

கல்லூரிப் பரிட்சைகளில் கடைசிப் பரிட்சையை முடித்துவிட்டு ஏதோ ஒரு மயக்கத்தில் கல்லூரி மைதானத்தில் நடந்து கொண்டிருக்கையில் யாரோ ஒருவருடைய ஆசிர்வாதம் என் தலையில் தொடுவதுபோல் அறிந்தேன். எது நடந்தால் உண்மை என்று நம்பக்கூட முடியாதோ அதே உண்மையில் நடந்தது. ஆண்டவனின் அருளில் எதுவுமே சாத்யமில்லை என்பதில்லை என்ற பால பாடத்தைக் கற்றுக்கொண்டிருந்தேன். எவ்வளவுக்கவ்வளவு கைகூடுவதற்கான சந்தர்ப்பங்கள் வாய்க்கும் என்பதையும் கற்றுக் கொண்டேன் பீடரிடம் இதைச் சொல்லும் நற்பணி ஒன்றுதான் பாக்கியாக இருந்தது. டிகாடூரிலிருந்து அட்லாண்டாவுக்கு நாங்களிருவரும் காரில் போகும் சந்தர்ப்பத்தைத் தேடிப்பிடித்தேன்.

"உங்களிடம் சொல்ல வேண்டியது ஒன்றிருக்கிறது..." என்று நான் ஆரம்பித்தேன்.

கையெழுத்து மறையும் அந்த இருட்டில், பீடர் முகத்தில் ஒரு வேதனைச்சாயல் படர்வதை நான் காண முடிந்தது.

"நல்லதா...அல்லது கெட்டதா?" என்று பீடர் கேட்டார். அதன் பிறகு ஒரு க்ஷணம் கழித்து மெதுவாக "ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவோமாக" என்றார்.

இதன் பிறகு பல நிமிஷங்கள் வேறு எதுவுமே சொல்லாமல் காரை ஓட்டிக்கொண்டே சென்றார். சாலை ஓரமாகக் கடைசியில் காரை நிறுத்தியபொழுதுதான், அப்படி நிற்பது வேறெதற்கும் அல்ல. தன் வாழ்க்கை

யிலேயே இதுவரை செய்திராத அவ்வளவு அழகான ஒரு பிரார்த்தனையைச் செய்து ஆண்டவனை வணங்குவதற்காகவும், இறைவனுக்கு வணக்கம் செலுத்துவதற்காகவுந்தான். அந்த வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவரைக் கடவுள் ஆட்கொண்டார். ஆகையால் இந்த மகத்தான சந்தர்ப்பத்தில் ஆண்டவனை மறந்துவிட்டிருக்க அவர் விரும்பவில்லை. அவருடன் இதைப் பகிர்ந்துகொள்ள விரும்பினார். அதன் பிறகே என்னை அவர் தன் கைகளில் ஏற்றுக்கொண்டார்.

# கனவில் கண்ட இல்லறம்

ஆக்னஸ் ஸ்காட் கல்லூரியில் பட்டம் பெற்ற பிறகு நான் எங்களுடைய விவாகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய வீட்டிற்கு போய்ச் சேர்ந்தேன்.

காதலர்களுக்கிடையே என்றுமே நடந்திராத ஒரு அபூர்வ கடிதப் போக்குவரத்து அங்கே ஆரம்பமாயிற்று. இதற்கு முன்பும் ஏராளமான கடிதங்களை, மோஹா வேசத்தில் எழுதிப் பரிமாறிக்கொண்டிருக்கிறோம். அவற்றில் ஊடாடிக்கொண்டிருந்த ஆத்மார்த்த இன்பங்களுக்காக சில கடிதங்களை இலக்கியம் பாதுகாத்து வைத்துவிட்டது. ஹாஸ்ய நடையில் காதல் கடிதங்கள் எழுதக் கூடிய பல பற்றற்ற காதலர்களும் உலகத்தில் இருந்திருக்கிறார்கள். ஆனால் இந்த மூன்று தன்மைகளையும் கலந்து தந்த இதைப் போன்ற ஒரு வரிசை அபூர்வமென்றே நான் கருதுகிறேன்.

தன்னைத் தானே பரிஹாஸம் செய்துகொள்ளக்கூடிய ஒரு இனிய சுவபாவம் பீடருக்கு உண்டு. ஆகையால் அவருடைய கடிதங்களில் அங்குமிங்கும் விசித்திரமும், அதிகப்படியுமான பாவங்களைத் தெரிவிக்கும் சித்திரங்களை வரைந்திருப்பார். உதாரணமாகத் தனக்கேற்பட்டிருக்கும் ஹ்ருதய நோய்க்கு நான்தான் காரணம் என்றும், என்னைப்பற்றியே நான் வெட்கப்படுவேனென்றும் குறிப்பிட்டிருந்தார். இந்த வரியின் கடைசியில் ஒரு சித்திரம் கண்களுக்குமேல் கூந்தல் புரள குட்டிச் சாத்தான், பரமதிருப்தியுள்ள பாவத்துடன் பார்ப்பது போல் வரையப்பட்டிருந்தது.

கடிதங்களில் வானிலை அறிவிப்பு ஒன்று தவறாமல் சேர்க்கப்பட்டிருக்கும். பீடருக்கு ஒரு விசித்திரமான குணம், வானிலை அவருக்கு ரொம்ப முக்கியமான ஒரு விஷயம்.

பல ஆண்டுகளாகப் பீடர் தனக்கே சொந்தமான ஒரு வீட்டில் வாழ விரும்பிக்கொண்டிருந்தார். கனவுக ளெல்லாம் கடவுளின் அனுக்கிரகம் ஏற்பட்டால், திடீ ரென்று நனவாகிவிடுகின்றன. மாதம் அறுபது டாலர் வாடகையில், சிறு குன்றொன்றின் மேல் கட்டப்பட்ட ஒரு வீடு பீடர் கண்ணில்தான் கனவு கண்ட வீடுபோல் தென்பட்டது உயரமான பைன் மரங்கள் சிப்பாய்களைப் போல் இருபுறமும் வளர்ந்திருக்க அந்த வீடு கண்ணாடி ஜன்னல்களுடன் அழகாக இருந்தது.

பீடர் இதன் போட்டோக்களையும், ஒரு விவரமான பிளானையும், அதை விளக்கி பல பக்கங்களில் ஒரு விளக்க மும் எனக்கு அனுப்பிவைத்தார். அவருடைய மனக் கண்ணில் இல்லாததெல்லாம் அந்த வீட்டில் இருப்ப தாகத் தோன்ற ஆரம்பித்திருந்தது. அவருடைய உற்சா கத்தில் கணக்கற்ற மாதாகோயில் வேலைகளுக்கு இடையே, மத போதனைக் கூட்டங்களுக்கிடையே, கல்யாணச் சடங்குகளுக்கிடையே, கோயில் கூட்டங்களுக் கிடையே, கோழி வளர்க்கவோ, தோட்டம் பயிரிடவோ பொழுது கிடைக்காது என்பது பிடிபடவேயில்லை.

இப்படியிருந்தபோதிலும் வேதாகமத் திருப்பணி களுக்காக நடத்தும் பிரயாணங்களுக்கிடையில் சொந்த அலுவல்களையும் முடித்துக்கொண்டிருந்தோம். வெள்ளிக் கிழமை மத்யானம் ஒரு கல்யாணச்சடங்கு இருக்கிற தென்று அறிகிறேன் அதை ஒரு மணிநேரம் தள்ளிப போடும்படி மணமகனைச் சம்மதிக்க வைக்க முடிந்தால்... அல்லது ஞாயிறன்று மத்யானம் வந்திருப்பேன் கண் மணி! ஒரு ஈமச்சடங்கு வந்து புறப்பட முடியாதபடி தடுத்துவிட்டது. நான் மிக வருந்துகிறேன்......இப்படித் தான் கடிதங்கள் வரும்.

அட்லாண்டா விவாகங்கள் என்றதொத்து நோய்க் கும், எட்டுத் தொடர் பிரசங்கங்களை, எட்டாக் கை ஊர் களான ஏதன்ஸ், ஜார்ஜியா, ஈகிள்நதி, விஸ்கான்சின் இவற் றில் செய்வது என்ற பழக்கத்திற்கும் இடையே நானும் பீடரும் அலைக்கழிக்கப்பட்டோம். ஆனாலும் கோடைப்

பருவத்தில் எப்படியோ நாங்கள் ஆறு தடவை சந்தித்துக் கொண்டுவிட்டோம். இதை சாதிப்பதற்கு பீடர் ஏழாயிரம் மைல் தூரம் மோட்டார் ஓட்டவேண்டியதாயிற்று,

எங்களுடைய விவாகத்தை நடத்த ஒரு முகூர்த்த நாள் நிச்சயப்படுத்த முடியாதபடி அவ்வளவு கடுமையான வேலைகள் ஒன்றுபோக ஒன்ருய்க் குவிந்து கிடந்தன. சட்டனூகாவில் இரண்டு வாரங்கள் தொடர்ந்து நடந்து எங்கள் விவாகதினங்கழித்து நான்குநாள் தொடரும்படி இருந்த கூட்டம் ஒன்றை விவாகத்திற்கு நாலுநாள் முன்பே முடியும்படி துரிதப்படுத்திவிட்டார்கள். இது பீடருக்கு சௌகரியமாய்ப் போயிற்று. ஒரு பிரசங்கம் எழுதுவதற்கும், அதைப் போதிப்பதற்கும், ஆடைகளைச் சேகரிப்பதற்கும். மூட்டை கட்டுவதற்கும், 750 மைல் பிரயாணம் செய்வதற்கும் அது வசதியளித்தது.

ஜூலை மாதத்தில் நாட்டின் தலைநகரான ந்யூயார்க்கிலுள்ள ப்ரிஸ்பிடீரியா மாதாகோவில் பீடத்தில் அமர்ந்து போதனை செய்யவேண்டிய அவசியமேற்பட்டபோது அதையும் பீடர் நிறைவேற்றினர். அர்ச் நிகோலஸ் மாதா கோவில் கல்லூரியில் சேருவதற்காக டாக்டர் ஜோசப் ஸிசூ தன்னுடைய அந்தப் பதவியை, சில மாதங்களுக்கு முன் ராஜினமாச் செய்திருந்தார், முதலில் அன்ருட வேலைகளில் ஒன்ருகத் தோன்றிய இந்த வேலை அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்ருகப் பருமெடுத்தது. இந்த ஸ்காட்லாந்து நாட்டு வாலிபனின் மதபோதனை ந்யூயார்க் நகர மக்களை வெகுவாக கவர்ந்துவிட்டது.

அதைத் தொடர்ந்து நடந்த பேச்சு வார்த்தைகள், பேதங்கள், பதினன்கு மாதங்கள் எவ்வித முடிவும் காண முடியாமல் தொடர்ந்து நடந்தன. இம்மாதிரி வேறு கோயில்களுக்கு போதனை செய்ய அழைக்கப்படும்போதெல்லாம் ஏற்படும் ஆத்ம சோதனைகள், தயக்கம், பிரார்த்தனைகள், மௌனம், ஆகிய துயரங்களில் ஈடுபட்டு பீடர் ஆண்டவனின் சித்தத்தை அறியத் துடித்தார்.

இவருடைய புத்திமதிகளைக் கேட்ட நூற்றுக்கணக்கான தம்பதிகள், தன் சொந்தக் காதல் விஷயத்தில்

ERSITY EXTENSION LI

இவர் எப்படி நடந்துகொள்ளப் போகிருர் என்று ஆவலுடன் கவனித்துக்கொண்டிருந்தனர். பீடருக்கு இவர்களுடைய கவனத்திலிருந்துதான் தப்ப முடியாதென்பது நன்ருகத் தெரியும். மற்றெல்லாக் குறைகளேயும்விட ஆஷாட பூதித்தனத்தைத்தான் பீடர் ரொம்பவும் வெறுத்தார். ஆகையால் மற்றவர்களுக்குத்தான் எந்தெந்த புத்திமதிகளேச் சொன்னுரோ அதே புத்திமதிகளே நானும் அவரும் கடைப்பிடித்து நடத்திக்காட்டவேண்டுமென்று வற்புறுத்திஞர். அவருடைய லட்சியவாதம் 'காதலின் முத்துச் சிப்பியில் தென்படும் வர்ணமுள்ள வான் வெளியில்' பறப்பதோடு நின்றுவிடவில்லே. ஆரோக்கியப் பரீட்சைகள், இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகள், குடும்ப வரவு செலவுத் திட்டங்கள் இதிலெல்லாம்கூட இறங்கி நடைபோக ஆரம்பித்தது. மற்றவர்களுக்கு அவர் இரவல் கொடுத்த அதே புத்தகங்களே நானும் படிக்கவேண்டியதாயிற்று. கடமை யுணர்ச்சியுடன் நாங்களிருவரும் எங்களுடைய டாக்டர்களிடம் சென்று தேகநல ஸர்ட்டிபிகேட்டுகளே வாங்கிப் பரிமாறிக்கொண்டோம், உறவினர்களுடன் கலந்தாலோசித்து ஒரு திட்டம் தயாரித்தோம். சந்தேகத்திற்கிடமில்லாத வார்த்தைகளில்தான், மணமாகாதவர்களுக்கு எந்த அடக்கத்தைப் போதித்து வந்தாரோ அதே அடக்கத்தைத் தானும் அனுபவித்து வருவதாகத் தெரிவாக்கிஞர்.

பீட்ருடைய இந்த லட்சியவாதம் வெறும் பகற்கனவல்ல. ஏசுவிடம் அவருக்குள்ள அன்பின் அடைப்படையில் பலமாக அந்த லட்சியங்கள் வேரூன்றி யிருந்தன. பீட்ருடைய ஒவ்வொரு போதனேப் பிரசங்கமும் ஒரு வார்த்தைச் சித்திரமாகும். சிருஷ்டியின் ஆரம்பத்திலிருந்து ஆண்டவன் தன்னுடைய ஜீவராசிகளில் மனிதவர்க்கத்தின் மீது காதல் கொண்டு நடத்தும் மோஹலீலேயை அற்புத சித்திரங்களாகச் சித்தரிக்கும் மகோன்னதச் சித்திரரேகைகளாக அவை தோன்றும். மதபோதகர் ஒருவருக்கு மனிதவர்க்கத்தின் சரித்திரம் முழுதும் ஆணும் பெண்ணுமான மானிடத்தை ஆண்டவன் அதன் அகந்தை, பிடிவாதம், இவற்றைக் கெடுத்து

வசஞ் செய்து கொள்ளும் மையல்லீலையாகத் தோன்றுவதில் ஆச்சரியமென்ன இருக்கிறது. சிலுவையில் பூர்த்தியாகி முடிந்த ஒரு மாய நாடகமல்லவா இது, எந்தக் ஆண்டவனின் சிருஷ்டிக் காதலுக்கும் ஈடாக முடியாது ஆனால் ஆண்டவனின் பெருங்காதலில் ஒரு துளி ஒரு ஆணின், ஒரு பெண்ணின் மனதில் சிந்தி, அதுவும் ஏசுவால் புனிதமாக்கப்பட்டு விட்டால் அங்கே நித்தியமான உண்மைக் காதலும் தெய்வீகத் தன்மை நிறைந்த இல்லறப் பற்றும் உண்டாகத் தான் செய்கிறது.

அந்தக் கோடையில், மானுபலி, பார்ச்சினர் படகோட்டுதல் பொன்ற சின்ன கேளிக்கைகளுக்கு அவகாசம் நிறையக் கிடைத்தது. என்னுடைய தம்பியும் தங்கையும் அவருக்குச் சூட்டியிருந்த கௌரவப்பட்டமான ம. வி. நி. (மகோன்னத விளையாட்டு நிபுணர்) என்ற பேரை பீடர் காப்பாற்றிக் கொள்ள வந்தார். என்னுடைய குடும்பத்தினர் கோயில் அறிக்கைகளில் அவருடைய பேரோடு இந்தப் பட்டமும் சேர்த்தால் ரொம்பப் பெருமையாகத் தோன்றும் என்று நினைத்தார்கள்," பீடர் மார்ஷல் பி. எச். டி. என்பது போல் ம. வி. நி. என்றால் நன்றாயிருக்காதா என்ன?

எங்கள் கல்யாணத்தன்று குளுகுளு என்ற மழை. "வீட்டிலிருந்து கொண்டு விளையாடுவதற்கேற்ற நாள்" என்று பீடர் சொன்னார். அது உண்மையாயிற்று, காலையில், டன் கணக்கில் கண்ணாடிக் காகிதங்கள் சுற்றி அழகாகப் பாக் செய்யப்பட்ட பெட்டிகள் வந்து குவிந்து விட்டன மணப் பரிசுகளிலிருந்து தப்பிக் கொண்டு, என் திருமணத் தினச் சேலையில் இன்னும் சில சீர்திருத்தங்களைச் செய்து கொண்டிருந்தேன். என்மனதில் பீடர்யார் யாருக்கெல்லாம் அவகாசம் இருக்கிறதோ அவர்களோடெல்லாம் ஒவ்வொரு விளையாட்டாய் விளையாடித் தீர்ப்பது என்று சபதம் செய்து கொண்டு விளையாடுகிறாரோ என்று எண்ணத் தோன்றியது. அது உண்மைதான் என்று பின்னால் தெரிந்தது. முகூர்த்தத்திற்கு இன்னும் அரை மணி கூட இல்லை. என்னுடைய சின்னஞ்சிறு தங்கையான எம். பாப்பாவுடன் சீனச் 'செக்கர்ஸ்' விளை

யாட்டி வீடுபட்ட பீடர் இந்த குதூஹலத்தைக் கொஞ்சம் அளவுக்கு அதிகமாகக் கொண்டாடுகிருரோ என்று கூட நான் நினைத்து விட்டேன். அவர் உடுப்புக்கூட இன்னும் போட்டுக் கொள்ளவில்லை.

மாதா கோயிலுக்குப் புறப்பட்ட சிறிது நேரத்திற் கெல்லாம் தந்தி ஒன்று வந்தது. வெஸ்டுமின்ஸ்டர் பிர தேசத்திலுள்ள மத போதகர்கள் இந்தத் தங்கமான சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் தங்கள் போதகர் அடிக் கடி உபயோகிக்கும் ஒரு சொற்ருெடரையே அவர் திருமண சமயத்தில் உபயோகித்து விலாப்புடைக்கச் சிரிக்க வைக்க வேண்டுமென்று அடித்திருந்தார்கள் "தாங்கள் மனித குலத்தின் மகோன்னத இன்ப மாளிகையான சபா மண்டபத்தில் நுழையும் இத் தருணத்தில் எங்கள் மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளு கிருேம்."

வெஸ்ட் மின்ஸ்டர் கோயிலின் குருக்கள்.

## மத போதகரான மணாளன்

கல்யாணத்திற்கு அடுத்த நாட் காலை; படுக்கையி லிருந்த படியே கண் விழித்துப் பார்த்தேன் அடுத்தாற் போலிருந்த படுக்கையில் முழங்கால் மேல் முழங்கால் போட்டுக் கொண்டுதன் படுக்கையில் சுகாஸனத்தில் படுத்தபடி பீடர் என்னையே உற்றுப் பார்த்துக் கொண் டிருந்தார். அவர் என்னைப் பார்த்து "இது எப்படி நடந்தது எனக்கு?" என்றோ, "என்ன சாமர்த்தியம் பார் இவளுக்கு" என்றோ ஆச்சரியப்படுவது போலிருந்தாலும் நிச்சயமாக எதுவும் சொல்ல முடியாதபடி யிருந்தது அவர் பார்வை.

வீட்டின் மாடியில் ஏழு புருஷர்களும் ஸ்ரீமதி C. O. குட்பாஸ்ச்சர் என்ற ஒரே ஒரு ஒண்டியான பெண் மணி யும் எங்களுக்காகக் காத்திருந்தார்கள். ந்யூயார்க் அவின்யூ மாதா கோயில் கமிட்டியினர் அவர்கள். இக் கோயிலுக்கு ஒரு புது குருவானவரைக் கண்டு பிடிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுடையது. பீடர் அவசர அவசரமாய் அறையை விட்டுப் புறப்பட்டார்.

புறப்படும்போதே "காதரைன்! சாவகாசமாக உடை உடுத்துக்கொள். நான் போய் ஆரம்பித்து வைக்கிறேன். அவர்கள் உன்னைப் பார்க்கவேண்டுமென்று சொல்லும் போது உனக்கு டெலிபோனில் சொல்லுகிறேன். நீ மேலே வரலாம்."

எனக்கு இருபத்திரண்டு வயசு அப்போது. வாஷிங் டன் நகரத்தை வேடிக்கை பார்க்கவரும் ஒருத்தி எவ் வளவு தெரிந்துகொள்ள முடியுமோ அவ்வளவுக்குத்தான் தெரிந்து கொண்டிருந்தேன். நியூயார்க் அவின்யூ மாதா கோயில் அங்கத்தினர்களில் எவரையும் எனக்குத் தெரி யவும் தெரியாது. டெலிபோன் மணியடித்ததும், மனதை திடப்படுத்திக்கொண்டு பணிவுடன் "ஆகட்டும், கண்ணு! இதோ வருகிறேன் மேலே" என்றேன்.

கமிட்டி மெம்பர்கள் அத்தனை பேரும் தங்கமான வர்கள். நெடுநாட் பிரிந்திருந்து மீண்டும் சந்தித்தவர் களைப் போல் சிறிது நேரத்திற்குள் பழக ஆரம்பித்து விட்டனர். நேற்றுத்தான் நாங்களிருவரும் புருஷனும் மனைவியுமானோம் என்ற நினைப்பேயில்லாதவர்கள் போல் நடந்துகொண்டாலும் பேச்சு வந்தபோது "புதுக் குடித் தனம் செய்யும் தேன் நிலவு நாட்களுக்கு மத்தியில் கொஞ்சம் கோயில் சேவையும் செய்வதைப் பொருட்படுத்த மாட்டீர்களே?" என்று எங்களைக் கேட்டார்கள்.

"நியூயார்க்குக்குப் போகவேண்டிய நாங்கள் வாஷிங் டன் வழியாக வந்து சேர்ந்தது உங்களுக்கும் சௌகரிய மில்லையா? இந்த உலகம் அறிந்த பெரிய மனிதர்களுக்கு சர்க்கார் வேலைகளும், பெருந்தொகை பொருளாதார விஷ யங்களிலும், அபார சாமர்த்திய சாலிகளாகவும், அனுபவ மற்றவர்களாகவும் தோன்றி யிருக்கலாம். நினைத்துப் பார்த்தால் எங்கள் மணவாழ்க்கை ஒரு கோயில் கமிட்டி மீட்டிங்குடன் ஆரம்பித்தது ரொம்பப் பொருத்தமான தென்றே தோன்றுகிறது.

செப்டம்பர் 27வ இரண்டாவது தடவையாக நியூ யார்க் அவின்யூ மாதா கோயிலில் மதபோதனைப் பிரசங் கம் செய்தார். இந்த நிலைமையில், ஒரு விசித்திர விதி யின் பயனால் ', இந்த அழைப்பை அவர் (பீடர்) ஏற்றுக் கொண்டார், அந்த சமயத்தில் கோயிலின் அங்கத்தினர் தொகை 1206 பேர்கள் யார் அடுத்த குருவானவராக ஆகப்போகிறார் என்பதை அறிந்து கொள்வதற்காக காலையும் மாலையும் ஏராளமான கூட்டம் கூடிக்கொண் டிருந்தது.

அடுத்த சில வாரங்களில் சஞ்சலமும் வேதனையும் பீடருக்கு அதிகமாயிருந்தது. வாஷிங்டன் பக்கத்தி லிருந்து கடிதங்கள். தந்திகள், டெலிபோன் செய்திகள் வந்த மணியமாய் இருந்ததால் மூச்சு விடக்கூட முடியாத நிலையில் பீடர் இருந்தார்.

அட்லாண்டா நகரவாசிகள் இதைவிடக் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டு பீடரை அங்கேயே தங்கியிருக்கும் படி செய்ய முயன்றுகொண்டிருந்தனர்.

கல்யாணத்திற்கு அடுத்த நாள் லீ வீட்டில் கமிட்டி கூட்டத்தில் விவாதம் நடந்து கொண்டிருக்கும்போதே பீடர் தனக்கு அழைப்புக் கிடைத்தாலும். இன்னும் சில மாதங்களுக்குத் தன்னால் வர முடியாமலிருக்கும் என்பதை திட்டமாகத் தெரிவித்துவிட்டார். வெஸ்ட்மினிஸ்டரில் அதிகரித்துவந்த கூட்டத்தினரின் வசதிக்காகக் கட்டத் தொடங்கிய மாடம், அப்போதுதான் கட்டடமாகிக் கொண்டிருந்தது. அதற்குப் பணம் கொடுத்தாகவேண்டியிருந்தது. நியூயார்க் அவின்யூவோ, பாழாகிப் பழசாகி, போதும் போதாததாகவும் ஆகிய கட்டடமும், லட்சத்து முப்பதாயிரம் டாலருக்குக் கடனுடையதாயும் இருந்தது.

தங்களுக்கு விருப்பமான குருவானவருக்காக! வாஷிங்டன் கூட்டம் இன்னும் ஒரு பதினேரு மாதம் காத்திருக்க வேண்டும் என்று ஏற்பட்டுவிட்டது. ரொம்பத் துல்ய மாகச் சீர்தூக்கும் சுபாவமும், ஏகப்பட்ட போதகர்களுக்கு இடமளிப்பதுமான ந்யூயார்க் அவின்யூ ஏன் இந்த ஸ்காட்லாந்து வாலிபன்தான் தங்களுக்கு ஏற்ற குருவானவர் என்று ஏன் சர்வ நிச்சயம் செய்துகொண்டது என்று அறிமுகமாகாத நண்பர்கள் ஆலோசனை செய்யலாம். ஒருக்கால் அவர்களே அதைப் பரிசீலனை செய்ய முடியவில்லையோ என்னவோ?

பதினேழு மாதகாலம் ந்யூயார்க் அவின்யூவின் குருவானவர் பீடம் காலியாகவே கிடந்தது. அந்தப் பிராந்திய மக்கள் மிகப் பெருமையாக இந்த நாட்டிலும், வெளிநாடுகளிலிருந்தும் வந்து போய்க்கொண்டிருந்த பல பல போதகர்களின் பிரசங்கங்களைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார்கள். ஆனாலும் ஒருமுறை பீடர் மார்ஷலின் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டதால் வேறு யாரையும் அவர்கள் விரும்பவில்லை.

அம்மாதிரி சர்வ நிச்சயமான ஒரு மனோபாவத்திற்கு ஒரே ஒரு பதில்தான் இருக்கமுடியும். சந்தேகமே எதுவும் இல்லாமல் முன்னாடியே பீடர் குறிப்பிட்டிருந்து புது சேவைக்கான அழைப்பே இது. ஆண்டவன் ஒருக்கால்

எங்களை வாஷிங்டனிலேயே வைத்திருக்க விரும்பினர் போலும். வேறு எங்கும் அனுப்ப விரும்பவில்லை போலிருக்கிறது.

வெஸ்ட் மினிஸ்டர் கூட்டம் இந்நிலையில் இம் முடிவைத் தீர்மானமாக ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு என்னசெய்ய இயலும்?

உண்மையில் வாஷிங்டனிலிருந்து சமிக்ஞைகள் வரத் தொடங்கிப் பல மாதங்கள்—வருஷங்களாய் விட்டன. இந்தப் பேச்சு அட்லாண்டாவிலுள்ளவர்களுக்கு சர்வ சாதாரணமான பேச்சாகத் தோன்றுமளவுக்குப் பழக்கமானதாய் விட்டது. முடிவில் அங்கே போவது என்ற தீர்மானத்திற்கு வந்தவுடன் அவர்கள் அந்தத் தீர்மானத்தை வேண்டா வெறுப்பாய் கண்ணீர் விட்டுக் கொண்டே கிருஸ்தவக் கருணையுடன் ஏற்றுக் கொண்டார்கள்.

பீடர் வெஸ்ட் மின்ஸ்டருக்கு வருமுன் எந்தவிதமான சூழ்நிலையில் வந்து சேர்ந்தாரோ அதே சூழ்நிலைதான் பீடர் வாஷிங்டனுக்கும் வரும்போதும். இரண்டு இடங்களிலும் முதலில் அழைப்பை மறுத்து விட்டுக் கடைசியில், அதே காரணங்களுக்காகவே இரண்டும் வந்து சேர்ந்திருக்கிறார். அட்லாண்டாவும் காலிங்டனும் சேர்ந்தாற்போல் அழைத்த சமயத்தில் சின்னஞ் சிறிய காலிங்டன் கோயிலின் அழைப்பை ஏற்றுக் கொண்டார். ஏனென்றால் இவ்வளவு பெரிய காரியத்திற்கு ஏற்ற ஞானமும் ஆத்மார்த்த பரிபக்குவமும் தனக்கு இன்னும் ஏற்படவில்லை என்று அவர் அந்தரங்கத்துடன் நம்பினார். அதனால்தான் ஒப்புக்கொள்ள மறுத்தார். அதே காரணத்திற்காகத்தான் ந்யூயார்க் அவின்யூ அழைப்பையும் ஏற்றுக் கொள்ள மறுத்தார். கொஞ்ச நாட்கழித்து பிறகு வெஸ்ட் மின்ஸ்டர் கோயிலும், ந்யூயார்க் அவின்யூ கோயிலும் அவரிடம் மீண்டும் சேவையைக் கோரியது. இது ஒரு குறிப்பிடத் தகுந்த ஒரு ஒற்றுமையாகும்.

# வாஷிங்டன்—கணக்கற்ற சந்தர்ப்பம்

1937ம் வருஷம் அக்டோபர் 4–ஆந் தேதிக் குரிய வாஷிங்டன் டைம்ஸ் பத்திரிகை இதழில் ஒரு பெரிய பித்தளைக் கழுகுக்குப் பின்னல் நின்று கொண்டிருந்த ஒரு இளம் ஸ்காட்லாந்திய குருவின் படம் ஒன்று, ஜெனிவா சட்டை போட்டுக் கொண்டிருந்த கோலத்தில் வெளியாகியிருந்தது. ந்யூயார்க் அவின்யூ கோவிலில் இந்தக் கழுகின் விரிந்த இறக்கையே பிரசங்க மேடையாக அமைக்கப்பட்டிருந்தது. அந்தப்படத்தின் அடியில் "புது குருவானவர் பிரிஸ்பி டீரியன் மேடையில் நேற்று சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடத்தில் முதல் போதனைப் பிரசங்கம் புரிந்தார்" என்று எழுதப்பட்டிருந்தது.

இங்கே இருந்த படம் பீடருடைய படம். 'டைம்ஸ்' பத்திரிகையின் புகைப்படக்காரர் அவருடைய இளமையை யும், இந்தக் கழுகு இறக்கைக்குப் பின்னல் நிற்கும்படி ஆக்கிய சந்தர்ப்பங்களை நினைத்துக் கலங்கி யிருக்கும் மனேநிலையையும் வெகு நன்ருகப் படம் பிடித்திருந்தார். அந்த சமயத்தில் குருவானவரைவிட கழுகு அதிக தன் னம்பிக்கையுடனிருப்பதுபோல் தோன்றிற்று.

மாறுதலடைந்த லூதரன் கோயிலைச் சேர்ந்த டாக்டர் ஆஸ்கார் ப்ளாக் வெல்டர், அந்த நகரக் குருவானவர் சங்கத்தின் தலைவராக இருந்தார். அவருக்கு ந்யூயார்க் அவின்யூவுக்கும் அழைக்கப்பட்டிருக்கும் இந்த முப்பத் தைந்து வயது ஆசாமியின் தராதரத்தை நிர்ணயிப்பதில் மிகுந்த அக்கரை காட்டினர்.

கள்ளங்கபடற்றவராகவும் பீடர் காணப்பட்டார். அவ ருக்கு முன்னல் அந்த ஸ்தானத்திலிருந்த டாக்டர் ஜோஸப் ரிச்சர்ட் ஸிஸூவோடு இவரை ஒப்பிட்டால் அவர் ஒரு கனவு காண்பவராகத் தென்பட்டார். எதிர்காலத் தில் ஏராளமான வேதனைகளும், கஷ்டங்களும் பீடருக்கு ஏற்படும் என்பதை. அன்று காலையிலேயே அறிந்து கொண்டேன்.

ஆனாலும் பீடர் கடைசியில் எல்லாவற்றையும் சமாளித்து ஜெயித்து விடுவார் என்பதும் எனக்குத் தெரிந்தது. அதற்கு வேண்டிய தெல்லாம் அவரிடம் இருந்தது."

டாக்டர் ப்ளர்க் வெல்டர் மேலும் தொடர்ந்து சொல்லுகிறார். "பீடரைப் பின்னால் நான் அறிய அறிய, நான் அன்று காலையில் முதன் முதலில் சொன்ன ஜோஸ்யம் (தீர்க்க தரிசனம்) கொஞ்சங் கொஞ்சமாப் பலித்து வருவதைக் கவனித்தேன். முதலில் அவர் ரொம்பப் பழமை விரும்பும் போதகராகக் காணப்பட்டார். தன் பழமையைத் தாங்குவதுபோல் காணப்பட்டார். அந்தக் கஷ்டங்கள் நிறைந்த நாட்களில் இங்கே பீடர் வளர்ச்சி பெற்று வருவதை நான் கவனித்துக் கொண்டிருந்தேன். கொஞ்சங் கொஞ்சமாய் வளர்ந்து யாரும் கண்டு கேட்டிராத ஒரு மகோன்னத வேதாகம போதகர்களில் ஒருவராக ஆகும் வரை நான் கவனித் திருக்கிறேன் அவரை."

மகோன்னத வேதாகமப் பிரசங்கியாகப் பீடர் புகழ் பெற்றதின் பலனாக ந்யூயார்க் அவின்யூ கோயில் முன்னால் ஒவ்வொரு ஞாயிறன்றும் வரிசை வரிசையாய் ஜனங்கள் நிற்கும்படி ஆய்விட்டது.

லிங்கன்கோயிலில் ஒலிபெருக்கிகள் வைக்கவேண்டிய நிர்ப்பந்தமும், தாங்க முடியாத கூட்டத்தை சமாளிக்க வகுப்பு அறைகளை யெல்லாம் திறந்து கீழ்தளத்திலும் கூட்டத்தை அனுமதிக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டன. இடம் முழுதும் நிறைந்த பிறகு பிரார்த்தனைக்கு வந்தவர்களைத் திருப்பி அனுப்பும்படிதான் ஆகிக் கொண்டிருந்தது.

"ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், நியூயார்க் அவின்யூ கோயிலில் இடமில்லாத காரணத்தால் சராசரியாக ஐந்நூறு பேர்களுக்குமேல் வெளியேற்றப்படுகிறார்கள்" என்று இளைஞர்களின் பத்திரிகையான 'நியூயார்க் அவ்நியூஸ்' செய்தி வெளியிட்டது. கடைசியாக இந்தப் பிரச்னைக்கு கோயில் நிர்வாகி கண்டுபிடித்த பரிஹாரம் இதுதான். ஒரேவிதமான பூஜையை ஒன்பது

மணிக்கு ஒரு தடவையும் பதினொரு மணிக்கு ஒரு தடவையுமாக இரண்டு தட்வை நடத்துவது என்று தீர்மானித்தார்.

இந்தப் பெருங்கூட்டத்தினரில் பெரும்பாலோர் சர்க்கார் ஊழியர்கள் 'Giகள்', சாதாரண நகரவாசிகள், நகருக்கு வெளியேயிருந்து வருபவர்கள், வாஷிங்டனின் பிரபலஸ்தர்கள் ஆகியோர்தான்.

நமது கூட்டங்களில் ஒரு பிரபல ஜட்ஜுக்கருகில், மெயில் ரன்னர் ஒருவர் இருந்து பிரார்த்தனையிலீடுபடுவதும், அல்லது ஒரு சின்ன சர்க்கார் குமாஸ்தாவுக்கருகில் உட்கார்ந்துகொண்டு ஒரு பிரபல ஸெனட் மெம்பர் பரிசுத்த ஆத்மாவின் பிரார்த்தனைப் பலனை அனுபவிப்பதும் அதிசயமான விஷயங்களல்லவா! இதைப் பார்ப்பதற்கே பரவசமாக இருந்தது. கிருஸ்தவ மதத்தின் சாரமே இதுதான் என்று எல்லோரும இதன் மூலம் உணர முடிந்தது.

பீடரே இந்தக் கஷ்டமான வழியில்தான் இந்த நிலைக்கு வந்திருக்கிறார். ஆகையால் முதன் முதலில், தலைநகர வாசிகளில் முக்கியமானவர்களின் உண்மையான தேவைகளைக்கூட உணர முடியாத அளவுக்கு, பயந்துகொண்டே அதிகப்படியான மதிப்பைக் கொடுக்காமல் இருந்து வந்தார். மற்றவர்களுக்குள்ளது போலவே பிரபலஸ்தர்களுக்கும், பணக்காரர்களுக்கும் ஹ்ருதய தாபங்கள் உண்டென்பதைப் பீடர் அறிந்துகொண்டார். அவர்களும், நோய், நொடிகளுக்கும், சாவுக்கும் தப்ப முடியாது. அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும், உதவியும், ஆறுதலும், புத்திமதிகளும் மற்றவர்களுக்குத் தேவைப்படுவதைப் போலவே தேவைப்படுகிறதென்பதும் தெரிந்தது. அவர்களில் யாருக்காவது சேவை செய்வது அமெரிக்கத் தலைவர் முதல் யாவருக்கும் பணியாற்றுவது தலைநகரில் குருவாக இருப்பவர்களின் கடமை என்பது புலனாயிற்று.

உண்மையில் பீடர் வாஷிங்டனுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள்ளாகவே வருஷாந்திர கிருஸ்துமஸ் பிரார்த்

தனைக் கூட்டத்தில், கோயில்களின் சமஷ்டியின் ஆதர வில் போதிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். இந்தக் கூட்டத்திற்கு தலைவர் ஃப்ராங்க்லின் டி. ரூஸ்வெல்ட்டும் அவருடைய குடும்பத்தினரும் வருவார்கள். டிஸம்பர் 25வயிட்ட 'பால்ட்டி மோர் ஸன்' (சூரியன்) பத்திரிகையில் இந்தத் தலைப்புகள் வெளிவந்தன.

யுத்தத்தைக் கேலி செய்வதைத் தாக்கும் பிரசங் கத்தை ரூஸ்வெல்ட் கேட்கிறார்.

ஜனாதிபதி கலந்துகொள்ளும் கூட்டத்தில் நெரிசல்.

உலகக் கேடுகளுக்கு கிருஸ்து மதமே பரிஹாரம்.

பூஜ்யர் பீடர் மார்ஷல் கூற்று. இதைத் தொடர்ந்து ஒரு விரிவான பிரசங்கத்தின் முழு நீள ரிப்போர்டு ஒன்று வெளியாகியிருந்தது.

அமெரிக்காவிலிருந்துவரும் ஒவ்வொரு பத்திரிகை யிலும் அந்தப் பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் முதல் பக்கச் செய்தியாக வெளிவந்தது. அட் லாண்டாவில் வாழ்ந்த மக்களின் அபிமான மத போத கராக இருந்த பீடர் மார்ஷல் "சென்ற ஞாயிறன்று காலையில் கண் விழித்துப் பார்க்கும்போதுதான் அமெ ரிக்கா முழுதும் அறிந்த பிரசித்தி பெற்ற ஒருவராகி விட்டதை அறிந்தார். "நாட்டுக்குப் பணி செய்யும் சந்தர்ப்பம் இப்படியாக பூஜ்யர் பீடர் மார்ஷலுக்கு வெகு சிலருக்கே அதிருஷ்டவசமாய் வரக்கூடிய இளம்பருவத் திலேயே வாய்த்தது."

ஆண்டவன் தன் அலகிலா விளையாட்டுகளில் எங்களை ஈடுபடுத்தும்போது எங்களை ஆழமான தண் ணீர்ப் பரப்பில் தூக்கி எறிந்துவிட்டு, அதற்குப் பிறகு நீந்திக் கரை ஏறுவதற்கான திறமை அளிப்பதே 'அவ ருடைய' தீராத விளையாட்டாக இருந்தது.

வாஷிங்டனில் நாங்கள் இந்த சாகஸத்தைத் தொடங் கியதிலிருந்து எல்லையில்லாத கோயிற் பணிக்கு சந்தர்ப் பங்கள் இருந்தன. அப்படிப்பட்ட தேவைக்குப் பதில்

சொல்லுவதற்கான சாதனங்களோ தெம்போ எங்களிடம் இல்லை. ஆண்டவனைத்தான் நாங்கள் நம்பியாக வேண்டியதிருந்தது. 'அவர்'மேல்தான் பாரத்தைப் போட்டோம். வாஷிங்டன் வாழ்க்கை இப்படியாக ஒவ்வொரு நாளும் அர்ச்பால் தனது வாழ்க்கையில் இறைவனை அறிந்தது போல் தத்ரூபமாக நிரூபித்துக் காட்டும் வாழ்க்கை முறை ஆகிக்கொண்டு வந்தது. "ஏசுவின் மூலமாகக் கிடைக்கும் பலத்தில் நான் எல்லாவற்றையும், எதையும் செய்துவிட முடியும்" (அர்ச் பால். பிலிப்பியன்ஸ் 4: 13)

ந்யூயார்க் அவின்யூ கோயிலில் அவர்களுக்கென்று குறிப்பிடப்பட்ட இடங்களில் இரண்டு குருவானவர்களின் மனைவிமாரையும் அமரும்படி கேட்டுக் கொண்டார்கள். லிங்கன் அமரும் இடத்திற்கு நேர் எதிராகப் போட்டிருந்த ஒரு ஆஸனம் எனக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. லிங்கன் உட்கார்ந்த இடம் தணிந்த, சாய்மானத்துடன் கூடியதாய், அசௌகரியமானதாய், இந்திர நீல வெல்வெட் குஷன் தைத்து, யுத்தத்தினபோது நிஜமாகவே தலைவர் லிங்கன் வந்து உட்கார்ந்து பிரார்த்தித்த அதே நிலையிலிருந்தது. ந்யூயார்க் அவின்யூ கோவிலின் அப்போதைய குருவானவர் டாக்டர் பிளீஸ் டீ கர்லீ என்பவர். அவர் லிங்கன் குடும்பத்தாரின் அந்தரங்க நண்பராகவும், ஆலோசகராகவும் ஆனார்.

முதன் முதலில், ந்யூயார்க் அவின்யூவின் லிங்கான் சம்பிரதாயத்தைப் பற்றிய சந்தேகங்கள் தோன்ற ஆரம்பித்தன. இவை ஆதாரமற்றவையா யில்லாவிட்டாலும் குறைந்தபட்சம் வருஷம் ஓடஓட மிகைப்படுத்தி, பிரமாதமாக்கப் பட்டவையாகவாவது இருக்கும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இது எவ்வளவு தூரத்திற்கு சரியானதென்று நானே முனைந்து கண்டுபிடித்துவிடத் தீர்மானித்தேன். கோயிலில் பல பழைய பெட்டகங்களில் தஸ்தாவேஜுகள் நிறைந்திருந்தன. கடைசியாக கோயில் டிரஸ்டிகள், சுதந்தர யுத்தகாலத்தில் கோயில் ஆஸனங்களுக்கு வசூலிக்கப்பட்ட வரி பற்றிய விஷயங்களடங்கிய புத்தகத்தைக் கண்டுபிடித்தேன். எல். (L) என்ற ஆங்கில எழுத்துக்கு ஒதுக்கப்பட்ட பக்கங்களுக்கு மத்தியில்

யாதொரு விசேஷமும் இல்லாமல், ஆ. லிங்கான். என்று மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது, தலைவரின் பெயர்-அவர் கொல்லப்படுவதற்குச் சற்று முன்பிருந்தே தலைவர் தான் கொடுக்கவேண்டிய ஆஸனவரி கொடுப்பதில் பின் தங்கினவராகிவிட்டார். மற்ற தஸ்தாவேஜுகளின் கவர்ச்சி என்னை முற்றிலும் திருப்திப்படுத்திற்று. இதுவரையில் பிரசுரமே ஆகாத பல, பல, பற்பல விஷயங்களுடன் அவை உண்மையானவையாகவும் தென்பட்டன.

நாங்கள் வாஷிங்டனுக்குப் போன முதல் வருஷத்தில் நடந்த சம்பவங்கள் குறிப்பிடப்பட வேண்டியவை. 1938-ஆம் வருஷம் ஜனவரி 26வ பீடர் மார்ஷல் ஒரு அமெரிக்கப் பிரஜையாகப் பதிவு செய்யப்பட்டு, பரிபூரண அமெரிக்கராக ஆக்கப்பட்டார். இதற்கு அவசியமேயில் லாத ரீதியில் சாஸ்வதமான அனுமதிச் சீட்டுடன் குடி யேறுபவர்களுக்கான ஒதுக்கலில் அனுமதிக்கப்பட்டவ ராகவே பீடர் அமெரிக்காவுக்கு வந்திருந்த போதிலும், அவர் விருப்பத்தின்பேரில் நிறைவேற்றப்பட்டது. எங்கள் கல்யாணத்திற்குச் சிறிது முன்பே மௌனமாக இந்தத் தீர்மானத்தைப் பீடர் செய்துவிட்டார். நாங்கள் வாஷிங் டனுக்கு நகர்ந்தது அத்தீர்மானத்திற்கு வலியூட்டியது. இதற்குமுன் இரண்டு தடவை பிரஜா உரிமைப் பத்திரங் களை எடுத்துக்கொண்டு முதல் பிரஜையாகப் பதிவு செய்துகொள்ளப் போய்ப் பதிவுசெய்து கொள்ளாமலே காலாவதியாக விட்டுவிட்டார். பிரிட்டிஷ் பிரஜா உரிமை யைக் கைவிடுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை அவருக்கு.

நீதிபதி E. மார்லின் அன்டர்உட் முன்பாக, பெடரல் ஜில்லா கோர்ட்டில், தேச விஸ்வாஸப் பிரமாணம் எடுத் துக் கொள்வதற்காக பீடர் மீண்டும் அட்லாண்டாவுக்குத் திரும்பினார். இவரோடு இந்தப் பிரமாணத்தை எடுத்துக் கொள்ள வந்த முப்பத்திரண்டு பேர் கொண்ட, அந்த கோர்டு பிரிட்டிஷார், ஆஸ்டிரியர்கள், பொலிவியர்கள், ஜெர்மானியர்கள், ரஷ்யர்கள். ஸ்வீடிஷ்காரர்கள், துருக்கி யர்கள், ஸிரியாக்காரர்கள் ஆகியோர் அடங்கியதாயிருந்

தது. பல வாரங்களாக குடியேறியவர்களுக்குப் பிரஜா வுரிமை வழங்குவதுபற்றியும்,அமெரிக்கர்களாக அவர்களை பாவிப்பதற்கான நடை முறைகளைப் பற்றியும் பீடர் நிறை யப் படித்துக்கொண்டிருந்தார். அதோடு ஸால்ப்ரும் எழுதிய "அரசியல் சட்டத்தின் கதையையும்" பீடர் படித் தார்.

இந்த சமயத்தில் அட்லாண்டா ஜர்னல் என்ற பத்தி ரிகையைச் சேர்ந்த மெடோரா ஃபீல்ட் பெர்க்கஸன் பீடரை பேட்டி கண்டார். அவரிடம் "சந்தர்ப்பம், நட்புக்கள், வாழ்வுப்பணி, இப்படியாக அமெரிக்கா எனக்கு ஏராள மாகக் கொடுத்திருக்கிறது. இதற்கும் மேல் எதுவும் கொடுக்க முடியாது......என்னுடைய மக்களுடன் இன் னும் அதிகமாகக் கலந்து அவர்களுடைய மேம்பாட்டுக் காக என்னால் செய்யக் கூடிய கடமைகளை ஆற்றினால் என் நன்றியை வெகு நன்ருய்த் தெரிவித்ததாகும் என்று நம்புகிறேன். ஒருக்கால் திருச்சபைக்கு இது அதிகப்படி யானதாக இருக்குமோ என்றுகூட நான் நினைத்தேன். நான் என்னமோ, என் வாழ் நாள் முழுவதையும் இந்த நாட்டிலேயே கழிக்கவும், இங்கேயே வாழ்ந்து இங்கேயே இறக்கவுந்தான் விரும்புகிறேன்......"

இந்த விஷயத்தில் அவர் அறிந்து கொள்ளாமலிருந் தது என்னவென்ருல், அவர் அமெரிக்கப் பிரஜையாக ஆகியிருக்காவிட்டால், திருச்சபைச் சேவைக்கான ஆசார வாசல் ஒன்று திறக்கப்படாமலே சாத்திக் கிடந்திருக்கும். இவரும் சேவைக்கு சந்தர்ப்பமற்றவராக ஆகியிருப்பார். ஸெனட் சபையின் கோயில்பிள்ளை ஆகும் சந்தர்ப்பந்தான் அது. இந்தப் பதவிக்கு அமெரிக்கப் பிரஜைகள்தான் அருகதையுள்ளவர்.

அந்த வருஷத்தில் குறிப்பிடத் தகுந்ததாக நிகழ்ந்த மற்ருெரு நிகழ்ச்சி 1938, மே 30வ யன்று நடந்தது பீட ருக்கு தென் கரோலினுவிலுள்ள க்ளிடன் நகரத்தைச் சேர்ந்த ப்ரீஸ்பிடீரியக் கல்லூரி டாக்டர் பட்டத்தை அளித்தது.

இம்மாதிரி கௌரவப் பட்டங்களின் நிஜமான மதிப்பு என்ன என்பது பீடருக்கு வெகு நன்ருய்த் தெரியும். ஆனு

லும் இதைப் பெற்றுக்கொள்வதற்கு அவருக்கு மகிழ்ச்சியாகத்தானிருந்தது. அவருடைய வாழ்நாள் முழுதும், தான் கல்லூரிப்பட்டம் ஏதும் பெறமுடியவில்லையே என்ற ஏக்கத்தால்தான் தாழ்ந்தவர் என்ற நினைப்புடையவராகவே நடந்துகொண்டார். கொலம்பியா குருகுலப் பயிற்சிக் கல்லூரி, அவர் ஸ்காட்லாந்தில் பெற்ற கல்வி, B. A. பட்டத் தகுதியைவிட மேலானதென்று கருதி B.D. பட்டம் கொடுத்தது என்னவோ வாஸ்தவந்தான். அது சிலருக்கு உதவியாயிருந்தது. B. D. என்ற பட்டம் நேர் வழியில் அவரை மேம்பாடடையச் செய்யச் சிறிது உதவிற்று. ஆனாலும் நாம் தாழ்ந்தவரே என்று ஒரு மனோபாவம் வாழ நாள் முழுதும் அவரைச் சூழ்ந்து கொண்டே வந்தது.

இம்மாதிரி தாழ் வுணர்ச்சிகள் விரும்பத்தக்கதல்ல என்றாலும், ஒருக்கால் இந்த உணர்ச்சியால் தனக்குள்ள திறமை போதாது என்று பீடர் படும் அவஸ்தைகளைக் கண்டு மனமிரங்கி பீடரைப் பரிபூரணத் திறமையுள்ளவராக ஆக்குவதற்கு இது கடவுளைத் தூண்டிவிட்டதோ என்று கூடத் தோன்றுகிறது.

பிரசங்க மேடையில், மிகத் திறமையுடன் கேட்டார் பிணிப்பப் பேசுகிறார் என்ற கீர்த்தியை சம்பாதித்துக் கொண்டதோடு, அவர்கள் கண்ட போதகர்களில் மிகத் திறமை வாய்ந்தவர்களில் இவரும் ஒருவர் என்று பிரசங்கங் கேட்க வந்தவர்கள் நினைக்கும்படி இவரால் செய்ய முடிந்தது அற்புதமில்லையா?

# கிரஹஸ்தரான பீடர் மார்ஷல்

அவருடைய வீட்டில் அபூர்வமான சந்தோஷத்தைப் பீடர் அனுபவித்தார். தனக்கே உரிய ஒரு உற்சாகத்துடன் அட்லாண்டாவில் எங்கள் முதல்குடித்தனத்தைத் தொடங்க முனைந்தார். ஒவ்வொரு சிறு விஷயத்திலும் அபார கவனம் செலுத்தி சாமான் சேகரித்தார். மரச் சாமான் வியாபாரத்தி லீடுபட்டிருந்த அவருடைய நண்பர்களில் பலர் அவருக்கு உதவியாக வந்தார்கள். அவர்களில் ஒருவர் எங்களைத் தன்னுடைய கிட்டங்கிக்கு வந்து எங்களுக்கு வேண்டிய நாற்காலி மேஜை கட்டில் வகையறுக்களைப் பொறுக்கி சகாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளும்படி சொல்லியிருந்தார்.

மிக நெருங்கிய தோழமைக்குரியவரும் கொஞ்சம் வயதானவளுமான "மிஸ் மேரி" என்ற விதவை ஒருத்தி எங்களுக்குச் சில நேர்த்தியான சாமான்களைக் கொடுத்துதவினாள். ஊசிமுனை முக்காலிஒன்று, கணப்புத்தட்டி ஒன்று கையால் சித்திர வேலைசெய்யப்பட்ட நாற்காலிகள் மூன்று இவையெல்லாம் பீடருக்கு ரொம்பப் பிடித்தவை, அவள் கொடுத்துதவிய சாமான்களில்.

என்னுடைகடைகண்ணிகளுக்குப் போவதற்காக ஆபீஸில்கூட மட்டம் போட்டுவிட்டு வந்துவிடுவார். என்ன வாங்கினாலும் சரி, துப்பட்டி, கம்பிளி, திரைத்துணி, எதுவானாலும் சரி, நீலநிறத்தை அவர் பொறுக்காமல் தடுப்பதற்கு முடியாது. அதிருஷ்டவசமாக எனக்குப் பிடித்த நிறமும் நீலமாக இருந்ததோ தப்பித்தோம்.

பீடருடைய தேவைகளில் காணப்பட்ட இன்னொரு விசித்திரம் என்னவென்றால் எந்த சாமானும் உறுதிப்பாடுடையதாக இருக்க வேண்டுமென்பது. அதாவது அவருடைய நூற்றுத்தொண்ணூறு ராத்தல் உடம்பின்கனம் முழுவதையும் தாங்கிக்கொண்டு அந்த சாமான் கடகடக்காமலிருக்க வேண்டும்.

இந்த பூகம்பப் பரிட்சைகளைப் பார்த்து எத்தனை மர சாமான் கடைக்காரர்கள் இவரிடம் அசந்து போனார்கள் என்பதற்குக் கணக்கே கிடையாது.

தன்னுடைய வாழ்க்கையில் கல்யாணத்திற்குப் பிறகு ஏற்பட்டு வரும் மாறுதல்களைக் கண்டு என் கணவர் மீண்டும் மீண்டும் பூரித்துப் போவார். ஒரு தடவை அவர் எனக்கு எழுதுகிறார், பாருங்கள்; "நாடோடியும், தனிக்காட்டு நரியுமான பீடர் மார்ஷல், கடைசியில் பீங்கான் சாமான்களிலும், நாற்காலி மேஜை, கட்டில் வகையறாக்களிலும், வீட்டு வாடகை, முதலிய விஷயங்களிலும் கவனஞ் செலுத்த ஆரம்பித்துவிட்டதை என்னால் நம்பவே முடியவில்லை...ஆனால் உன்னிடம் உண்மையைச் சொன்னால் என்ன...இந்த மாறுதல் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. இதுதான் உண்மையானது, நிரந்தரமானது, சந்தோஷத்தையும், சந்துஷ்டியையும், அளிக்கக் கூடியது"

இப்போதெல்லாம் அவர் எங்கே போனாலும் மற்றவர் வீடுகளில் உள்ள தட்டுமுட்டு சாமான்களைக் கவனிக்கத் தவறுவதில்லை, அழகான பொருள்களில் அவருக்கு அபார ரஸிகத்தனம் எப்போதும் உண்டு. எத்தனையோ குலவதிகள் இவர் தங்கள் வீட்டு சித்திரை வேலைப் பாடுள்ள வெள்ளி சாமான்களையும், பீங்கான் பாத்திரங்களையும், தமது ஆடை அணிகளின் நேர்த்தியையும், நிற மேன்மையையும் பீடர் உற்சாகத்துடன் பாராட்டும்போது மிக மகிழ்ச்சியுடன் ரஸித்துள்ளார்கள். முன்பெல்லாம் இவற்றைக் கண்ணால்கூடக் காணாததான் இந்தப் பொருள்களில் இவ்வளவு கவனம் செலுத்தத் தொடங்கியது பீடருக்கே ஆச்சரியமாயிருந்தது.

புது மணவாளர்என்ற ஹோதாவில் பீடருக்குத் தன் மனைவியைத் தன் நண்பர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதிலும், தன் வீட்டை அவர்கள் வந்து பார்க்கும் படி செய்வதிலும் ரொம்பப் பெருமை. என் தாயார், என்னைப் பார்ப்பதற்காக எங்கள் வீட்டிற்கு வந்திருந்தாள். அவளிடம், கொஞ்சம்கூடக் கூச்சப்படாமல், சின்ன பைய

னுக்குள்ள சகஜத்துடன் "அம்மா நம்முடைய வீடு ரொம்ப அழகாகவும், சிரத்தையுடனும் அமைக்கப்பட்டிருக்கிறதோ இல்லையோ ரொம்பப் பிரமாதமாக இல்லையா? உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ எனக்கும் காதரைனுக்கும் நல்ல தெல்லாம்ரொம்பப் பிடிக்கும்" என்றார். கல்யாணமானதும் வந்த கிருஸ்துமஸ் பண்டிகையை நாங்களிருவருமாய்ச் சேர்ந்து கொண்டாடினோம். அதைப் பற்றி பீடர் ஸ்காட்லாந்துக்குஎழுதிய கடிதம் ஒன்றில் இப்படிச் சொல்லுகிறார்

"நீல விளக்குகளும், ஐசிக் சின்னமும் தவிர வேறு ஒன்றும் கலக்காமல் ஒரு கிருஸ்துமஸ் மரம் உண்டாக்கினோம். கொஞ்சம் பஞ்சை (அதாவது பருத்தியை)ப் பரப்பி பனிபோலத் தோன்றும்படி செய்துவிட்டு அதன் உச்சியில் செயற்கைப் பனியைக் கொஞ்சம் வைத்திருந்தோம். இதை வாசல் ஜன்னல் பக்கமாக வைத்தோம் ரொம்ப அழகாக இருந்தது.

கிருஸ்துமஸ் விருந்து ரொம்பப் பிரமாதம்! டாக்டர் ஹோப் கொடுத்த ஒரு காட்டுக் கோழியை வெகு ருசியாகக் காதரைன் சமைத்திருந்தாள். எவ்வளவு நேர்த்தியாகக் காதரைன் நிர்வாகம் செய்கிறாள் தெரியுமா? எங்களுக்கெல்லாம் அவளைப்பற்றி ரொம்பப் பெருமை. குடித்தனப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அவள் எல்லாந் தெரிந்த ஜாம்பவானைப்போல் நிர்வகிக்கிறாள். அவ்வளவு நேர்த்தியாக ஏற்பாடு செய்யப்பட்ட அந்த மேஜையில் உட்கார்ந்து கொண்டு நானே என் சொந்தக் கையால் நீங்கள் நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி நறுக்கிக் கொடுத்து காதரைன் சமைத்த அந்தக் காட்டுக் கோழிக் கறியை எதிர் வரிசையில் பரிமாறுவதைப் பார்க்கையில் எனக்கே ஆச்சரியமாயிருந்தது.

ரூம்களுக்கு விளக்கு வெளிச்சம் போதுமானதாக இருக்கவேண்டும் என் கணவருக்கு. அப்படியென்றால் என்ன அர்த்தம் தெரியுமா? ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனியின் பொருட்காட்சி அறையில் இருப்பதைப்போல் அவ்வளவு பிரகாசம் என்று அர்த்தம். மிக உயர்ந்தது என்று கருதப்படும் இருண்ட ஹோட்டல்கள். காக்டெயில்

உல்லாச மாடங்களையெல்லாம் அவர் வெறுத்தார். என்ன செய்தாலும், நாங்கள் வசிக்கும் அறையில் போட்டிருந்த வெளிச்சம்கூட அவருக்கு போதுமானதாகவே தோன்ற வில்லை. ரூமுக்குப் போகும்போதெல்லாம் தீக்குச்சியைப் பற்றவைத்துக்கொண்டு போய் பயமுறுத்துவார்.

விருந்து மேஜையில் நாஸூக்காக இருப்பதற்காக மெழுகுவத்தி ஏற்றி வைத்தால் நிச்சயம் பீடர் சிரிக்கச் சிரிக்க என்னைக் கேலி செய்ய ஆரம்பிப்பார். தன்னுடன் சாப்பிடும் நண்பரை "வில்லர்ட்" என்றழைத்து "இந்த வெளிச்சத்தில் உன் வாயைக் கண்டுபிடித்து அதனருகில் கையைக்கொண்டு போக உனக்கு முடியும் என்று நம்பு கிறேன். அதோ அங்கே கொஞ்சம் இடதுபுறமாக உன் வாய் இருக்கிறது. சபாஷ். கண்டுபிடித்துவிட்டாயே! காதரைன், உனக்குப் புண்யமுண்டம்மா! நாம் இந்த நாஜூக்கில்லாமலே சௌக்கியமாக இருக்கலாமே!" என்பார்.

ஒவ்வொரு தம்பதிகளுக்கும் வாய்ப்பதுபோன்ற கஷ்டங்களும், ஒவ்வொரு தமபதிகளும் குதூகஹலிப்பது போன்ற ஹாஸ்யப் பேச்சும், போலவே எங்களுக்கும் வாய்க்கும். கணவர்களுக்கே உரிய முறையில், அவரு டைய நல்ல அல்பாகா கோட்டை, அனதை நிதிக்குக் கொடுத்திருப்பேனென்று தேடிப் பார்த்தவுடன் கிடைக் காததால் சொல்லிவிட்டார்.

சட்டையில் தைத்த பொத்தான் ஒன்று கையோடு வந்து விடுகிற சந்தர்ப்பங்களிலும், காலரில் பொத்தான் காணமற்போய்விடும்போதும் கணவர்களுக்கு வரும் கோபம் போலவே என் கணவருக்கும் கடுங்கோபம் வரும்.

சாப்பாடு விஷயத்திலும் மற்ற விஷயங்களிலுள் ளதைப் போலவே நல்ல திட்டமான அபிருசிகள் வாய்த்த வர் பீடர். வேகவைத்த ஒரு முட்டை ஒரு கப் டீ, போன்ற ஒன்றிரு விஷயங்களைத் தவிர வேறு விஷயங்களில் பீடர் அப்படி ஒன்றும் திருப்திப்படுத்திவிட முடியாத ஒரு கண வர் அல்ல. எல்லா பிரிட்டிஷார்களைப் போலவே முட்டை விஷயத்தில் பீடருக்குள்ள அபிமானம் பெட்டைக்

கோழிக்குத் தானிட்ட முட்டையிடத்தில் ஏற்படும் அனுமானத்தோடு சரிநிகராகச் சொல்லக் கூடியதாயிருந்தது. ஆகையால் இந்த அபூர்வபதார்த்தத்தை அவருக்குப் பிடித்தமான அந்தப் பக்குவத்தில்தான் வேகவைக்க வேண்டும். ஹாலன்டைஸ் என்ற ஒரு பதார்த்தத்தையோ, விச்சி ஸாய்ஸ் என்ற கஷ்டமான பக்குவத்தைக் கற்றுக் கொண்டதில் ஏற்பட்ட கஷ்டத்தையோவிட அதிகமான கஷ்டம் பீடருக்குப் பிடித்தபக்குவத்தில் முட்டையை வேகவைப்பதைக் கற்றுக் கொள்வதில்தான் எனக்கு ஏற்பட்டது.

"இங்கே பார், கண்ணு." என்று பீடர் பொறுமையாய் விளக்க ஆரம்பிப்பார் "முதல்'லே இருந்து மறுபடியும் ஆரம்பிப்போம். முதலில் நீ சட்டியில் முட்டையை இடு.........'

"வாழ்ந்தது! எனக்கு அந்தப் பழக்கமில்லே!" "சரி, சரி! காலேஜில் இங்கிலிஷ் முறையாகச் சொல்லித் தந்தார்களல்லவா உனக்கு? நீ சட்டியில் முட்டையை வை. அதில் உள்ள முட்டை முழுக்க மறைந்து விடாமல் ஐந்தில் ஒரு பங்கு பாக்கியாக இருக்கும்படி தண்ணீரால் முட்டையை மூடு......"

"ஆமாம்! முட்டையின் ஐந்திலொரு பங்கை அளப்பதற்கு ஏதாவது ஒரு கருவி கண்டுபிடித்திருக்கிறார்களா உலகத்தில்?' என்பேன். "உனக்கென்னமோ சிரிப்பாயிருக்கிறது. எனக்குத் தெரியும் உன் கேலியெல்லாம் இது ரொம்ப முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் என்று ஏன் நான் சொல்கிறேன் தெரியுமா? எல்லா முட்டைகளும் ஒரே அளவுள்ளவை அல்ல. "இந்தப் பெட்டைக்கோழிகளுக்குக் கொஞ்சங்கூட புத்தியே இருப்பதில்லே! ஒரு அளவில் அவை முட்டையிட வேண்டாமோ?"

"காதரைன்! இப்படியெல்லாம் பேசினால் எனக்குக் கோபம் வரும். உனக்குப் பக்குவமாய் வேகவைக்க வராததில் என்ன ஆச்சரியம் இருக்கிறது. என்ன செய்யணும் தெரியுமா? முட்டையை மூடும் தண்ணீர் எப்படியிருக்க வேணும் தெரியுமா?"

"தெரியாதே!"

உனக்குத் தெரிய வைக்கத்தான் சொல்லுகிறேன். தண்ணீர் ரொம்பக் குளிர்ந்த ஜலமாக இருக்க வேண்டும்."

'ஐஸ்வாட்டர்' ஊற்ற வேண்டுமாக்கும்?"

"இப்படிக்கெல்லாம் பரிஹாஸம் செய்தால் சொல்ல மாட்டேன்."

"பரிஹாஸமில்லை; சொல்லுங்கள்! சந்தேகம் வந்தால் கேட்கக் கூடாதா?"

ஜலம், குளிர்ந்த ஜலமாக இருக்க வேண்டும். சூடாகவோ வெது வெது என்றோ இருக்கக் கூடாது!"

"ஆமா! அதைத்தான் வேகவைக்கப் போகிறோமே! அப்படியிருக்கும்போது ஏன் குளிர்ந்த தண்ணீர் வேண்டும் என்கிறீர்கள்?"

"அப்படித்தான் இருக்க வேண்டும். அந்த ஜலமும் இரண்டு நிமிஷம் என்றால் இரண்டு நிமிஷந்தான் கொதிக்க வேண்டும். கூடுதலாக ஒரு செகண்டு கொதித்தாலும் பக்குவம் கெட்டுவிடும்!"

நான் பெருமூச்சு விட்டேன். இதைப் போலவே தேயிலையைப் பக்குவமாக எப்படித் தயாரிப்பது என்ற விபரத்தைப் பீடர் விஸ்தாரமாக எனக்கு விளக்கினர்.

பீடருக்கு மிகப் பிடித்த பல விஷயங்களில் ஒன்று இராக்கண் விழிப்பது என்பதும் ஆகும்.

அவருடைய வழக்கங்கள் கருங்கல்போல் சாஸ்வதமானது. அவருடைய அகால அர்த்தராத்திரிகாளராத்திரி வேளைவரை நானும் விழித்துக் கொண்டிருக்க என்னுடைய தேகநிலை இடம் கொடுக்கவில்லை. சிலருக்குத்தான் அது சாத்தியம். நண்பர்களை அவர் ஒருவர் மாற்றி ஒருவராய்த்தான் சந்திக்க முடியும் 'ஷிப்டு' முறைவைத்து வேலை செய்வதைப் போல.

பீடருக்கு உடல் நலக் கோளாறு வந்துவிடும் என்ற சந்தேகம் டாக்டருக்கு எப்படியோ ஏற்பட்டுவிட்டது.

என்னுடைய கணவர் நல்ல உடற்கட்டுடையவர், வலிவும், தேகப் பயிற்சி செய்து ஏற்பட்ட உடல் வனப்பும் வாய்ந்த ரகம். ஆனாலும் டாக்டரின் அறிக்கையில்;

இன்று காலை உமது தேகத்தைப் பரிசோதித்ததைத் தொடர்ந்து உம்முடைய அவகாசத்திற்கும், திறமைக்கும் வெளியுலகம் கோரும் கோரிக்கைகளுக்கு இணங்குவதை தாங்கள் குறைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். உங்களுக்குக் கொஞ்சம் ஓய்வு வேண்டும். தேகப்பயிற்சிக்கும் தாங்கள் கொஞ்சம் அவகாசம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இயற்கையான எட்டு மணி நேரத்தூக்கம் உங்களுக்கு அத்தியாவசியமாகும். இப்பொழுது நீங்கள் நடத்துகிற வாழ்க்கை மிக விரைவில் வீணாகும் வாழ்க்கையாகும்.

ஆனால் அவருடைய இந்தப் பழக்கம் படிந்துபோன ஒரு பழக்கம். பாதிராத்திரியில்தான் அவருடைய மூளை மகோன்னதமாக வேலை செய்யும். ஸ்காட்லாந்துக்காரர்களுக்கே உரிய சங்கோஜங்களெல்லாம் அப்பொழுதுதான் அவர் விஷயத்தில் நீங்கி பரம சந்தோஷத்துடன் சகஜமாக இருப்பார். நடுநிசிச் சம்பாஷணைகளில்தான் அவருடைய உள்ளக்கிடக்கை பரிபூர்ணமாக வெளியாகும். மறக்க முடியாத வார்த்தைகளில், மறக்கமுடியாத விதத்தில், காதல், கடவுள், சத்தியம் ஆகியவற்றைப் பற்றி இந்த நள்ளிரவில் பேசுவார்.

ஒருநாளிரவு நண்பர் ஒருவர் அவரைக் கேட்டார். கடவுளின் முன்னால் தீர்ப்பு நாளில் நாமெல்லாம்போய் நின்று நமது பாபங்களுக்கெல்லாம் பதில் சொல்லியாக வேண்டுமா என்று பீடர் உடனே சொன்னார் "சந்தேகமில்லாமல்! வேதாகமந்தான் (பைபிள்தான்) அதைத் தெளிவாகச் சொல்லுகிறதே, என்றாவது ஒருநாள், எங்காவது,எப்படியாவது நாம் பதில் சொல்லித் தீரவேண்டிய கட்டம் நம் ஒவ்வொருவருக்கும் வரத்தான்வரும்."

மூன்றாவது கோப்பைத் தேயிலையைக் கலக்கிக் கொண்டே யோசனையில் ஆழ்ந்தார். "கடவுளின் முன்

னிலேயில் என்னுடைய பாபங்களேப் படிக்கக் கேட்கும் துன்பத்தை நானும் அனுபவிக்க வேண்டியவனே.''

ஆனல் எனக்கென்னவோ இப்படித்தான் தோன்று கிறது. தேவகுமாரன் என்னருகில் வந்து என் தோளில் கையைப் போட்டுக்கொண்டு ஆண்டவனிடம் சொல்லு வார் 'ஆம்! எல்லாம் நிஜந்தான். பீடருடைய பாபங்களுக் கெல்லாம் நானே பொறுப்பு. அவனுடைய பாவங்களுக் காக மனம் வருந்துகிருன். எங்களுக்கு இடையே ஏற்பட் டிருக்கிற ஒப்பந்தம் ஒன்றின்படி நான்தான் அதற்குப் பொறுப்பாளி முழுக்க முழுக்க'' என்பார். திடீரென்று பீடர் சிரித்தார் "அம்மா, நான் சொல்வது இந்த விஷ யத்தில் தவருயிருந்தால் நான் மூழ்கிப் போய்விடுவேன்''.

எங்களுக்குக் கல்யாணமாகும்போது பீடருக்கு முப் பத்தி நாலுவயது. அவருடைய பழக்க வழக்கங்கள் நன்ருகப் படிந்து போயிருந்தன. மணமாகாதவராகப் பல வருஷங்கள் வாழ்ந்திருக்கிருர். என் கணவர் சம்பந் தப்பட்டவரை, திருச்சபை வேலேக்கு முன் சலுகையா, குடும்பத்திற்கு பிராதான்யமா என்ற பேச்சுக்கே இட மில்லே. என்னே அவர் காதலித்தார். அதைப்பற்றித் துளி சந்தேகங்கூடக் கிடையாது. ஆனல் அவர் ஆண்ட வனுடைய திருவருளுக்குப் பாத்திரமானவர் ஆகையால் முக்காலும் அவர் ஆண்டவனின் தொண்டர். ஆயிரக் கணக்கான ஆண்டவனின் அடியார்களான மக்களின் குற்றேவல் சேவகன். அவருக்கு மனேவியான நான் இந்த உண்மையை அப்படியே ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்.

குடித்தனம் நடத்துவது எனக்கு சந்தோஷமாயிருந் தாலும், எனக்கு இதுமட்டும் போதுமானதாகத் தோன்ற வில்லே. நான் பீடரின் உத்தியோகத்தையே என்னுடைய வேலேயாகவும் ஆக்கிக்கொண்டால், அவர் தன் வேலேயை என்னுடன் பகிர்ந்து கொண்டுதான் ஆகவேண்டும். எல்லா விதத்திலும் எங்களுடைய வாழ்க்கை உண்மை யான கூட்டாளி வாழ்க்கையாக அமைந்துவிடும்.

இந்த நிலேமை எனக்கும் சரி அவருக்கும் சரி சங்கட மாயிருந்தது. தன்னுடைய வேலேயைத் தானே என்னு

டைய உதவி ஏதும் இல்லாமலே செய்து கொள்ளக் கூடியவராகவே எனக்குத் தோன்றிற்று.

கொஞ்சகாலம் அவரே அப்படிச் செய்தும் வந்திருக்கிறார்.

அவருடைய சூழ்நிலை அவரை யாரிடமும் சாராமல் சுயேச்சையுடனிருக்கச் செய்திருந்தது. வீடு என்று ஒன்று இல்லாததால் கோயிலின் ஆபீஸ் அறையில் இராப்பகலாய் உத்யோகம் செய்யும் வழக்கம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. ஆகையால், எங்களுக்கு விவாகமான வுடன் நாள் பூராவும் அவரைப் பார்க்க முடியவில்லை. இரவில் அவருக்கு ஒரு கூட்டமோ, பேச்சோ இருந்துகொண்டிருக்கும். தொடர்ந்து நடத்தும் திருச்சபை வேலைகளுக்காக சில சமயங்களில் ஒருவாரங்கூட வெளியூர்களுக்குப் போய் விடுவார்.

வெளியூர் வேலைகளைப்பற்றி எங்களுக்குள் உடனே ஒரு சர்ச்சை ஏற்பட்டது. வரும் அழைப்புகளில் தன்னால் ஒப்புக்கொள்ள முடிந்ததற்கு அதிகமாகவே அவர் ஒப்புக்கொண்டு விடுகிறார் என்பது என்கட்சி. இந்த மாதிரி செய்வதன் மூலம் பீடர், திருச்சபைக்கோ, தன்னுடைய தேக சௌக்கியத்திற்கோ, அல்லது அவருடைய குடும்பத்திற்கோ எள்ளளவு பயனும் இல்லை யென்பதோடு, நியாயமாகவும் தோன்றவில்லை.

போதகரான பீடருக்கு நான் ஏன் அவருடைய சக்திக்கு மிஞ்சிய அளவு வேலைகளை தன்மேல் சுமத்திக் கொள்ளுகிறார் என்று சொல்கிறேன் என்பது புரிபடவில்லை.

அவருடைய மேஜைக்கு வந்து குவிந்தவண்ணமாயிருந்த பிரசங்க அழைப்புகளில் ஒரு சிலவற்றைத்தான் அவர் ஒப்புக்கொள்வார். அதாவது வருஷத்தில் ஐந்து வாரம் சராசரியாக வெளியூர்களில் போய் பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவது, ஒருநாள் ஒரு நாளாகப் பற்பல இரவுக் கூட்டங்கள் என்றுதான் இதற்கு அர்த்தம்.

அவர் கட்சி "நான் எத்தனை அழைப்புகளை மறுத்திருக்கிறேன் என்று பார்" என்பதே. என் கட்சி "ஒப்புக்

கொண்டிருக்கிற அழைப்புகள் எத்தனை என்று நீங்கள் கணக்கிட்டுப் பார்க்கவில்லையே!" என்பது.

கணவரான பீடருக்கு நான் பொறுமையாலும், தன்னல உணர்ச்சியாலும் தூண்டப்பட்டே இந்த வித மாகக் கண்டிக்கிறேன் என்ற எண்ணம். காலப் போக்கில் நான் வளர்ந்து மாறிவிடுவேன் என்ற நம்பிக்கை அவருக்கு.

ஒருவிதத்தில் அதுவும் உண்மைதான். ஒரு குறிப் பிட்ட நபரிடம் கொள்ளுவது மட்டுந்தானா 'பொறுமை' என்பது. ஒரு திருச்சபையின்மீது ஏற்பட்டாலும் பொறுமை பொறுமைதானே. மதபோதகர்களின் மனைவி மார்கள் எத்தனைபேர் தத்தமது இல்லங்களில் கணப் பருகில் இருந்து வருத்தமும், சோகமும் தோன்றத் தன் னந் தனிமையை அனுபவிக்கிறார்கள்!

பீடர் சொல்வதிலும் கொஞ்சம் உண்மை இருக்கத் தான் செய்கிறது. அம்மாதிரித் தன்னலம் எனக்கும் இருக்கத்தான் செய்தது. இந்த உணர்ச்சிகள் என்னை ஆட்கொண்டவுடன் நான் துன்பப்பட்டு, வருந்துவேன். அழுவேன். இது எவ்வளவு அருவருக்கத்தக்க விஷயம் என்று நான் அறிவதற்குப் பரிபக்குவமும் அனுபவமும் தேவைப்பட்டது. பல வருடக்கணக்கான அனுபவம், நீண்டநாள் பரிபக்குவம். எந்தக் காரணத்தால் பீடர் இப்படிப் போதனை போதனை என்று தன் உடல்நலத்தை யும் பொருட்படுத்தாமல் போகிறார் என்பதை அப்போது என்னால் உணர முடியவில்லை.

எங்கள் மணவாழ்வில், ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து கொள்வதில் புது எல்லைகளைப் பெருக்கிக் கொண்டே வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டோம். யாரிடமும் பீடர் தன் மனதையும், ஹிருதயத்தையும் வெளியிடக் கூடியவரல்ல—என்னிடம் கூட வெளியிட மாட்டார். ஆழ்ந்த உணர்ச்சிகளை வெளியிடுவதற்கு ஸ்காட்லாந்தியருக்குக் கஷ்டமாக இருக்கும். அவருடைய ஆத்மார்த்த எண்ணங்களை வெளியிட முடியாதபடி ஒரு சங்கோஜமும், வெட்கமும் அவரைப் பிடுங்கித் தின்று

கொண்டிருந்தது. ஆயிரக் கணக்கானவரின் அன்பையும், பக்தியையும் விஸ்வாசத்தையும் கவர்ந்த இந்தப் போதகர், இந்த சங்கோஜச் சுவருக்குப் பின்னால் சில சமயங்களில் போய்த் தன்னந்தனியாய் ஒண்டியாய் இருக்கவும் நேர்ந்தது.

எந்த இடத்தையும்விடத் தன் மாதாகோயில் பிரார்த்தனைகளின் போதுதான் அவருக்கு மனம் விட்டுப்பேச முடிந்தது. இதுதான் அதிலுள்ள விசித்திரம். இதையெல்லாம் விடப் பெரிய அதிசயம் இன்னும் ஒன்றிருக்கிறது. அந்தரங்கமாகத் தனித்திருக்கையில் கூடத் தன் ஆசைகளை, அந்தரங்கங்களை வாய்விட்டுச் சொல்ல முடியாத இந்த மனிதர், ஒரு பெரிய கூட்டத்தை நடத்துகிறோம் என்ற ஆவேசத்தில் பிரார்த்தனைப் பிரசங்கமாகத் தன் உணர்ச்சிகளை அப்படியே கொட்டித் தீர்த்துவிடுவார். வேறு எந்த சந்தர்ப்பத்திலும் காட்டமுடியாத தோரணையில், தனக்குள்ள கடவுட் காதலைக் கூட்டத்தில் பரவசத்துடன் காட்டுவார். ஆண்டவனின் சாந்நித்யத்தை அப்படியே உண்டாக்குவார். தனக்குத் தெரிந்த மகோன்னத விஷயங்களை அளவிட முடியாததால் ஏற்படும் சுருக்கத்தையும், தான்படும் பரமவேதனைகளையும் கூடச் சொல்லி விடுவார். அதனால்தான் நீண்ட பிரார்த்தனைகளை இரகசியமாக வெறுக்கும் பக்தர்கள்கூட டாக்டர் மார்ஷலின் பிரசங்கத்தை ஆவலுடன் கேட்க வந்தார்கள். அதனால்தான் பீடரும் இந்தப் பிரார்த்தனைகளில் இவ்வளவு ஆவல் காட்டினார். பிரார்த்தனைகளும் அவருடைய மனச்சுமையைக் குறைத்தன. கோயில் மேடையிலாகட்டும், வீட்டிலாகட்டும், ஆபீஸிலாகட்டும், விளையாட்டிலாகட்டும் பீடருடைய மத நம்பிக்கையால் இந்த அந்தரங்க சுத்தம் கொஞ்சங்கூடக் குறையாமல் வெளிப்படும். அவருடைய நடையுடை பாவனைகளில் அர்த்தமற்ற கோரணிகளுக்கோ, சம்பிரதாயங்களுக்கோ ஆஷாடபூதித்தனங்களுக்கோ துளிக்கூட இடமில்லை. தனக்கு சந்தேகமில்லாத எந்த விஷயத்தையும்பற்றி நிச்சயமாகவும் ஆணித்தரமாகவும் சொல்ல அவருக்குத் துணிவுண்டு. அவருடைய போதனைகளின் கவர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணம்.

இந்த அந்தரங்க சுத்தம் வீட்டில் நடக்கும் ஒவ்வொரு சிறு ஆத்மார்த்தச் சடங்கிலும் விளக்கமுறும். சாப்பிடு முன் செய்யும் பிரார்த்தனை முதல், இரவில் போஜனம் முடிந்த பிறகு நடக்கும். பிரார்த்தனை வரை ஒவ்வொன் றிலும் வெளிப்படும். இந்த விஷயங்களில் பாவனைகள் செய்வது பீடருக்குக் கட்டோடு பிடிக்காது.

இது சில சமயங்களில் பல கேலிக் கூத்துகளில் கொண்டுபோய் விட்டு விடுவதுமுண்டு. காட்டுக் கோழி அவருக்கு ரொம்பப் பிரியம்; ஆனால் அதன் கறி வேறு ஏதாவது பதார்த்தங்களுடன் கலந்து காணப்பட்டால் கொஞ்சங்கூட சகிக்க முடியாது அவருக்கு.

ஒவ்வொரு சராசரித் தம்பதிகளைப்போலவே பீடரும் நானும் சில சமயங்களில் பூசல்களில் ஈடுபடுவோமானாலும் நாங்களிருவரும் சேர்ந்து பிரார்த்தனையில் ஈடுபடுகிறவரை அந்தப் பூசல்கள் பிரமாதமாகிவிடாது என்பதைக்கண்டு கொண்டோம். "தாம்பத்ய உறவில் சிக்கல் ஏற்படுத்திக் கொண்ட தம்பதிகளுக்கு சேர்ந்து பிரார்த்தனை செய்யுங் கள்; உங்கள் சிக்கல்கள் எல்லாம் மாயமாய் மறைந்துவிடு கிறதா இல்லையா என்று பாருங்கள்" என்று பீடர் சொல்லுமளவுக்கு இந்தப் பாடத்தில் நாங்கள் தேர்ச்சி பெற்றுவிட்டோம்.

வாழ்க்கை என்ற இயந்திரத்திற்கு பிரார்த்தனை மசகு போடுவதுபோல என்று பீடர் அடிக்கடி குறிப்பிடு வார். இந்த வகையில் எங்கள் படுக்கை யறையில் காலை வேளையில் சில நிமிஷங்கள் நாங்களிருவரும் தனித் திருப்போம். இந்தப் பிரார்த்தனைகளின் போது அந்த நாளைக் கடவுளுக்கு அர்ப்பணித்து ஆண்டவனே எங்களை ரக்ஷியும் என்று பிரார்த்தித்தால், எங்கள் ஒவ்வொருவருக் கும் அந்த தினம் வெகு சுகமான நாளாக அமைந்து விடு வதை அனுபவத்தால் நாங்கள் அறிந்துகொண்டோம். இதில் ஒரு பரம திருப்தி இருந்தது. இந்தக் கூட்டுப் பிரார்த்தனையை நடத்தாமல் விடநேர்ந்தால் எல்லாமே தட்டுக் கெடல்தான்.

ஏதோ அற்ப லாபங்களுக்காக பகீரதப் பிரயத்தனங் களில் ஈடுபடுவது போலிருக்கும் எங்களுக்கு.

கல்யாணமானவுடனேயே ஒரு விஷயம் எங்களுக்குப் புரிந்துவிட்டது. எங்களுக்குள் பூசல்கள் இருப்பது முக்கியமல்ல, அதைத் தீர்த்துக்கொண்டு, செல்லுவதுதான் முக்கியமென்பதை அறிந்துகொண்டு விட்டோம். பார்க்கப்போனால் எல்லாத் தம்பதிகளுக்கும் தான் கஷ்டங்கள் இருக்கிறன. கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும், சரிக்கட்டிக் கொள்ளத்தான் வேண்டும். ஒரே நோக்காக எந்த இரண்டுபேரும் இரண்டறக் கலப்பது என்பது முடிந்த விஷயமா?

சில விவாகங்கள் இன்னும் தெய்வீக சங்கல்பத்தால் நிகழ்கின்றன. எந்த விதத்தில் கல்யாணம் செய்து கொண்டவர்களும் உலகத்தில் தத்தமது வாழ்க்கையை வாழ்ந்துதான் தீர்க்கவேண்டும். நாம் முயன்றால்தான் உலகத்தில் தேவசுகம் கிடைக்கும். இந்தத் தத்துவம் மற்ற தம்பதிகளுக்கு எவ்வளவு பொருந்துமோ அவ்வளவு ஒரு கோயிற் பிள்ளைக்கும் அவருடைய மனைவிக்கும் பொருந்தும்.

# மதம் ஒரு விளையாட்டு

'இளமையும் வட்டிலும்' என்ற பிரசங்கத்தில், "நாயையும் குழந்தைகளையும் பிடிக்காத எவனும் சந்தேகாஸ்பதமானவன்" என்று பீடர் சொல்லியிருக்கிறார்.

இவைகளின் ப்ரீதியை சம்பாதித்துக்கொள்ள முடியாத மனிதனிடத்தில் ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது. இது எதில் கொண்டுபோய் விடுகிறதென்றால் அப்பேர்ப்பட்ட ஒருவன் எந்த மனிதனின் அன்புக்கும் சரி மரியாதைக்கும் சரி உரியவனாகும் தகுதியுள்ளவனல்ல. தன்னிடத்தில் குழந்தைகளும் நாய்களும் பிராணனை வைத்திருந்தன என்பதில் பீடர் மார்ஷலுக்குச் சொல்ல முடியாத பெருமை என்பது அவர் கோயிலில் பிரசித்தமான விஷயம். அவர் கேலிக்காளானவற்றில் இந்த விஷயமும் ஒன்று.

உதாரணமாக இளைஞர்களாகக் கூடி ஒரு விளையாட்டு ரேடியோ ஒலிபரப்பு நடத்தினார்கள் அதில் அவர்கள் கூறிய ஜோஸ்யம் இது. "ஒண்ணு நம்பர் ஜோஸ்யம்: பீடர் மார்ஷல்...ஒரு பிரபல போதகர் "இதுவரை நான் ஞானஸ்நானம் கொடுத்த எந்த குழந்தையும் என் புஜத்தில் அழுததேயில்லை......" ஆகையால் இதோ இந்த ஜோஸ்யத்தைப் பாருங்கள். அவருக்கு ஒரு பெரிய அடி கிடைக்கும். 1938-ம் வருஷம் மே மாதம் 23-ம் தேதி காலை 11-15-க்கு ஒரு குழந்தை பீடர் மார்ஷலின் தோளில் இருந்துகொண்டே உத்தரங்கள் பிய்த்துக் கொண்டு போகும்படி அலறும். அன்று இந்த பீடர் மார்ஷல் ஒரு திறந்த ஸேப்ஃடிபின்னிடம் படுதோல்வியைக் காண்பார்!"

ஆனால் இந்த ஜோஸ்யம் அந்தத் தேதியிலும்சரி அதற்குப் பிறகு பல ஆண்டுகளாகியும் பலிக்கவில்லை. அன்று ஏதோ ஒன்று துர்நிமித்தம் போல் தென்பட்டது. ஞானஸ்நானம் செய்விப்பதற்காகப் புறப்படுமுன் கூட்டத்தினரிடம் சென்ற பதினேழு வருஷ காலமாய் மகிழ்ச்சி

யுடன் கூடிய கௌரவமாய் நான் கருதி, ஞானஸ்நானம் செய்வித்த எந்தக் குழந்தையும் என்னிடத்தில் அழுத தில்லை என்ற பெருமை எனக்குண்டு என்பது நீங்கள் எல்லோரும் அறிந்தது இந்த விஷயத்தில் நான் கர்வமடைகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல் இத்துணைநாள் கழித்து இப்போது என்னவோ 'ஒரு வேளை இன்று நமது கர்வம் பங்கமடைந்து விடுமோ, என்ற திகிலுடனேயே ஆரம்பிக்கின்றேன்.

ஏப்ரல் 13உ அன்று பீடரின் வாழ்க்கையில் ஒரு கரி நாள். ஞாயிற்றுக் கிழமை டேவிட் ஹாம்டன் டேவிஸ் அன்று அழுதுவிட்டான். அத்தோடு நின்றுவிட்டிருந்தால் நன்ருயிருந்திருக்கும். ஆனல் ரொம்ப மோசமாக ஆகிவிட்டது நிலைமை. அன்று பீடரின் பிரசங்கம் ஒலி பரப்பவேண்டிய நாள். பீடருக்கு அருள் குறைந்த இந்த விபரமும் நாடெங்கும் ஒலிபரப்பப்பட்டு செய்தி பரவிவிட்டது. அதுமட்டுமல்ல. பிரார்த்தனை முடிந்து பீடர் தன் அறைக்குள் நுழையும்போது அவர் நண்பர் ஒருவர் "பரவாயில்லை பீடர்! என்ருவது ஒரு நாள் இது நடக்கக் கூடியதுதானே. வருத்தப்படாதீர்" என்று எழுதப்பட்ட ஒரு துணி ஒன்றைக் கதவின்மேலும் மேஜையின் பக்கத்தில் கிடந்த நாற்காலியின்மேலும் தொங்கவிட்டு விட்டுப் போய்விட்டார். இந்த ஆறுதல் குறிப்பு துக்கத்தை ஆற்றவில்லை அதிகரிக்கவைத்தது.

வெஸ்ட் மின்ஸ்டரி லிருந்தபோதும் வாஷிங்டனுக்கு வந்ததிலிருந்து சில ஆண்டுகளும் பீடர் சிறுவர் பிரார்த்தனைகளையும் நடத்தினர். பெரியவர்களும் சிறுவர்களைப் போல் உற்சாகத்துடன் இதைக் கேட்பார்கள். இப்பிரசங்கம் சாதாரணமாக ஐந்து முதல் எட்டு நிமிஷங்கள் நடக்கும். ஸ்காட்லாந்தியக் கதைகள் இப் பிரசங்கத்தினிடையே சொல்லுவது அவருக்கு ரொம்பப் பிடிக்கும். A.A. மில்னேயின் க்ரிஸ்ட்டஃபர் காபின் என்ற பிரபல் பாடலை இடை இடையே சொல்லி விளக்குவார். பேஸ் பந்து விளையாட்டு அல்லது மீன் பிடிக்கப் போன உல்லாசப் பிரயாணம் அல்லது ஒரு கார்ட்டூன் படம் இவற்றில்

ஏதாவது ஒன்றிலிருந்து ஒரு படிப்பினையைக் கற்றுக் கொடுத்துவிடுவார்.

ரொம்பத் தமாஷான ஆனால் குறும்புத்தனமான ஒரு கதை. ஒரு பையன் பல்பசையை (டூத் பேஸ்ட்டை)த் தூங்கிக் கொண்டிருந்த பூனை ஒன்றின் மேல் வரிவரியாய்ப் பிதுக்கி கோவேறு கழுதையைப்போல் ஆக்கிவிட்டகதை. தோட்டத்திலுள்ள ஆப்பிள்களையெல்லாம் உலுப்பிவிட்ட கதை; நாவிதர் கூடையிலிருந்த குப்பையைக் குப்புறக் கவிழ்த்த கதை இப்படியாக எத்தனை எத்தனையோ கதைகள் அடிபடும்.

பீடர் கதைகளைச் சொல்லிவிட்டு "இதெல்லாம் நிஜமாக வாழ்க்கையில் செய்ய முடியாது. கதையில்தான் நடக்கமுடியும். உலுப்பிவிட்ட ஆப்பிள்களை, மரத்தில் திரும்ப ஒட்டவைக்க முடியுமா? நாவிதருடைய கத்தரிக்கோல் எவ்வளவு பொல்லாதது என்று உங்களுக்கே தெரியும். நீங்கள் எப்போதாவது பல்பசை (டூத்பேஸ்ட்)யைத் திரும்ப ட்யூப்புக்குள் தள்ளிப் பார்த்திருக்கிறீர்களா? அது நடக்கவே நடக்காது. நான் ஸ்காட்லாந்துக்காரன் எனக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்பார்.

இதைப் போலவேதான் நாம் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ளும் வசவுகளெல்லாம் அவற்றைச் சொன்ன பிறகு திரும்ப எடுத்துக்கொள்ள முடியுமா? நம்மை மன்னிக்கும்படி யேசுவைக் கேட்டுக்கொள்வது என்றுதான் நாம் செய்ய முடியும். யாரைத் திட்டினேமோ அவரிடம் போய் நம்மை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு விட்டு இனிமேல் அந்த வசவுகளைச் சொல்லாமலிருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் பல்பசையை ஏன் திரும்ப அதைத் திணிக்கப் பிரயத்தனம் செய்ய வேண்டும். தான் பள்ளிக்கூடத்தில் அதிகப்படியாக மத போதனைக்காளாகி விட்டதால் தேவையில்லை என்று சொல்லிக்கொண்டு வெற்றிகரமான வியாபாரி ஒருவர் நெடுநாட்களாகக்கோவிலுக்கே வராமல் பல வருஷங்களாய் இருந்துவந்தார். அவருடையமனைவி பீடர்மார்ஷலின் பிரசங்கத்தைக் கேட்டுஉற்சாகமான பக்தையானுள். ஒரு வருஷங் கழித்து "ஒரே ஒரு

தடவை வந்து பாருங்களேன்" என்று புருஷனை வற்புறுத்தினாள். அவர் வந்தார். தன் ஆயுட்காலத்திலேயே காணாத ஒரு புதுமையைக் கண்டுகொண்டார். ஏசு மதம் இவ்வளவு குதூஹலமாயும் விளையாட்டாகவும் இருக்கமுடியுமா என்ற ஆச்சரியம் ஏற்பட்டது. அவருக்கு அதிலிருந்து அங்கே போக முடிந்தபோதெல்லாம் பீடரின் பிரசங்கத்தைத் தவறவிட்டதில்லை அவர்.

மாதா கோயிலில் பூஜைப் பிரசங்கம் கேட்பதற்காக ஆயிரக் கணக்கில் கூட்டம் கூடுவது என்பதே ஒரு விசித்திரமான சம்பவம். அதுவும் இந்தப் பிரசங்கத்தைக் கேட்க 'நீ முந்தி நான் முந்தி' அடித்து இடித்துக்கொண்டு முன் இடம் தேடிக்கொண்டு கேட்கப்போவது அற்புதமாக தோன்றிற்று. இந்தப் பிரசங்கங்களைக் கேட்காமலிருக்கத் தான் யாராலும் முடியவில்லை. அவ்வளவு சுவையுடன் பீடர் பிரசங்கம் செயதார். ஒரு வாலிபன் "பல மைல் நடந்து இவர் பிரசங்கத்தை ஒருதடவை கேட்கலாம் என்றுதான் வந்தேன், முதல் தடவை கேட்ட பிறகு பிரசங்கம் நடக்கப் போகிறது என்று தெரிந்த போதெல்லாம் என்னால் போகாமலிருக்க முடியவில்லை" என்று சொன்னான்.

பிரார்த்தனைப் பிரசங்கத்தை மக்கள் இவ்வளவு ஆர்வத்துடன் கேட்பது பீடருக்கு மகிழ்ச்சி யளித்ததானாலும் பிரார்த்தனையின் மற்ற அம்சங்களைச் சில்லறைவிஷயங்கள் என்று குறிப்பிடுவதை அவர் பலமாக ஆட்சேபிப்பார்.

வேதாந்த வகுப்பு மாணவர் கூட்டமொன்றில் "பிரார்த்தனையின் ஒவ்வொரு அம்சமும், நன்கு திட்டமிடப்பட்டால்தான், பக்திப் பரவச சத்திற்கு நாம் நம்மை அருகதையுள்ளவர்களாக ஆக்கிக்கொள்ள முடியும். ஆண்டவனின் சந்நிதி இது என்ற நினைப்பும் உண்டாகும்" என்றார்.

ஆண்டவனின் சாந்நித்யத்தைப் பீடரால் உணர முடிந்ததால்தான் தன்னைச்சுற்றியுள்ள மக்களையும்கடவுள் உணர்ச்சியடையும்படி செய்ய முடிந்தது.

பெண்மணி ஒருத்தி "அதன் பிறகு என்ன நடந்தது தெரியுமா! அவர் பேசி முடித்ததும் உள்ளத்தைத் துருவி ஆராய்வது போன்ற ஒரு நிசப்தம் நிலவியது. தேவ குமாரன் உண்மையிலேயே எங்கள் பக்கத்தில் வந்து நிற்பது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. "அவருடைய உடைகளின் 'சரசர' சப்தம்கூடக் கேட்பதுபோலிருந்தது" என்றார்.

பலர் இவர் நல்ல நடிகராக விளங்கியிருப்பார் என்று கூட பீடரைப் பற்றிப் பேசிக்கொள்வார்கள். அது என்ன திறமையாக இருந்தாலும் அவர் செய்துவந்த அருட் பணிக்குத் தேவையான திறமையை மற்றெவரும் பெற்றிருக்காத வகையில் பெற்றிருந்தார். அவர் திறமையில் ஆண்டவனின் அருளும் கலந்திருந்தது. ஆண்டவனுக்காகவே அத்திறமையும் பயன்பட்டதில்தான் அதன் விசேஷமும் இருந்தது.

அவர் ஒருபோதும் பிரார்த்தனையை நடத்தியதில்லை. அவரே பிரார்த்தனை செய்தார். பிரார்த்தித்தார். பைபிளின் காலங்கடந்த அழகுகளை அவர் சொன்ன பிறகுதான அறிய முடிந்தது எங்களால். நாங்கள் அறிந்துகொண்டதே எங்கள் பாக்கியம். எங்களை அறியவைத்தது அவருடைய பக்தியும் சிரத்தையும், ஆண்டவன் அருளும்.

நவநாகரிகர்களான பலருக்கு பைபிள் ஒரு வறண்ட வேதாகம புத்தகம். புரியாத புதிர்.

ஆனால் பீடர் இதை நமக்காகப் படிக்கும்போது, அது உயிர்பெற்றது, நடமாடியது, பரவசமூட்டியது. இவ்வளவு அற்புதங்களும் வார்த்தைகளைப் பீடர், அதற்குரிய அழுத்தத்துடனும், த்வனியுடனும் படித்ததனால் தான் உண்டாக்கினார். பீடர் ஒருபோதும் பேச்சுக் கலையைத் தனியாகக் கற்றுக்கொண்டதுமில்லை பயின்றதும் கிடையாது. அது எப்படி இவருக்கு இவ்வளவு திறமை ஏற்பட்டது அவருடைய சுவபாவத்தோடே அந்தத் திறமை பிறந்திருந்தது என்றுதான் நான் சொல்லுவேன்.

பேச்சுக்கலை ஆசிரியர்கள் இவருடைய திறமையைக் கண்டு திகைத்தார்கள். அடிக்கடி தங்கள் மாணவர்க

ளிடம் பீடர் மார்ஷலைப் பின்பற்றும்படி யோசனை கூறினார்கள். இம்மாதிரி ஆசிரியர்களில் ஒருவர் சொன்னார் "எனக்குள்ள பணத்திற்கும், நான் செலவழித்துள்ள தொகைக்கும் நான் கேட்ட பிரசங்கங்களிலேயே மகோன்னதமான தெளிவும் உறுதியும் வாய்ந்த இரண்டு பேர் வழிகளைத்தான் நான் ஒப்பற்றவராகக் கருதுகிறேன். ஒருவர் ஆர்ஸன் வெல்ஸ் மற்ருெருவர் பீடர் மார்ஷல்!"

பைபிளின் அழகு, ஒழுங்கு, சந்தம், அர்த்தம் ஆகியவற்றில் எல்லையில்லா ஈடுபாடு பீட்ருக்கு. சிறுபையனாக இருக்கும்போதே இவை தன் குருட்டுப் பாட்டிக்கு வாய் விட்டு மனக்கணக்கில் படிக்க நேர்ந்தபோது பிடிபட்டு விட்டது. ஜேம்ஸ் அரசருடைய பதிப்பில் மலிந்திருந்த கொச்சைமொழிகளால் அர்த்தமற்றுப் போயிருந்த பகுதிகள்கூட அவர் படிக்கும் வகையில், முறையில் உயிர் பெற்று, பொருட் செறிவுற்று விளங்கிற்று. கிரந்தம் படிப்பது அவருக்கு ரொம்பப்பிடிக்கும். அதுவும் ஜானின் பதினான்காவது அத்தியாயம் போன்ற ஒன்ருனல் "என் பிதாவின் மாளிகையில் பற்பல மாடங்கள் உள்ளன; அப்படி இல்லாமலிருந்திருந்தால் நான் உங்களிடம் சொல்லியிருப்பேன்" என்ற கட்டங்களை விரும்புவதோடு மட்டுமல்ல, அதன் அழகுகளும், அதன் போதமும் நம் அகத்தில் பதிந்து நிலைத்தும் விடுகின்றன

இன்னும் பலரும் இப்படியே அபிப்பிராயப்பட்டார்கள். அவருடைய பிராந்திய (பங்கு)ப் பிரசங்கங்களில் ஒன்று "ஏசுவுடன் சகவாசம் செய்யவும், சிறுபொழுது ஆனந்திக்கவும், ஆண்டவனுடைய இந்த வீட்டில் நாம் காத்திருக்கும் சமயத்தில், பரிசுத்த ஆவியான ஆண்டவன், நம்மைக் கேட்கவும், நம்மை மன்னிக்கவும், நமக்கு பலமளிக்கவும். நம்மைப் புனிதமாக்கவும், ஆசீர்வதிக்கவும் காத்திருக்கிருர். எந்தக் கவலை உங்களை அழுத்தினாலும், எந்தக் கஷ்டம் உங்களுக்குச்சுமையாக ஆனாலும், உங்கள் துக்கம் கஷ்டம். இன்பம் எல்லாமே நாம் வாழ்வதற்காக ஆண்டவனால் அளிக்கப்பட்டவை. உங்களை என்ன உணர்ச்சி உந்தி இங்கு அழைத்து வந்திருந்த போதிலும் இங்குகிடைத்திருக்கும் மௌனம் நிலவும், சில கணங்களில்

உங்களுடைய சொந்தப் பிரார்த்தனையைச் செய்து—உங்களுக்கே சொந்தமான சாந்தியை ஆண்டவனிடம் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் ஆண்டவன் இங்கே இருக்கிறார்."

இதன் பிறகு ஒன்றிரண்டு நிமிஷம் ஒரே மௌனம் நிலவும். அதற்குப் பிறகுதான் பிரார்த்தனை ஆரம்பிக்கும்.

இம்மாதிரிப் பிரார்த்தனைகளைப்பற்றி ஒருவர் சொன்னார். "நமது உடம்பு எப்போது அலுத்துப் போயிருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அப்போது ஒரு சௌகரியமான நாற்காலியில் போய் உட்காருகிறோம். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் நமது களைப்பு ஆறி விடுகிறது. நிம்மதி உண்டாகிறது. பீடர் பிரார்த்தனை செய்தபோது எனக்கு இதேமாதிரி ஒரு உணர்ச்சிதான் ஏற்பட்டது. அந்தப் பிரார்த்தனையில் என் உடலைச் சாய்த்தேன். என் ஆத்மா இளைப்பை ஆற்றிக்கொண்டது புத்துணர்ச்சி பெற்றது!' என்று. பீடரின் பிரசங்கங்களைக் கேட்ட பல்லாயிரக் கணக்கான பக்தர்களும் இதே மாதிரிதான் உணர்ந்தார்கள்,

பிரார்த்தனை கீதம்கூட பக்தியில், குதூகலம் இருக்க முடியும் என்பதையே காட்டுகிறது. பீடருக்குப் பாட்டுப் பாடுவதில் பரம திருப்தி. உணர்ச்சியுடனும் பரவசத்துடனும் பாடவும் பாடுவார். அப்போது அவர் முகத்தைப் பார்ப்பவர்கள் "குருவானவராக இருந்துகொண்டு அதை ரஸித்து அனுபவித்து குருவானவர் வாழ்க்கையை வாழ்ந்தும் வாழ்வித்தும் விடக்கூடிய ஒருவர் இருக்கிறார். அவர் இவர்தான்" என்றுதான் எண்ணுவார்கள். அவ்வளவு தெய்வ மணம் கமழும் அவர் முகத்தில், அதுமட்டுமல்ல. கிரிக்கெட் விளையாட்டையோ பேஸ் 'பந்து வேடிக்கையையோ, பட்டாஸ் வெடிப்பதையோ, மானுபொலி விளையாட்டையோ ரஸிப்பதில் தோன்றும் குதூகலத்தையும் இந்த விஷயத்தில் உண்டாக்கி விடுவார். பீடருக்கு இதில் இணை வேறு யாருமே இல்லை. அவரேதான் அவருக்கு இணை ஈடு, நிகர் எல்லாம்.

போதகுருவாக ஆன புதிதில் பீடரை அடிக்கடி பாடச் சொல்லுவார்கள், கடவுட் காதல்பற்றி ஒரு போதனைப் பிரசங்கம் செய்வார் என்பதும், பிரசங்கக் குறிப்புகளை மூடிவைத்துவிட்டு சங்கீத கோஷடி இருக்கும் மேடைக்குப் போய்ப் பாடுவார் என்பது எல்லோருக்கும் தெரியும். "ஆண்டவன் பார்வை குருவியின்மேல் உள்ளது. அவர் என்னைக் கவனிப்பது நன்ருகத் தெரிகிறது" இப்படி ஒருபாட்டு அவர் அடிக்கடி பாடுவது. சில சமயங்களில் சாதாரண மாலைப் பிரார்த்தனைகளின்போது கோஷ்டியினரில் ஒருவருடன் சேர்ந்து இரு குரலிசைப் பாடல்கள்கூடப் பாடியிருக்கிருர்.

மதகுருவைப் பற்றிப் பெரும்பாலும் வரையப்படும் கேலச் சித்திரங்களில், கையில் குடையும், கருப்பு அங்கியும், சோகம் ததும்பும் நீள முகமும்கொண்ட ஒருவர்தான் நம்முன்னல் நிறுத்தப்படுவார். ஆனாலும், மற்ற மனிதர்களைப்போலவே மதகுருவும் இருப்பார் என்று அறியும் போது மக்கள் அடையும் ஆச்சரியத்திற்கு அளவே இல்லைதான். ஒரு சிறுமி பீடர் மற்றவர்களைப்போலவே சினிமாவுக்குச் செல்கிருர், மற்றவர்களைப் போலவே அதைப் பார்த்துக் களிப்படைகிருர் என்பதைத் தெரிந்து கொண்டதும் அடைந்த ஆச்சரியம் இவ்வளவு அவ்வளவு என்பதில்லை! பெண்மணி ஒருத்தி இப்படி எழுதினுள்.

"முதல் முதலில் அட்லாண்டாவில், டாக்டர் மார்ஷல் பேச்சைக் கேட்டதும், சதையும் எலும்புமான சாதாரண மனிதர்களின் நிலைக்கு இறங்கி வரமுடியாத மகோன்னத நிலையில்தான் இவர் இருப்பார். கீழே இறங்கி மண்ணுக்கு வந்து மாந்தர்களோடு மானிடனுய் வாழ இவரால் முடியாதென்றே நம்பியிருந்தேன். அவர் விளையாடுவதையும், எவ்வளவு எளிய மனிதராய் அவர் நடந்துகொள்ளுகிருர் என்பதையும் தெரிந்துகொள்வது உண்மையிலேயே ஒரு நல்ல அனுபவம். அவரை நன்கு அறிந்த நமக்கு அவரை அறிந்திருப்ப தொன்றே பெரிய பாக்கியமாகும்."

அவர் விளையாடும்போது பார்க்காதவர் எவரும் பீடரை நன்கு அறியமுடியாது. அமெரிக்க பேஸ் பந்து,

கால் பந்து விளையாட்டுகளில் ஆர்வமுள்ளவராக ஆக பீடருக்கு அதிக நாள் பிடிக்கவில்லை. அவகாசம் மட்டும் கிடைத்து விட்டால்போதும் ஒரு பேஸ் பந்தாட்டத்தை யும் தவற விடமாட்டார். அட்லாண்டாவி லிருந்தபோது அட்லாண்டா யுவர்கள் காற்பந்து கோஷ்டியை தவருது ஆதரிப்பவர்களில் பீடர் முதலாக நின்ருர். அவர்களுடைய வண்டிக்குப் பக்கத்தில் போயிருந்து கொண்டு பெஞ்சில் சூடேறும் வரைகூட உட்கார்ந்து விடுவார். பல சமயங்களில் ஜார்ஜியா டெக் பந்தயங் களுக்கு இரட்டை அழைப்புகள் பீடருக்கு வந்து சேர்ந்து விடும். தலைவரின் பிரத்தியேகப் பெட்டியில் உட்காரும் படி டாக்டர் ப்ரிட்டனிடமிருந்து ஒன்றும், ரேடியோக் கொட்டடி அருகில் உள்ள கூறையின் மேல் உட்காரும் வசதியுடன் பேராசிரியர் ஆம்ஸ்ட்ராங் இடமிருந்து மற் ருென்றும், ஆக.

ஒவ்வொரு வருஷமும் வாஷிங்டனில் பீடருக்கு பேஸ் பந்து ஸீஸனுக்கு ஸீஸன் பாஸ் கொடுக்கப்பட்டுவிடும். 'வாஷிங்டன் ஸெனட்டர்கள் (கோஷ்டி)யின் லாபநஷ்டங் களை வேறு எந்த மதகுருவாவது இவரைவிட உற்சாகத் துடன் கவனித்திருக்கிருரா என்பது சந்தேகந்தான்.

போட்டி விளையாட்டுகளைப் பார்ப்பதில் பீடருக்குள்ள ஆசை சொல்லித் தரமில்லை. எதுவானுலும் அவருக்கு ஆசைதான். எல்லா விளையாட்டும் அவருக்கு அத்துபடி எவரையும் தோற்கடிக்கக் கூடிய, எவரோடும் விளையாடக் கூடிய திறமையும் உண்டு. விளையாட்டு எதுவாயிருந் தால் என்ன விளையாட முடிந்தால் விளையாடவேண்டி யதே. விளையாடினுல் ஜெயிப்பதில் என்ன என்பது அவர் கட்கு சந்தேகம்".

ஓய்ச்சல் ஒழிவில்லாத ஒரு மதகுருவுக்கு விளையாட அவகாசம் ஏது என்று சந்தேகப்படலாம். தூங்குவதற் குள்ள நேரத்தில் கொஞ்சத்தைத் திருடி விளையாடுவதற்கு உபயோகித்துக் கொள்ளுவார். விளையாட்டில் எல்லோ ரும் அலுத்துப் போகும் வரை பீடருக்கு அலுப்பே ஏற் படாது. 'சரிதான்! நானும் படுக்கப் போக வேண்டியது

தான் போலிருக்கிறது!" என்று சொல்ல வேண்டிய கட்டத்திற்குத்தான் பீடர் பெரும்பாலும் வந்துசேருவார்.

பொழுது போக்குகளிலும் எப்படியோ பீடர் ஆண்டவனைப் பிணைத்து விடுவார். பக்தியுள்ள, நல்ல கிருஸ்துவர்கள் பலர், சீட்டு விளையாட்டு எதையுமே நல்லது என்று கருதாதவர்களாக இருக்கிறார்கள் என்பது பீடருக்குத் தெரியும். அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு அவமரியாதை எதுவும் இல்லாமல், பீடர் அவர்கள் அபிப்பிராயத்துடன் மாறுபாடுடையவராக இருந்தார். ஒரு வகையில் விளையாட்டு நிபுணர் என்ற ஹோதாவில் அவர் 'காண்ட்ராக்ட் பிரிட்ஜ்' என்ற சீட்டு விளையாட்டு (செஸ் விளையாட்டைப் போல) ரொம்ப சுவாரஸ்யமான ஒருவிளையாட்டு என்பது அவர் அபிப்பிராயம்.

பொழுது போக்கும் விளையாட்டும் கூட பீடருக்கு மத குருத் தொழிலைத் திறமையுடன் ஆற்ற உதவியிருக்கிறதென்றால் வாசகர்கள் ஆச்சரியப்படுவார்கள். உதாரணத்திற்காக ஒன்று. வாஷிங்டனில் ஒரு வக்கீல் "பில்" என்று அவரை அழைப்போமே! அவருக்குக் குடிப் பழக்கம் அதிகரித்திருந்தது. பிரிட்ஜ் விளையாட்டின் போது அவருடன் ஏற்பட்டிருந்த பழக்கம் இதில் அவருக்கு உதவப் பெருந்துணையாக ஆயிற்று.

பில் வெகு வேகமாகக் குடிப்பழக்கத்தில் முன்னேறிக் கொண்டிருந்தார். அவருடைய உடல் நலமும், வக்கீல் தொழிலும் நாளுக்கு நாள் பாழாகிக் கொண்டுவந்தது. அவர் மனைவி டாக்டர் மார்ஷலிடம் வந்து உதவிகோரினாள்: "ஆனால் ஒரு விஷயத்தில், நீங்கள சங்கடப்பட வேண்டியதாகத்தான் இருக்கும். என் கணவருக்கு மத குருக்கள் என்றாலே பரமவிரோதம். பத்து வருஷ காலத்தில் மூன்றே மூன்று தடவைதான் கோயிலுக்குப் போயிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! இதைப் பற்றிப் பேச உங்கள் அறைக்கு வரச் சம்மதிக்கவேமாட்டார்" என்றாள் அந்தப் பெண்மணி.

ஒரு 'பிர்ட்ஜ்' ஆட்டக் (சீட்டு) கச்சேரி ஏற்பாடு செய்யப் பட்டது. மிடமான் பில்லுக்கு டாக்டர் மார்ஷல் பிர்ட்ஜ் ஆட்டத்தில் வாடிக்கையான ஒரு புள்ளிதானே என்ற எண்ணம். அதற்கு மேல் கேட்க வேண்டுமா? பில் கோயிலுக்கும்வர ஆரம்பித்தார்.

ஒரு வருஷம், பல பல தடவை சந்தித்து, பிரத்தியேகமான விருந்துபசாரங்களை 'பில்' லுக்குச் செய்து நடத்திய வேலைகளின் பயனாக கடவுளுக்கும் பீடருக்கும் வெற்றி கிட்டிற்று. சாதாரண வழிகளில் சென்றிருந்தால் இந்த மனிதனை எட்டிப் பிடிக்க முடிந்திருக்குமா என்பது இதில் குறிப்பிடத் தகுந்தது.

மேரிலாண்டிலிருந்து வாஷிங்டனுக்கு ஒரு சிப்பாய் கொட்டும் மழையில் வந்து சேர்ந்தான். அன்று ஞாயிற்றுக் கிழமை. ந்யூயார்க் அவின்யூ மாதா கோயிலில் வந்து சுற்றிக் கொண்டிருந்தான்.

"அந்த சமயம், எனக்கு ஆத்மீக அந்தகாரம் ஒன்று சூழ்ந்திருந்த சமயம்" என்று அவன் பின்னால் ஒருசமயம் தெரிவித்தான். "பீடர் மார்ஷல் மூலமாக அந்த ஞாயிறன்று என்னை ஆண்டவன் தட்டி எழுப்பினான். அவரிடத்தில் இருந்த ஒரு பரிசுத்தமும், கிருஸ்துவ வனப்பும் என்னை விசித்ரமாக ஆசீர்வதித்தது. மனிதர்களின் மனிதர் அவர்......"

"பிரார்த்தனை முடிந்ததும் நான் பீடர் மார்ஷலுக்கு நன்றி செலுத்தினேன். அடுத்த நாள் என்னைத் தன் அறைக்கு வந்து பார்க்கும்படி அழைத்தார், நான் போனேன். இந்த சந்திப்பு என்னை அவர் வீட்டுக்குக் கொண்டு சேர்த்தது. இரவெல்லாம் பேசினோம் மனம் விட்டு, சங்கோஜ மில்லாமல் பேசிப் பேசி விடிந்து விட்டது."

இந்தப் பையன் பின்னால் திருச்சபையில் சேர்வதற்கு முடிவு செய்தான். "அந்த முடிவு அன்றிரவில் மறக்க முடியாத அந்த இரவில் பீடர் மார்ஷல் உண்டாக்கிவிட்ட பயங்கரமான ஆத்மீகப் பரவசத்தால் ஏற்பட்டது"

பாலர்கள் பலருக்கும் பீடர் மார்ஷல் கதாநாயகனாக விளங்கினார், தத்தமது படுக்கைகளுக்கு மேலே பீடருடைய படங்களைத் தொங்கவிட்டிருந்த மூன்று பையன்களை அவருக்குத் தெரியும். சந்தேகத்திற்கு இடமேயில்லாமல் இன்னும் எத்தனையோ பேர் இப்படி இருந்திருப்பார்கள்! இம்மாதிரி நாயக பக்தியானது தன்னுடன் கடவுளுக்கு ஜவாப் சொல்லவேண்டிய ஒரு பொறுப்பையும் இணைத்துக்கொண்டிருக்கிறது, வெளியே தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் போதகருக்கு இம்மாதிரி பூஜிதைக்குரியவராக ஆவதில் ஒரு சபலம் இருக்கத்தான் செய்கிறது. பல சந்தர்ப்பங்களில் ஆண்களும் பெண்களும் பீடரிடத்தில் உள்ள வசீகரத்தால் கவரப்பட்டு மரியாதை செலுத்தும் போது பீடர் சொல்லுவார். "இவர்களுக்குத் தீராத கடவுள் தாகம் இருக்கிறதால்தான் இப்படிச் செய்கிறார்கள் ஆனால் தனி மனிதனாக ஏசு அவர்களை இன்னமும் ஆட்கொள்ளவில்லை. என்னிடம் அவர்கள் காட்டும் இந்த பக்தியை இனிமேல் நான் கடவுள் பக்தியாக மாற்றும் மார்க்கத்தைத் தேடியாகவேண்டும்." என்பார்.

பல வருஷங்களாக பீடரோடு உடனிருந்து, தீராத பலப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அவருக்கு உதவி செய்து, உழைத்த கோவில் நிர்வாக அங்கத்தினர்களுக்குகூட பீடரிடம் இருந்த குதூஹலக் கிருஸ்தவத் தன்மையைத் தான் அருங்குணமாகக் கருதினார்கள்.

"அவருடைய உற்சாகம், நம்பிக்கை, வாழ்க்கையை ஏற்றுக்கொள்வதில் அவர் காட்டும் ரம்மிய மனோபாவம் இவை எல்லாம் நான் பீடரிடம் கற்றுக்கொண்டேன். அவை வாழ்க்கையில் வெகு பயனைக் கொடுக்கக்கூடியவை சாதாரண சந்தர்ப்பங்களில்கூட அவருடைய மாடி அறையில் நான் அவருடன் பேசிக்கொண்டிருந்திருக்கிறேன். ஓய்வுக்கு ஒரு தனி சோபையைக் கொடுக்கும் அவர் பேச்சு, நான் கண்டவர்களுக்குள்ளே எவரிடத்திலும் காணாத ஒரு இயல்பு பீடரிடத்தில் உள்ளது, பீடருடைய மத உணர்ச்சி மகிழ்ச்சியும் மலர்ச்சியும் கலந்த ஒரு மதமாக இருந்தது." என்று ந்யூயார்க் கவுண்டி மதக் கல்வி டைரக்டரான பூஜ்யர் ஜேம்ஸ் ப்ரைடென் சொல்லுவார்.

# இரண்டாவது வருஷந்தான் கடுமையானது

ந்யூயார்க் அவின்யூவில் இரண்டாவது வருஷம் பூருவும் இனிமையும் ஒளியுமாக இல்லை. சமையலறை அலமாரியிடம் போய் பீடர் அடிக்கடி ஸோடாப் பெட்டியைத் தேடிக்கொண்டிருந்தார்.

டாக்டரின் அறிக்கை "வயிற்றில் அல்லது குடலில் ரணமேற்பட்டிருக்குமோ என்று சந்தேகப்படவேண்டியதாயிருக்கிறது. உங்களுடைய நரம்புகளின் தன்மைபற்றி அறிவதும், சுவபாவங்கள் வேலைகளில் அதிகமாக அழுத்துவதையும் தாங்கள் உணருவது பயன் தரும்" என்று கூறிற்று.

இந்தக் குடல் வலி வேறொன்றுமில்லை. அவர் மன நோயின் மற்றொரு சமிக்ஞையேதான், ந்யூயார்க் அவின்யூவிலிருந்து ஒரு கோஷ்டிக்கு எந்த மாறுதலையும் எதிர்க்க வேண்டுமென்பது கட்சி, பீடர் இந்தப் பழைய கோவில் மாறுதலடையவேண்டும் இல்லாவிட்டால் மடிந்துவிட வேண்டும் என்ற கொள்கை. அவர்களுக்கு "நாங்கள் உங்களைக் கூப்பிட்டது மதபோதனைக்காகவே தவிர கோயிலைத் தலைகீழாக மாற்றுவதற்காக அல்ல!" என்ற மனோபாவம்.

1938க்கு முன்பிருந்தே கோயில் கணக்குகளில் ஒவ்வொரு வருஷமும் பற்றுக்குறை இருந்து வந்தது. பீடர் வந்த அந்த வருஷத்திலேயே இந்த அபாயம் நீங்கிற்று, அடுத்தடுத்து வந்த வருஷங்களில் வருமானத்தில் திட்டமான அபிவிருத்தியும் செலவினங்களுக்கு விஸ்தரிப்புகளிலும் முன்னேற்றமும் காணப்பட்டது. கோயிலைச் சுற்றியிருந்த துண்டு துண்டான சொத்துக்களின் மேல் சார்ந்திருந்த லட்சத்தி முப்பதாயிரத்து ஐம்பது டாலர் கடன் வெகு வேகமாகக் குறைந்து வந்தது. ஐந்து வருடங்களில் கடன் முழுதும் கொடுத்துத் தீர்க்கப்பட்டும்விட்டது.

பொருளாதார நாணயம் காப்பாற்றப்பட்ட போதிலும் கோயில் ட்ரஸ்டிகள், பல வருஷமாய் நெருக்கடிகளையே

கண்டிருந்தனர். ஆகையால் மிக ஜாக்கிரதையாக இருந்தனர். அவர்களுக்கு பீடரின் போதனைகள் மிகப்பட்டிருந்தது. அவர்களில் பெரும்பாலோர் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தையாவது தவறவிடுவதில்லை. தனிப்பட்ட முறையில் பீடரிடம் அவர்களுக்கு அன்பும் அருளும் அதிகம். அவருக்குப் படிப்படியாய் சம்பளம் உயர்த்தப்பட்டது. ஆனாலும் இந்தப் புது போதகர் தங்களுடைய விஷயங்களில் கொஞ்சம்கூடத் தலையிடவே கூடாதென்று ஆசைப்பட்டார்கள்.

பழமையில் ஊறிப்போன வியாபாரிகளான அவர்களுக்கு கோயிலின் நிர்வாகத்தை நம்பிக்கையின் மூலமல்லாமல், காட்சியின் மூலமே நடத்தவேண்டுமென்று விரும்பினார்கள். அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கைக்கும் இந்த கோஷ்டி தடை விதித்தது ,'அதெல்லாம் சரி! பணத்திற்கு எங்கே போவது?'' என்பதுதான் இவர்களுடைய பல்லவி, அடிக்கடி இந்த இரண்டு கட்சிகளுக்குள் சச்சரவுகள் ஏற்படும்.

ஆண்டவன் மட்டும் விரும்பினால் எந்தவித விஸ்தரிப்புக்கும் தேவையான எவ்வளவு தொகையும் எளிதில் கிடைக்கும் என்று பீடர் நம்பினார். எட்டு வருஷ திருச்சபை வாழ்வில், இந்த நம்பிக்கை பொய்யாகவே இல்லை. சுவிசேஷத்தின் இந்தப் பாடலில்'' முதலில் ஆண்டவனின் ராஜ்யத்தைத் தேடிக்கொள்ளுங்கள்; அவருடைய தாம மார்க்கத்தை, நேர்மையைத் தேடிக்கொள்ளுங்கள். மற்றவை யெல்லாம் உங்களை வந்து சேரும் (மாத்யூ 6: 33) என்ற கருத்தை நம்பி அதன்படியே வாழவும் வாழ்ந்தார். ந்யூயார்க் அவின்யூ மாதா கோயிலின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாறுதலே இந்த நம்பிக்கைக்குப் போதுமான சான்று 'பகர்கிறது என்பதோடு, அந்த கோயிலின் ட்ரஸ்டிகள் அப்போது தன் தலைமையில் வைத்திருந்ததைவிட அதிகப்படியான நம்பிக்கையை தன் தலைமையில் வைக்கவேண்டுமென்று உணர்ந்தார். ட்ரஸ்டிகள் கூட்டம், நிர்வாகக் கூட்டம் பொதுசபை, ஆகியவை நடந்தவுடன் ஸோடாப் பெட்டியைத் தேடியதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது.

இந்தச் சங்கடங்களோடு அங்கே இருந்து பெண்கள் கோஷ்டி நான்குக்கும் இடையே பூசல்கள் மலர்ந்திருந்தன. இளையவர்களுக்கும் முதியோருக்குமிடையே கொஞ்சம் போராட்டமே இருந்து வந்தது. முதியவர்கள் இப்போது திரள் திரளாகக் கோயிலுக்கு வரத் தொடங்கியிருந்தார்கள்.

கவனன்ட் மாதா கோயிலின் கோயிற் பிள்ளையான டாக்டர் மக்கார்ட்னீ ஒருநாட் காலையில் பீடருக்கு டெலிபோன் செய்தார். இந்த சமயத்தில் இந்த இளம் ஸ்காட்லாந்திய வாலிபரின் சங்கடங்கள் அதிகரித்துவிட்ட சமயம் கோயிலின் சங்கீத கோஷ்டியினரின் முறையைவிட்டு வெஸ்ட்மின்ஸ்டர் சங்கீத கோஷ்டி முறையைப் புகுத்தியதின் விளைவாக வெகு பேருடைய விரோதம் ஏற்பட்டிருந்தது. புது போதகர் பெண்கள் கோஷ்டி நான்கையும் ஒன்றாக இணைத்துவிட வேண்டுமென்று வாதாடியதால் மற்றும் சிலரும் அதிருப்திப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதன் பிறகு அந்த வயோதிக மத போதகர் பீடருக்கு ஒரு அன்பொழுகும் கடிதக் குறிப்பொன்றை அனுப்பினார். அதிலுள்ள உதவிக் குறியை பீடர் எப்போதும் நினைத்து நினைத்து மருகினார்.

"எனதன்புள்ள சகோதரர் பீடர்:

இன்று காலை டெலிபோனில் கேட்ட உங்கள் குரலில் ஒரு சிறு ஏமாற்றத்தின், தளர்ச்சியின் த்வனி தென்பட்டது. ஆகையால் ஞாயிற்றுக் கிழமைக்குள் இந்த வார்த்தைகளைச் சொல்லிவிட விரும்பி இவ்வளவு அவசரமாக இதை அனுப்புகிறேன்.

சிகாகோ நகரில் ஒரு பெரிய வேலையில் நான் அமரும்போது உங்களுடைய வயதே எனக்கு. இரண்டாவது வருஷங்களெல்லாமே சோதனைகள் நிறைந்ததாகவே இருக்கும். நான் அப்பதவிக்கு வந்த இரண்டாவது வருஷத்தில் கலைப் பொருட்காட்சி ஒன்றில் போதகரான நண்பர் ஒருவரைப் பார்க்க நேர்ந்தது. சம்பாஷணை தொடங்கினோம். என் வேலையைப் பற்றி அவர் விசாரித்தார்.

"மனத் தளர்ச்சி அடைந்துவிடாதீர். எப்பொழுதும் இரண்டாவது வருஷந்தான் எதிலும் ரொம்பக் கஷ்டமான வருஷமாயிருக்கும். விடா முயற்சியுடன் திடமாக இரும். காலப் போக்கில், உமக்கே சொந்தமான ஒரு கூட்டம் சேர்ந்துவிடும்" என்ருர்.

வெஸ்டன்ஸெமினரியைச் சேர்ந்த டாக்டர் ரிடில் அவர்கள் சொல்லுவதும் எனக்கு நினைவுக்கு வருகிறது. "வாலிபரே! ராஜீனுமாச் செய்துவிட வேண்டுமென்று தோன்றினுலும், செய்யாதீர்!" என்பார்.

நாமிருவரும் சந்தித்து மனம்விட்டுக் கலந்து பேசுவோம்.

அன்புள்ள

ஆல்பர்ட் ஜோஸப் மகார்ட்னீ.

அடிக்கடி ராஜீனுமாச் செய்யவேண்டுமென்று பீடருக்குத் தோன்றும். முகஸ்துதிகளாலோ, கூட்டங்களாலோ அவர் ஏமாறவில்லை. மாதா கோயில் வட்டாரங்களுக்குள்ளேயே ஒரே குடும்பம் என்ற மனோபாவமற்றும் போட்டிப் பூசல்களும் வெறுப்பும் தண்டவமாடினுல் தன் குருவானவர் வேலை வீண்தான் என்பது அவருக்குத் தெரியும், "கோயில் அங்கத்தினருக்குள்ளேயே அன்பு கிடைக்கும் ஒருவரை ஒருவர் விரும்பக்கூட முடியாமலிருந்தால் மதபோதனை செய்வதால் என்ன பயன்?" என்று பீடர் அடிக்கடி கேட்பார்.

நன்கு நிர்வகிக்கப்படும் ஒரு ஸ்தாபனமாகக் கோவில் இருக்கவேண்டுமென்பது பீடரின் விருப்பம். ஆனுல் அதைவிட கோவில் வட்டாரத்தில் அமைதியும், கிருஸ்தவ தர்ம மனோபாவமும், சந்தோஷமும் சௌஜன்யமும் நிலவ வேண்டுமென்று அவர் விரும்பினுர். எவ்வளவோ கஷடங்களுக்கு இடையேயும் ஒரு தடித்த வார்த்தை கூடப் பேச மாட்டார். சண்டையும் சச்சரவும் நிறைந்த சூழ்நிலையில் கூட அப்படித்தான். உணர்வுடையவர் மத்தியும், சாந்தமானவர்களிடையேயும் அவர் தன்னுடைய மகோன்னத

மான மனோநிலைக்கு வெகு சுலபமாக உயர்ந்து தோன்று வார். ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனைக் கூட்டங்களின் போது கட்சி கட்டிக்கொண்டு நடப்பதுபோல் ந்யூயார்க் அவின்யூ கோயிலில் சேர்ந்த முதல் சில ஆண்டுகளில் பூசல்கள் சகஜமாக இருந்தன. இந்தப் புது போதகரிடம் அனுதாபமில்லாத சிலர் இன்னும் அங்கே இருந்ததே இதற்குக் காரணம். அவர் திட்டங்கள் சிலருக்குப் பிடிக் காததும் இதற்குக் காரணந்தான்.

அவருடன் நெருங்கிப் பழகிய நாங்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னோம். அவரிடம் இந்தப் பூசல்களெல் லாம் ஒரு சிலரால்தான் விளைகிறது. அவர்களைப் பொருட் படுத்தி மனதைக்குழப்பிக் கொள்ளாமல் ஆதரிக்கும் பெரும்பான்மையோரிடம் சிரத்தை காட்ட வேண்டும் என்று. ஆனால் பீடர் அதை அப்படி ஏற்றுக் கொள்ள மறுத்தார், அவர்களை மறக்க அவரால் முடியாமலே இருந் தது. மந்தையைவிட்டு வெளியேறி ஓடும்ஒற்றை ஆடு, மந்தையைவிட முக்கியமாகத் தோன்றியது அவருக்கு.ஏசு வின் வார்த்தைகள் அவருக்கு மிகப் பொருட் செறிவுள்ள தாகப்பட்டது.

ஆகையால், பலிபீடத்திற்குக் காணிக்கை கொண்டு வரும்போது உன் சகோதரனுக்கு உன் மீது ஏதாவது பகைமையுண்டென்பது ஞாபகத்திற்கு வந்தால் பீடத்தின் முன்னால் காணிக்கையை அப்படியே வைத்துவிட்டுப் போ. முதலில் உன் சகோதரனுடன் சமாதானம் செய்துகொள். அதன் பிறகு வந்து ஆண்டவனுக்குடன் காணிக்கையைச் செலுத்து (மாத்யூ. 5: 23, 24)

இம்மாதிரி சம்பவங்கள்தான் பீடரை இந்த விதத்தில் பிரார்த்திக்கத் தூண்டியிருக்க வேண்டும்.

"ஆண்டவனே! தவறு செய்யும்போது மாறுதலுக்கு உடன்படச் சம்மதிக்கும் மனதை எங்களுக்கு அருளும். சரி யாக இருக்கும் சமயங்களை எங்களுடன் மற்றவர்கள் சேர்ந்து வாழ விரும்பக் கூடிய மனோநிலையை உண் டாக்கு!..." ஆனால் அதிருப்தியுற்றவர்களுடன் எப்படி

ஒற்றுமையாக இருக்க முடியும் என்ற பிரத்தியட்ச பிரச்னை தீராத பிரச்னையாகவே இருந்தது.

எக்காரணத்தாலும் சமாதானப் படுத்த முடியாத சிலருடன் அவர் வெகுதூரம் செல்வார். ஒருவர் விஷயத்தில் சமிக்ஞை மேல் சமிக்ஞையாகக் காட்டி, முயற்சிமேல் முயற்சியே செய்தார். பல வருஷங்களுக்குப் பிறகு அந்த மனுஷன் இவருடைய அறையின் குறுகிய மாடிப்படிகளில் ஏறிவந்து இவர் கையைப் பிடித்துக் குலுக்கிய ஆனந்தம் இவருக்குக் கிடைத்தது. அந்த நிமிஷத்தில் அவர் அடைந்த ஆனந்தம் கோயில் பணியாற்றிய நாட்களிலெல்லாம் கிடைத்த ஆனந்தத்திற்குச் சமமாக உயர்ந்துவிட்டது.

வெறும் காகிதத்தில் அப்படிச் செய்ய வேண்டும் இப்படிச் செய்ய வேண்டும் என்று கோயில் பற்றிய திட்டம் போடுவது ஒரு விஷயம்; உண்மையிலேயே பிரத்தியட்சமாக. கோயிலை நிர்வகித்து நடைமுறையில் சாத்தியமாக்குவது வேறு விஷயம். மிக விரும்பத்தக்கவர்களாயிருப்பார்கள்; ஆனால் சாதாரண மனிதர்களாயும் நடந்து கொள்வார்கள். இப்படிப் பட்டவர்களும் கோயில் நிர்வாகத்தில் வந்து சேர்ந்துதான் விடுகிறார்கள். மகான்களாக நினைக்கும் இந்த மகாபாபிகளையும் வைத்துக்கொண்டு செலுத்த வேண்டிய கட்டங்கள் கோயில் நிர்வாகத்தில் அனந்தமாக ஏற்படத்தான் செய்யும். இதை எழுதிப் பெரிதாக்கினால் மிஞ்சுவது சொந்தப் பூசல்களும் போராட்டமும் தான்.

வாசல்படியை விட்டு அவர் வரும்போது அவர் முகத்தை ஒரு தடவை பார்த்தால் போதும். அவதூறுக் கடிதங்கள் முதலியன தபாலில் வந்திருக்கிறதா இல்லையா என்பதும் அன்று ஏதாவது சங்கடம் புதிதாகத் தோன்றியிருக்கிறதா இல்லையா என்பதும் முகக் குறியிலேயே தெரிந்துவிடும்.

ஒரு நாள் விஷமத்தனமான புத்திமதிகளடங்கிய நாலு பக்கம் நெருக்கி எழுதபபட்ட கடிதம் ஒன்று

அவருக்கு வந்தது. "என்னால் சகிக்க முடியாத ஏதாவது ஒன்று இருக்குமானால் அது என் நன்மைக்காக என்மேல் அன்பால் கூறப்படும் விஷயங்கள் தான் என்று அவர் கொதித்தார்.' அசுபமான எதையும் அவர் வெறுத்தார். இம்மாதிரிக் குற்றச் சாட்டுகள்வரும் போது அப்படியே குன்றிப் போய்விடுவது அவர் சுபாவம்.

இந்தக் கடிதங்களெல்லாம் ஒருக்கால், திருச்சபைக் குள் ஒருவரை ஒருவர் மிஞ்சப்பார்க்கும் போராட்டங்களின் விளைவுகளாக இருக்கும், அல்லது கிரந்தப் பிழைகாணும் கோஷ்டியினருடைய கடிதங்களாக இருக்கும் அல்லது வேறு யாராவது ஒரு அந்நியர் ஐக்கிய அமெரிக்காவைப் பற்றிக்கூறியவற்றைக்கேட்டு வருந்தும் ஒருவருடைய கடிதமாக இருக்கும்.

என்ன இருந்தாலும் கடைசியில் திட்டமான பிரார்த்தனை, அமைதியான உழைப்பு, அன்பு காலம் இவையெல்லாம் வெற்றியை இவருடைய தாக்கி விட்டது. ந்யூயார்க் அவின்யூவிலும் பீடரிடத்திலும் நேர்ந்த பெரும்பாலான நெருக்கடிகள் மறைந்து விட்டன இப்போதெல்லாம் சோடாப்பெட்டியை பீடர் தேடிப்போவதில்லை. முக்கோணத்திடலிலிருந்த இந்தப் பழைய கோவிலை வாஷிங்டன் நகர டாக்ஸி டிரைவர்கள் கூட பீடர் மார்ஷலின் கோயில்" என்று குறிப்பிடும் ஒரு காலமும் வந்தது.

ஆனால் இந்த இரண்டாவது வருஷத்தை குடல் கோளாறு நிறைந்த நாட்களை ஒருபோதும் மறக்கவில்லை. அமெரிக்க ஸெனட் சபையில் பல வருஷங்களுக்குப் பிறகு பிரார்த்தனை செய்யும்போது சம்பிரதாயங்களையெல்லாம் விட்டு.

"இன்று நம்மால் எவ்வளவு உன்னதமாகவும் திறமையாகவும் உழைக்க முடியுமோ அவ்வளவு உன்னதமாகவும் திறமையாகவும் உழைக்க உதவிபுரி இன்றைய கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு திருப்தி

யுடனிருக்க அருள் செய். ஏனென்றால் நாளைய சங்கடங்களை இன்றை இரவல் வாங்கிவைத்துக் கொள்ளக்கூடாதல்லவா. எங்களுடைய பக்திக் குறைவின் அடையாளக் குறியாக குடல் ரணம் எங்களுக்கு வராமலிருப்பதற்காக எங்களைமனக்கவலைப் படாதவர்களாக இருக்கச் செய்! ஆண்டவனே!

ஆமென்

அவர் தன் சொந்த அனுபவத்திலிருந்து இப்படிப் பிரார்த்தித்தார்!

# மனையரசியுடன் மனிதன்

சுகோஷ்ணமான மே மாதத்தில் ஒரு நாள் மத்தியான வேளை, காலையில் கடுமையான ஞாயிற்றுக்கிழமை அலுவல்களை முடித்துவிட்டு பீடர் மார்ஷலின் குடும்பம் இளைப்பாறிக்கொண்டிருந்தது. பிரசங்கத்திற்குப் பிறகு எப்போதும் நனைந்து கசங்கியிருக்கும் சட்டையுடன் காணப்படும் என் கணவர் ஒரு போலோ சட்டையைப் போட்டுக் கொண்டிருந்தார். வெகு ஜாக்கிரதையாக பாலிஷ் செய்யப்பட்ட அவருடைய கருப்புச் செருப்புகள் அவருடைய ஈஸிசேருக்குப் பக்கத்தில் விடப்பட்டிருந்தன. மதபோதகத் தன்மைவாய்ந்த பாதங்கள் ஆடம்பரமாக படுக்கையறை ஸ்லிப்பர்களுக்குள் அகப்பட்டிருந்தன. எங்கள் சின்னப்பையனின் விளையாட்டுச் சாமான்களும் ஞாயிற்றுக்கிழமைப் பத்திரிகைகளும் அறை முழுதும் சிதறிக் கிடந்தன.

அப்போதுதான் சொல்லி வாய் மூடினேன். "இந்த அறையைப் பாருங்கள்! புயலடித்து ஓய்ந்ததுபோல் இருக்கிறது. யாராவது வந்தால் சகிக்க முடியாது" என்று சொல்லிவிட்டு ஓரக்கண்ணால் வாயில் பக்கம் பார்த்தேன். எனக்குத் 'திக்' என்றது. இரண்டு பேர் நடைபாதையில் வந்துகொண்டிருந்தார்கள். யுத்த இலாகா காரியதரிசியும் அவரது மனைவி ஸ்ரீமதி ஸ்டிம்ஸனுமே அவர்கள்?

சுத்தம் செய்து ஒழுங்காக்க நேரம் எங்கே! வாசலில் வந்து கொஞ்சநேரம் மதிப்பிற்குரிய இந்த விருந்தாளி நின்று மணியை அடிக்கப்போனார்கள். அதற்குள் நான் வந்து வரவேற்றுவிட்டேன். ஸ்டிம்ஸன் தம்பதிகள் உள்ளே வந்து பக்கத்து வீட்டுக்காரர்கள் எவ்வளவு சகஜமாகப் பழகுவார்களோ அவ்வளவு சகஜமாகவும் நிச்சிந்தையாகவும் உட்கார்ந்துகொண்டு பேச ஆரம்பித்தார்கள். பேச்சுக்கிடையே எங்கள் குழந்தையுடனும் விளையாடினார்கள். ரொம்பவும் குதூஹலமாக இருந்தது அவர்கள் பேச்சு.

எங்கள் புத்திரன் பீடர்ஜான் யுத்த இலாகா காரிய தரிசியின் பழைய சிநேகிதன். ஒருநாள் அவர் தன் ஓவர் ஸீர் மூலமாக பீடர் ஜானுக்கு செய்தி அனுப்பி அவனுக்கு எப்போதெல்லாம் இஷ்டமோ அப்போதெல்லாம் மணற் பெட்டியில் போய்விளையாடலாம் என்றிருந்தார். அவர்கள் வீட்டின் பின்னால் உள்ள விஸ்தாரமான தோட்டப் பகுதி யில் ஸ்டிம்ஸனின் பேரப்பிள்ளைகள் விளையாடுவதற்காகப் பரப்பி விடப்பட்ட ஒரு பெரிய மணற்பெட்டி இருந்தது. குதிரை லாயங்கள், வளைந்து வளைந்து செல்லும் பாதை கள், பெரிய பெரிய மயில்கள் இவையெல்லாம் குழந்தை கள் விளையாட்டுக்கு ரொம்ப சாதகமாக இருந்தது, அவர்கள் வீட்டுத் தோட்டத்தில்.

தன் வீட்டுத் தோட்டத்தை ஸ்ரீ ஸ்டிம்ஸன் தினம் சுற்றிப் பார்ப்பது வழக்கம். பல நாட்களில், எங்கள் புத்ர சிகாமணி மூன்றுகால் சைகிளை ஓட்டிக்கொண்டு படும் அவஸ்தையையாவது மண்வீடு கட்டி அதில் அவன் நடத்தும் குடித்தனத்தையாது பார்க்காமல் போகவிட மாட்டான் அவரை. அவரும் தலைபோகிற காரியங்களைப் பற்றிப் பேசுகிறவரைப்போல் இநதச் சின்னப் பையனோடு சில நிமிஷம் பேசாமல் போக விரும்பமாட்டார்.

வாஷிங்டனில் பிறந்து வளரும் குழந்தைகளில் பலருக்கு பிரசித்திபெற்ற வாஷிங்டன் பிரமுகர்களை அறிந்துகொண்டு சகஜமாக அவர்களுடன் உறவாடும் சந்தர்ப்பம் கிடைப்பதென்பது இயற்கைதான்.

1940 ஜனவரி மாதத்தில் ஒரு பனிநிறைந்த காலைப் பொழுதில் 8:53 மணிக்கு பீடர் ஜான் மார்ஷல் என்கிற 'வீ' பீடர் (அவன் அப்பா அழைக்கும் செல்லப் பெயர் அது) வந்து சேர்ந்தான் நம்முடைய இந்த உலகத்திற்கு. ஒரு பிரார்த்தனைப் பிரசங்கத்தை இந்தப் பயலின் வருகை தடைப் படுத்திவிட்டது. அதற்குப் பிறகு இவன் பிர சங்கக் கூட்டங்களில் நுழைந்து கொண்டுவிடப் பார்த்தான்.

சனிக்கிழமை ராத்திரிகளில் மறுநாள் தான் செய்யப் போகும், ஞாயிற்றுக்கிழமைப் பிரார்த்தனைப் பிரசங்கத்தை

என்னிடம் உறக்கப் படித்துக் காட்டுவார். இப்படிப் படித்துக் காட்டுவதால் ஞாயிற்றுக்கிழமைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் மறுபடியும் நான் அவர் பிரார்த்தனைப் பிரசங்கத்தைக் கேட்கும்போது அலுப்படைவேன் என்ற எண்ணத்தால் சங்கடப்படுவார். என்ன காரணமோ எனக்கு அப்படி ஒன்றும் அலுப்பை உண்டாக்குவதில்லை அவர் பிரசங்கம். இன்றிரவு (பீடர்ஜான் பிறப்பதற்கு முன்னிரவில்) பிரசங்கத்தை முழுக்கப் படித்து முடிக்க வில்லை.

விசித்திரமான சில காரியங்கள் படிப்பிற்கிடையில் எனக்கு சம்பவித்தன. டாக்டர் சொன்னதை நினைத்துக் கொண்டே கடிகாரத்தைப் பார்த்து வலிக்கும் வலிக்கும் இடையே எவ்வளவு நிமிஷங்களாகின்றன என்று கவனித்தேன். பிரசங்கத்தையும் இடையிடையே அரை மனதுடன் கேட்டுக்கொண்டுதா னிருந்தேன்.

திடீரென்று நிலைமை அவசரம் என்று தோன்ற ஆரம்பித்துவிட்டது, "சனிக்கிழமை ராத்திரி இந்த மாதிரி சங்கடத்தை உங்களுக்கு உண்டாக்க வேண்டியிருப்பதற்காக வருந்துகிறேன். என்னைத் தயவுசெய்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்" என்று பீடரைக் கேட்டுக் கொண்டேன். பிரசங்கம் முழுதும் படிக்கப்படாமலே நின்றுவிட்டது.

மறுநாள் காலை மணி ஒன்பது. ஆஸ்பத்திரியில் நின்ற பீடரிடம் டாக்டர் சொன்னார். "பீடர் மார்ஷலுக்கு என் வாழ்த்துக்கள்! உங்களுக்கு ஒரு நல்ல பையன் பிறந்திருக்கிறான். அருமையான பையன். வெகு நன்றாய் இருக்கிறான்" என்று.

அம்மா பீடருடைய முகத்தைக் கவனித்துக்கொண்டிருந்தாள். ஆச்சரியமும், சந்தேகமும், ஒளிவு மறைவில்லாத சந்தோஷமும் அவர் முகத்தில் தாண்டவமாடிற்று. "பையனா? மகன் பிறந்துவிட்டானா நமக்கு? ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது!"

கூடியிருந்த கூட்டம் முழுதும் இந்த விஷயத்தைக் கேட்டு மகிழ்ந்தது. பீடர் ஜானைத் தங்களது குழந்தை யாகவே அவர்கள் கருதினர். உடனே குழந்தைக்குப் பரிசுகள் குவிய ஆரம்பித்தன. பரிசுகளின் எண்ணிக்கை சொல்லி முடியாது. வெகு சில குழந்தைகளுக்குத்தான் இத்தனை பரிசுகள் பிறந்தவுடன் குவியும்!

எங்கள் குழந்தை எங்கள் வாழ்க்கையில் பல மாறு தல்களை உண்டாக்கிவிட்டான். "குழந்தைகள் எல்லா வற்றையுமே மாற்றிவிடுவார்களென்பது எனக்குத் தெரியும். அவை பழம் பசலியாக இருப்பதற்கே முறண்டு செய்யும்" என்றார் பீடர்.

தன் பத்தாம்சாலிக் குணம் படைத்த மகன்மேல் பீட ருக்கு ரொம்பப் பிரியம். சாமர்த்தியமாக அவனைத் தூக்கிக் கொள்ளுவார். ஆனால் மருந்து கலக்கிக் கொடுத் துக் குளிப்பாட்டிவிடும் தந்தையர் வர்க்கத்தில் பீடர் சேரவில்லை. அதெல்லாம் என் வேலை என்பது பீடரின் எண்ணம்.

குழந்தையைத் தவிர, பாக்கிக் குழந்தையுடன் சம்பந் தப்படும் எல்லா சாமான்களையும் கொதிக்கவைத்து சுத்தமாக வைத்திருக்க விரும்பும் நவநாகரீகத் தாய்மார் களைப் போலத்தான் நானும். அவ்வளவு பயம், நோய் நொடிகளில். பீடர் ஜான் பிறந்த பிறகு வீட்டு வேலை அதிகமாய்விட்டது. ஓய்வு அருமையிலும் அருமையாகி விட்டது. அது மட்டுமல்ல, உல்லாசமாகப் போகும் பிரயாணங்களும் அறவே அற்றுப் போய்விட்டன. இந்த ஒற்றைக் குழந்தைக்குப் பிரயாண சமயங்களில் ஒரு வண்டி சாமான்களைக் கொண்டுபோனால்தான் சௌகரிய மாக இருக்கும் என்று நினைக்க ஆரம்பித்தேன். ஒரு பிரயாணத்திற்குத் தயார் செய்துகொள்வதென்றால் கிட்டத்தட்ட மூன்று மணி நேரமாவது மூட்டை முடிச்சு களைக் கட்ட ஆகிவிடும்.

பற்பல 'சூட் கேஸ்கள்' மடக்கக்கூடிய குழந்தைத் தொட்டில், குளிப்பாட்டும் பாத்திரம், காரில் போட

குழந்தை ஸீட், பாட்டில்களை அலம்ப வெந்நீர் போடும் உபகரணம். இப்படியாக எத்தனையோ சாமான்கள் சேர்ந்துவிடும்.

"காதரைன்! இதை யெல்லாம் எதில் வைப்பது என்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்? ஒரு குழந்தையால் இத்தனை சாமான்களையும் ஒரு நாளும் உபயோகிக்க முடியாது. நம்முடைய வாகனம் 'ட்ரக்' (லாரி) அல்ல; வெறும் கார்தான்" என்பார். ஆனாலும் சட்டையை முழங்கைக்கு மேல் தூக்கி விட்டுக்கொண்டு சாமான்களைத் திணிக்க ஆரம்பித்துவிடுவார், நெற்றியில் முத்து முத்தாய் வேர்வை அரும்பும். காரில் சாமான்கள் எல்லாம் புகுந்து விடும்.

படிக்கவேண்டும் என்ற ஆசையுடன் அவர் தன்னோடு ஒரு மூட்டை புஸ்தகங்களையும், வேலை செய்ய வேண்டுமென்று ஒரு கத்தைக் காகிதங்களையும் எங்கே போனாலும் கொண்டுவருவார். அவ்வளவும் ஒரு சிறு மூட்டையாக அழகாகக் கட்டிவைத்திருப்பார்.

ஒரு கையில் விட்டுப்போன பாக்கி சாமான்களும் மற்றொரு கையில் பீடர் ஜான் மார்ஷலையும் தூக்கிக்கொண்டு நான் வெளியே புறப்பட்டு சாமான்கள் புடைசூழ ஸீட்டில் போய் உட்கார்ந்துகொள்வேன். பீடர் காரை 'ஸ்டார்ட்' செய்வார். கார் ஓடும். இது ட்ரக்கோ லாரியோ இல்லையென்றாலும் அதைப்போலவே இதன் ஓட்டம் இருக்கும்!

'பயிற்சி' பெறவேண்டுமென்ற கட்டத்திற்கு எங்கள் குழந்தை வந்தது. பெற்றோர்களும் இந்தப் பருவத்தில் பொறுமை என்ற பயிற்சியை அடையத்தான் அடைகிறார்கள்.

எப்போது பார்த்தாலும் விஷக்கிருமிகளின் நினைப்புத்தான் எனக்கு; ஏராளமான குழந்தை வளர்ப்புப் புத்தகங்களைப் படித்தேன். எந்த இடத்திற்குப்போனாலும் என்னுடைய குழந்தையின் பாதுகாப்பிற்காக முதலில் அந்த இடத்தில் கிருமி நாசினியைப் பிரயோகித்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பேன். மூட்டையில்தான் அதை எப்போதும் வைத்திருப்பேனே!

பொறுமையில் பீடர்சாதாரி ஆசாமிதான். அவர்தெற்காகவும் காத்துக் காத்துப் பார்த்து நிற்கும் வழக்கம் மற்றவர். நானும் குழந்தையும்வருவதற்கு இன்னும்நேரமாகும் என்ற எண்ணத்துடனேயே பீடர் காத்திருப்பார். பெண்களின் அறை என்கிற மர்மம் நிறைந்த பாதாள லோகத்திலிருந்து வெற்றி ஒளிவிடும் கண்களுடன் நான் வர்ப்போவதாகவே அவர் நம்புவார். அந்த ஒளியை என் கண்ணில் காண முடியாவிட்டால் இன்னொரு முப்பது மைல் தூரம் போனவுடன் இன்னும் ஒரு ரஸ்தா ஹோட்டலில் நான் சிறிது நேரம் செலவழிப்பேன் என்று பீடர் புரிந்துகொள்வார். இம்மாதிரி குழந்தைகளுடன் பிரயாணம் செய்தறியாத அப்பாவிகளுக்கு பொறுமைப் பயிற்சி என்பது எங்கே வாய்த்திருக்கப் போகிறது?

பீடரிடத்தில் எங்கள் குழந்தை இன்னும் ஒரு மாறுதலையும் உண்டாக்கி விட்டது. கல்யாணமானதிலிருந்து என்னை (மனைவியை)ப்பற்றியோ தன் வீட்டைப்பற்றியோ எதையும் சொல்லத் தயங்கிக் கொண்டிருந்தார். கூட்டங்களில் இந்தத் தயக்கத்தை பீடர் ஜான் வந்து போக்க வேண்டியதாயிற்று. கடவுளைப்பற்றி குழந்தைகள்தானே நமக்கு அதிகமாகச் சொல்லித் தருகின்றன. குழந்தையும் தெய்வந்தானே! குழந்தை வளர்த்தே மனிதன் தன்னை அறிந்து கொள்ளட்டும் என்றுதானே ஆணையும் பெண்ணையும் ஆண்டவன் பெற்றோராக ஆக்குகிறான்.

ஒருநாள் பீடர் கொஞ்சம் அஜாக்ரதையாக இருந்து விட்டார். பீடர் ஜான் பிரார்த்தனைக் கூட்டத்திற்குள் நுழைந்து விட்டான். பிரார்த்தனை செய்யும்இவருக்கு கூட்டத்தினர் காட்டிய மகிழ்ச்சியும், பேரார்வமும் பீடருக்கு புரியத் தொடங்கிற்று. இது புரியத் தொடங்கிய பின்னர் ந்யூயார்க் அவின்யூ கூட்டத்தினருக்கு குழந்தைத் தொடர்புள்ள வாழ்க்கையின் பல அந்தரங்க இன்பங்கள் பீடரின் பிரசங்களில் கிடைக்க ஆரம்பித்தன.

மாலை வேளையில் நடக்கும் பிரசங்கங்களில்தான் மனம் விட்டுச் சம்பிரதாயம் ஏதுமில்லாத பேச்சு பீடர் பேசுவார்

அப்போது அவர் பேசும் பேச்சுக்களில் குழந்தைகளின் குறும்புத்தனங்கள், அழகு எல்லாம் த்வனிக்கும்.

எங்கள் பையன் அப்படி ஒன்றும் சோது அல்ல. ஒரு ஞாயிற்றுக்கிழமை காலே, கோயிலுக்கு வந்து உற்சாகத்தை அதிகப்படியாகக் காட்டும் குணமுள்ள பெண்மணி ஒருத்தி எங்கள் பையனைக் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்தாள். குழந்தை பீடர் ஜானுல் இந்தக் கொஞ்சல் குலாவலைத் தாங்க முடியவில்லை. அந்த அம்மணியின் கண்களை உற்றுப் பார்த்துக்கொண்டே அவளிடம் "ஒங்களோடு பேசிக்களைப்படைந்துவிட்டேன்" என்றான்.

பீடர்ஜான் வளர்ந்து பெரியவனானதும், தன் பங்குக்கு அண்டை அயலார் வீட்டுக் கண்ணாடி ஜன்னல்களில் எவ்வளவு கல்லை எறிய வேண்டுமோ அவ்வளவையும் எறிந்து உடைத்தும் விட்டான். எதிர் பாராத இடங்களில் எல்லாம் சொக்கப்பானை கொளுத்துவதில் பீடர்ஜானுக்கு ஒரு அலாதிப் பிரியம் இருந்தது. அவனும் அவன் தோழன் ஒருவனுமாக இப்படி ஒரு சொக்கப்பானை கொளுத்தி, பெட்ரோல் டாங்கி ஒன்றை எரித்து விட இருந்தார்கள். எங்கள் புண்ணியம் அப்படி ஒன்றும் விபரீதம் நடக்காமல் தப்பிற்று.

பீடர்ஜான் வளர வளர அவனுடைய அபிருசிகள் எப்படி இருந்தன என்பதற்கான அறிகுறிகள், அவனுடைய படுக்கை அறையின் சுவர்களில் படங்களாகத் தோற்றமளித்தன ஏசுநாதரின் படம் ஒன்று, அவனுடைய தந்தையின் படம் காபிடல் லிமிடெட் என்ற ஸ்தாபனத்தின் படம் ஒன்று, ஒண்டியாகச் செல்லும் காட்டு காவல் காரன் படம் ஒன்று ஆக இவையெல்லாம் அவன் அறையில் தொங்கவிடப்பட்டிருந்தன.

ஏதாவது விஷமத்தை பீடர்ஜான் செய்து அதற்குக் கடுமையான தண்டனை அளிக்க வேண்டியதாயிருந்தால் அவன் அப்பா பெரும்பாலும் கொடுத்துத் தீர்த்துவிடுவார். இம்மாதிரி கடுமையாக இருந்த போதிலும் எங்கள் வீட்டில் சாப்பாட்டு சமயங்களில் நடக்கும் பேச்சுக் கச்சேரி

யைக் கேட்க நேர்ந்தால், அப்பாவிடம் எங்கள் மகனுக்கு எந்த வித பயமும் கிடையாதென்பதை அறிந்துகொண்டு விடுவார்கள்.

நாங்கள் சேர்ந்திருந்த காலத்தின் மேல் ஒரே ஒரு நிழல்தான் விழுந்தது. பீடருக்கும் சரி எனக்கும் சரி இன்னும் அதிக நேரத்தை எங்கள் மகனுடன் களிக்க முடியாமலிருக்கிறதே என்ற வேதனைதான் அது.

ஸிம்மரான் பிரசங்கங்கள் என்பவை கெட்டிஸ்பர்க் வேதாந்த குருகுலத்தில் பயிற்சி பெறும் குருவானவர்களுக்குச் செய்யும் பிரசங்கங்களாகும். அதில் ஒன்றில் பீடர் பேசும்போது சொன்னார்.

"கோயில் பங்கு வேலைகளிலுள்ள உங்கள் ஆர்வத்தால், உங்கள் உதவி யாருக்கெல்லாம் தேவையோ அவர்களுக்கெல்லாம் பயன்பட வேண்டுமென்ற ஆசையில் உங்கள் சொந்தக் குடும்பத்தைப் புறக்கணித்துவிடாதீர்கள். உங்கள் உதவி அவர்களுக்கும் தேவைதான்". என்று.

"நீங்கள் கல்யாணம் செய்துகொள்ளும்போது ஒன்றை மறந்துவிடாதீர்கள். நீங்கள் கணவர் என்பதையும், தந்தை என்பதையும், அதோடு ஒரு திருச்சபைத் தொண்டர் என்பதையும்!"

எங்கள் பையன் ஒருநாள் இரவு படுக்கையில் செய்த பிரார்த்தனையில் கிடைத்த சவுக்கடியை நான் மறக்க முடியாது. ',கடவுளே! உனக்கு ரொம்ப வந்தனம். இன்று என் அப்பாவை வீட்டிலேயே இருக்க விட்டதற்காக ரொம்ப வந்தனம்" என்பது அவன் பிரார்த்தனை.

# கடவுள் வரம் கொடுக்கிறுர்

மாதாகோயிலின் பிரார்த்தனை அறையில் வாஷிங்டன் நகர ப்ரிஸ்பிடீரியக் கோயில்களின் மார்ச் மாத மகா சபைக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. நான் ஜன்னலொன்றின் ஓரமாக உட்கார்ந்துகொண்டு நியூயார்க் அவின்யூவின் இடைவிடாத போக்குவரத்தைக் கவனித்த வண்ணம் என்னுடைய பிரசங்கத்தைச் செய்வதற்கான நேரம் வரட்டும் என்று காத்திருந்தேன்.

வஸந்தருது; சூரிய உஷ்ணம் சுகமாக இருந்தது. என் முதுகில் வெய்யில்பட்டு உடம்பைச் சூடேற்றிவிட்டது. தூக்கம் கண்ணை அழுத்திற்று. ஆனல் அது தூக்கக் குறி அல்ல என்று கொஞ்ச நேரத்தில் தெரிந்து கொண்டேன். அடிப்பாகம் கழன்று விழுவதுபோல் தோன்றிற்று. நான் ஒரு தடவைகூட மூர்ச்சை போட்டு விழுந்ததில்லையென்றுலும், மண்டையிலிருந்து ரத்தமெல்லாம் திடீரென்று வடிந்து போவது எதன் அடையாளம் என்பது எனக்குத் தெரியும். ஆழமாக மூச்சு வாங்கி நான் மனதிற்குள் உருக்கமாக பிரார்த்தித்தேன்.

"ஆண்டவனே! இப்போது நான் பேசவேண்டியதென்பது தாங்கள் அறிந்ததே; தங்களது உதவியில்லாமல் அதை நிறைவேற்ற என்னுல் முடியவே முடியாது! ஆகையால் ஆண்டவனே என்னை காப்பாற்றும்!"

சிறிது நேரத்திற்குள் எனக்கேற்பட்ட சோர்வு அகன்றது. எப்படியே அன்று பேசவேண்டிய பேச்சைப் பேசிவிட்டேன். அன்று காலையிலிருந்து நான் ஒரு நோயாளி என்பதை உணர்ந்து கொண்டுவிட்டேன்.

மூன்றுநாள் இடைவிடாத பரிட்சைகள், லேபரட்டரிப் பரிசோதனைகள் முதலியவற்றை பால்ட்டிமூர் நகரில் போய் செய்ததில் டாக்டர்கள் தங்கள் தீர்ப்பைக் கூறத்

தயாரானார்கள். இரண்டு விலாப் பைகளிலும், (காற்றுப் பைகளிலும்) இரண்டு சிறிய மிருதுவான புள்ளிகள் இருப்பதற்கான அடையாளங்களிருக்கின்றன. ஒருக்கால் நீங்கள் மத்தியான வேளைகளில் காய்ச்சல் உணர்வுக்கு ஆளாகி யிருக்கலாம். ஒரு வேலையும் செய்யாமல் பூர்ண ஓய்வு—ஸானடோரியம் என்கிற ஆரோக்கியாஸ்ரம மொன்றில் எடுத்துக்கொள்வது சிலாக்கியம்—எடுத்துக்கொள்ள வேண்டும். வீட்டு வேலையும் சரி வேறு எந்த வேலையும் சரி செய்யவேண்டுமென்ற சபலம் உங்களுக்கு ஏற்படவே கூடாது"

எவ்வளவு கூடமாக—ஒளித்து இந்தத் தீர்ப்பு கூறப்பட்டிருந்த போதிலும் நோயின் தன்மை எப்படிப்பட்டது என்பதை நான் புரிந்துகொண்டுவிட்டதனால் 'பேரிடி' விழுந்தது போலானேன். க்ஷயம்! வியாதிகளிலெல்லாம் அருவெறுக்கத்தக்க வியாதியாக நான் இதைத்தான் கருதி வந்திருக்கிறேன். இந்த வெறுக்கத்தக்க வார்த்தையை உச்சரிப்பதைக் கூட என்னால் சகிக்க முடியவில்லை. "நான் சுகமடைய எவ்வளவு நாளாகும்?" கொஞ்ச நேரம் தயங்கிவிட்டு, "ஓ! மூன்று நான்கு மாதங்களில் சுகமாகலாம்" என்று சொன்னவர் என் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கவனித்துவிட்டவராய்! "ஸ்ரீமதி மார்ஷல்! அதைப்பற்றி அவ்வளவு மோசமாக நினைக்காதீர்கள், க்ஷயரோகத்திலிருந்து உண்மையிலேயே மனிதர்கள் பிழைத்துவிடுகிறார்கள் இதை விட ரொம்ப ரொம்ப மோசமான வியாதிகள் பல இருக்கின்றன" என்றார்.

கண்ணில் நிறைந்த கண்ணீர் அப்போதே வழிந்தோடிவிடவில்லை. வீட்டுக்கு ஓடிப்போய் பீடரிடம் இதைச் சொல்லும்போதே மடை திறந்ததுபோல் கண்ணீர் வழிந்தோடத் தொடங்கியது. திக்பிரமையடைந்தவரைப் போல் அவர் வாயடைத்து நின்றார். அவர் மார்பில் என்னைப் புதைத்துக்கொண்டு "என்னால் இதை நம்பவே முடியவில்லையே" என்று அழுதது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

ஆனல் அதையும் கஷ்டங்களுக்கிடையே ஆண்டவன் உதவியால் கற்றுக்கொண்டுவிட்டேன். கஷ்டங்களைச் சமாளிக்கும் மனேபலமும், அதிலிருந்து மீண்டு வெற்றியுடன் வெளியே வருவதற்கான வழிகளும் ஆண்டவன் நம் பக்கலில் இருக்கும்போது நிச்சயமாய்த் தோன்றிவிடும். 1943 மார்ச் முடிவில் நான் படுக்கையில் நோயாளியாகச் சேர்ந்தேன். வீட்டிலேயேதான் படுக்கை. என்னுடைய நோய் விசித்திர நோய். வெளிப்படையாக எந்த விதமான க்ஷய குறியும் என் தேகத்தில் இல்லை. இருமலோ, கோழையோ எதுவும் கிடையாது. முதல் நான்கு மாதங்களுக்கு என்னருகில் ஒரு 'நர்ஸ்' இருந்தாள். அதற்குப் பிறகு ஒரு நீக்ரோப் பெண்ணும் வீட்டு வேலைக்காரியும் அமர்த்திக்கொண்டோம். என படுக்கையிலிருந்தபடியே வீட்டு வேலைகளை மேற்பார்வை பார்க்க முயன்றேன். ஆனலும் பதினெட்டு மாதங்களுக்குப் பிறகும்—அதாவது 1944 ஸெப்டம்பரிலும்—நான் இன்னும் படுக்கையிலேயே இரவும் பகலும் கிடந்தேன். எக்ஸ்ரே படங்களில் எவ்வித மாறுதலும் தென்படவேயில்லை. சுவாசாசய நிபுணர்கள் உள்ளிட்ட ஐந்து பிரபல டாக்டர்களால் கூட எனக்கு உதவி செய்ய முடியவில்லை, அவர்களுடைய ஒரே ஒரு மந்திரம் "பொறுத்திரு, ஓய்வெடு" என்பதுதான்.

மகத்தான ஆத்ம சோதனைகளை நான் ஆரம்பிக்கத் தொடங்கியது இப்போதுதான். புதிய ஏற்பாட்டைப் படிக்கத் தொடங்கினேன். அதைப் படிக்கும்போதே என்னுடைய தேவையின் மிகுதி எத்தகையது என்பதை மனதில் கொண்டு ஏசுவின் அற்புத பரிஹாரங்களைப் பற்றி ஆச்சரியமடைந்தேன். இந்த நிமிஷம் வரை ஏசு மனித உடல்களில் அற்புதங்களை நிகழ்த்துகிருரா இல்லையா என்பதைப்பற்றி நினைத்ததேயில்லை. மருந்துத் துறையிலும் ரண சிகிச்சையிலும் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றமே போதுமானது.

இதை யெல்லாம் நினைத்துக்கொண்டே நான் பயிளைப் படிக்கப் படிக்க ஏசு தன்னிடம் உதவி வேண்

டும் என்று கோரிய யாரையும் கைவிட்டுவிடவில்லை—உதவி மறுத்ததும் இல்லை என்பதை உணர்ந்தேன். "முடியாது! உன்னைக் குணப்படுத்தமாட்டேன். இந்த வியாதி உன் ஆத்மாவுக்கு நல்லது—ஏற்றது!" என்று ஆண்டவன் எவ்விடத்திலும் சொன்னதில்லை. அவர் ஆச்சரியப்படும் விதத்தில் மனித உடல்களில் கவனம் செலுத்தியுள்ளார். அதோடு இதோ ஏசு இந்த இருபதாவது நூற்றாண்டிலும் உயிரோடிருக்கிறார் என்று உறுதி கூறுவதோடு அவன் நேற்றும் இன்றும், என்றும் ஒருவிதமாக இருப்பார் என்றும் உறுதியாகக் கூறுகிறது. "அப்படியானால் நானேன் என்னையும் சொஸ்தம் செய்யும்படி ஏசுவைக் கேட்கக் கூடாது?" ஆனாலும் இம்மாதிரி ஒரு வரத்தை ஏசுவிடம் கேட்பது தகுதியுள்ள செயலாகாது என்று எண்ணினேன். ஜன்னல் கதவு சூரிய வெளிச்சத்தை எப்படித் தடுத்துவிடுகிறதோ அதைப் போலவே என்னுள் உள்ள அசுத்தங்கள், வெறுப்பு, குரோதம், தீமையைப் பொறுத்துக்கொள்ளா திருத்தல், இவை யெல்லாம் இறைவனை என்னிடம் புகாமல் தடுத்துவிடுகிறதென்பதை அறிந்தேன். என் வேதனை கட்டுக்கடங்காததாக ஆகிவிட்டது. அந்த நிலையில் வாழ்க்கையின் சகலத்தையும் சீர்தூக்கிப் பார்த்தேன். கடைசியாக ஆண்டவனின் மன்னிப்பையும் ஆசியையும் வேண்டினேன்.

பீடர் இதை யெல்லாம் மௌனமாய் சகித்துக் கொண்டிருந்தார். நான் எதைக் கற்றுக்கொண்டாக வேண்டுமென்பது அவருக்குத் தெரியும். கடவுளின் ஆசி எதற்குமே நாம்—மனிதர்கள் அருகதையுள்ளவர்களாக நம்மை ஆக்கிக்கொண்டு விட முடியாது என்பதையும் எவ்வளவுதான் அருகதைகளை நாம் சம்பாதித்துக் கொண்டுவிட்டபோதிலும் ஜகத் ரக்ஷகனாகிய ஆண்டவனுடைய பார்வையில் அது துளியிலும் சிறு துளியே தவிர வேறில்லை என்பதையும் அறிந்துகொண்டேன். கடவுளிடமிருந்து நாம் பெறுவதெல்லாம் பழைய முறையில்தான். அதானது அருட்பிரசாதமாகத்தானே தவிர பெற்றுக்கொள்ளும் தகுதியை நாம் தேடிக்கொண்டு

விட்டோம் என்ற உரிமையால் ஒருபோதும் இல்லை" என்று பீடர் அடிக்கடி கூறுவார்.

ஆனாலும் பாவ மன்னிப்பில் ஒரு அரிய சிகிச்சை முறையுள்ளது என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும். நான் ஆத்மிகமான ஒரு பாதையில் தன்னந்தனியாகத் தான் செல்லவேண்டுமென்பதும், எனக்குத் தோன்றிய முறையில்தான் அந்தப் பாதையில் நான் நடந்து செல்ல வேண்டுமென்பதையும் பீடர் நன்கு அறிந்திருந்தார். பாவ மன்னிப்பு முடிந்தவுடன் கடவுளை என்னை சொஸ்த மாக்கும்படி வேண்டிக்கொண்டேன். ஸர்வ நம்பிக்கை யுடன் பரம பக்தியுடன் அடுத்த எக்ஸ்ரே தீர்ப்பை எதிர் நோக்கியிருந்தேன். ஆனால் அவையோபழையபடியேதான் இருந்தன. நிழல்கள் இன்னும் தென்பட்டன. இரத்தக் குழாய்களுடனே இன்னும் ஏதோ குறிகள் தென்பட்டுக் கொண்டே யிருந்தன.

நான் திகைத்தேன்; புண்பட்டேன்; நொந்துகொண் டேன். என் பக்தித் தர்மாமீடரில் உஷ்ணம் குறைந்து வெகு கீழே ஓடிவிட்டது பாதரஸம். கடவுள் என்னைக் கைவிட்டுவிட்டார் என்று தோன்றியது.

பீடர் ஒரு யோசனை சொன்னார். நானும் என் தாயா ரும் கிழக்குக் கடற்கரை ஓரமான வர்ஜீனியா பிரதேசத் தில் சில வாரங்கள் சுற்றுவது இங்கே படுக்கையில் கிடந்து நோவதைவிட நிச்சயமாய் மேலானதாக இருக் கும். நான் ஒப்புக்கொண்டு புறப்பட்டு விட்டேன்.

எனக்கு விடை கொடுக்கும்போது ஒரு துண்டு பிரசுரத்தை பீடர் என்னிடம் கொடுத்தார். "நான் இதை சர்ச் ஆபீஸில் என்னுடைய டிராயர்களை ஒழிக்கும்போது கண்டெடுத்தேன். ஆத்மீதமாககுணப்படுத்து தலைப் பற்றியதைப்போல் தோன்றுகிறது. நீ விரும்புவாயே என்று நினைத்தேன் என்றார்.

அந்தப் பிரசுரம் மகத்தானதாக இருந்தது, கடவுள் என்னைக் கடைசியில் கைவிட்டு விடவில்லை. அவர் எப் போதும் இருப்பதைப்போல் கொஞ்சம் சாவகாசமாக

இருந்திருக்கிறார் அவ்வளவுதான். என்னுடைய பிரார்த்தனைகள் அவர் செவியில் விழுந்திருக்கின்றன. அதற்கு ஆண்டவன் அருள் சீக்கிரமே கிடைக்கும்.

செப்டம்பர் 14-ந்தேதி காலை அந்த பிரசுரத்தில் சொஸ்தப்படுத்துதலைப் பற்றி குறிப்பிட்டிருந்த ஒரு கதையைத் தவிர வேறு எந்த நினைவும் எனக்கு இல்லை. அந்தக் கதை மதகுருவாக இருந்த ஒருவரைப் பற்றியது. எட்டு வருஷம் அவர் படுத்த படுக்கையாக இருந்தார். இந்த எட்டு வருஷகாலமாகவே அவள், (பெண் மதகுருக்களும் உண்டு) 'ஏன் இப்படி' என்று விடாமல் நச்சரித்து ஆண்டவனைக் கேட்டுக்கொண்டிருந்தாள். தான் ஆண்டவனின் சேவையில் ஈடுபட்டிருக்கையில் எனக்கு ஏன் இந்த கதி நேர்ந்தது என்பது அவளுக்குப் புரியவில்லை. அவள் நெஞ்சில் புரட்சி முரசின் ஒலி முழக்கம் கேட்க ஆரம்பித்தது. ஆண்டவனை வேண்டும்போதெல்லாம் மீண்டும் திருச்சபைச் சேவைக்கு தன்னை மீண்டும் அருகதை உடையவளாக ஆக்குவதற்கு வழி செய்யவேண்டுமென்று கோரினாள். கடைசியில் நம்பிக்கை யிழந்து ஒன்றிலும் பலனில்லை என்று முடிவு செய்து "ஆண்டவனே எல்லாம் சரி நான் சரண் அடைகிறேன். வாழ்நாளெல்லாம் நோயாளியாகவே இருந்து தீரவேண்டுமென்பது தங்கள் சித்தமாயின் அதற்கும் பணிகின்றேன். உடல் நலத்தைவிட ஆண்டவனே எனக்கு அவசியத் தேவை," இந்த மனோபாவத்துடன் வியாதிக் காலம் முழுவதும் காணாத ஒரு சாந்தியை அவள் சங்கற்பித்துக் கொண்டாள். இரண்டே வாரங்களில் பூரண சௌக்கியமடைந்து படுக்கையை விட்டு புறப்பட்டுவிட்டாள்.

இந்தக் கதையின் முதல் பகுதி முழுதும் என்னுடைய அனுபவம் போலவே தென்பட்டது. இந்த குரு மகளின் அனுபவத்தின்பேரில் ஒரு உள்ளொலி பாய்ந்து திடீரென என் பிரார்த்தனையில் இது நாள் வரை நான் செய்துகொண்டிருந்த தவறு ஒன்று எனக்குத் தெரிந்தது.

நான் இதுநாள் வரை கடவுளை வேண்டிக்கொள்ள வில்லை. உரிமைப் படைத்தவளைப்போல் கேட்டுக்கொண் டிருந்திருக்கிறேன். க்ஷயத்தை எதிர்த்து போராடுவதைத் தவிர வேறொன்றும் நான் செய்ததே இல்லை. நான் உண்மையை உள்ளபடி உணரவில்லை. நிலைமைக்குத் தக்கபடி உள்ள ஒரே வழி சரணுகதிதான்.

தன்னந் தனியளாய் நான் என்ன செய்கிறேன் என்ற உண்மையை உணர்ந்த உணர்ச்சிப் பிரவாகத்தில் கண் ணீர் விட்டுக்கொண்டு பிரார்த்தித்தேன். "ஆண்டவனே எப்படிச் செய்ய வேண்டுமென்று எது எதெல்லாம் எனக் குத் தெரிந்திருந்ததோ அதையெல்லாம் செய்துவிட் டேன். அவை போதவில்லை எனக்கு வேண்டியதைக் கொடுக்கும்படி உங்களைத் தூண்டும் முயற்சி என்ற போராட்டத்தில் தோற்றுவிட்டேன். நான் என் வாழ் நாள் முழுவதும் நோயாளியாக இருந்து தீரவேண்டுமென் பது தங்கள் திருவுளம் ஆனுல் அப்படியே ஆகட்டும். என்னை ஏற்றுக்கொண்டு என்னையும் என் வாழ்வையும் என்ன வேண்டுமானுலும் செய்யுங்கள்."

என்னுடைய உயிரையும் மனதையும் இப்படிக் கொடுத்துவிட்ட பிறகும். அருளின் அறிகுறிகளோ. வெற்றியின் சின்னங்களோ, நம்பிக்கையோ எதுவும் பிறக்கவில்லை. படுக்கையருகில் இந்த கடிகாரத்தின் ஒலிக்கரங்கள் காலை மணி மூன்று என்பதைத் தெரிவித் துக் கொண்டிருந்தது' அந்த நாட்டிலுள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கக் கூடிய அவ்வளவு அந்தகாரத்தில் என் அறையிருந்தது. தெருவில் விளக்குகள் இல்லை. நேற்று முன்தினம் நடத்திய ஆத்மீக சாகசத்தை நினைத்துக் கொண்டே மனது வேகமாக ஏங்கிக்கொண்டிருந்தது. எல்லாவற்றையும் துறந்து சரணுகதி அடைந்த நான் மீண்டும் புத்துயிர் பெற்றவளாய் புது நம்பிக்கையுடன், இயங்க ஆரம்பித்தது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இது எப்போது வந்தது எனக்கே தெரியாது. புதிய ஏற்பாட்டிலுள்ள ஒவ்வொரு கதையாய் என் மனக்கண் முன் வந்து நின்றன. பிறவியிலேயே குருடனுன ஒரு வனைப்பற்றிய கதை; பெதீஸ்டா. பூல் அருகில் இருந்த

ஒருவன் முப்பது வருஷம் முடமாயிருந்த கதை:—வெட்டுண்ட கையுடன் இருந்த கதை இப்படியாக ஒவ்வொன்றிலும் அவரவர்களை யேசு ஏதாவதொன்றைச் செய்யும்படிக் கூறினார். அதன்படி செய்ய அவர்கள் சொஸ்தம் அடைந்தார்கள். நிஜமான பக்திக்கு பணிவுதான் அடையாளம்.

"ஜனங்கள் பேசிக்கொள்வதுபோல் ஆண்டவனுடன் நானும் பேசமுடிந்தது. என்னை சொஸ்தப்படுத்துங்கள் என்று கேட்டால் எதைச் செய்யும்படி என்னிடம் கட்டளையிடுவார் என்று எண்ண ஆரம்பித்தேன்.

உடனே நான் புது நம்பிக்கையுடன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தேன். "ஆண்டவனே என்னை என்ன செய்யக் கட்டளையிடுகிறீர்கள்" என்ற கேள்வியைக் கேட்டவுடனேயே யேசுபிரான் நம்பமுடியாத நம்பிக்கைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு எப்படி நிகழ்ந்தது என்று சொல்ல முடியாத வழியில் என் படுக்கையின் வலப்புறத்தில் யேசு தோன்றினார் உருவத்துடன். என்றால் அந்த கன்னங் கருமையைத் தவிர வேறு எதையும் காணமுடியவில்லை. ஆனாலும் உலகத்தின் சக்தி முழுவதும் ஒருங்கே திரண்டு அந்த அறையில் குவிந்திருப்பதுபோல் நான் உணர்ந்தேன். மின்சார அதிர்ச்சியால் தாக்குண்டவளைப் போல் என் உடம்பின் ஒவ்வொரு நரம்பும் அந்த சக்தியால் துடிதுடித்தது. மெதுவாயும், அன்புடனும், கனிவுடனும் என்னுடைய அதிதீவிர பக்தியைக் கண்டு வியப்புற்றவராய் ஆண்டவன் சிரிப்பதுபோல் இருந்தது எனக்கு.

"போய் உன்னுடைய அம்மாவிடம் சொல்லு. இது உனக்கு சுலபமாக முடியுமல்லவா" என்றார்.

நான் தயங்கினேன். அம்மா என்ன நினைப்பாள். வேளையோ நடுநிசி. எனக்குப் பைத்தியம் திடீரென்று பிடித்துவிட்டது என்று பயந்து போவாள்.

யேசு வேறொன்றும் கூறவில்லை. என்ன செய்ய வேண்டுமென்பதை அவர் கூறிவிட்டார். அவர் கூறியதை ஒன்று செய்யவேண்டும் அல்லது விடவேண்டும்.

இதைத் தவிர வேறுவழி இல்லை. இப்பொழுது நான் பணியாவிட்டால் எப்பொழுதுமே எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும். மின் வெட்டுவதுபோல் ஆண்டவன் தன்னுடைய மக்களுக்கு எவ்வளவு சுதந்திர மான சந்தர்ப்பங்களை கொடுத்து அருளுகிறார், என்பது புலனாயிற்று. ஆண்டவனுக்குப் பணியாமல் இருக்க முடியாது.

"வருவது வரட்டும் செத்துப்போக நேர்ந்தாலும் இதைச் செய்துதான் தீருவேன் என்று சொல்லிக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்தேன். என் வார்த்தைகளே என்னைப் பரிகசிப்பதுபோல் இருந்தன. என்னை நடக்க விட்டுவிட்டு அங்கே நின்றுகொண்டிருந்த ஆண்டவனின் அருள் விழிகளில் ஒருசிறு கேலி தென்பட்டது போல் இருந்தது. அடுத்த கோடியில் இருந்த படுக்கை அறையை நோக்கி கூடம் வழியாக தடவிக்கொண்டே சென்றேன். மெதுவான குரலில் என் பெற்றோர்களிடம் பேசினேன். அவர்கள் அப்படியே திகைத்துப் போய்விட்டார்கள். அம்மா படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு என்ன என்ன நடந்துவிட்டது" என்றார்.

ஒன்றுமில்லை பயப்படாதே என்று சொல்லிவிட்டு "இனிமேல் நான் சொஸ்தமடைந்து விடுவேன். இதை இப்பொழுது சொல்வது முக்கியம் என்று எனக்குத் தோன்றிற்று"

"என்ன நடந்தது?'' என்று தந்தையும் வினவினார்.

''உங்களை எழுப்பியதற்காக வருத்தப்படுகிறேன். எல்லாவற்றையும் காலையில் சொல்லுகிறேன். இரவுக்குள் சொல்லி முடிக்க முடியாத அவ்வளவு நீளமான கதை அது. எல்லாம் நன்மைக்கே. "நான் என் படுக்கையறைக்குத் திரும்பியபோது முன்பிருந்த அந்த சாந்நித்யம் இல்லை. முன்பு எப்பொழுதும் அனுபவித்திராதது போன்ற ஒரு துடிப்பும் விழிப்பும் என்னுள் நிறைந்தது. கிழக்கே ஒளியின் ரேகைகள் படரும்வரை இமையோடு இமை மூடாமல் இருந்து அயர்ந்தேன்.

இரவு நேரத்தில் நான் அடைந்த அனுபவம் எவ்வளவு தெளிவாக என் மனத்தில் படிந்திருந்ததோ அவ்வளவு தெளிவும் மறுநாள் விடிந்த பிறகும் இருந்தது. ஆண்டவன் அப்பொழுதே என் நோயைத் தீர்த்து விட்டாரா அல்லது எதிர்காலத்தில் சொஸ்தமாகும் என்றாரா? என்ற கேள்விக்கு விடை தெரியவில்லை. எனக்கே ஒன்றும் புலனாகவில்லை. அடுத்த எக்ஸ்ரே முடிவுகளை எதிர்பார்ப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கு இல்லை.

இதற்கிடையில் இந்த நம்ப முடியாத சம்பவத்தைப் பற்றி எவ்வளவு சுருக்கமாகவும் அமைதியாகவும் கூற முடியுமோ. அவ்வளவு சுருக்கத்துடனும் அமைதியுடனும் பீடருக்கு எழுதினேன். பீடரின் பதிலும் ரத்ன சுருக்கமாகவே இருந்தது "என்ன பதில் எழுதுவது என்று எனக்கே தெரியவில்லை" என்று எழுதியிருந்தார். என் சுவாசப் பைகள் கொஞ்சம் கொஞ்சமாக சொஸ்தமடைந்து வந்தன. அது அப்படித்தான் இருந்திருக்கும் என்னுடைய நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகத்தானே வளர்ந்து வந்தது. அடுத்துவந்த எக்ஸ்-ரே படங்கள் முதல் தடவையாக நிச்சயமான அபிவிருத்தியைக் காட்டின. அதற்குப் பிறகு படிப்படியாகச் சொஸ்தமாகிக் கொண்டு வந்து கடைசியில் டாக்டர்கள் நான் பரிபூர்ண சொஸ்தம் அடைந்து விட்டதாகவும் சொல்லி விட்டார்கள்.

இதற்கிடையில் இந்தக் காலத்திலும் ஆரோக்கியப் பிரச்னைகளையும் ஆண்டவன் தீர்க்கிறார் என்ற உண்மையைத் தன்னுடைய சொந்தக் குடும்பத்திலேயே அனுபவித்துவிட்ட பீடரால், இதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாமலிருக்க முடியவில்லை. அவருடைய யோசனைகளிலும் போதனைகளிலும் ஒரு புது அழுத்தம் ஏற்பட்டிருப்பது புலனாயிற்று. "சத்தமில்லாத சாவிகள்" என்ற தலைப்புள்ள தொகுதி இதன் பயனே. "கடைசி ரகஸ்யம்" என்ற தலைப்புடன் அவர் நடத்திய பிரார்த்தனையும் இந்தப் புது அழுத்தத்தைப் பிரதிபலிப்பதுதான்.

## வேவர்லீ

பீடர் தன் வாழ்க்கையிலேயே செய்த பல முடிவுகளை விட நிரந்தரமான இன்பத்தையும் எல்லையில்லாத திருப்தியையும் கொடுத்த ஒரு முடிவு 'வேவர்லீ' என்ற பெயருடையதும் 'கேப்காட்' என்னுமிடத்திலுள்ளதுமான ஒரு கோடை வாசஸ்தலத்தை வாங்கவேண்டுமென்று செய்த முடிவுதான். நாங்கள் ஒரு வாடகை வீட்டில் வசித்து வந்ததால் எங்களுக்கே சொந்தமான ஒரு வீட்டை வாங்கியதில் அபாரமான திருப்தி, ஏற்பட்டது. வருஷததில் ஒரு தடவை வாஷிங்டன் வாழ்க்கையின் நெருக்கருகளையும் நிர்ப்பந்தங்களையும் விட்டு விலகி சில வாரங்கள் நமது இஷ்டப்பிரகாரம் வாழ்வதற்கு வழி பிறந்தது பற்றியது அந்த திருப்தி. கல்யாணமான முதல் வருஷத்தில் மலர்களும் காய் கனிகளும் மலிந்த தோட்டத்திற்காகவும், பழ மரங்களுக்காகவும் புல் தரைக்காகவும் வீணாகக் கனவு கண்டிருந்த பீடருக்கு தன்னுடைய கனவுகளில் சிலவாவது முதன் முதலாகக் கைகூடி வருவதில் பரம திருப்தி. தன்னுடைய மகனுடன் அதிகநேரம் வசிப்பதற்கும் ரோஜாத் தோட்டம் பயிரிடவும் தன்னுடையத் தச்சுப்பட்டறையில் தானே தட்டுமுட்டு சாமான்கள் செய்யவும் வாஷிங்டனிலிருந்துகொண்டு ஏங்கிக்கொண்டிருந்தவருக்குக் கடைசியில் கோடைகால அவகாசத்தில் அவற்றிற் சிலவற்றை அடைய முடிந்தது.

1943 கோடையில் இதைச் சுற்றியுள்ள குடிசைகளை ஐந்து வருஷத்துக்கு குத்தகைக்கு விட்டுவிட்டு இந்த வீட்டை வாங்கினோம். இதில் போன முதல் வருஷத்திலேயே இதுதான் கோடைகால விடுமுறையைக் கழிப்பகேற்ற இடம் என்பதை அறிந்துகொண்டோம். இதற்குப் பிறகு பீடர் நாடெங்கும் புதுப்புது இடங்களைத் தேடி அலைய நினைக்கவில்லை. இவ்வளவு சுறுசுறுப்பும் பலமும் நிச்சயமில்லாத மனதும் உடையவராய் இருந்தபோதிலும்

பீடர் தன் வாழ்க்கையில் சில குறிப்பிட்ட தடங்களை உண்டாக்கிக்கொண்டு அதில் மகிழ்ந்தார் என்பதுதான் விசித்திரத்திலும் விசித்திரமாக இருந்தது. இந்தக் குறிப்பிட்ட தடம் மற்ற எல்லா தடங்களையும்விட அவருக்கு ரொம்பப் பிடித்த தடம்.

ஒவ்வொரு கிராமமும் அவ்வவற்றிற்கே உரிய வனப்பையும் சரித்திரத்தையும் பெற்றிருக்கிறது. பலமான கடல் காற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தரையை தழுவிக்கொண்டிருக்கும் குடிசையைப் பல்வேறு விதமான வர்ணம் தீட்டப்பட்ட ஜன்னல்களுடன் 'கேப் காட்' பிரதேசத்தில் ஏராளம். ஜூன் கடைசியில் இந்தப் பிரதேசத்தில் நாங்கள் வந்து சேருவோம். அந்த சமயத்தில் வேலிகளெல்லாம் அபரிமிதமான ரோஜாப் பூக்களால் சிவந்து குலுங்கும்.

இதையெல்லாம் விட பீடருக்கு இந்த இடத்தில் ரொம்பப் பிடித்த விஷயம் எந்த இடத்திலிருந்தாலும் கடலையோ அல்லது அதன் சப்தத்தையே காணுமலோ கேட்காமலோ இருக்கமுடியாது. இளம்பருவத்தில் ஆசைப்பட்டபடி கடலுக்குள் மாலுமியாகப் போக முடியாவிட்டாலும் சமுத்திரத்தின் அமைப்பு அவர் இரத்தத்தில் இன்னும் ஒலித்துக் கொண்டுதான் இருந்தது. சமுத்திரத்தின் எல்லா இயக்கங்களையும் பார்ப்பதைவிட வேறு எதையும் அவர் அதிகமாக விரும்பியதில்லை. அங்கே இரவில் கவியும் மூடுபனி அவரை ஸ்காட்லாந்தில் இருப்பதைப் போல் நினைக்கச் செய்யும். காலையில் ஓங்கி உயரும் மலைகளும் வெளுத்துச் சிதறும் மூடுபனியும் அவருக்கு மகிழ்ச்சியூட்டும். அந்தச் சின்னஞ்சிறு தீபகற்பத்தில் இருபது மைல் குறுக்களவே உள்ள இடத்தில் கடலும் அதன் காட்சிகளும் கைக்கெட்டிய தூரத்தில் எப்போதும் காணக்கிடைக்கும்.

வேவர்லீயைவிட வேறு எந்த வீடும் இவ்வளவு அருமையாகத் திட்டமிட்டு கட்டப்படவில்லை. ஒவ்வொரு வருஷமும் ஏதாவதொரு அபிவிருத்தியை நினைத்து

இரண்டு மாதங்களில் நிறைவேற்றியும் விடுவோம். நான் என் படுக்கையிலிருந்தபடியே என்னென்ன விதத்தில் மேஜை நாற்காலி முதலிய சாமான்கள் வைத்து அழகு படுத்தலாம் என்ற வேலையில் ஈடுபடவேண்டியவளானேன் இந்த வேலைகளெல்லாம் பெரும்பாலும் கடிதங்கள் மூலம். டெலிபோன் வாயிலாகவும் நடந்துவிடும். வாஷிங்டனி லுள்ள பழைய சாமான் வியாபாரியான ஒரு நண்பரிட மிருந்து நடுக் கூடத்திற்குப் பொருத்தமான ஒரு கட்டிலே யும் ஒரு சின்ன அலமாரியையும், வால்நட் மரத்தில் செய் யப்பட்ட ஒரு கைகழுவும் முக்காலியையும் கறுப்பு வர்ணம் தீட்டப்பட்ட நான்கு சிறு நாற்காலிகளையும் இன்னும் பல பழைய விளக்குகளையும் வாங்கினேன். "இவ்வளவு அதி கபபடியான ஆசையை நான் என்றுமே கண்டதில்லை. உன்னிடத்தில்" என்று என்னைப் பீடர் கடிந்துகொள் வார். 'சவப்பெட்டியிலிருந்தால் கூட பழைய சாமான் என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் எழுந்து வந்து பார்த்துவிட்டுப் போவாய்" என்றுகூட அவர் சொன்னதுண்டு. வேவர்லீயில் மாட்டுவதற்காக ஒவ் வொரு தடவையும் ஒரு படத்துடன் வருவார். அவை பெரும்பாலும் கடற் காட்சிகளாகவே இருக்கும். ஒவ் வொரு அறையிலும் பரப்புவதற்கு ஏற்ற வர்ணங்களில் விரிப்புகள் தயாரித்து நானும் அம்மாவுமாக நூற்றுக்கு மேற்பட்ட கஜங்கள் திரைச்சீலைகளுக்காக ஆர்கண்டித் துணிகளிலிருந்து தயாரித்தோம்.

இவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து வைத்தவுடன் வீடு எல்லாவிதத்திலும் நல்ல வீடாகக் காட்சியளித்தது. வீட்டிலுள்ள ஒவ்வொரு சாமானும் வெகு கவனத்துடன் வாங்கப்பட்டிருந்தது. வாங்கப்பட்ட ஒவ்வொன்றுக்கும் ஒரு சரித்திரம்கூட உண்டு. என் கணவருக்கு வீட்டின் முன் வாசல் தன்னுடைய சொந்த பொறுப்பு என்ற எண் ணம். ஸ்காட்லாந்தில் சின்னப் பையனாக இருந்தபொழுது இவர் அழகிய ரோஜாச் செடிகளை நட்டுப் பயிரிட்டிருக் கிறார்.

அதிலிருந்து இன்னும் ஒரு ரோஜாத் தோட்டம் போட ஏங்கிக்கொண்டேயிருந்தார். படிப்படியாக ஒன்

றன்பின் ஒன்ருக ஒவ்வொரு வருஷமும் பீடரின் கனவுகள் எல்லாம் நனவாயின.

புதிய ரோஜாப் புதர்களில் முதல் மொட்டுகள் அரும்பும் நாள் கடைசியாக வந்து சேர்ந்தது. கையில் நன்ருக அரும்பிய மொட்டொன்றை வைத்துக்கொண்டு வெற்றிச் சிரிப்புடன் நான் படுத்திருந்த கூடத்துக்கு வந்து சேர்ந்தார். இந்த ரோஜா அவருடைய வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றின் அறிகுறியாகும். தனக்கு அதில் உள்ள விசேஷ ஆசையைக் காட்டும் சங்கோஜத்தால் அவருடைய நடைஉடை பாவனையெல்லாம், கொஞ்சம் பழங்கால வாசனை வீசுவதாயும் சம்பிரதாய பூர்வமானமானதாகவும் இருந்தன. தன்னுடைய ஹிருதயத்தையே என் காலடியில் சமர்ப்பிப்பதுபோல் அவர் அந்த ரோஜா அரும்பை என்னிடம் அளித்தார். உண்மையும் அதுவே.

என் பெற்ரோர்களுக்கும் வருஷத்தில் ஒருமாதம் "வேவர்லீ'யில் வந்து இருப்பது என்ற வழக்கம் ஏற்பட்டது. நான் அவர்களை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்'கிறேனே அதே அளவு ஆவலுடன் அவரும் எதிர்பார்ப்பார். எங்களைத் தவிரவேறு எந்தக் குடும்பமும் இவ்வளவு அதிகப் படியான சந்தோஷத்தையும் சௌஜன்யத்தையும் அனுபவித்திருக்க முடியாது. வெகுநாட்களுக்கு முன்பே என் பெற்ருேர்கள் பீடரையும் தங்கள் சொந்த மகனுகவே பாவிக்கத் தொடங்கிவிட்டனர். தனக்கு வாழ்க்கையில் குறைவாக இருந்த ஒன்றை நிறைவாக்க வந்தவர்களாக எண்ணி அவர்களிடம் நன்றி பாராட்டினுர்.

என்னுடைய தந்தையும் ஒரு மத போதகராகவே இருந்தபோதிலும் தன்வரைக்கும் வெகு நன்ருக தச்சு வேலையிலும் வல்லவராய் இருந்தார். ஆனல் பீடருக் கோ ட்யூப்மில்லில் அடைந்த உலோக வேலை அனுபவம் மட்டும்தான் உண்டு. வேறு திறமை அவ்வளவாகக் கிடையாது.

முதன்முதலில் நான் தயாரித்த திட்டப் பிரகாரம் வேண்டிய மரசாமான்களைத் தயாரிக்க இருவரும் சேர்ந்து

முனைந்தபோது காட்டுக்கும் மேட்டுக்கும் இழுத்து மாறு பட்ட திசைகளில் பிய்த்துக் கொண்டு ஓடும் இரண்டு குதிரைகளைப்போல் தோன்றினார்கள். எப்போதும் என் தந்தையின் வேகத்தைக் குறைப்பதில்தான் பீடருக்குக் குறி. 'ஏன் அப்படிச் செய்கிறீர்கள்? அல்லது முதலி லிருந்து ஆரம்பித்து இதை மறுபடியும் செய்யவேண்டும் என்று ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பார்.

வருஷாவருஷம் திட்டங்கள் பெருகப் பெருக இந்த இரண்டு ஆண் பிள்ளைகளும் பற்பல விதமான மரசாமான் களைச் செய்து செய்து கை தேர்ந்த இரட்டையர்களாக ஆய்விட்டார்கள். ஆரம்பத்தில் எப்படிச் செய்வது என் பதை அறிந்திருந்த அப்பாவிடமிருந்து பீடர் வெகு விரை வாகக் கற்றுக்கொண்டு நுணுக்கங்களில் அப்பாவைவிட அதிகப்படியான கவனத்தை பீடர் காட்டினார். ஒவ்வொரு இசைவும் கச்சிதமாக இருக்க வேண்டும். ஆணியோ பீட ருக்கு பிடிக்கவே பிடிக்காது. வழக்கம்போல் உறுதியாக வும் கனமாகவும்தான் இருக்க வேண்டும்.

இந்த இருவரும் சேர்ந்து செய்த வேலைகளிலெல்லாம் சிறந்த வேலை ஏணிதான். ஜலதாரைகளைப் பழுது பார்க்க வும், கூறையைச் சரி செய்யவும் ஏணி ஒன்றிருந்தால் தேவலை என்று அவர்கள் நினைத்தார்கள். பீடர் "விலைக்கு வாங்கும் ஏணிகளெல்லாம் ரொம்ப லேசாக இருக்கிறது' என்றார். ஆகையால் அவர் இந்த ஏணியை இரண்டுக்கு நாலு சட்டத்தில்தான் செய்ய வேண்டுமென்று வற்புறுத் தினார். அது ரொம்ப நல்ல வேலை. ஒரே ஒரு கஷ்டந் தான் இதில் இருந்தது. அது வைக்கப்பட்டிருந்த கொண்டியிலிருந்து அதைத் தூக்குவதற்கு இரண்டு ஆட்களால் முடியாதபடி அவ்வளவு கனமாக இருந்தது. என்பதைத் தவிர வேறு கஷ்டம் அதால் ஏற்பட வில்லை. வீட்டுக்குள் அதைக் கொண்டுபோவதும் கொஞ் சம் சிரமந்தான். இரண்டுபேருமாய்த் தூக்க முடியாமல் வீண் முயற்சியிலீடுபட் டிருப்பதைப் பார்த்துவிட்டுப் பக் கத்து வீட்டிலிருந்து யாராவது உதவிக்கு வந்துசேரு வார்கள். இந்த உலகத்திலே இந்த மாதிரி ஏணி இது ஒன்றே ஒன்றாக இருந்தாலும் இருக்கலாம்!

பீடரும் அப்பாவும் சேர்ந்து வேலைமட்டும் செய்வார்கள் என்பதில்லை. இரண்டு பேரும் விளையாடவும் செய்வார்கள். ரொம்பக் கர்நாடகமான 'பர்ச்சீஸி' என்ற விளையாட்டுதான் அவர்களுடைய பிரத்தியேக விளையாட்டு. இந்த விளையாட்டில், பீடரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதில் அவருடைய மாமனார் வெகு கெட்டிக்காரர். அதோடு மத போதகராக இருந்த போதிலும் பகடைக் காய் உருட்டுவதில் வெகு தந்திரசாலி.

இது பீடருக்கு சங்கடமாக இருக்கும். தோற்றுப் போவதே பீடருக்குச் சங்கடந்தான். அடிபட்டால் சகஜமாக அடியை ஏற்றுக்கொள்ள மாட்டார் அவர். "நீங்கள் ச்னியனுடனேயே ஒப்பந்தம் செய்துகொண்டு சூழ்ச்சியை செய்கிறீர்கள்" என்று கொதிப்பார். அதற்குப் பிறகு என் தந்தையிடத்தில் மனோதத்துவத்தைப் பிரயோகிப்பார். "இதோ பாருங்கள், எல்லோரையும் வீட்டுக்கனுப்பி விட்டா ஜெயிப்பது. அப்படி ஜெயிப்பதற்குப் பேர் ஜெயமே அல்ல. அதிலென்ன தமாஷ் இருக்க முடியும்" என்பார்.

இம்மாதிரி பீடர் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக வாதாடுகிறாரோ அவ்வளவுக் கவ்வளவு அதிகப் பிடிவாதமாக ஆய்விடுவார் அப்பா. அதிகத் தடவை அப்பாவே ஜெயிப்பதுதான் சகஜம். பீடரைத் திணற அடிக்கும் விளையாட்டு 'பர்ச்சீஸி' ஒன்றேதான்.

ஒருநாள் சாப்பாட்டு சமயம். பீடர் ரொம்பத் தமாஷான மனோநிலையிலிருந்தார். பேச்சும் விஸ்தாரமாக வரத் தொடங்கிற்று. குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் பற்றிக் கிண்டல் செய்தார். இதை யெல்லாம் கேட்டுக் கொண்டே இருந்த என் அப்பாவுக்கு அன்று அவ்வளவு உற்சாகமான மனோநிலை இலை இல்லை, இந்தக் கிண்டலை யெல்லாம் கேட்டுக்கொண்டு ஒரே மௌனமாய் இருந்தார். பீடர் கடைசியாக என் தந்தை பக்கம் திரும்பி "மாமா! என்ன கவலையா யிருக்கிறீர்கள், நாம் உட்கார்ந்ததி லிருந்து ஒரு வார்த்தைகூட உங்கள் வாயிலிருந்து வரவில்லையே" என்றார்.

ரொம்ப நிதானமான கண்யத்துடன் "அபிப்பிராயம் சொல்லக்கூடிய விஷயம் எதுவுமே என் காதில் விழவில்லையே!" என்றார்.

"அப்படியா! என்னை மன்னித்துவிடுங்கள்" என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் மேஜையின் அடியில் ஒளிந்து கொண்டார். அப்பாவின் சிரிப்பொலி அவர்காதில் படும் வரை பீடர் அந்த இடத்தைவிட்டு வரவேயில்லை.

என் ஹிருதயத்தில் இன்னும் கொஞ்சம் சோளாறுகள் இருப்பதாக எக்ஸ்ரேப் படங்கள் காட்டியபோதிலும் நான் கொஞ்சம் கொஞ்சமாய் நடமாட ஆரம்பித்தேன். சில சமயங்களில் கடற்கரையில் கூட்டமே இருக்காது. அந்த சமயந்தான் எனக்கு ரொம்பப் பிடித்த சமயம்.

காற்று சுற்றிச் சுற்றி என் மேல் வீச நான் மணற் பரப்பில் படுத்துக்கொள்வேன். கடலலைகளின் சந்தந் தவருத ஒலி என்னைக் கடவுளின் விஸ்வாத்மச் சந்தத்துடன் இணைத்திருப்பதாக நினைத்துக் கொண்டு மகிழ்வேன். நான் சொஸ்தமடைகிறேன் என்ற நம்பிக்கையும் கொள்வேன். பழைய சாஸ்வதமான களைப்பு இப்போதெல்லாம் என்னை விட்டுக் கழன்று போய்விட்டது ஜீவனற்ற என் உடம்புக்குள் ஜீவன் குடி புகுந்து கொண்டிருந்தது.

விடுமுறைகள் வாழ்வை மீண்டும் உண்டாக்குவதற்காக ஏற்பட்டவையானல் ஆத்மாவையும் உடலையும் அது உயிர்ப்பிக்க வேண்டும். "வேவர்லீ"யில் பீடர் எப்போது பார்த்தாலும் வேலையிலிருந்தாலும், ஆத்மீகக் கணக்கு எடுக்கவும் கொஞ்சம் நேரமும் இருக்கத்தான் செய்தது.

சாப்பாட்டுக்குப் பிறகு நடக்கும் குடும்பப் பிரார்த்தனைகள் அங்கே ரொம்ப சாவகாசமாக நடக்கும். அவற்றை நடத்துவதில் ஒவ்வொருவரும்—விருந்தினர்கள்கூட முறை வைத்து ஒருவர் மாற்றி ஒருவர் நடத்துவார்கள். ஐந்தாறு வயதானவுடன் எங்கள் புத்ரன்கூட தன் முறையைத் தானே நடத்தினன். அதற்கான

பிற்சியைக் கொஞ்சம் முன்னதாகவே நாங்கள் கொடுத்தோம்.

உத்தியோகத்திலும் சரி, கணவன் தந்தை என்ற ஹோதாவிலும் சரி, ஆத்மீகத் துறையில் அவருக்குள்ள பக்குவத்திலும் சரி, எல்லாம் தெரியும் என்ற நினைப்பை பீடர் ஒருநாளும் அடைந்ததில்லை. பீடரின் அபிப்ராயத்தில் வெற்றிக்கு வழி அவரவர்களிடத்திலேயே இருக்கிறது என்பதுதான். மற்றவர்கள் பாராட்டுதல்களிலோ எந்தக் கூட்டத்திற்குச் சேவை செய்கிறோம் என்பதிலோ அது இல்லை என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

அவருடைய சம்பாஷணைகளில் என்றாவது ஒருநாள் தான் மக்களுடைய அபிமானத்தை இழந்துவிட நேரிடும் என்ற பயம் அவருக்கு இருப்பது தென்படும் "எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது அங்கே (கூட்டத்தின் முன்) போகும்போது வெறுங் கையோடு போதனை செய்ய விஷயமே ஏதும் இல்லாமல் போய்விடுவேனோ என்று. நான் தோட்டவேலை செய்வதைவிட புத்தகங்ள் படித்து உரைகளை எழுதியாக வேண்டும். வேனிற் காலம் ஓடுகிற வேகத்தைப் பார்த்தாயா? அது என்னைவிட்டு நழுவி ஓடுகிறது" என்பார்.

ஆனாலும் இந்தப் புது வீட்டில் அவர் எழுதிய போதனைப் பிரசங்கங்கள் அவருக்கு திருப்திகரமாக இல்லை.

ஹாரிச் போர்ட் என்ற ஊரில் பிரயாணிகளுக்கான கோயிலிலும் பீடர் பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவதுண்டு. அந்த வெள்ளை வெளேர் என்ற கோயிலில் இலைப் பச்சைநிறத்தில் விரிப்புகள் விரிக்கப்பட் டிருக்கும். அந்த விரிப்புகளில் கூட்டம் திமுதிமு என்று வரும். பிளஸன்ட் ரோடில் எங்களுடைய அண்டை அயலாராக உள்ளவர்கள் கூட அந்தக் கூட்டத்தில் காணப்படுவார்கள்.

கேப் குடியேற்றத்தில் எப்பொழுது பிரார்த்தனைக் கூட்டம் நடத்தினாலும், அவருடைய அண்டை அயல் வீட்டுக்காரர்கள்கூட எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களா

யிருந்தாலும் இவருடைய பிரார்த்தனைக் கூட்டத்தில் நிச்சயமாய்க் கலந்துகொள்வார்கள். தான் எதைப் போதிக்கிறாரோ அதன் படி வாழ முயலும் ஒரு போதக ரும் சிரிக்கச் சிரிக்கப் பேசுபவரும், சிநேகிதத்திற்குகந்த வரும், ஆன பீடரிடம் யார்தான் பிரியம் வைக்கமாட் டார்கள்?

இந்தக் காரணங்களால் தான் பீடர் 'வீவர்லீ' வீட்டை மண்ணில் உள்ள சுவர்க்கத்தின் சமீபமான இடம் என்று வர்ணிப்பார். ஸெப்டம்பர் நெருங்க நெருங்க வீவர்லீயை விட்டுப் போக அவர் மனமில்லாமல் தவிப் பார்.

# துணிந்த ஹிருதயம்

அன்று ஞாயிற்றுக்கிழமை. நாளை விடிந்தால் 1946—ஆம் வருஷம் ஏப்ரல் முதல் தேதி. மற்ற ஞாயிற்றுக் கிழமைகளிலிருந்து இந்த ஞாயிற்றுக்கிழமை மாறுபட்டிருக்குமென்பதை பிரகாச தாண்டவமாடும் சூரிய வெளிச்சத்தால் கூடத் தெரிவிக்க முடியவில்லை.

பத்து மணிக்கு டெலிபோன் மணி அடித்தது. என்னுடைய நாத்தனரும், பீடரின் காரியதரியுமான மேரி தான் கோயிலிலிருந்து பேசினுள். பீடருக்கு உடம்பு சரியாக இல்லை.

"பதினேருமணி பிரார்த்தனையை அநேகமாய் அவரால் செய்ய முடியாது" என்று சொல்லிவிட்டு "நீ கவலைப்படாதே, யாராவது ஒருவருடன் அவரை வீட்டுக்கு அனுப்புகிறேன்" என்ருள்.

விசாரித்ததில் ஒன்பது மணிப் பிரார்த்தனைப் பிரசங்கமே பீடரின் ஹிருதயத்தில் ஏற்பட்ட கடுமையான வலியின் காரணமாகச் சுருக்கமாக முடிக்கப்பட வேண்டியதாய்விட்டது என்பது தெரிந்தது.

எப்படியோ ஆசீர்வாதத்தை முடித்துவிட்டார். அதற்குள் கோயில் முன் ஏராளமான கூட்டம் கூடிவிட்டது. அவர்களில் இருவர் டாக்டர்கள். அவரை மெதுவாக நடத்தி அவருடைய அறைக்கு அழைத்துச் சென்ருர்கள் மேடையிலிருந்து.

என் சகோதரி எம், வீட்டு வேலைக்காரி, பீடர்ஜான் ஆகியோர் நான் டெலிபோனில் பேசுவதைக் கேட்டுக் கொண்டு என் பக்கத்திலிருந்தார்கள். பீடர் வரும்வரை ஒருவரோடொருவர் பேசக்கூட முடியவில்லை எங்களுக்கு. ஹிருதய அதிர்ச்சி என்ற அந்த இரு வார்த்தைகளும் சுவரில் நியோன் (நீல) வெளிச்ச எழுத்துக்களில் பொரிக்கப்பட்டவை போலிருந்தது எங்களுக்கு

10-25க்கு மீண்டும் டெலிபோன் மணி அடித்தது. இந்தத் தடவை என் தம்பி 'பாப்' பேசினான். பீடரை ஸ்டெச்சரில் கிடத்தி ஜார்ஜ் வாஷிங்டன் ஆஸ்பத்திரிக்குத் தெரு வழியாகக் கொண்டு சென்றார்கள் என்று தெரிவித்தான். அவனும் ஹிருதய அதிர்ச்சி என்ற வார்த்தைகளை உபயோகிக்காமலே ஒதுக்கி விட்டான்.

"எவ்வளவு சீக்கிரமாக வர முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நான் ஆஸ்பத்திரிக்கு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ரிஸீவரை டெலிபோனில் வைத்தேன்.

பீடர் இருந்த அறை இருட்டாக இருந்தது. பூனை போல் மெதுவாக நான் நடந்து வருவதைப் பார்த்து பீடர் என்னைக் கை நீட்டி வரவேற்றார். ஒரே ஒரு நிமிஷம்தான் மௌனமான சின்னஞ்சிறு பிரார்த்தனை ஒன்றைச் செய்து விட்டு நழுவி வந்துவிட்டேன் வெளியே.

டாக்டர் தானே மறுநாள் காலையில் வந்து விபரமாகத் தெரிவிப்பதாக உத்தரவாதமளித்தார்.

அது வரையில், காத்திருந்து பிரார்த்திப்பதைத் தவிரச் செய்வதற்கு ஏதும் இல்லை. ஒரு வாடகைக் கார் பிடித்து வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கும்போதே ஆத்மீகமான முயற்சிகளைப் பற்றிய நினைவு எனக்கிருந்தது—என்னிடம் இருக்கிறதென்று எனக்கே தெரியாத ஆத்ம சக்தி இந்தப் பயங்கர நிலைமையை சமாளிக்கத் தலை தூக்கி நின்றது.

ஏப்ரல் முதல் தேதி மத்யானம் ஒன்றரை மணிக்கு பீடரின் உடல் நிலையிலுள்ள உண்மையான விபரீத நிலை தெரிந்தது. "ஸ்ரீமதி மார்ஷல், விஷயத்தைத் தெளிவாகச் சொல்லியாகவேண்டிய கட்டம் இது. டாக்டர் மார்ஷல் வியாதியால் வெகுவாகப் பீடிக்கப்பட்டுள்ளார். பாதிக்குப் பாதிதான் பிழைப்பதும் சாவதும் என்ற நிலைமை. ஆனாலும் என்னென்னவெல்லாம் செய்ய முடியுமோ அதை யெல்லாம் செய்கிறோம். அதைவிட வேறு எதுவும் செயய முடியாது" என்று டாக்டர் தெரிவித்தார் என்னிடம்.

"டாக்டர்! பீடர் நிலைமையில் சின்னஞ்சிறு மாறுதல் ஏற்பட்டால் கூட எனக்குத் தெரிவிக்கவேண்டும். செய்வீர்களா?" என்று கேட்டேன்.

அவர் ஆகட்டும் என்றார். ஏராளமான நண்பர்கள் வந்துகொண்டே யிருந்தார்கள். "எங்களால் ஏதாவது முடியுமானால் சொல்லுங்கள் செய்கிறோம்" என்று சொல்லாதவர் பாக்கியில்லை "அப்படியே அவர்கள் தோள்களைப் பிடித்துக் குலுக்கி "ஒரே ஒரு வழிதான் இருக்கிறது பிரார்த்தனை செய்யுங்கள், பிரார்த்தனை செய்யுங்கள், பிரார்த்தனை செய்யுங்கள்" என்று சொல்ல வேண்டும் போலிருந்தது எனக்கு.

திங்கட்கிழமை இரவுக்குள் ஐக்கிய அமெரிக்க நாடெங்கும் பீடருக்காகப் பிரார்த்தனை செய்யவேண்டுமென்ற எண்ணம் ஊற்றுப்போல் பெருகி ஓட ஆரம்பித்துவிட்டது. தந்திகள் வந்து குவிந்துகொண்டிருந்தன. எல்லாவற்றிலும் பெரும்பாலும் "பீடருக்காகப் பிரார்த்திக்கிறோம்" என்பதே வாசகம். டோக்கியோவிலிருந்து கூட எர்னஸ்ட் டான்லீ என்ற நண்பர் தந்தியனுப்பியிருந்தார்.

திருச்சபையினர் அமைதியாக நடந்துகொண்டனர் திருச்சபைக் கூட்டம் ஒன்றைக் கூட்டி, திருச்சபையைச் சேர்ந்த ஒவ்வொருவரையும் 7 மணிக்குமேல் 8 மணிக்குள் ஒரு கால்மணி நேரம் டாக்டர் மார்ஷலுக்காகப் பிரார்த்திக்கும்படி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிற்று. யாரும் யாரையும் அழைக்காமலே லிங்கான் கோயிலில் இளைஞர்களின் கூட்டம் ஒன்று தானாகவே கூடிவிட்டது. உணர்ச்சி நிறைந்த பல பிரார்த்தனை நடத்திய பின்னர், சில இளைஞர்கள் வெறுமென அங்கேயே உட்கார்ந்திருந்தார்கள்; மௌனமான பிரார்த்தனையி லீடுபட்டிருந்தார்களோ என்னவோ?

கோயில் வீட்டில் பீடர் ஜானைப் படுக்கவைத்துத் தூங்க வைத்துக்கொண்டிருந்தேன். அவனுக்கு அப்போது வயது ஆறு. தன் அப்பாவைப் பற்றி ரொம்பக்

கவலைப்பட்டான். நான் குழந்தையிடம் சொன்னேன்; "பீடர்! ஆண்டவன் வேதத்தில் (பைபிளில்) சொல்லி யிருக்கிறார், நாம் வயதடைந்து, பக்தியுள்ளவர்களாகவும் இருந்தால்' அவர் நம்மை சொஸ்தமாக்கிவிடுவார் என்று சொல்லி யிருக்கிறது, நானும் நீயும் ஆண்டவனிடம் அப்பாவை சொஸ்தமாக்குங்கள் என்று வேண்டிக்கொள் வோமா?" என்று.

குழந்தை மௌனமாக இருந்தான். அவன் சின்னஞ் சிறு மனதில் இந்த சந்தேகம் ஏற்பட்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. பையன் பீடர் கேட்டான் "அம்மா! ஆண்டவன் தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவாரா? அவர் காப்பாற்றுவது உண்டா அம்மா?" என்று.

இந்தக் கேள்வி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தென்பது எனக்குத் தெரியும் அன்றிரவு பீடர் இறந்து விடுவாரென்று வைத்தியர்கள் சொல்லி விடவில்லை. கேள்வி கேட்ட குழந்தையிடம் "உண்டு, கடவுள் சொன்ன சொற்களை அவசியம் காப்பாற்றுவார்' என்று நான் சொல்லி 'அவனுடைய அப்பா இறந்துவிட்டால், தன் இந்தத் தந்தையை இழந்ததில் ஏற்பட்ட வருத்தத்தை அனுபவிப்பதோடு தேவத் தந்தையான ஆண்டவனிடம் இந்தச் சின்னஞ்சிறு குழந்தைக்குள்ள நம்பிக்கை கூட அல்லவா சிதறிப் போய்விடும்!

"ஆமாம்! சில சமயம் ஆண்டவன் தன் சொற்களைக் காப்பாற்றுகிறார். சில சமயம் காப்பாற்றுவதில்லை" என்று சொன்னாலும் நிலைமை அதேதான். கடவுளை நம்புவதற்கில்லை என்ற அபிப்பிராயந்தானே சிறு குழந் தையின் மனதில் பதியும்

கொஞ்சம் ஆத்ம சோதனைகள் நடத்தி விட்டுக் கடைசியாக நான் சிறுவனிடம் சொன்னேன. "காப்பாற் றுவதுண்டு. கடவுள் எப்போதும் தன் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுவதில்லை" என்றேன்.

பதினைந்து மணி நேரத்தில் இந்தக் குருட்டடியான என் வாக்குறுதிக்குப் பிரத்யட்ச பலன் கிடைக்க ஆரம் பித்தது.

செவ்வாயன்று எட்டு மணிக்கு அப்பாவும் அம்மாவும் வந்து சேர்ந்தார்கள். ராத்திரி முழுக்க விழித்திருக்கிறார்கள் அவர்கள். கொஞ்சம் ஆகாரம் செய்யலாம் என்று முயன்றேன். ஒரு கவளம் கூட உள்ளே செல்ல மறுத்தது பயமும் திகிலும், இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்தி, வயிற்றைக் கலக்கி, ஹிருதயத்தையும் பிழிந்து வைத்திருந்தது.

அமைதியற்றவர்களுக்கு அமைதி யருளும் ஆண்டவன் வாக்கைப் பற்றி நினைத்தேன். எனக்குள் அடித்துக்கொண்டிருந்த பேய்க் காற்றையும் புயலையும் சமாளிக்கும் பலம் எனக்கில்லை என்று ஆண்டவனிடம் மன்றாடியிருக்கிறேன். பீடரின் நோயைத் தீர்ப்பதற்கு ஒரு அறிகுறியாக என் மனப் புயலிலிருந்து எனக்குக் கொஞ்சம் நிம்மதி கொடுத்துக் காப்பாற்றுமாறு ஆண்டவனை வேண்டினேன்.

பதினைந்து நிமிஷங்களில் இந்தப் பிரார்த்தனைக்கு ஆண்டவன் செவி சாய்த்தார்.

அந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து பீடர் படிப்படியாய்க் குணமடைந்தார். அன்றிரவுதான் அவர் முதன் முதலாக நிம்மதியுடன் தூங்கினார். புதன்கிழமையன்று வெகுவாகக் குறைந்து போயிருந்த அவருடைய ஹிருதயத் துடிப்பு அதிகரித்து விட்டிருந்தது. வியாழனன்று அவருடைய உடல் உஷ்ணம் 100 டிகிரிக்குக் கீழே வந்து விட்டது. வியாழனன்றிரவே அது சகஜ நிலைக்கு வந்தும் விட்டது.

பூர்ண சுகம்பெற அவர் நெடுநாள் ஓய்வும், சிகிச்சையும் பெற வேண்டுமென்றாலும், பீடருக்கு இனிமேல் பயமில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. சாவுக்கும் வாழ்வுக்குமிடையே அலையும் பயங்கரநிலை இனிமேல் இல்லை. அவர் பிழைத்துக் கொள்வார் என்று எங்களுக்கு நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது ஏதோ ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத் தான் ஆண்டவன் பீடரைக் காப்பாற்றி வைத்திருக்கிறார். இதைத் தொடர்ந்து வந்த நாட்கள் பீடர் வாழ்க்கையிலேயே அதிகப் பயன் நிறைந்த உபயோககரமான நாட்களாக இருந்தன.

## ஆசிரியர்

பீடரை ஐக்கிய நாட்டின் ஸெனட் சபைக் கோயில் குருவாக நியமிக்க வேண்டுமென்ற முயற்சி பீடருக்கே ஆச்சரியமான செய்தியாக இருந்தது. அரசியல் கட்சி விவகாரங்களில் பீடர் ஈடுபட்ட முதலாவதும் ஒன்றே ஒன்றுமான சந்தர்ப்பம் இதைத் தொடர்ந்து வந்து சேர்ந்தது. அவருக்கு இது அவ்வளவாகப் பிடித்த மான ஒரு அனுபவம் அல்ல. 80 வது காங்கிரஸில் மிகக் கடுமையாக அவருடைய நாமினேஷன் விவாதிக்கப்பட்டது. இருபது வருஷகாலத்திற்குப் பிறகு குடியரசுக் கட்சியினர் ஸெனட் சபையில் ஆதிக்கம் மிகுந்தவர்களாக இருந்தனர். ஜனநாயகக் கட்சினரான மைனாரிட்டிகள் இக்காரணத்தால் எதிர்க் கட்சியினராக இருந்தனர். மற்ற உத்யோகங்களின் விஷயத்தைப் போலவே ஸெனட் சபையின் கோயில் குரு நியமனத்திலும் மாறுதல் செய்ய குடியரசுக் கட்சியினர் முயலுவார்களென்று நியாயமாகக் கோபமடைந்திருந்தனர். கோயில் குருவைத் தேர்ந் தெடுப்பதில்கூட கூட்டு வியாபார மனோபாவம் நிலவுவது பற்றி அவர்கள் திகிலடைந்திருந்தனர்.

'காங்கிரஸ் நடவடிக்கைத் தஸ்தாவேஜ்' என்ற பிரசுரத்தில் இந்த விவாதத்தை நெருக்கி நெருக்கி ஒன்பது பத்திகள் நிறையப் பிரசுரித்திருந்தார்கள்.

வாஷிங்டன் செய்தி விமர்சகரான ஸ்ரீ பாகேஜ் வெகு அழகாக இதைச் சுருக்கிச் சொல்லியிருந்தார். "ஆனால் குடியரசுக் கட்சிக்கு மெஜாரிடி இருந்தது. டாக்டர் மார்ஷலுக்கு வேலை கிடைத்தது. எனக்குத் தெரிந்தமட்டில், இந்த நியமனத்தால் யாரும் மனம் வருந்தவில்லை" என்று.

இவையெல்லாம் பீடருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. பீடரின் நண்பரும் வாஷிங்டன் எஃபளண்டரி மெதாடிஸ்ட் கோயிலின் கோயிற்பிள்ளையும், ஆன டாக்டர்

ஹாரிஸ்தான் அப்போது ஸெனட் கோயிலின் குரு. அவருக்காக பீடர் மிக தர்ம சங்கட மடைந்தார். இந்த சமாசாரத்தையே டாக்டர் ஹாரிஸ் பத்திரிகைச் செய்திகளிலிருந்துதான் தெரிந்து கொண்டார்.

இந்த வேலை முதலில் பீடருக்கு வெகு கடினமாயிருந்தது. ஸெனட் சபை நிருபர்கள், ஒவ்வொருநாளும் பீடர் நடத்தப் போகும், பிரார்த்தனைப் பிரசங்கத்தின் டைப் அடிக்கப்பட்ட நகலை முன் கூட்டியே கொடுத்துவிட வேண்டுமென்று கோரினார்கள். அப்படியானால் இத்தனை நாட்களாகச் செய்து வந்தது போல், யதேச்சையாகப் பிரார்த்தனைப் பிரசங்கம் செய்வதென்பது நடக்காது என்பது அவருக்குத் தோன்றிற்று.

அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஒருநாள் ஸ்டார் டெய்லியுடன் இதைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார் ஸ்டார் டெய்லி என்பவர் பிரபலமான ஒரு கைதி. அவர் மதிப்பு வாய்ந்தவராக மாறி சமூக அந்தஸ்தடைந்தது ஜகப் பிரசித்தமான ஒரு விஷயம்.

"பீடர்! இது ஒரு மகத்தான சந்தர்ப்பம் உங்களுக்கு. உங்கள் மூலமாகக் கடவுள் இந்தப் பிரார்த்தனைகளைக் கேட்டால் அற்புதங்கள் நடக்கும்" என்றார் ஸ்ரீ ஸ்டார் டெய்லி அவர்கள்.

"அதுதான் எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. பொதுப் பிரார்த்தனைகளை எழுதுவதே எனக்குப் பிடிக்காது. என் பிரார்த்தனைப் பிரசங்கங்களை எழுதாமல் அப்போதைக்கப் போது தான் செய்வேன் என்றால், அது நிருபர்களுக்குச் சங்கடமாக இருக்கும்."

அப்படியானால், படித்தே நிகழ்த்துவதற்கான முறையில் ஒரு பிரசங்கத்தை முன் கூட்டி தயாரிக்கும் சக்தியை ஆண்டவன் உங்களுக்கு அருளவில்லை என்ற பயமா?

"அப்படியேதான்! இந்த நினைப்பே எனக்குச் சங்கடத்தை உண்டாக்குகிறது. எனக்கு இது பிடிக்கவேயில்லை. ஸெனட் சபையின் நிலையே பிரார்த்தனைக்கு

ஏற்ற இடமில்லை. காகிதங்களின் சலசலப்பு, இருமல், இன்னும் எவ்வளவோ உண்டு.

ஸ்ரீ டெய்லி கனைத்துக் கொண்டே இப்படிச் சொன்னார்''நானாக இருந்தால், அந்தப் பிரார்த்தனைகளை எழுதியே விடுவேன். இந்த நிலையில் நீர் இருக்குமிடத்திலேயே அந்தப் பிரார்த்தனைப் பிரசங்கத்தில் என்னென்ன விஷயங்கள் சொல்ல வேண்டுமென்பதைக் கடவுள் வந்து சொன்னால் உத்தமமாக இருக்கும். செனட் சபையில் நுழைந்த பிறகு ஆண்டவன் வந்து உம்மிடம் சொல்வதைவிட இந்த ஏற்பாடு மேலல்லவா? ஒரு வழி செய்யலாம் இப்போதே உட்காரும். நீர் செய்யவேண்டிய பிரசங்கத்தை எழுத உமக்கு கடவுள் இப்போதே உதவட்டும்' என்று இரண்டுபேரும் ஒரே மகா வாக்யத்தை இதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டினார்கள்.

''எல்லா மனிதர்களுக்கும் வரம்பின்றி அருள்புரியும் ஆண்டவனை அவன் கேட்பானாக. அது அவனுக்குக் கொடுக்கப்படும் (ஜேம்ஸ். 1 : 5).

பீடரின் கவலைகள் தீர்ந்தன. அதற்குப் பிறகு செனட்டில் செய்யவேண்டிய பிரார்த்தனை பற்றிய தொல்லையே அவர் மனதில் எழுந்ததில்லை. அன்றிரவே பீடருக்குக் கடவுள் அருள் புரிந்தார். பீடர் மூலமாக ஆண்டவன் பிரார்த்தனைகளை எழுதியும், பிரார்த்திக்கவும் செய்தார்.

இதைத் தொடர்ந்து அமெரிக்க ஐக்யநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள பத்திரிக்கைகள் இந்தப் பிரார்த்தனை பிரசங்கங்களில் தோன்றிய சுருக்கம், கேலி கருக்கு நிறைந்த தெளிவு இதைக் குறித்து அபிப்பிராயங்களைக் கூறத் தொடங்கின.

'சிகாகோ ஸன்டைம்ஸ்' என்ற பத்திரிகையில் ஸெனட் பிரார்த்தனைகளில் ஒரு புதுமை என்ற தலைப்பின்கீழ் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அமெரிக்க ஐக்ய நாடுகளின் ஸெனட் சபையில் கொட்டப்படும் பல்லாயிரக் கணக்கான வார்த்தைகளிலேயே மிகச் சிலரால்

மட்டும் கவனிக்கப்படும் ஒரு பேச்சு இருக்கிறதென்றால் அது ஸெனட் கோயில் பிள்ளை பேசும் பேச்சுத்தான். இந்த கோயில் பிள்ளை ஒவ்வொரு ஸெனட் சபை கூட்டத்தையும் பிரார்த்தனை மூலம் தொடங்கி வைக்கிறார். ஆனால் சமீப காலத்தில் பார்வையாளர்கள் பலர் ஸெனட்டர்களை துரிதமாக ஸெனட்டுக்கு வரும்படி கேட்டுக் கொள்ளுகிறார்கள். காரணம், 'நியூயார்க் அவென்யூ கோயிலில் போதகராக இருக்கும் டாக்டர் பீடர் மார்ஷல் அநாவசியமான உபசார வார்த்தைகளையெல்லாம் ஒழித்து விட்டு சட்டம் செய்யும் ஸெனட்டர்களுக்கு வேண்டிய சில புத்திமதிகளை வெகு நன்றாக விரும்பத்தக்க முறையில் கூறுகிறார் என்று அந்தப் பத்திரிகை எழுதியிருந்தது.

பத்திரிக்கைகளும், ஸெனட்டர்களும் இவருடைய அம்புப் பாய்ச்சலைப் போன்ற புத்திமதிகளை அவரவர்களுக்கு தோன்றியவிதத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கத் தொடங்கினர்.

சாதாரணமாக விவாதத்துக்கு உட்பட்டிருக்கும் சட்டங்களைப் பரிசீலனை செய்து தன்னுடைய பிரார்த்தனைப் பிரசங்கங்களின் மூலம் அவற்றை எவ்வளவு தூரம் ஜன சம்பந்தமுள்ளதாகச் செய்ய முடியுமோ அவ்வளவு ஜன சம்மதமுள்ளதாக இவர் செய்கிறார் என்று பெரும்பாலோரும் அபிப்பிராயப்பட்டனர். பத்திரிக்கைகள், வேறு எவ்விதமாகத்தான் இதில் உள்ள தாத்பரியங்களை விளக்க முடியும் என்று கேட்டன.

"எனக்காக டாக்டர் மார்ஷல் பிரார்த்தனை செய்கிறாரா? அல்லது என்னிடத்திலேயே பிரார்த்தனை செய்கிறாரா என்பது எனக்கே தெரியவில்லை" என்று ஸெனட் தலைவர் ஆர்தர் வேண்டன் பர்க் கேலி செய்தார்.

லைப் என்ற பத்திரிக்கை இதைப்பற்றி வெகு அழகாகக் கூறியிருந்தது. டாக்டர் மார்ஷல் முதல் முதலில் கடவுளிடம் பிரார்த்தித்துக் கொள்ளத் தொடங்குமுன் இத்தனை நாளாக அழுக்கேறிக் கிடந்த ஒரு சட்டையை

கழற்றி அழுக்குக் கூடையில் எறிந்தார். ஸெனட்டில் அவர் செய்த ஒரு பிரார்த்தனையில் 'பிதாவே எங்கள் ஆண்டவனே! எங்களுக்கு உங்கள் உதவி வேண்டுமென்பது நன்ருகத் தெரியும். எங்கள் கனத்த மண்டையும் திமிரேறிய மதியும் உங்களுடைய உதவி இல்லாமலேயே இக் காரியங்களைச் செய்துவிடத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றன. சின்னஞ்சிறு விஷயங்களை பெரிதாக்கியதற்காகவும் எங்கள் சொந்த முக்யத்துவத்தையும் எங்களுக்கு முன்னுள்ள பிரச்சினைகளையும் வியக்கத்தக்க அளவிற்கு உயர்வு நவிற்சி ஆக்கியதற்காகவும் எங்களை மன்னித்தருள வேண்டுகிறேரும்" என்று அவர் பிரார்த்தித்தார்.

இம்மாதிரி நையாண்டியும் கொச்சையுமான மொழிகளை ஸெனட் கோயில் பிள்ளையிடமிருந்து கேட்கும்போது ஸெனட்டர்கள் அடிக்கடி தங்களிடம்தான் அவர் பிரார்த்தித்துக்கொள்ளுகிருரோ என்ற ஒரு உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டது;

ஆனல் உண்மை இதுவல்ல. பத்திரிக்கைகளின் இந்தக் கூற்றை பீடர் அடிக்கடி மறுத்து வந்தார். கடவுளிடந்தான் தான் பிரார்த்திபபதாக உறுதி கூறினுர். இதில் உண்மை என்னவென்ருல் கடவுளே பீடர் மூலமாக இந்தப் பிரார்த்தனைகளை நடத்திஞர். சிலருக்கு நம்ப முடியாமல் இருந்த போதிலும் பீடர் கடவுளால் வழிகாட்டப்பட்டு, பிரார்த்தனைகளைத் திறமையுடன் செய்து வந்தார்,

தன்னை அந்தப் பதவிக்கு நியமித்ததால் தனக்கு ஏதும் பெரிய கௌரவம் இல்லை என்ருலும் புதியதொரு சூழ்நிலையில் இது கிறிஸ்துவின் வேலையை செய்ய சந்தர்ப்பம் அளிக்கிறது என்பதைத் தவிர வேறென்றும் இல்லை.

ஸெனட்டர் லூகாஸ் ஒரு தடவை சொன்னுர் இங்குள்ள ஒவ்வொரு அங்கத்தினரையும் பீடர் மார்ஷலின் ஆத்ம சக்தியும் தர்ம பலமும் மேம்பாட்டையைச செய்

கிறது அவருக்கு வாக்குரிமையோ கொள்கை நிர்ணய உரிமையோகிடையாது. அவருடைய பிரார்த்தனைகள் எங்கள் ஹ்ருதயங்களில் சென்று பாய்ந்து நேரான வழியில் எங்களைக் கொண்டு செலுத்துகிறது என்று சொன்னார்.

அதற்குப் பிறகு விசேஷங்கள் நடக்க ஆரம்பித்தன. ஒருநாள் ஸெனட், சர்க்கரை மசோதாவைப் பற்றிய ஒரு முக்ய விவாதத்தில் ஈடுபட்டிருந்தது. பீடர் பிரார்த்தனையை முடித்தவுடன் ஸெனடடர்களில் ஒருவர் அவரை அணுகினார். அவர் கண்களில் ஏதோ புதிர் இருப்பது போல் தோன்றிற்று. "டாக்டர் மார்ஷல் அவர்களே! உங்கள் பிரார்த்தனைப் பிரசங்கங்களில் கூறி வந்தவற்றையெல்லாம் வெகு கவனமாகக் கேட்டேன், தன்னுடைய வேலையைப்பற்றி ஆண்டவனிடமிருந்து திட்டவட்டமான யோசனைகளை பெறமுடியுமென்று நீங்கள் கருவதுபோல் தோன்றுகிறது" என்று சொல்லிவிட்டு "உங்களால் சொல்ல முடிந்தால் சொல்லுங்கள். இந்த சர்க்கரை மசோதாவின் மேல் என் வாக்குரிமையை எப்படிப் பிரயோகிப்பது என்பதைக் கடவுளால் எனக்குத் தெரிவிக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா".

ஆம்! நான் நினைக்கிறேன். அதனால் உங்கள் பேருக்கு கடவுளிடம் இருந்து தந்தி வந்து சேரும் என்று அர்த்தமில்லை, 'ஆப்ரகாம் லிங்கன்' ஒருதடவை சொன்னார். "கடவுள் என்னிடம் இதைச் செய் இதைச் செய்யாதே என்று குறிப்பிட விரும்பும் பொழுதெல்லாம். எனக்கு அதைத் தெரிவிப்பதற்கு ஒவ்வொரு வழியை அவன் புதிதாக கண்டு பிடித்துக்கொண்டே இருந்தார்." இது என் அனுபவத்தோடு ஒத்திருக்கிறது.

இம்மாதிரி யாராவது ஒரு ஸெனட்டர் உண்மையறிய முயலும்போது பீடர் பரவசமடைந்தார். ஸெனட்டர் ஆர்தர். H. வேண்டன் பர்க்தான் மற்றெல்லோரையும் விட அதி உற்சாகமாக இருந்தார்.

ஆரம்பத்திலிருந்தே இவர் பீடரை டாமினி என்ற மதகுருவைக் குறிப்பிடும் டச்சுப்பதத்தாலேயே குறிப்பிடுவார். "பூஜ்யர் பீடர் மார்ஷல் இரண்டு ஹும் ஸெனட் சபையின் கோயில் பிள்ளையாக இருக்கையில் நான் தலைவராயிருந்தேன். ஸெனட் கூடும்பொழுதெல்லாம் அவரைக் காணும் பாக்யம் எனக்கு வாய்த்தது. தினமும் பிரார்த்தனை செய்யும்படி கேட்டுக்கொள்வதும் என் கடமையாக இருந்ததால் காலப் போக்கில் இந்தக் கடமையும் ஒரு மதிப்புவாய்ந்த பாத்யதையாக எனக்கு ஆகிவிட்டது. இந்த தினசரி நடவடிக்கை உற்சாகம் தருவதாகும். இந்த மதகுரு அந்தரங்க சிநேகிதராகவும் ஆகிவிட்டார்.

இந்த சந்திப்புகளை வெகுவாக இருவரும் எதிர் பார்த்தனர். பீடரின் வழக்கம் முதன் முதலில் ரிப்போர்ட்டர்களின் அறைக்குச் செல்வது. அதன் பிறகு தன் தொப்பியையும கோட்டையும் அங்கே வைத்துவிட்டு ஸெனட்டர் வாண்டன்பர்கின் ஆபீஸுக்கு போவதுதான். இவர்களிருவரும் பத்து நிமிஷம் பேசிக்கொண்டிருந்து விட்டு, இருவருமாய் மெதுவாய் நடந்து ஸெனட் சபைக்குப் போவார்கள் "டாமினீ! வாருங்கள்! உங்களை ஓநாய்களின் நடுவே கொண்டுபோய்த் தள்ளும் நேரம் வந்துவிட்டது" என்று பீடரை வான்டன் பர்க் அழைப்பார். பத்திரிகை நிருபர்கள், ஸெனட் பையன்கள், சபைக் காவலர்கள், லிப்ட் ஆபரேடர்கள் இவர்களோடெல்லாம் பீடர் ஸெனட்டர்களோடு பழகுவதைப்போல வித்தியாசமின்றிப் பழகுவார் அம்மாதிரி பழகுவதற்குப் பீடரால்தான் முடியும். ஸெனட் ரிபோர்ட்டர் ஒருவர் "ஒளிவோ மறைவோ இல்லாமல் பழகுவதும், கேட்டவுடன் கவரக்கூடிய வார்த்தைகளைப் பேசுவதும் திடமான அவருடைய தன்மையும் என்னைக் கவர்ந்துவிட்டன" என்றார்.

"டாக்டர் பீடர் மார்ஷலினுடைய சக்தியை உடனேயே அறிந்துகொண்டு விட்டோம். அதனால்தான். அவரைத் தெரிந்துகொள்ள விரும்பினோம்" என்று ஸெனட்டர் 'ஸால்டன்ஸ்டால்' என்பவர் கூறினார்.

பீடர் மார்ஷலின் பிரார்த்தனைப் பிரசங்கங்களி லிருந்து பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தொழிலாளர் செய்தித் தாள்களும், ரீடர்ஸ் டைஜஸ்ட், நியூயார்க்கர் போன்ற பத்திரிகைகளும் அடிக்கடி சுருக்கங்களை எடுத் துப் பிரசுரித்தன.

## "உன்னைக் காலையில் பார்க்கிறேன்"

1946-ம் வருஷம் செப்டம்பரில் தன்னுடைய மத குரு வேலையை மீண்டும் மேற்கொண்டபோது, தன் வேலையில் எவ்வளவை தன் பொறுப்பில் செய்வது என்று சர்வ ஜாக்ரதையாக என் கணவர் வரையறை செய்து கொண்டார். படிப்படியாக அதிகப்படி வேலையை அவர் செய்ய முடிந்ததைக் கண்டு தைரியம் அடைந்தார்.

அவருடைய ஹிருதயத்தை அந்த அதிகப்படி வேலை பாதிக்கவில்லை. அவருக்கே சுபாவமான பலமும் உற்சாகமும் திரும்பவும் தலைகாட்ட ஆரம்பித்தது. சந்தோஷம் அவர் முகத்தில் அரும்பியது. முன்னைப்போலவே அவர் வாழ்க்கையை ரசிக்க ஆரம்பித்தார். ஹிருதயத்தின் நோய் அவரை ஏமாற்றுவதுபோல் இருந்தது. வலியும் வீக்கமும் பெருமூச்சும் நின்றிருந்தது. அதிகப்படி வேலையை செய்ய இது அவருக்கு தைர்யத்தை கொடுத்தது. அவரிடமிருந்து அதிகப்படி வேலையை எதிர்பார்க்க மற்றவர்களைத் தூண்டிற்று.

ஹிருதய நோய் கண்டு ஒரு வருஷம் ஆகியிருந்தது. பீடருக்கு வெகு சமீபத்தில் இருந்துகொண்டு பார்க்கும் எங்களுக்குத்தான் ஆபத்தான நிலைக்குத் தன்னைக் கொண்டு செல்லுகிறார் என்று தெரிந்தது. இந்த அசாத்திய வேலையில் ஈடுபடாமலிருந்தால் ஆண்டவன் அருட்பணியில் எந்தநிலையை இவர் அடைவார் என்பது எனக்கு நன்கு தெரியும். தன்னலத்தைப் பெரிதாகக் கருதினால் கூட்டில் அடைத்தது போன்ற ஒரு சிறு வாழ்க்கை தான் பீடருக்கு லபிக்கும். ஆகையால் அவருடைய எதேச்சையான வியாபகத்தை தடை செய்யும் எந்த முயற்சியிலும் நான் ஈடுபடவில்லை. அவருடைய தேக சுகத்தை ஆண்டவன்தான் தன் பொறுப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இருந்துவிட்டேன்.

பீடர் மேலும் மேலும் முன்னேறி அதிகரிக்கும் பல சக்தி வாய்ந்த வியாபக வெற்றிகளை அடைந்தார்.

வாழ்க்கைப்பாதையில் எதிர்காலம் என்ற 'அடி வானம்' நன்கு தெரியக்கூடிய ஒரு குன்றின்மேல் ஏறி விட்டவரைப்போல் இருந்தார் பீடர். 'நியூயார்க் அவென் யூ'வுக்காக ஒரு புது கட்டிடத்தை அவசர அவசரமாகத் திட்டமிடும்போதே இது முடிந்தது. வானளாவ புதுக் கோயில் எழும்போதுதான் இருக்கமாட்டோமே என்ற ஏதோ ஒரு உணர்ச்சி அவருக்குத் தோன்றிவிட்டது. 'நியூயார்க் அவென்யூ' கோயிலில் அருட்பணி செய்த எத்தனையோ கோயில் பிள்ளைகளுள் தானும் ஒருவராக ஆகிவிட்டோமென்பதை அறிந்துகொண்டார்.

1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 24-ந் தேதி திங்கட் கிழமை. கோயிற்பிள்ளை வீட்டிலிருந்த டெலிபோனின் எதிர் முனையிலிருந்து ஒரு புத்தம் புதிய இத்தாலிய தொனியுள்ள குரல் ஒன்று கேட்டது "டானிகளுபி" பேசுகிறேன். "ஸ்ரீமதி மார்ஷல் அங்கிருக்கிறாரா?"

உடனேயே எனக்கு விஷயம் புரிந்துவிட்டது.

"அட! போக்கிரி நீங்களா" என்று என் கணவரின் விஷமத்தை கண்டுபிடித்த நான் சிரித்தேன். குரலை மாற்றிக்கொண்டு வெவ்வேறு வகையாக பேசி என்னை ஏமாற்றப் பார்ப்பது அவர் வழக்கம். "உனக்கெப்படி தெரிந்தது என் குரல்" என்று கேட்டார்.

"உங்கள் குரல் எங்கிருந்தாலும் எப்படி இருந்தாலும் எனக்குப் புரியும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றேன்.

"ஸெனட் பிரார்த்தனை முடிந்து இப்பொழுதுதான் திரும்புகிறேன். டவுனில் விருந்து. அதை முடித்துக் கொண்டு மூன்று மணிக்குமேல் நாலு மணிக்குள் வந்து சேருகிறேன். 'பீடர்—டுகும்' செய்து கொண்ட ஏற்பாடு உனக்கு நினைவிருக்கும்" என்று அவர் முடித்தார் எங்கள் மகனுடன் பீடர் செய்துகொண்ட ஏற்பாட்டைத்தான்

இப்படிக் குறிப்பிட்டார். சின்னப் பிள்ளைகளுக்கே உள்ள ஒரு பிடிவாதத்துடன் அவன் என்னை வெளியே அழைத் கொண்டு போக வேண்டுமென்று அவன் தன் தந்தை யுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தான். எங்கள் மகனின் விளையாட்டு என்ஜின் பழுதாகி பாரம் இழுக்கா மல் இருந்து வந்தது. தந்தையும் தனயனுமாக இதை மாற்றி வேறு ஒன்று புதிதாக வாங்கத்திட்ட மிட்டனர்.

அப்பாவின் வரவை எதிர்பார்த்து மகன் தன் வியா பாரத்திற்கான சகல முன்னேற்பாடுகளையும் செய்து வைத்திருந்தான். பீடரின் பச்சை "ஓல்ட்ஸ் மோபைல்" வாசலுக்கு வரும் முன்பே ஓடிப்போய் கதவைத் திறந் தான். சற்று நேரத்திற் கெல்லாம் இருவருமாய் மூட்டை முடிச்சுகளுடன் புறப்பட்டு விட்டனர்

போன இடத்தில் அவர்களுடைய பண்டமாற்று குதிரவில்லை.

"அடுத்த திங்கட்கிழமை வருவதானால் இந்த் சாமான்களை யெல்லாம் இப்படியே வைத்துவிட்டுச் செல் லலாம்" என்று கடைக்காரன் சொன்னான். அதன் படியே பீடர் அவற்றை அங்கேயே விட்டு விட்டு ஒரு ரசீது பெற் றுத் திரும்பினர். அந்த ரசீதில் தன்னுடைய பெயரை யும் விலாசத்தையும் குறிப்பிட்டிருந்தார். P என்ற எழுத் தும் M என்ற எழுத்தும் அவருக்கே உரிய சுபாவமான வகையில் பொறிக்கப்பட்டிருந்தது இந்த சின்னஞ் சிறு ரசீது தன் மகனால் நெடுங்காலம் வைத்து போற்றப்படப் போகிறதென்பதை அறிந்திருந்தால் பீடர் ஒரு புன்ன கைப் பூத்திருப்பார்.

அடுத்தத் திங்கட்கிழமை பீடரால்போகமுடியவில்லை. இன்னும் பதினைந்து மணிநேரம்தான். அவருக்கு உள் ளது. பீடரின் ஹிருதயம் மீண்டும் நோய்வாய்ப்பட்டது. செவ்வாயன்று காலை மூன்றரை மணிக்கு மார்பில் பல மான வலியுடன் பீடர் விழித்துக் கொண்டார். ஒரு தடவை கூப்பிட்டவுடனேயே நான் எழுந்துவிட்டேன்.

ஏதோ ஒரு காரணத்தால் நான் விழித்துக்கொண்டே படுத்திருந்தேன்.

"காதரைன் ரொம்ப வலிக்கிறது டாக்டரைக் கூப்பிடு"

அவர் குரலிலிருந்து நிலைமை விபரீதம் என்பது புரிந்தது. டாக்டர் வருவதாக போன் செய்தார்.

அவர் வருமுன்பே பீடர் பிரார்த்தனை ஆரம்பித்தார். உதட்டைக்கூட அசைக்க முடியவில்லை. அவர் அவஸ்தையைப் பார்த்து நானே அவருக்காக உரத்தகுரலில் பிரார்த்தனை செய்தேன். சாதாரணமாக மறைந்திருக்கும்நமது ஆத்மீகக் கண்கள் சில நெருக்கடிகளின் போது பிரத்யட்க்ஷமாக திறந்து கொண்டுவிடுகிறது. பிரார்த்தனை முடிந்ததும் ஆண்டவன் எங்களுக்காக எங்கள் பக்கத்தில் அந்த அறையில் எழுந்து அருளியிருப்பதை அறிந்தோம். அந்த க்ஷணத்திலேயே வலி நின்று விட்டது.

பீடர் 'ஆண்டவனே உனக்கு வணக்கம்' என்று சொல்லிவிட்டு 'காதரைன்! நீயும் ஆண்டவனுக்கு வணக்கம் செலுத்து' என்றார்.

இதற்குள் டாக்டர் வந்து சேர்ந்தார். நிலைமை சாதாரணமாக இருந்தது. அவர் படுக்கையருகில் சிறிது நேரம் கணக்காகப் பேசிவிட்டு அவரைக் கவனித்தார். கொஞ்ச நேரத்திற்குள் அந்த நிலைமையும் தலைகீழாகமாறி விட்டது. மறுபடியும் அந்த வலி ஆரம்பித்துவிட்டது அதன் உக்ரத் தன்மையைக் கண்ட டாக்டர் உடனே பீடரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக வேண்டும் என்றார்.

பீடர் முனகலுடன் சிரித்துக்கொண்டே 'எனக்கு நம்பிக்கையில்லை' என்றார். ஒருக்ஷணத்தில் எவ்வளவு மாறுதல்! பீடரின் கைகளைப் பற்றிக் கொண்டு அவரருகில் நிற்கையிலேயே அவர் அவர் உணர்ச்சிகள் எனக்குப் புரிய ஆரம்பித்தன. அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும்

யோசனை எனக்கும் பிடிக்கவில்லை. எங்களுடைய மகனை இவ்வளவு பெரிய வீட்டில் தன்னந் தனியாக விட்டுவிட்டு பீடருடன் 'ஆம்புலன்ஸில்' ஏறிச் செல்வது எனக்குச் சரியெனத் தோன்றவில்லை.

பற்றியிருந்த அவர் கையை விட்டுவிடுவதற்குக் கூட என் மனம் துணியவில்லை. பீடர் இதை யறிந்து தன்னுடைய விரல் நுனிகளின்மூலம் அந்தரங்கமாக சமிக்ஞை செய்தார். டாக்டர் இன்னொரு கையில் இரத்தப் போக்கை பரிட்சை செய்துகொண்டிருந்தார்.

'ஆம்புலன்ஸ்' சென்ற பிறகு என் மாடிக்குப்போய் என் படுக்கை யறையில் மண்டியிட்டேன். நான் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை அதற்குள் கடவுளின் அருள் ஆண்டவனின் பேரன்பு ஏதோ ஒரு விததில் என் உடலில் புகுந்து என்னைப் பரவசத்திலாழ்த்தியது. ஆண்டவனே என்னை தன்னுடைய அகண்ட புஜங்களுக்கிடையே அணைத்திருப்பது போன்றிருந்தது. எந்த வரத்தையும் கேட்க வேண்டிய அவசியம் அவரிடம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அந்த பேரன்பின் மஹாசக்திக்கு என்னையும் பீடரையும் ஒப்புவித்தேன். இந்தப் பூமியிலேயே பீடரின் ஹிருதயம் நோயிலிருந்து விடுபட்டு விடும் என்ற நம்பிக்கைதான் அப்போது. ஆனல், ஆண்டவனுக்கு எனக்கு என்ன தெரியாது என்பது நன்கு தெரிந்திருந்தது. கீழே 'ஆம்புலன்ஸ்' புறப்படுவதற்கு முன்னல் பார்த்த பார்வைதான் உயிருடன் நான் பார்த்த கடைசிப் பார்வை.

அன்று காலை எட்டேகால் மணிக்கு பீடர் பேரின்பத்தை எட்டிவிட்டார். எட்டு மணி இருபது நிமிஷத்திற்கு டாக்டர் எனக்கு இதைத் தெரிவிக்க டெலிபோன் செயதார், பள்ளிக்கூடம் போவதற்காக எங்கள் மகன் ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தான். டெலிபோன் செய்தி கிடைக்கும்போது அவனும் கூட இருந்தான். அறிந்தவுடன் குழந்தைகளுக்கே உரிய கண்ணீர் வெள்ளம் அவன் கண்களில் பெருக்கெடுத்தது. திக்பிரமை அதிகரித்து விட்டதால் எனக்கு அழுகையே வரவில்லை.

பின்னால் ஆஸ்பத்திரியில் பீடர் அருகில் ஒருமணி நேரம் உட்கார்ந்திருந்தேன். தூங்கிக்கொண்டிருக்கையிலேயே வெகு அமைதியாக அவர் நழுவிவிட்டார். அங்கு வருவதற்கு முன்னால் என்ன நடந்திருக்கிறது என்பதை நான் அறிந்துகொண்டதாக உணர்ந்தேன். திடீரென்று பீடர் ஆண்டவனைக் கண்டிருக்கிறார். பக்தியும் பரவசமும் அவர் முகபாவத்தில் தென்பட்டிருக்கிறது. கடவுளோடு இரண்டறக் கலந்த பீடர் திடீரென்று முக்தியடைந்து விட்டார். ஆவி பிரிந்தது.

"இது காதரைனுக்கு ரொம்ப வருத்தம் தருவதாய் இருக்குமே? அவளுக்கு என்ன செய்வது? என்று கேட்டிருக்கிறார்.

யேசு பீடரைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே "அவள் சமாளித்துக் கொள்வாள் அவளுக்குத் தேவையான் எல்லா பலத்தையும் அருள்வோம்."

இப்படியாக எனக்காக அவர்கள் காத்திருந்திருக்கிறார்கள், ஆண்டவனும் பீட்டரும். அதனால் தான் நான் ஆஸ்பத்திரி அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனபோது ஆண்டவனின் சாந்நித்யமும் பீடரின் ஆவியின் நிறைவும் அந்த அறையில் சூழ்ந்திருந்தது. பீடர் அன்பும் கனிவும் தோன்ற மிதந்து கொண்டிருந்தார்.

அவர் கையை பிடித்துக்கொண்டு அவர் கட்டிலருகில் நெடுநேரம் உட்கார்ந்திருந்தேன். கொஞ்ச நேரம் கழித்து போவதற்காக எழுந்தேன். நான் காதலித்த மனிதன் ஸ்தூல உடலுக்கு நான் கொடுக்கும் பிரியா விடை யென்பது எனக்குத் தெரியும். அவருடைய கைப்பிடியின் மெய்யுணர்வுக்கும் அவர் தந்த மகிழ்ச்சிக்கும் அவர் முகத்தில் ஒளி வீசும் புன்னகைக்கும் பிரியாத விடை இதுவே.

கலியாண தினத்தன்று நாங்களிருவரும், சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய அந்த பலிபீடத்தின் முன்னால் நின்றுகொண்டு மரணம் நம்மைப் பிரிக்கும்வரை என்று

சபதம் செய்தோம். அந்த பிரிவு உயிருள்ளவரையில் மண்ணில் வாழ்பவர்களுக்கும் மண்ணுக்குமே தாங்க முடியாத ஒன்று ஆகும். நான் கோயில் வீட்டுக்குத் திரும்பிய பிறகு ஏராளமான நண்பர்கள் அங்குக் கூடி அவரவர்கள் தத்தமக்குத் தோன்றிய உதவிகளை யெல்லாம் செய்து கொண்டிருந்தார்கள். டெலிபோன் அலறிக்கொண்டிருந்தது. வாசற் கதவின் மணி ஓய்ச்சலின்றி அடித்துக் கொண்டிருந்தது.

வாஷிங்டனில் உள்ள வார்ட்மன் பார்க் ஹோட்டலில் தனது அறையிலிருந்து ஸெனட்டர் ஆர்தர் வாண்டன் பர்க் ரேடியோ மூலம் தகவல் அறிந்தார். உடனேயே தன்னுடைய உள்ளக் கொந்தளிப்பை வார்த்தைகளாக்கி, மிகப் பழையத் தன் 'டைப்ரைட்டரில்' அடித்து முடித்தார்.

"அன்புள்ள ஸ்ரீமதி மார்ஷல் அவர்களுக்கு, டாக்டர் பீடர் மறைந்துவிட்டார் என்ற துக்ககரமானதும், நம்ப முடியாத செய்தியை கேட்டதும் நானே நேரில் வந்திருப்பேன். ஆனால் டாக்டர்களுடைய உத்தரவின்பேரில் நான் தற்காலிகமாகச் சிறைப்பட்டு கிடக்கிறேன். சென்ற இரண்டு வருஷங்களாக வெகு அந்தரங்கமாகப் பழகிய ஒரு அரும் பெரும் நண்பரை யிழந்த இந்த துக்கத்தை நான் எவ்வளவு ஆழ்ந்த உணர்ச்சிகளுடன் உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன் என்பதை உங்களுக்கு உணர்த்த விரும்புகிறேன். அவர் ஸெனட் கோயிற் பிள்ளையாகவும் நான் ஸெனட் தலைவனாகவும் பணியாற்றிய இந்த இரண்டு வருஷத்திலும் எங்களுக்கிடையே இருந்த உறவு வெகு அழகாகவும் ஹிருதயபூர்வமானதும் அந்தரங்கமுள்ளதாகவும் இருந்திருக்கிறது. இவரைவிட கரடுமுரடான ஒரு நபரை கண்டதேயில்லை இவரைவிட இனிய தோழர் எவரும் வாய்க்கவும் இல்லை" முன்னேறுங்கள் கிறிஸ்தவ வீரர்களே!" என்பதற்கு அவரே எனக்கு பிரத்யட்சப் பிரமாணம் உபயோகமுள்ள மதத்திற்கு என் சம்பந்தப்பட்ட வரையில் அவர்தான் உருவகம். அவருடைய பிரார்த்தனைப் பேச்சுக்கள் உண்மையாகவும், தீவிரமாகவும் இருந்தன, தான் நம்பியபடியே அவர் வாழ்ந்தார்.

பீடரின் மறைவினால் பெருந்துயரடைந்து நிற்கும் உங்களுக்குத்தான் என்னைவிட அதிக நஷ்டம் என்பதை நானறிவேன். ஆனால், என்னாலும்கூட தாளவே முடியவில்லை. என்னுடைய அனுதாபங்களையும், பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இருண்ட திடலில் எவ்வளவு இருட்டு இருக்கும் என்பது எனக்கு அனுபவத்தால் தெரியும். பேரின்ப தழுவல் பற்றிய ஆண்டவனின் வாக்குறுதிக்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். நான் தங்களுக்கு ஏதாவது ஒரு வகையில் சிறிது பயன் படுவேன் என்றாலும் எனக்கு தெரிவிக்க தயவு செய்து தயங்காதீர்கள். பீடருடைய நினைவுக்கு ஒரு அந்தரங்கமான கடமையைச் செலுத்த வேண்டிய பொறுப்புள்ளவனாக என்னைக் கருதுகிறேன். அவருடைய மகத்தான ஆத்மா சாந்தி அடைவதாக.

மிக உள்ளன்புள்ள தங்கள்.

ஆர்தர். எச். வாண்டன்பர்க்,

ஆனால் நிழல் திடலில் கொஞ்ச நாட்களுக்கு மட்டுமாவது அதிக இருள் சூழ்ந்து கொள்ளாமல் இருந்தது. என்பாதை தெய்வீக ஒளியால் வெளிச்சம் போடப்பட்டிருந்தது. மோட்சத்தின் எல்லாப் பெருமைகளும் என்னைச் சூழ்ந்தன இந்த வாழ்வையும் அதையும் பிரிக்கும் கண்ணுக்குப் புலனாகாத எல்லையையும் கடந்து மகிழ்ச்சியுடன் பீடர் சென்றுவிட்டது போலவும், திரையை விலக்கிக்கொண்டு அந்தப் பக்கம் போய் மறைந்தது போலவும், மோட்சத்தின் ஒரு சிறு காட்சியை அப்படித் தெரியவிட்டுச் சென்றதன் மூலம், இங்கே தங்கியிருப்பவர்களுக்கு, தனக்கு என்ன நடக்கிறதென்பதைக் காட்டுவதால், சிறிது மகிழ்ச்சியை விளைவித்து விட்டதுபோலவும் எனக்குத் தோன்றிற்று

மண்ணுலகில் ஆண்டவனின் ராஜ்யத்தில் முதன்முதலாக நான் உண்மையிலேயே வாழ்வதாக நினைத்தேன். பல முடிவுகள் செய்யவேண்டியிருந்தன ஒவ்வொன்றுக்கும் பரிபூர்ணமான மார்க்கங்கள் இருந்தன. கடவுளின் மனதை அறிய எதையும் தடவவேண்டிய அவசிய

மில்லை. சர்வ நிச்சயமான, உடனடியான உள்ளுணர்வு ஒன்று சரியான காரியத்தைச் செய்வதற்கு வழிகாட்டிக் கொண்டிருந்தது.

அந்த முன்னிரவில் நான் தூங்காவிட்டாலும் பிரேதச் சடங்கின் ஒவ்வொரு அம்சமும் எனக்கு தெளிவாக மனதிலிருந்தது எந்தெந்த கிரந்தங்களை ஓத வேண்டுமென்பதுகூடத் தெரியும்.

பீடர், நான் கருப்பாடை அணிந்துகொள்வதை விரும்பமாட்டாரென்பது எனக்குத் தெரியும். எப்பொழுதும்போல் பழுப்பு ஆடைகளையே உடுத்துக்கொள்வேன். இந்த மத குருவின் தலைமையில் வழக்கமாக பிரார்த்தனைக்குக் கூடுவதற்குப் பழக்கப்பட்டிருந்த அதே பதினொரு மணிக்குத்தான் பிரார்த்தனைக் கூட்டமும் இருக்கும். நான் வழக்கம்போல் கோயிற் பிள்ளைவீட்டு ஜன்னலில் உட்கார்ந்திருப்பேன். வழக்கம்போல் கூட்டுப் பாடல்கள் பாடுவார்கள். பிரார்த்தனையின் பொருள் பீடரின் வாழ்க்கையை ஆண்டவன் தன் சேவைக்காக எப்படி உபயோகித்துக் கொண்டார் என்பது பற்றியும் அவரது அரிய பண்புகள் பற்றியும் இருக்கும். இந்த சமயத்தில்தான் நமது கோயிலின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிப்பதற்கான ஆண்டவனின் செய்தியைக் கூட்டத்தினரிடம் தெரிவிப்பதற்கு உற்ற நல்ல சமயம் இந்த ஈமச்சடங்கு நம் எல்லோருக்கும் மீண்டும் காணிக்கையாக நம்மை அளித்துக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாக வேண்டும் என்று பீடர் விரும்பினார் என்பது எனக்குத் தெரியும்.

அந்த நாட்களில் நான் அழுவேயில்லை என்ற ஒரு சித்திரத்தைத் திட்ட மாட்டேன். நான் அழுதேன். மனம் விட்டு அழுத சமயமும் உண்டு. அந்தக் கண்ணீரில், கசப்பில்லை, உணர்ச்சியை வெளியிடும் கண்ணீர், அவ்வச் சமயங்களில் கடவுள் எனக்கு அமைதியான மனதையும், ஒழுங்கான ஹ்ருதயத்தையும் அருளினார்.

முதல் தடவையாக பைபிள் ஆண்டவன் அருளை, அன்பை, உலோகம் சுத்தம் செய்யும் நெருப்புனைத் தீ

போன்றது என்று ஏன் கூறுகிறதென்பதை உணர்ந்தேன் அந்த நெருப்பு நம்மைப் பரிசுத்தப் படுத்துகிறது. ஆனால் சாப்பிட்டு விடுவதில்லை பிரிவின் வேதனை என் நெஞ்சைச் சுடும் சுடர் போலிருந்தது அதே சமயத்தில் அது என்னைப் பரிசுத்தப்படுத்தி, செயலைத் தூய்மையாக்கி, குப்பைகளைப் பஸ்பமாக்கி என்னுள் உள்ள அழிக்கமுடியாத வற்றை அப்படியே விட்டு இன்னும் பலமானதாகவும் உறுதியுள்ளதாகவும் ஆக்கிவிட்டது.

நெடுநாட்கள் கழிந்து இந்த அகாலத்தில் நிகழ்ந்தது போல் தோன்றும் மரணத்தைக் குறித்து கடவுளின சித்தம் என ஆக்ஷேபித்தேன். இந்தப் பாபம் செய்தவுடனேயே மோட்ச ராஜியத்தை விட்டு வெளியேறியவளாகி விட்டேன்.

"ஆண்டவனே" ஏன் இந்தமாதிரி முடிய வேண்டும்?" என்று திரும்பத்திரும்பக் கேட்டேன்.

கடைசியாக ஹிருதய நோய் பிடித்தபோது ஆண்டவன் எங்களுடன் இருந்தான் என்பதற்கு நிச்சயமான சாட்சியம் எங்களுக்கு இருந்தது. அது உண்மையானால் ஏன் ஆண்டவன் தன் அருட்கரத்தை நீட்டி பீடரின் ஹிருதயக் கோளாறைப் போக்கியிருக்கக் கூடாது? நாங்கள் சொஸ்தப் படுத்தப் படுவதில் நம்பிக்கை வைத்திருந்தோம். எங்கள் குடும்பத்திலேயே அதைக் கண்ணாரக் கண்டிருக்கிறோம். அப்படியிருக்கையில் ஏன் அவர் சொஸ்தப்படுத்தப் படவில்லை?

என்றாவது ஒரு நாள் இதற்கு விடை கிடைக்கும். அதுவரை நான் அன்று பீடருடன் பிரார்த்தித்ததுபோல் பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழியில்லை ஆகையால் என் முழுமனதுடன் எனக்காகவும் என் மகனுக்காகவும் ஆண்டவனின் இந்த வாக்குறுதியைக் கோரினேன்.

கடவுளை நேசிப்பவர்களுக்கு நன்மையளிப்பதற்காக எல்லாப் பொருள்களும் சேர்ந்து இயங்குகின்றன என்பது எங்களுக்குத் தெரியும். எவர் அழைக்கப்பட்டவர்களோ அவனவனின் தேவைக்கேற்ப (ரோமன்ஸ்: P. 28)

ஆண்டவன் எங்கள் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்தான். சில வாரங்களுக்குள்ளேயே பீடரின் பிரார்த்தனைகளடங்கிய ஒரு புத்தகத்தைப் பிரசுரிப்பதற்கான வழிகள் பிறந்தன.

அந்தப் புத்தகம் (Mr. Jones, Meet The Master, Fleming H. Revell Company, New york 1949) ஏராளமான விற்பனையான ஒரு புத்தகம். அதன் பக்கங்களினூடே பீடர் ஆயிரக் கணக்கானவர்களுக்காகப் பிரார்த்திப்பார். உடம்போடு இருந்திருந்தால் யாருக்கெல்லாம் இது எட்டியிருக்காதோ அவர்களையெல்லாம் இது எட்டப் போகிறது. அவர் வாழ்க்கையின் ஆசிகள் வெகு தூரம் மேலும் மேலும் முன்னேறப் போகிறது. இதன் வியாபகமே ஆண்டவன் சக்திக்கும் அன்புக்கும் உயிருள்ள சாட்சியமாகும்.

அந்த வருஷம் ஜூன் மாதம். வழக்கம்போல் கேப்காட் வீட்டின் பருவம் வந்தது வீட்டின் வாசலுக்குள் போய் நின்றவுடன் ஜன்னல் கதவுகள் எப்படி முன்புநீலமாக்கப்பட்டனவோ அப்படியே நீலமாக இருந்தன எப்பொழுதும் போல ரோஜாச் செடிகள் அரும்புகளுடன் குலுங்கிக் கொண்டிருந்தன. சமையலறைக்குப் பக்கத்தில் உள்ள பைன் மரத்தில் இரு நீலப்பறவைகள் கூடு கட்டியிருந்தன. ஆனாலும் இந்த வருஷம் ஒரு மாறுதல் இருக்கத்தான் செய்தது. ஒரு சின்னஞ் சிறுவனும் அதை உணர முடியும். கதைவைத் திறக்கும் போதே ஒருவரோடொருவர் சந்தோஷமாக இருக்க முயற்சி செய்தோம்.

ஒவ்வொரு அறையும் பீடரைப் பற்றிப் பேசிற்று. அவருடைய சாந்நித்யம் எங்கும் நிறைந்திருந்தது. கூடத்துப் பிரையில் அவருடைய கோடைக்கால 'ஹாட்' ஒன்று வைத்தது வைத்தபடி இருந்தது. அதைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த நீல ரிப்பன் மட்டும் நிறம்மாறி வெளிறிப் போயிருந்தது. தோட்ட வேலையின்போது அவர் உபயோகிக்கும் வெள்ளைப் பூட்ஸ் ஜதை நீலக் காலுரை (ஸாக்ஸ்)யுடன் அவருடைய படுக்கையின் கீழே கிடந்தன. அவற்றில் ஒன்றை எடுத்துக் கையில் வைத்

துக் கொண்டு நான் நினைத்தேன் "இப்போது புரிகிறது அந்த வார்த்தைகளின் அர்த்தம்" நினைவுகளே! சுட்டும் வாழ்த்தியும் ஆழ்த்தும் நினைவுகளே! ஆண்டவனே இது எப்படிக் கொல்லுகிறது என்னை" என்று.

பின்னர் அன்று மாலையில் உணர்ச்சியின் புயல் ஓரளவு அடங்கியவுடன் நான் கடற்கரைப் பக்கம் சென்றேன்.

அலைகள் பரல்கள் நிறைந்த கரையின் மேல் சிற்றலைகள் மடிந்து மடிந்து விழுந்து ஓசையுண்டாக்கிப் கொண்டிருந்தன. அந்த நீர்ப்பரப்பில் ஒரு வெள்ளிய பாதை தென்பட்டது. என் கொதிக்கும் கன்னங்களை குளிர்ந்த கடற்காற்று இன்னும் கொதிப்படையச் செய்தது. திடீரென்று ஏதோ ஒரு நினைவு; பீடருடன் நான் பேசிய கடைசி வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வந்தன. பார்வைக்கு எதேச்சையாக சொல்லப்பட்டவை போலிருந்த அந்த வார்த்தைகளைக் கடவுளே சொல்ல வைத்தாரோ" என்று நினைக்கத் தொடங்கினேன்.

இந்தக் காட்சி நிரந்தரமாக என் மனதில் செதுக்கப் பட்டுவிட்டது பீடர்ஸ்டெச்செரில் இரண்டு சேவகர்களால் போடப்பட்டுக் கிடந்தார். ஆம்புலனஸ் முன் வாசலின் பக்கத்தில் காத்துக் கொணடிருந்தது. தன வலிக்கு இடையே கண்களில் கனிவு தோன்ற என்னைப் பார்த்து ஒரு புன்னகை பூத்தார், அவர் பக்கத்தில் போய்ச் சாய்ந்து கொண்டு ரகஸியமாய் அவர்காதில் "அன்பே! காலையில் வந்து உங்களைக் காண்கிறேன" என்றேன்.

அதோ தூரத்தில் தெரிகிற தொடுவானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எனக்கு அந்த வார்த்தைகள் எதிர்காலம் முழுதும் என்மனதில் இன்பகீதமாக ஒளிக்கும் என்பது தெரிந்தது.

அன்பே! காலையில் வந்து உங்களைக் காண்கிறேன்......

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS